# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 31 | கதிர் 318 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 23, ஞாயிற்றுக்கிழமை 09.10.2016



மகாராஜா பொதிகள் சேவை
உங்கள் வீட்டுக்கே சென்று கைமளிக்கப்படும் சேவை
700/= 600/= 700/=
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961


## நல்லிணக்க இறுதி அறிக்கை 15இல் ரணிலிடம்

கொழும்பு, ஒக்.9

நல்லிணக்கம் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை உள்ளடக்கிய இறுதி அறிக்கை, எதிர்வரும் 15 ஆம் திகதி அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என நல்லிணக்கத்துக்கான செயலணி தெரிவித்துள்ளது. இந்த இறுதி அறிக்கையைப் பிரதமர் ரணில் >> 53ஆம் பக்கம்

## தாய் பிரதமருடன் மைத்திரி முக்கிய சந்திப்பு

பாங்கொக், ஒக்.9

தாய்லாந்து பிரதமர் பிரேயுத் சான் ஓச்சாவுக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப் >> 06ஆம் பக்கம்



*இன்னும் நீங்கள் திருந்தேல்ல பாருங்கோ...*



# இரத்தினபுரியில் மகிந்த கோபாவேசம்

### ஆட்சியைக் கவிழ்க்க 3 ஆண்டுகள்கூட தேவையில்லை எனச் சூளுரை

கொழும்பு, ஒக்ரோபர் 9

ஆட்சி மாற்றத்துக்காக இன்னமும் மூன்றாண்டுகளுக்குக் காத்திருக்க வேண்டியதில்லை. பொது எதிரணி விரைவில் பொது அரசாக மாறும். இது நிச்சயம் நடக்கும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுச் சூளுரைத்தார்.

பொது எதிரணியினர் இரத்தினபுரியில் நேற்று நடத்திய பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மகிந்த ராஜபக்ச >> 52ஆம் பக்கம்

## முதலமைச்சரின் பணிப்பை கல்வி அமைச்சர் ஏற்க மறுப்பு

### அதிபர் நியமன விவகாரத்தில் முறுகல்

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவை தரம்-3 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 90 பேருக்கு வழங்கப்பட்ட நியமனங்களை உடனடியாக நீக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்த அறிவுறுத்தலை நடைமுறைப்படுத்த முடியாது என்று வடக்கு மாகாண >> 52ஆம் பக்கம்

## செம்மணியில் நேற்றிரவு குடும்பத்தலைவர் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 9

செம்மணி வெளிக்கு அண்மையாக ஏ-9 வீதியிலிருந்து, குருதி தோய்ந்த நிலையில் குடும்பத் தலைவர் ஒருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டது. கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்தப்பட்டு அவர் உயிரிழந்தார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் >> 06ஆம் பக்கம்

## வீதி விபத்தை தடுக்கக் கோரும் கவனவீர்ப்பில் பாடசாலைகளும்

*யாழ்ப்பாணம், ஒக். 9*

"வீதி விபத்தைத் தடுக்கக்கோரும் 'எழுந்து நிற்போம்' கவனவீர்ப்பில் அனைவரும் கலந்து கொள்வோம்"

என்று இலங்கை ஆசிரியர் சங்கமும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அழைப்பு விடுத்துள்ளன. அனைத்துப் பாடசாலைகளும் நாளை கவனவீர்ப்பை நடத்த வேண்டும் என்றும் அவை கோரியுள்ளன. இது பற்றி சங்கங்கள் அனுப் >> 53ஆம் பக்கம்

## தொடரும் போராட்டம் இழுபறியில் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக் 9

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரம் பூதாகரமான பிரச்சினையாக வெடித்துள்ள சூழலில் 730 ரூபா சம்பளமாக தொழிலாளர்களுக்கு >> 53ஆம் பக்கம்

## யாழ்ப்பாணத்தில் புதனன்று பேரணி

### மலையகத் தொழிலாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக

யாழ்ப்பாணம், ஒக். 9

1000 ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பேரணியொன்று >> 53ஆம் பக்கம்

## அமெ. குற்றச்சாட்டு மைத்திரி நிராகரிப்பு

கொழும்பு, ஒக்.9

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி முன் வைத்திருந்த குற்றச்சாட்டை அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அடியோடு நிராகரித்தார்.

இலங்கையின் நல்லிணக்கச் செயன்முறைகள் தாமதமடைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நிலவியுள்ள இனவாதக் கொள் >> 51ஆம் பக்கம்

## 14 வயது மாணவி பாம்பு தீண்டி சாவு

### வவுனியாவில் துயரச் சம்பவம்

வவுனியா, ஒக். 9

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 14 வயதுச் சிறுமி பாம்புக் கடிக்கு இலக் >> 06ஆம் பக்கம்

## சோழ மண்டலம் மீள உருவாகும்

### எச்சரிக்கிறார் வீரவன்ச

கொழும்பு, ஒக். 9

எட்கா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டால் வடக்கு - கிழக்கு, தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டு மீண்டும் சோழரின் ஆட்சி - சோழ மண்டலம் உருவாகும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்தார். >> 52ஆம் பக்கம்


metecno The Specialist
கூரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு வடிவிலான தகடுகள் | டெர்லிங்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெக்னோ லங்கா பிரைவட் லிமிட்டட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com
Sri Lanka Germany Italy Spain Portugal Bulgaria METECNO LANKA (PVT) LTD Mexico Chile Columbia India Thailand Vietnam

அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...
24 கெரட் இற்கு ரூ.36,000
22 கெரட் இற்கு ரூ.33,000
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411
ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை
SDB வங்கி
011 5 411 411

# கல்வி அமைச்சின் சுற்றறிக்கை தவறு சுட்டிக்காட்டுகின்றார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம் ஒக். 9

"புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்த வேண்டாம் என்று கொழும்பு அரசின் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதானால் எதிர்காலத்தில் பாடசாலைகளில் பரிசளிப்பு விழாக்கள், கௌரவிப்பு நிகழ்வுகள் என்று எதனையுமே நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் மீது அதீத கவனம் செலுத்தத்தான் வேண்டும். அவர்களை உளத் தாக்கங்களிலிருந்து விடுவித்து கல்வியில் சாதிக்க வைக்க வேண்டும். அதற்காக சித்தியடைந்தவர்களைக் கௌரவிக்கத் தவறக் கூடாது."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களைக் கௌரவிக்கும் எல்.ஐ.சி. நிறுவனத்தின் நிகழ்வு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:



இங்கு வந்திருக்கின்ற அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டவர்கள். எதிர்காலத்தில் பொறியியலாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ, அறிஞர்களாகவோ, விஞ்ஞானிகளாகவோ வரப் போகின்றவர்கள். எங்களின் - தமிழ் இனத்தின் சொத்துக்கள் நீங்கள்.

உங்கள் சாதனைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தி கல்வியில் மேலும் உயர் அடைவு அடைவதற்காக, எங்கள் செல்வங்களான உங்களைக் கௌரவிப்பதற்காக எல்லோரும் ஒன்று கூடியிருக்கின்றோம். கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் வந்திருக்கின்றார்கள். கல்வி இராஜாங்க அமைச்சர் கூட இங்கே வந்திருக்கின்றார். உங்கள் சாதனைகளை மெச்சுவதற்காகவே இவர்கள் இங்கு பிரசன்னமாகியிருக்கின்றார்கள். நீங்கள் கொடுத்து வைத்த மாணவர்கள்தான். உங்கள் வாழ்க்கையில் இன்று முக்கியமான நாள். சாதனை செய்தவர்களை - சாதித்தவர்களைத் தட்டிக் கொடுப்பது என்பது முக்கியமானது. இது ஒரு உளவியல் செயற்பாடு. உங்களை மேலும் சாதிக்கத் தூண்டுவதற்கான அடிப்படை இதுவாக அமைகின்றது. ஒருவரைப் பாராட்டுவதன் ஊடாக மெச்சுவதன் மூலம், அவனது மன எழுச்சி உந்தப்படுகின்றது. இது அவனை அடுத்த கட்டத்துக்கு மேலும் மெருகூட்டி, புதிய சாதனை படைப்பதற்கு உந்தித் தள்ளுகின்றது. நீங்கள் உயர் தரத்தில் தேசிய ரீதியில் சாதனை படைத்தவர்களாக மாறுவதற்கு, சாதனை படைகின்றவர்களாக வேண்டும் என்ற எண்ணம் உருவாவதற்கு இது அடித்தளமாக அமையும்.

தரம் - 5 புலமைப் பரிசில் தொடக்கம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வரையில் பரீட்சைப் பெறுபேறுகள் உங்களுக்கு எப்படி முக்கியமோ, அது போன்றே உங்களின் பெற்றோர்களுக்கும் அது முக்கியமானது. அவர்களும், தங்கள் பிள்ளைகள் சாதித்ததை எண்ணி மகிழ்வதற்கு வாய்ப்பு வழங்குகின்றது.

நாம் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களை மாத்திரம் பார்க்கக் கூடாது. அதன் மறுபுறம் - பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் தொடர்பிலும் அதிகூடிய கரிசனை செலுத்த வேண்டும். அவர்களை நாம் கைவிட முடியாது. அவர்களைச் செதுக்கி சித்தியடையச் செய்ய வேண்டும். பரீட்சைத் தோல்வியில் துவளும் அந்த மாணவர்களை அவர்களுடைய உளத் தாக்கங்களிலிருந்து விடுவிக்க வேண்டும். அவர்களும் எதிர்காலச் சாதனை நாயகர்களாக வலம் வருவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் ஒளிப் படங்களை காட்சிப் படுத்த வேண்டாம் என்று கொழும்பு அரசின் கல்வி அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டிருக்கின்றது. இது தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்ட வேண்டாம் என்றால், பாடசாலைகளில் பரிசளிப்பு விழாக்களும் நடத்த முடியாத நிலைதான் ஏற்படும். மாணவர்களுக்கு உளத் தாக்கம் ஏற்படும் என்பதற்காக இதனைச் செய்ய வேண்டாம் என்கிறார்கள்.

வெளிநாடுகளில் இளம் வயதில் பிள்ளைகளுக்குப் பரீட்சை இல்லை. ஆனால் இங்கேதான் அப்படி இருக்கின்றது. மாணவர்களுக்கு உளத் தாக்கம் ஏற்படக் கூடாது என்று உண்மையில் கருதுவார்களாக இருந்தால், எங்களின் கல்வி முறையில் - பரீட்சை முறைமையில்தான் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கல்வி இராஜாங்க அமைச்சரிடம் நான் முக்கியமான வேண்டுகோளை முன்வைக்கின்றேன். கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய மாவட்டங்களில், மிகப் பெரிய நிகழ்வுகளை நடத்தக் கூடிய கேட்போர் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கொழும்பில் தாமரைத் தடாகம் போன்று, யாழ்ப்பாணத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

இங்குள்ள பாடசாலைகளில், விளையாட்டு வளாகம் (ஸ்போர்ட் கொம்பிளக்ஸ்) இல்லை. அது அமைத்துத் தரப்பட வேண்டும். முதலில் உங்களின் கட்டுப்பாட்டிலுள்ள தேசியப் பாடசாலைகளிலாவது அதனைச் செய்து தாருங்கள். இது உங்களின் காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தின் மீது நீங்கள் வைத்திருக்கின்ற கரிசனை எனக்குத் தெரியும். நிச்சயமாக இதனைச் செய்து தருவீர்கள் என்று நம்புகின்றேன் - என்றார்.

(வ-5-ரி7)

## யாழ்ப்பாணம் வந்தார் எஸ்.பி. பாலசுப்பிரமணியம்

### கங்கைஅமரனுடன் இணைந்து நகரில் இன்றிரவு இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். நகரில் இன்று மாலை நடைபெறும் இசை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் மற்றும் பாடகரும் இசையமைப்பாளருமான கங்கைஅமரன் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வருகை தந்தனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு கொழும்பை வந்தடைந்த தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் மற்றும் கங்கைஅமரன் ஆகியோர் சிறப்பு உலங்குவானூர்தி மூலம் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 5 மணிக்கு வந்திறங்கினர். இவர்களை அங்கு திரண்டிருந்த பெருமளவு ரசிகர்கள் ஆரவாரத்தை வெளிப்படுத்தி வரவேற்றனர்.

பின்னர் அங்கிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். யாழ். நகரின் முக்கிய வீதிகளின் ஊடாகச் சென்று, விடுதியை அடைந்தனர். இவர்களை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றார். இதன் போதும் பெருமளவு ரசிகர்கள் திரண்டிருந்தனர்.



தனது யாழ்ப்பாணப் பயணம் தொடர்பில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

வாழ்கையில் முதல் தடவையாக இங்கு வந்திருக்கின்றேன். இங்குள்ளவர்கள் வழங்கிய வரவேற்பு மகிழ்சியுளிக்கின்றது. இந்தியாவை விட இங்குதான் உங்களுக்கு அதிக ரசிகர்கள் இருக்கின்றனர் என்று, என்னிடம் இங்கு வரவேற்ற ஒருவர் தெரிவித்தார். அதனைச் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. எங்களை எவ்வளவு தூரம் காத்திருந்து வரவேற்றிருக்கின்றார்கள். மகிழ்சியாக இருக்கின்றது. எனது நன்றிகளை நாளை (இன்று) நான் பாட்டில் - பாடுவதன் ஊடாக வெளிப்படுத்துவேன் - என்றார்.

(வ-5)

## வடக்கில் சில பகுதிகளில் இன்று மின் தடைப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.9

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரையும் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் வில்லூன்றிக் கேணியடி, நாவாந்துறை ஒரு பகுதி, முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோயிலடி, எருவன், வரணி, நாவற்காடு, குடமியன், கறுக்காய், மந்துவில், இயற்றாலை, கரகம்பகம், சங்கானை, தொட்டிலடி, இளவாலை, சேந்தாங்குளம், விளான், வித்தகபுரம் ஒரு பகுதி, மாதகல், குசுமாந்துறை, யம்புகோளப்பட்டிணம், காட்டுப்புலம், பண்டத்தரிப்பு, சாந்தை, சில்லாலை, தொல்புரம், சுழிபுரம், பன்னாலை, யாழ்.சிறைச்சாலை, யாழ்.பொஸ்நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சிப்பிரதேசத்தில் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகம், துணுக்காய் உதவி அரச அதிபர் அலுவலகம், மல்லாவி, ஆலங்குளம், செல்வபுரம் , சிவபுரம், வவுனிக்குளம், அனிஞ்சியன்குளம், தென்னியங்குளம், உயிலங்குளம், வெள்ளாங்குளம், ஐயன்குளம், கோம்பாவில், இரணைப்பாலை, பிள்ளையார் அரிசி ஆலை, 65வது படைமுகாம் ஆலங்குளம், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ரி.ஆ.சி. வேலைத்தளம் ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத்திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி பனிக்கட்டித் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, சிறப்பு அதிரடிப் படைமுகாம், வங்காலைப்பாடு பனிக்கட்டித் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம்கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை பனிக்கட்டித் தொழிற்சாலை, கூல்மென் பனிக்கட்டித் தொழிற் சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறை முகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

(வ-ரி)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## தீவகம் கல்வி வலயத்தில் 30 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். தீவகம் கல்வி வலயத் தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 720 மாணவர் களில் வெட்டுப்புள்ளியைத் தாண்டி 30 மாணவர்கள் சித்தியடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் தீவகம் கல்வி வலயத்தில் மொத்தம் 63 பாடசாலைகள் உள்ளன. அதில் 54 ஆரம்பப் பாடசாலைகளைச் சேர்ந்த 720 மாணவர்கள் இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் இருந்தே 30 மாணவர்கள் வெட்டுப்புள்ளியான 151 புள்ளிகளைக் கடந்து சித்தியடைந்தனர்.

இதேவேளை தீவகம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 54 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 21பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே வெட்டுப் புள்ளியைத் தாண்டிய நிலையில், 33 பாடசாலைகளைச்சேர்ந்த எந்த ஒரு மாணவனும் வெட்டுப் புள்ளியைத் தாண்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தீவகம் கல்வி வலயத்தில் சித்தி எய்திய மாணவர் வீதம் கடந்த ஆண்டைவிடவும் முன் னேற்றகரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

### புதிய தேர்தல் முறைமையினால்

## உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்குமாம்

தொகுதிவாரி மற்றும் விகிதாசாரத் தேர்தல் முறைமையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படும்போது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போதுள்ளதை விட இரண்டு மடங்காக மாறும் என்று மாகாண சபைகள் மற்றும் மாகாண நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளுக்கு தற்போது ஒட்டுமொத்தமாக 4 ஆயிரத்து 486 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் புதிய முறைமையின் கீழ் 8 ஆயிரத்து 875 உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். தொகுதிவாரியாக 5 ஆயிரத்து 92 உறுப்பினர்களும், விகிதாசார முறைமையின் கீழ் ஆயிரத்து 523 உறுப்பினர்களும், பெண் உறுப்பினர்களாக 2 ஆயிரத்து 260 பேரும் தெரிவு செய்யப்படுவர் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியது. (வ-5)

## ஜனாதிபதி வேட்பாளராக எனக்குத் தகுதியுண்டு

### கூறுகின்றார் கோத்தா

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அனைத்துத் தகுதிகளும் தனக்கு இருக்கின்றன என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோ தரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் முழு மையான ஆசீர்வாதம் கிடைக்கப் பெற்றால்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே கோத்தபாய இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நடைமுறையிலுள்ள அரசமைப்பில் இடமில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள கோத்தபாய ராஜபக்ச, புதிய முகமொன்றைக் களமிறக்குவதற்கும் தயங்கப்போவதில்லை என்றும் சபதமிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அரசியலில் பிரவேசிப்பது குறித்து தான் இதுவரை இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், மக்களுக்காகச் சேவை செய்வதற்கு அடுத்தகட்ட யோசனை தொடர்பில் சிந்தித்து வருகின்றேன் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, 2020இல் மகிந்த ராஜபக்சவை பிரதமராகவும் கோத்தபாய ராஜபக்சவை ஜனாதிபதியாகவும் கொண்டு வருவோம் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (து)

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கணங்குளமடு காட்டுப் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டும், அவற்றுக்கான ரவைக் கோர்வைகள் இரண்டும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இரகசியத் தகவலொன்றை அடுத்து நேற்றுக்காலை குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிகளையும் ரவைகளையும் மீட்டனர். உரப்பைகளில் சுற்றப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட இவை பழைய ஆயுதங்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (து)

## ஏணையில் தூங்கிய சிசு திடீர் சாவு

பிறந்து 45 நாள்களான குழந்தை ஏணையில் படுத்திருந்த நிலையில் திடீரென உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. குழந்தையின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாலை கொண்டு வரப்பட்டது. நவாலி தெற்கைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (வ-5-ரி7)

## விஞ்ஞான, வர்த்தகத் துறைகளில் மாணவர்களை வளர்க்கவேண்டும்

### அதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு மாவை எம்.பி வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக். 9

எங்களுடைய கலைப்பாடங்கள் எமக்குத் தேவைதான். ஆனாலும், போரால் அழிவடைந்த எமது பகுதியில் வர்த்தகம், விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்வதில் அதிக முக்கியத்துவம் கொடுக்க கல்வி அமைச்சும், நாட்டின் தலைவர்களும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 7ஏ க்கு மேல் எடுத்துச் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா தெரிவித்ததாவது:

எங்களுடைய பல்கலைக்கழகங்கள் சரியான முன்னேற்றத்தை அடையவில்லை. உதாரணமாக பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் 65 வீதமான மாணவர்கள் கலைத்துறைக்கு மட்டும் தெரிவாகின்றார்கள். இது கவலைக்குரிய விடயம். 65 வீதம் விஞ்ஞானம், வர்த்தகம், பொறியியல் துறைகளுக்கு தெரிவு செய்கின்ற கல்வித்திட்டத்துக்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். உலகத்திலே வர்த்தகத்துறை நவீன கோட்பாடுகளுடன் முன்னிலையில் உள்ளது. எங்களுடைய பல்கலைக் கழகங்களில் அந்தத் துறையிலே பட்டங்களும் இருக்கின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் வர்த்தகத்துறையில் 23 பாடங்கள் உள்ளன. என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள் இங்கு நிறையப் பேர் இருக்கிறார்கள். எல்லோரும் கல்வி சார்ந்தவர்களாக இருக்கின்றீர்கள். எங்களுடைய கலைப்பாடங்கள் எங்களுக்குத் தேவை. அதனைக் குறைத்து 65 வீதமான பாடங்களாக வர்த்தகம், விஞ்ஞானம், பொறியியல் இருக்கவேண்டும். அவர்களுடைய வேலைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்குக் கல்வி இராஜாங்க அமைச்சரும், நாட்டின் தலைவர்களும் பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக் குழுவும் முயற்சிகளை எடுக்க வேண்டும் - என்றார். (வ-4,ரி7)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2807 திகதி 08.10.2016
03 10 21 38 H 59 ரூ. 30,556,325/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 560
சீட்டிழுப்பு திகதி 2016.10.08
சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
20 46 51 58 J
ரூ.54,414,920/=

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான
அழகுக்கலைக் கல்லூரி (Since 1989)
ஒளி அழகன் ஸ்ருடியோவும்
British College of Beauty Studies
உம் இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்துமான துறை சார்ந்த பாடநெறிகள்
* அழகுக்கலை - Makeup
* தையற்கலை - Tailoring
* சமையற்கலை -Cooking, கேக்ஐசிங் -Icing
* கணினி
* ஆங்கிலம்
* Ladies Skills Development
ஒவ்வொரு பாடநெறியிலும் பல பிரிவு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Our Special Diplomas
DIBC ADBTH DIM DIAM DIHC DIHB DIHC DIM DIAMF DIT DICFM DILS
வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் எங்களுடைய சான்றிதழ்.
எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக சொந்தத் தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
09.10.2016 தினத்தன்று கஸ்தூரியார் றோட் கல்லூரியில் விஜயதசமி விழாவை வெகு விமர்சையாக நடத்த உள்ளோம். எங்களிடம் இணைய விரும்பும் மாணவர்கள் வெளி இடங்களில் படிப்பவர்களாகட்டும் எங்களின் பழைய மாணவர்கள் அனைவரும் வருகைதந்து கடவுள் ஆசியை பெற்று செல்லுங்கள்.
எங்களிடம் எந்த பாடநெறியை தொடங்க விரும்பினாலும்
வருடத்திற்கான இறுதி வகுப்பில் இணைந்து கொள்ளுங்கள்.
குறிப்பு: இறுதி வகுப்பு ஆரம்பமாகும் திகதி - 10.10.2016
பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 076 701 1645 பலாலி வீதி, திருநெல்வேலி.

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### விற்பனைக்கு
Hamada Of Set Machine Model No.CD x700 உடன் விற்பனைக்கு உண்டு.
071 095 9184

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
ஜேர்மன் செப்பட், டோமன், டாஷோன், பொமேரியன் நாய்க்குட்டிகளும், கூடுகளும் விற்பனைக்கு.
077 035 5560

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு
யாழ்.சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

### வீடு விற்பனைக்கு
சாவகச்சேரி நகருக்கு அண்மையில் 3 பரப்புக் காணியுடன் இணைந்த நல்ல நிலையிலுள்ள பெரிய வீடு விற்பனைக்குண்டு.
077 255 1871

### காணி விற்பனைக்கு
புளியங்கூடல் - சுருவில் பகுதியில் 30 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 319 4372

### காணி விற்பனைக்கு உண்டு
பிரதான வீதி, மந்திகை வைத்தியசாலைக்கு அருகில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
077 842 5125

### வீடு விற்பனைக்கு
ஆனைக்கோட்டை, உயரப்புலம், பாரதி சனசமூக நிலையம் முன்பாக உள்ள ஒழுங்கையில் 6 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. (J 3897)(12.18)
077 614 6434

### காணி விற்பனைக்கு
உரும்பிராய் சந்திக்கு அருகில் உள்ள டிஸ்பென்சரி ஒழுங்கையில் உள்ள 3¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 817 1636

### கிளினிக் உதவியாளர் தேவை
ஆனைப்பந்தியில் உள்ள கிளினிக்கில் வேலை செய்ய பெண்பிள்ளைகள் தேவை. வேலை நேரம் 4.00 pm - 9.00 pm
தொடர்பு: 077 935 2976

### வைத்தியர் தேவை
கொழும்பிலும், நுவரெலியாவிலும் கடமை புரிய பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர் (ஆண்/பெண்) அவசரம் தேவை. D.A.M,B.S.M.S,B.A.M.S,D.A பட்டம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அதிகூடிய சம்பளம் வழங்கப்படும்.
077 391 4499, 070 279 7375

### தேவை
முள்ளியவளையில் அமைந்துள்ள கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு தகைமையுடைய ஆண் விற்பனையாளர் உடன் தேவை.
077 025 6640

### சிறுநீரகம் தேவை
42 வயதுடைய சிறுநீரக பெண்நோயாளி ஒருவருக்கு B+/O+ இரத்த வகையுடைய சிறுநீரகம் உடன் தேவை. வயது 25 - 42 இற்கு உட்பட்டவர்கள்.
077 994 3979/ 077 417 9184/ 077 305 8033

### பணிப்பெண் தேவை
கரவெட்டியில் வைத்தியர் வீட்டில் பிள்ளையைப் பராமரிக்கக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 364 5921

### மணமகள் தேவை
தெல்லிப்பழை, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஜேர்மன் பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை.
077 895 3934, 077 294 7246

### தேவை
கட்டட இடிபாடுகள் மற்றும் கட்டடங்கள் இடித்தும் எடுக்கப்படும். விநியோகஸ்தர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
077 213 2461/ 021 205 2080

### OIC, JSO உடன் தேவை
பிரபல பாதுகாப்பு சேவை கம்பனிக்கு கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற O.I.C, JSO உடன் தேவை. சிங்களம், ஆங்கில அறிவுடையோருக்கு முன்னுரிமை. உணவு சகாயவிலை, தங்குமிடம் இலவசம். சம்பளம் 35000/= வரை. வயது 60 வரை.
104 1/1, Welikada watta Road, Rajagiriya
071 244 6926, 011 287 1280

# ஏனையவை

### கட்டடம் வாடகைக்குண்டு
சங்கரத்தை சந்தியில் BOC இயங்கிக் கொண்டிருக்கும் 1450 சதுர அடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 865 8863

### அறை வாடகைக்கு
ஆனைப்பந்தியில் அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 935 2976

### உதிரிப்பாகங்களுடன் கூடிய கடை வாடகைக்கு
வவுனியாவில் பிரபல்யமான இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம். இருக்கும் உதிரிப்பாகங்களுடன் கடையும் வாடகைக்கு முற்பணமின்றிக் கொடுக்கப்படும். அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
071 538 9570

### வாடகைக்கு
கந்தர்மடம், அரசடிவீதியில் பிரபல கல்லூரிக்கு அருகில் மூன்று கடைகளும், தொழில்பார்க்கும் ஆண்களுக்கு இரு அறைகளும் வாடகைக்கு உள்ளன.
076 617 9055

### A/C பஸ் விற்பனைக்கு
63-xxxx எனும் இலக்கம் கொண்ட பேபி Rosa A/C பஸ் விற்பனைக்கு உண்டு.
077 326 6791

### காணி வீடு விற்பனைக்கு
திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில்,யாழ் பல்கலைக்கழகம், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலைக்கு மிக அருகில் அமைந்துள்ள 1¼ பரப்புக் காணியோடு நான்கு(04) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.
076 975 4410, 076 977 0175

### வயலின் வாய்ப்பாட்டு வகுப்புக்கள்
விஜயதசமி அன்று பிரபல ஆசிரியரால் வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் நல்லூர், இணுவில் ஆகிய இடங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும்.
36, செட்டித்தெரு, நல்லூர்.
021 222 0076, 077 350 5466

### பாலன் மில்ஸ்
நவீன இயந்திரத்தின் மூலம் கொப்பறா, எள்ளு, இலுப்பை விதை மற்றும் சூரியகாந்தி போன்றவற்றை 3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் ஊற்றிக் கொடுக்கப்படும்.
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. தொடர்பு :021 3212624

### O/L 2016 SCIENCE PAPER CLASS
G.C.E O/L 2016 Science English/ Tamil Medium Rapid Revision and Paper Class by Experienced Science Teacher. Home visit/ Group Class at my place.
T.P 077 375 7331

### அலுவலக வேலைவாய்ப்பு
வவுனியாவில் இயங்கும் Courier நிறுவனத்துக்கு Branch Executive தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Email : ravi760@gmail.com
077 027 7365

### யாழ்ப்பாணத்தில் காணி விற்பனை
95 பர்ச்சஸ் காணி
பலாலி - குரும்பசிட்டி வீதியில், பலாலி விமான நிலையத்திற்கு அருகில், விலை 1 பர்ச் - 1 இலட்சம், வாங்குபவர்கள் மட்டும்.
அழையுங்கள் :
077 791 5573 / 077 828 4830 / 077 318 8702

### வேலைவாய்ப்பு
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல றெஸ்ரோறண்டிற்கு சுத்திகரிப்பாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 839 2107

### அமெரிக்க வீஸா லொத்தர்
BBS Netting மூலம் விண்ணப்பியுங்கள்
அமெரிக்காவில் நேர்மையாக குடியேறுங்கள் அரிய சந்தர்ப்பம். உடன் விண்ணப்பியுங்கள். 14வது வருட சேவை. எமது விண்ணப்பத்திற்கு ரூ15/- முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்.
தனியாள் - 475/-
குடும்பம் - 975/-
CALL - 0775811106
BBS Netting, 3/14 Pinwatta Road Dehiwala.
விண்ணப்பித்த சான்றிதழ் தரப்படும். வெற்றி பெற்றால் உடன் அறிவிப்போம், வெற்றியாளர்க்கு வழிகாட்டல் வழங்கப்படும்.
யாழ்ப்பாணத்தில் விண்ணப்பம் பெற: உமா ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி (சிவன் கோவில் முன்பாக).
www.bbsnetting.com

### அறைகள் வாடகைக்கு
எமது ஆலயத்திற்குரிய மேல்மாடி கட்டடத் தொகுதியில் இருக்கும் அறைகள் வியாபார நோக்கமுள்ளவருக்கு வாடகைக்கு விடப்படும்.
பார்வையிடும் நேரம்:-
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4-6 மணிவரை
தொடர்புகளுக்கு:
தலைவர்-
கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில் (புதுக்கோவில்)
காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

### CANADA / ITALY FRANCE VISA
ITALY,CANADA வில் வேலைகள் பெற்றுக் தரப்படும் ( Farm,Garden,Supermarket )
FRANCE,ITALY,SWISS க்கு Visit செல்ல 1 வாரத்தில் Sponsor Letter பெற்றுத்தரப்படும்
0767 491 573
0724 709 940

### காணி விற்பனைக்கு
நகர சூழலில் 4¼ பரப்புக் காணியில் இரு வீடுகள், கிணறு நீர்த்தொட்டி முற்றும் சுற்று மதில் கட்டியிருக்கும் காணி விற்பனைக்கு.
கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா.
தொடர்பு: 076 343 8919, 024 222 0129

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

### றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Luckyland

# Lucky Land Biscuits

## விநியோகஸ்த்தராக இணைவதற்கான சிறந்த சந்தர்ப்பம்

இலங்கையில் சிறந்த உயர் தொழில்நுட்பத்துடனும், தரத்துடனும் 50 வருடங்களுக்கு மேலாக பிஸ்கட் உற்பத்தி செய்து சந்தைப்படுத்திவரும் எமது நிறுவனத்துக்கு, எமது உற்பத்திகளை விரிவுபடுத்தும் முகமாக புதிய விநியோகஸ்தர்களை **வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், நெல்லியடி** ஆகிய பிரதேசங்களிலிருந்தும் எமது நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

**1. விநியோகஸ்தர்கள்**
**தகைமைகள்:**
1. தேவையான அளவு வங்கி உத்தரவாதம் (கொள்வனவு திறனுக்கேற்ப)
2. சிறந்த முறையில் பராமரிக்கப்படும் போதுமான இடவசதியுடைய களஞ்சியம்
3. விநியோகத்துக்கான வாகன வசதி
4. விற்பனை இலக்கினை எய்தும் திறனுடைய ஆளணி வசதி

**2. விற்பனை பிரதிநிதி** ( Sale's Rep )
**தகைமைகள்:**
1. FMCG விற்பனை சம்பந்தமாக குறைந்தது 2 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. G.C.E. O/L or A/L பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பூரணமாக தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட தங்களது விண்ணப்பங்களை 14.10.2016 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு கீழ் காணப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

The National Sale's Manager
Lucky Land Biscuits MFRS
Natharampotha, Kundasale, Kandy.

**Contact**
**077 233 9785 / 077 233 9770 / 077 421 4996**

(V/122)(10.18)

## பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் கலைத்திறன் வகுப்புகள்

சங்கீதம், நடனம், சித்திரம், ஓர்கன் மற்றும் தாளவாத்தியக் கருவிகள் (மிருதங்கம் உட்பட) என்பவற்றுக்கான கற்றல் வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பமாகவுள்ளன.

**காலம்** : 11.10.2016 செவ்வாய்க்கிழமை
**நேரம்** : மாலை 5.00 மணி
**இடம்** : பண்பாட்டு மலர்ச்சிக் கூடம்,
இல. 05, பழம்வீதி (பிள்ளையார் கோயில் அருகில்),
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 440 3955
மின்னஞ்சல் : tag.jaffna@gmail.com

## யோகட் மற்றும் ஐஸ்கிறீம் கோப்பைகளுக்கான அலுமினியம் பொயில் (Foil)

**100% பாதுகாப்பானது**




அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத எந்தவொரு அளவிலும் பெற்றுக் கொள்ள முடியும்.
(Printed & Plain)

ஒற்றை வர்ணத்தில் மற்றும் இரு வர்ணங்களில் சாதாரண தோற்றத்தில் அல்லது தமக்கு பிடித்த தோற்றத்தில் தயாரித்துக் கொள்ள முடியும் சிறிய மற்றும் பெரிய அளவுகளிலும் அச்சிட்டுக் கொள்ளலாம்.

விலை ரூ.0.85 சதத்திலிருந்து.

அலங்காரம் இலவசம்
(Artwork Free-of-Charge)

விவரங்களுக்கு
டயமண்ட் இன்டர்நஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டெட், கொழும்பு 08.
**0772 998 927 / 0777 356 778 / 0115 390400-2**

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

### இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

ROYALCERT
DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
IAF International Accreditation Forum
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC · UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

01, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

**சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

22, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள். — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

16, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class Grade 1-10

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

29, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**British Way® English Academy**

**Contact (Jaffna Branch) : 033 33 40 600**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

# மரண அறிவித்தல்கள்

கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது (வெளி- 14:13)

## பத்திநாதன் லூட்ஸ்மேரி

(தலைமைப் போதகர்- அடைக்கல கூடாரசபை)



அன்னை மடியில் 24.06.1954 ஆண்டவன் அடியில் 08.10.2016

குருநகரைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பத்திநாதன் லூட்ஸ்மேரி நேற்று (08.10.2016) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் (பழைய ஆஸ்பத்திரிவீதி, வட்டுக் கோட்டையில்) நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக இருபாலை கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய ஆஸ்பத்திரி வீதி,
வட்டுக்கோட்டை.
(J/5247) (11,18)
தகவல்:
குடும்பத்தினர்.

**077 044 6948**

## கந்தசாமி அருந்தவராசா



பிறப்பு 26 . 03 . 1952
இறப்பு 08 . 10 . 2016

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அருந்தவராசா 08.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் மகனும் புஸ்பராணியின் கணவரும் வசீகரன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் தினேஷின் அன்பு மாமனும் அபிநிஷா, ஆத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

612/5 , கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(ஜே/5254) (12.18)
தகவல்:
குடும்பத்தினர்

**021 222 7383**

திருமதி

## மகேஸ்வரி செல்லையா



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்லையா 07.10.2016 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு செல்லையா (இளைப்பாறிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற கொக்குவில் தம்பு தம்பதிகளின் அன்பு மருமகளும் மகாதேவா, சிவபாதசுந்தரம் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ரஜனி, மாலினி(பிரான்ஸ்), பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் சாரதா, அம்பிகா, அருளானந்தம்(பிரான்ஸ்), உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் கார்த்திகா, கிருசாந், கோகுலன், மதுகிலன், தீபிகா, ஹஜீவன், சிரோஜன், சஹானா, விவேகா, வித்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கவிஷன், கிருத்திஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
தகவல்:
மா.உதயகுமார்
(மருமகன்)

**தொடர்பு: 077 318 2930**

# ஆளுநர் பணியில் இருந்த கட்டுப்பாடுகளில் மாற்றம்

## அவரது செயலாளர் தெரிவிப்பு



கடந்த காலத்தில் ஆளுநரின் பணி சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது. தற்போது நல்லாட்சி அரசின் மூலமாக அந்தக் கட்டுப்பாடுகள் மாற்றமடைந்துள்ளன. இவ்வாறு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன் தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் மற்றும் நொத் தாரிசுகளுக்கான வரி தெளிவுபடுத்தல் செயலமர்வு யாழ். பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் ஆளு நரின் செயலா ளர் உரை யாற் றினார்.

அவர் தெரிவித் ததாவது-

முன்னைய ஆட்சியில், மத்தியில் சொல்லப்படுகின்ற அரசியல் சாசனத்துக்குட்பட்டதாக ஆளுநரின் பணிகள் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இருந்தன. தற்போது அந்த நிலை மாறியிருக்கிறது. எமது நாட்டிலே அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும்போது சில பிரதேசங்களிலே அதிகாரங்கள், வளங்கள் மட் டுப்படுத் தப்பட்டன. குறிப்பாக மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு வளங்களின் கட்டுபாடுகள் மிக முக்கிய காரணியாக இருக்கின்றன.- என்றார்.

நிகழ்வில் பேராசிரியர் தேவராஜா, பிரதிப் பிரதம செயலாளர் பா.சிவாஜி, மக்கள் வங்கி முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, வடமாகாண வலய அலுவலக உதவிப் பணிப்பாளர் ப.பிரபாகர், சட்டத்தரணிகள், நொத் தாரிசுகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முத்திரைத் தீர்வை செலுத்துவதில் விழிப்புணர்வையும் ஊக்குவிப்பையும் மேம்படுத்தும் முகமாக கடந்த ஒரு வருடத்தில் ஆதனங்களை கொள்வனவு செய்து கூடிய முத்திரைத் தீர்வையைச் செலுத்திய சட்டத் தரணிகள் மற்றும் நொத்தாரிசுகள் 10 பேர் கௌரவிக்கப்பட்டனர். (ற-4,ரி1,10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 9

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பழைய மாணவிகளுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2013, 2014, 2015 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாண விகளைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-422)

## பரீட்சை பெறுபேற்றை பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி II க்கான பரீட்சைப் பெறுபேறுகளை நாளை திங்கட்கிழமை முதல்பெற்றுக் கொள்ளலாம் எனப் பணிப்பாளர் பா.நிமலதாசன் தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதுடன் மீள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முதல் விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-ரி)

## தாய்...

பொன்று இடம் பெற்றது. தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நேற்று முதல் நாளை வரை நடைபெறும் இரண்டாவது ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தாய்லாந்து பிரதமர் மாளி கையில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தாய்லாந்து பிரதமர் பிரேயுத் சான் ஓச்சாவுக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இரு தரப்புப் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இதன்போது தொழில் நுட்பம், கல்வி, உணவுப் பாதுகாப்பு, மின்வலு மற்றும் நிரந்தர அபிவிருத்தி உள்ளிட்ட 20 துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையி லான ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக்கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இதேவேளை, இலங்கை ஜனாதிபதி தாய் லாந்து ஜனாதிபதியுடனும் இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். (த)

# மரண அறிவித்தல்

## கந்தையா பாலச்சந்திரன் (சின்னத்தம்பி)



வரியப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலச்சந்திரன் 07.10.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, ரத்தினாம்பிகை (மலேசியா), மற்றும் ராதாம்பிகை (பிரான்ஸ்), கருணாகரன் (சந்திரகாசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, நவரட்ணராஜா (மலேசியா), மற்றும் ஆறுமுகம் (பிரான்ஸ்), தேவராணி ஆகியோரின் மைத்துனரும் மகாலட்சுமி காலஞ்சென்ற ரஞ்சனாதேவி மற்றும் மாலினி, திருச்செல்வம், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் ராசேந்திரன், யோகேந்திரன், இந்திரதேவி (மலேசியா), பகீரதி (சுவிஸ்), பாமினி (பிரான்ஸ்), யமுனா தேவி(கனடா) ஆகியோரின் மாமனாரும் மயூரன்(லண்டன்), நிரூபா (லண்டன்), நிரோஜன் (சுவிஸ்), மயூரப்பிரியா, புருசோத்மன், துவாரகன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சுன்னாகம் கிழக்கில் உள்ள அவரது சகோதரனின் வீட்டில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தகவல்:
சகோதரன் கருணாகரன்
(சந்திரகாசன்)

**021 224 1586**

## செம்மணியில்...

தெரிவித்தனர்.சடலமாக மீட்கப்பட்டவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான, நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பைச் சேர்ந்த கதிர்காமு சந்திரசேகரம் (வயது-42) என்று இனங் காணப்பட்டார்.

ஏ-9 வீதியில் செம்மணி வெளிக்கு அண்மையாக உள்ள மதகு அருகிலிருந்து நேற்றிரவு சடலம் மீட்கப்பட்டது. சடலத்திலிருந்து சிறிது தூரத்தில் அவர் செலுத்தி வந்ததாக நம்பப்படும் துவிச்சக்கர வண்டி சேதம் எதுவுமின்றி மீட்கப்பட்டது. சடலத்தின் தொடைப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்ட ஓட்டை காணப்படுவதுடன், அதனூடாக பெருக்கெடுத்த இரத்தம் அந்தப் பகுதியில் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரால் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நேற்று இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-5-101-288)

## 14 வயது...

காகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை வவுனியா கணேசபுரம் பகுதியில் இடம்பெற்றது. வேஸ்குமார் றம்மியா (வயது-14) என்ற பாடசாலை மாணவியான சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீட்டில் சிறுமி படுத்திருந்த வேளை அதிகாலை 3 மணியளவில் புகுந்த பாம்பு சிறுமியைத் தீண்டியுள்ளது. சிறுமி அதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆயினும் சத்தி, வயிற்றுவலி ஏற்பட்டதாக வீட்டில் உள்ளோருக்குக் குறித்த சிறுமி தெரிவித்துள் ளார். அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வைத்திய சாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந் தார். சிறுமியின் சாவுக்கு பாம்புக் கடியே காரணம் என வவுனியா வைத்தியசாலையின் உடற் கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது என வவுனியா பொலிஸார் கூறினர்.

வவுனியாவில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி நிலை காரணமாக காடுகளிலுள்ள விசப் பாம்புகள், மற்றும் விசப் பிராணிகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுள் படையெடுக்கின்றன. எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த-21)

## வீதி விபத்து கவன ஈர்ப்பு வாரம்

- நிகழ்வு - "எழுந்து நிற்போம்"
- காலம் - 10 . 10. 2016 அன்று முற்பகல்10 மணி தொடக்கம் 11 மணி வரை
- இடம் - உங்களுங்கள் அலுவலக, வேலைத்தள வாசலில்

"வாகனத்தை செலுத்தும்போது தூக்கம் எமனைப் போன்றது. வாகனத்தை பாதையோரத்தில் நிறுத்தி 10 நிமிடங்கள் தூங்கியதன் பின் ஓடத்தொடங்குங்கள். புதிய உற்சாகத்துடன் ஓடமுடியும்"

### விச ஊசி விவகாரம்

# 146 முன்னாள் போராளிகளே இதுவரை மருத்துவ சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.9
வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகளில் இதுவரை 146 முன்னாள் போராளிகளே கலந்து கொண்டுள்ளனர்.

இதுவரை மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளாதவர்களுக்கான மருத் துவ பரிசோதனைகள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வைத்தியசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு இந்தத் தகவல்களைத் தெரிவித்தது.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டபோது அவர்களுக்கு விச ஊசி ஏற்றப்பட்டது என்றும், அதனால் அவர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தகவல்கள் வெளியாகின. அவற்றின் உண்மைத் தன்மையை அறிவதற்காக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது.

கடந்த மாதம் 2ஆம் திகதி மருத்துவ பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவை தொடர்ச்சியாக 9ஆம் திகதியும், 15ஆம் திகதியும், 23ஆம் திகதியும், 30 ஆம் திகதியும் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட வைத் தியசாலைகளில் நடத்தப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையில் 29 பேரும், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் 24 பேரும், முல்லைத்தீவு வைத்தியசாலையில் 81பேரும், வவுனியா பொது வைத்தியசாலையில் 7 பேரும், மன்னார் பொது வைத்தியசாலையில் 5 பேரும் இந்த மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அதேவேளை, முன்னாள் போராளிகள் அச்சம் காரணமாக மருத்துவப் பரிசோதனைகளை மேற் கொள்ளத் தயங்குகின்றனர் என்றும் கூறப்பட்டது.

போர் முடிவடைந்த பின்னர் 12,000 விடுதலைப் புலிகளுக்குத் தாம் புனர்வாழ்வு வழங்கி விடுவித்துள்ளதாக கொழும்பு அரசு அறிவித்துள்ளது. அவர்களில் சில ஆயிரம் பேர்களாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்ட கால உறுப்பினர்கள் எனக் கருதப்படுகின்றது. (ற-21)

## கடமை நிறைவேற்று அதிபர்களின் நியமனத்துக்கு உரிய நடவடிக்கை

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 9
கடமை நிறைவேற்று அதிபர்களின் நிரந்தர நியமனத்துக்கான அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான அனுமதி கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கில் போர் நடந்தபோது அவர்களே பாடசாலையின் நிறைவேற்று அதிபர்களாக செயற்பட்டு பாடசாலையை வழி நடத்தினர். அவர்களுடைய நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன்.

மத்திய கல்வி அமைச்சால் அமைக்கப்பட்ட மன்னார்-அல்-அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலையின் தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் உள்ள 5மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது. மன்னார் மாவட்டமும் அதில் உள்ளடங்குகின்றது. மாகாண சபையூடாக குறித்த திட்டங்களை முன் னெடுப்பதற்கான நட வடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

வடக்கு மாகாண சபைக்கும், மத்திய அரசுக் கும் இடையில் ஒரு நல்ல இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். சில கருத்து முரண்பாடுகள் காரணமாக இந்த மாவட்டத்தின் முன்னேற்றங்கள் பின்தங்காமல் இருக்க வேண்டுமானால் நிச்சயமாக ஒரு புரிந்துணர்வு வேண்டும். அதற்காக அடிபணிய வேண்டியதில்லை. புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

கடந்த சில தினங்களுக்கு முன் வடக் கைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் கல்வி அமைச்சுக்கு முன்பாகப்போராட்டம் நடத்தினார்கள். தமது நியமனங்களை வழங்கக் கோரியே அவர்கள் போராட்டம் நடத்தினர். நிச்சயமாக அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக செயற்படும் சுமார் ஆயிரத்து 743 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் 444 ஆசிரியர்களுக்கும் இந்த நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது - என்றார். (ற-21,56)

## டெங்கு பரவும் சூழல் வைத்திருந்த 15 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9
டெங்கு நோய் பரவும் விதமாக சூழலை பேணிய 15 பேருக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்று 22 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் சுற்றுசூழல் பிரிவால் யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட சோதனைகளில் இவர்கள் இனங்காணப்பட்டனர்.

யாழ். நீதிமன்றில் அது தொடர்பான வழக்குகள் கடந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதித்தார் நீதிவான் சி.சதீஸ்தரன். (ற-103)

# கிராமத்துக்குள் புகுந்த முதலை நையப்புடைப்பு

### காயங்களுடன் கடலில் விடப்பட்டது முள்ளிவாய்க்கால் கிழக்கில் சம்பவம்

முல்லைத்தீவு, ஒக்.9
முல்லைத்தீவு, நந்திக் கடலில் இருந்து வீடொன்றுக்குள் புகுந்த 6 அடி நீளமான முதலை, மக்களால் பலமாகத் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மீண்டும் கடலில் விடப்பட்டது.



இந்தச் சம்பவம் நேற்றுக்காலை முள்ளிவாய்க்கால் கிழக்கில் நடந்தது. குடியிருப்புகள் உள்ள பகுதிக்குள் திடீரென முதலை புகுந்தது. அங்குள்ள வீடொன்றுக்குள் அது புக முற்பட்டது. அந்தப் பகுதியிலிருந்த சிலர் முதலையை இரும்புக் கம்பி கொண்டு கடுமையாகத் தாக்கினர். கயிற்றால் கட்டி அதனை இழுத்துச் சென்று நந்திக் கடலில் விடுவித்தனர் - என்று தெரிவிக்கப்பட்டது. தற்போதுள்ள காலநிலையால் நந்திக் கடலில் உள்ள நன்னீர் ஏரி வற்றி உப்புக்கரிக்கும் நிலை தோன்றியுள்ளது. அதனால் முதலைகள் நன்னீர் தேடி ஊர்களுக்குள் புகுகின்றன என்று கூறப்படுகின்றது. இதனால் நந்திக் கடலை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர் - என்று கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (ற-21,ரி7)

## மருதமடுக் குளத்தில் மீன்பிடி மீள ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக்.9
புதுக்குடியிருப்பு, மருதமடுக்குளத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நன்னீர் மீன்பிடி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மீன்பிடியை மேற்கொள்ளும் மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி வலைகள், ஓடங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டுநிறுவனங்களால் வழங்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் நன்னீர் மீன்பிடித் திணைக்களத்தின் வடபிராந்திய பணிப்பாளர் எஸ்.சஷீபன், வலன்டீனா தொண்டு நிறுவன அதிகாரிகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அதிகாரிகள், மீன வர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21)

# மழை நீர் சேமிக்கும் தாங்கிகளின் கட்டுமானம் முடியும் தறுவாயில்

யாழ்ப்பாணம், ஒக்.9
மழை நீரைச் சேமிக்கும் நோக்கில் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கிகளின் கட்டுமானங்கள் முடிவடையும் நிலையை அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சு, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஊடாக பூநகரி, நாவற்குழி, கட்டுடை, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பிரதேசங்களில் நீர்த் தாங்கிகள் அமைக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தது. கோடை காலங்களில் குறித்த பகுதிகளில் நிலவும் வறட்சி நிலையைப் போக்கவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நீர்த்தாங்கிகளின் கட்டுமானப் பணிகள் தற்போது முடியும் தறுவாயை அடைந்துள்ளன என்று குறித்த பிரதேசங்களை சேர்ந்த பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.



2014ஆம் ஆண்டு மார்கழி மாதம் 14ஆம் திகதி குறித்த பகுதிகளில் நீர்த் தாங்கிகள் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டது. அவற்றின் கட்டுமானப் பணிகள் இந்த வருடம் முடியும் தறுவாயை எட்டியுள்ளன. இவற்றின் மூலம் பூநகரி, மண்டைதீவு, வேலணை போன்ற பகுதிகளில் நீண்ட காலமாக நிலவிவரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை கூடியளவு நிவர்த்தி செய்யமுடியும் - என்று பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (ற-21)

## ஒருசில செயற்பாடுகளைக் கொண்டு ஆசிரியர் மதிப்பு அழிக்கப்படுகிறது

### கிளி. கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக்.9
ஒரு சில செயற்பாடுகளை மட்டும் வைத்து ஒட்டு மொத்த ஆசிரியர்களின் மதிப்பும் அழிக்கப்படுகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேள்.
கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அதில் வலயக் கல்விப் பணிப் பாளர் உரையாற்றினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒருசில செயற்பாடுகளை வைத்து ஒட்டுமொத்த ஆசிரியர்களின் மதிப்பும் பாதிப்படைகின்றது. ஆசிரியர்களுக்கு மதிப்பளிகின்ற நிகழ்வில் ஆசிரியர்களின் மதிப்பு அழிக்கப்படும் விடயம் தொடர்பாக சுட்டிக்காட்ட வேண்டும்.
இந்த முறை கிளிநொச்சி மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் 196 மாணவர்கள் சித்தியடைந்தனர். மிகவும் பின்தங்கிய பல பாடசாலைகளில் 80 சதவீதத்துக்கு மேற்பட்ட சித்தி எட்டப்பட்டுள்ளது. வசதிவாய்ப்பற்ற நிலையிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் சாதனை செய்துள்ளனர். மிகவும் பின்தங்கிய மாயவனூர் பகுதியை சேர்ந்த மாணவரே மாவட்டத்தின் முதல் நிலையைப் பெற்றுள்ளார். பூநகரி, ஞானிமடம், முழங்காவில் ஆரம்ப பாடசாலை மாணவர்களும் சிறந்த சித்தி வீதத்தைக் காட்டியுள்ளனர். கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் 32 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர் -என்றார்.
நிகழ்வில் 'பிரதீபா பிரபா' விருது பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், ஓய்வு நிலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், வடமாகாண சபை உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-4,ரி3)



தென்னிந்தியதிருச்சபைஆதீனத்தின்பிள்ளைகளின் விழா வட்டுக்கோட்டை பேராலயத்தில் நேற்று நடைபெற்றது. காலை 8 மணியளவில் தென்னிந்திய திருச்சபை பேராயரும் அமெரிக்கன் இலங்கை மிசன் தலைவருமான பேராயர் டானியல் தியாகராஜாவின் தலைமையில் வழிபாடு நடத்தப்பட்டது. வழிபாட்டைத் தொடர்ந்து பிள்ளைகள் மற்றும் திருச்சபையின் சாட்சி பவனி வட்டுக்கோட்டை பேராலயத்தில் இருந்து வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி வரை சென்றது. பின்னர் அரங்க நிகழ்வுகளும் பிள்ளைகளுக்கான போட்டிகளும் இடம்பெற்றன. (ற-ரி3)



காலி கராப்பிட்டியவில் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கான நிதி திரட்டும் நடவடிக்கையாகப் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட நடைபவனி காலை 8 மணிக்கு சாவகச்சேரி ஊடாகச் சென்றது.
நடைபவனியில் மாகாணசபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ற-9)

# தொழில் வாய்ப்புக்கு 24 புதிய பாடங்கள்

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9
மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து வெளியேறும்போது ஏதாவது ஒரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அமைவாக புதிய கல்வி மறுசீரமைப்பில் 24 பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை தற்போது சில பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஏனைய பாடசாலைகளிலும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன்.
2015 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் ஏழு பாடங்களுக்கு மேல் 'ஏ' தரச் சித்தியடைந்த மாண வர்களையும், பாடசாலை அதிபர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எல்.ஐ.சி. நிறுவனம் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
9 மாகாணங்களுக்கும் கல்விக்காக 69 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 4 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை தான் அந்த கட்டட வேலைகளில் அதிக அக்கறை எடுத்து, முதன்மையாக செயற்படுவதை நான் இந்த இடத்தில் தெரிவிக்கவேண்டும். பாடசாலையின் வளர்ச்சி என்பது தனியே கட்டடத்தின் வளர்ச்சியில் மட்டும் அமைந்துவிடாது. இங்கே இருக்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்பு மூலமாகத்தான் நல்ல நிலையை அடைய முடியும். வடக்கு மாகாணத்தில் உள்ள கல்விசார் உள்ளங்களை நான் வேண்டிக்கொள்வது கல்வி வளர்ச்சிக்கு நீங்கள் சேர்ந்து உதவுவதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதே.
பிரதமர் தலைமையில் கல்வி மறுசீரமைப்பு என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அடிக்கடி கூட்டங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் பிரதமர் கூறுவது, மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகம் செல்ல முடியாது. மாணவர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு ஏற்றதாகப் பாடசாலைகளில் தொழில் கல்வி வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதே.
புதிய கல்வி மறுசீரமைப்புக்கு அமைவாகப் பாடசாலைகளில் 24 புதிய பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து வெளியேறும் போது ஏதாவது தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ. சரவணபவன், வட மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் இரவீந்திரன், எல். ஐ. சி. நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜுடாஜித் சென் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ற-4,ரி7)

## சட்டவிரோத மணல் ஏற்றிய இருவர் கைது

முல்லைத்தீவு, ஒக். 9
மல்லாவி கல்விளானில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவுமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது.
முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவுபொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான அணி குறித்த இருவரையும் கைது செய்தது.
மணல் ஏற்றிய டிராக்டர் பறிமுதல்செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், சான்றுப் பொருள் களுடன் மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ற-4,ரி7)

## மாடுகள், ஆடு கடத்தியவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.9
6 மாடுகளையும், ஆடு ஒன்றையும் சட்டவிரோதமாக இறைச்சியாக்கக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.
பளை அல்லிப்பளையில் இருந்து சாவகச்சேரிக்கு பட்டா வாகனத்தில் அவை கடத்தப்பட்டன. வீதிக்கடமையில் இருந்த பொலிஸார் குறித்த வாகனத்தைச் சோதனையிட்ட போது அவை கண்டு பிடிக்கப்பட்டன. குறித்த நபர் மீது வழக்கு தொடரப்பட்டு, கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,ரி3)

# கிளி. சந்தை தீ விபத்து பாதிப்புக் குறித்து மீள் கணக்கீடு கோருகிறது நிதியமைச்சு

கிளிநொச்சி, ஒக்.9
கிளிநொச்சி பொதுச் சந்தைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிப்படைந்த வர்த்தர்களுக்கான இழப்பீடு மற்றும் மீளமைப்புக்காக மீள் கணக்கீடு மேற்கொண்டு, உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சு கோரியுள்ளது.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.
கிளிநொச்சி பொதுச் சந்தைத் தொகுதியில் ...த 16ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீ விபத்தால் ...டைகள் முழுமையாகவும், 60 கடைகள் ...ளவிலும் சேதமடைந்தன. பெரும் ... இழப்பும் ஏற்பட்டது. 220 மில்லியன் ...பெறுமதியான இழப்புகள் ஏற்பட்டன ...மதிப்பிடப்பட்டது. இழப்பீடு கோரட் ...மை தொடர்பாகவே நிதி அமைச்சு ...க கோரியுள்ளது என்று தெரிவிக் சந்தையின் வர்த்தக சங்கத் தலைவர் யேசு தெரிவித்ததாவது:
மீள் கணக்கீடு தொடர்பில் நிதி அமைச்சு அறிக்கை கோரியுள்ளது என்று மாவட்ட செயலகத்தால் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டது. எம்மிடம் விவரங்களைப் பெற்றுக் கொண்டனர்.
விபத்தால் ஏற்பட்டது இரு வகையான இழப்பு. அமைவிடம் மற்றும் விற்பனைப் பொருள் இழப்புகள் ஏற்பட்டன. இவை அனைத்தையும் உள்ளடக்கியதே மொத்தப் பெறுமதி என்பதை தனித் தனியே எடுத்து விளக்கினோம்.
வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக 100 மில்லியன் ரூபா வழங்கப் படும் என்று நிதியமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தத் தொகை கட்டட அமைப்புக்கானது. வர்த்தகர்களின் இழப்புக்கானது அல்ல.
வர்த்தர்களுக்கு சிறு உதவியாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அது எமக்கு இன்னமும் கிடைக்க வில்லை. வடக்கு மாகாண அமைச்சர் தெரிவித்ததன் பிரகாரம் பிரதேச சபை நிதியில் இருந்து 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.
சமூக ஆர்வலர் எஸ்.கே.நாதனால் 22 பழக்கடை உரிமையாளர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ஊடாக பிரான்ஸில் உள்ள இலங்கை, இந்திய வர்த்தக சங்கத்தின் உதவியாக 3 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவும் கிடைத்தன.
முழுமையாக அழிந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களில், அதிக இழப்பைச் சந்தித்த 32 பேருக்கு உடனடி வாழ்வாதார உதவியாக 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.- என்றார். (ற-101)

# மந்தகதியில் வீட்டுத் திட்டம்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஒக்.9
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டப் பணிகளை விடவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன. இவ்வாறு பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.
வீட்டுத் திட்ட வீடுகளுக்கான அனுமதி அண்மையிலேயே கிடைத்தது. அதற்கமைய நாம் பணிகளை முன்னெடுக்கின்றோம் என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு ஏற்ப மாவட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளின் தேவைக்கேற்ப வீடுகள் பகிரப்பட்டன. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெறும் வீட்டுத் திட்டப் பணிகளை விட, எமது பிரதேசத்தில் வீட்டுத் திட்டப் பணிகள் மந்தகதியில் நடக்கின்றன. எதிர்வரும் நாள்களில் மழை ஆரம்பமானால் நாம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். தற்போது குடிசைகளிலும், கொட்டகைகளிலும் தங்கியுள்ளோம். வீட்டுத் திட்டப் பணிகளை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

> ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெறும் வீட்டுத் திட்டப் பணிகளை விட எமது பிரதேசத்தில் வீட்டுத் திட்டப் பணிகள் மந்தகதியில் நடக்கின்றன. எதிர்வரும் நாள்களில் மழை ஆரம்பமா னால் நாம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். தற்போது குடிசைகளிலும், கொட்டகைகளிலும் தங்கியுள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களிடமும் தொடர்புகொண்டு மக்களின் குற்றச்சாட்டுக் குறித்துக் கேட்டோம்.
எமது பிரதேச செயலகத்துக்கு 178 வீடுகளுக்கான அனுமதி கடந்த ஓகஸ்ட் மாத இறுதியிலேயே கிடைத்தது. அவை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, நான்கு கொடுப்பனவுகளில் தற்போது முதலாவது கொடுப்பனவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. விரைவில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.- என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 418 வீடுகளுக்கான அனுமதி கிடைத்தது. அவற்றில் தற்போது 78 வீடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரத்துக்குள் மேலும் 150 வீடுகளின் 90 வீதப் பணிகள் நிறைவடையும். ஏனைய வீடுகளுக்கு மூன்றாம் கட்டக் கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கை கள் நடைபெறுகின்றன. அனைத்து வீடுகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்- என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 63 வீடுகளுக்கான அனுமதி கிடைத்தது. தற்போது அவற்றின் 65 வீதப் பணிகள் முடிவுற்றுள்ளன. 3ஆம்கட்டக்கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.-என்று மாந்தை கிழக்கு பிர தேச செயலாளர் தெரிவித் தார்.
துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு முன்னர் 59 வீடுகளுக்கும் அண்மையில் 13 வீடுகளுக்கும் அனுமதி கிடைத்தது. 59 வீடுகள் தற்போது கூரை வேலையை அண்மித்துள்ளன. அவர்களுக்கான 3ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
கடந்தவாரம் அனுமதி கிடைத்த 13 வீடுகளுக்கு தற்போது முதலாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
இந்தமாத இறுதி அல்லது அடுத்த மாதத்துக் குள்59 வீடுகளும் முழுமையாக்கப்படும். குறித்த 13 வீடுகள் குறித்து உறுதிப்படத் தெரிவிக்க முடியவில்லை. மழை குறுக்கிடா விட்டால்அவைதொடர்பான பணிகளும் விரைவாக முன்னெடுக்கப்படும்- என்று துணுக்காய் பிரதேசசெயலாளர் தெரிவித்தார். (ற-101)

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# ரூ.40 மில். நிதியில் செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டு புனர்வாழ்வு அதிகார சபையின் அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் 40.144 மில்லியன் ரூபா நிதியில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
புனர்வாழ்வு அதிகார சபையின் 6 அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் இந்த செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
இறப்பு, காயம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான, கடும் பாதிப்புக்குள்ளான நட்டஈடுக் கொடுப்பனவுகள் 127 பேருக்கு வழங்கப்படவுள்ளது.
அதற்கென 12.28 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
அசையும், அசையா சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கான கொடுப்பனவு 130 பேருக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கென 7.60 மில்லியக் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
பாதிப்படைந்த 42 மத வழிபாட்டுத் தலங்களுக்கு 8.005 மில்லியன் ரூபாவும், சுயதொழில் கடன் திட்டத்தில் 60 பேருக்கு 8.150 மில்லியன் ரூபாவும், கிராம புரமைப்பின் கீழ் 2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவல்களை யாழ்.மாவட்டச் செயலகம் தெரிவித்தது. (ற-101)

## பொலிஸ்க்கு கஞ்சா விற்று சிக்கியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக்.9
வடமராட்சி, அல்வாயில் 400 கிராம் கஞ்சா பைக்கட்டுக்களை பொலிஸாருக்கு விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு குறித்த நபர் கஞ்சா விற்றுள்ளார்.
அவரைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4,26)

## மைத்துனியைக் குத்தியவர் மறைந்திருந்தபோது கைது


யாழ்ப்பாணம், ஒக்.9
மைத்துனியின் இதயத்தில் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டவர் நெல்லியடியில் மறைந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
மிருசுவிலைச் சேர்ந்த குறித்த நபர் குடும்பப் பிரச்சினை காரணமாக மனைவியின் மூத்த சகோதரியுடன் முரண்பட்டுள்ளார். அது கைகலப்பானது. கத்தியை எடுத்து மைத்துனியின் நெஞ்சில் குத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த பெண், கத்திக்குத்தால் இதயம் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் 3 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.
சந்தேநகபர் தப்பியோடியிருந்த நிலையில் – கொழும்பில் வேலை செய்கின்றார் என்று கூறப்பட்டது. நேற்றுமுன்தினம் குறித்த நபரின் நடமாட்டம் நெல்லியடியில் காணப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.
கொடிகாமம் பொலிஸாரும், நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து மறைந்திருந்த சந்தேகநபரைக் கைது செய்தனர். அவர் தற்போது பொலிஸ் தடுப்பில் விசாரிக்கப்படுகின்றார். விசாரணைகளின் பின்னர் தெரிவித்தனர்.
சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-4,26)

## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.9
உடைமையில் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவரிடம் இருந்து 900 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பொலிஸார் முற்படுத்தினர். எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (ற-103)

## மலையக எழுச்சியை ஆதரிக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9
மலையகப் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சியை ஆதரிக்கும் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ளது. கூட்டம் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்
7 ஆம் நாள் பிரமோற்சவ தினம் (09.10.2016)
இரவு 7.00 மணிக்கு ஏகாந்த சேவை.
இசைஆராதனை
பாட்டு - N.நிதர்சன். S.கோபிகிருஷ்ணன். S.அருணன். து.மதுஷிகன்
வயலின் - யோ.பிறிசில்லா
மிருதங்கம் - G.வசந்
மதியம் அன்னதானம்.
ஆலயதர்மகர்த்தா.
(C 25486)
(14,17,18)



வல்லிபுர ஆழ்வார்
இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை
பத்தாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல், இரவு என வழங்கிவருகிறது
JETEX உள்நாடு
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் கூரியர் சேவை எம்மால் வழங்கப்படும்
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களையும் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 |
| | + 94 77 544 7359 |
| நெல்லியடி | + 9477 285 0285 |
| பருத்தித்துறை | + 9477 555 2973 |

| | காலை | மாலை |
|---|---|---|
| பருத்தித்துறை | 9.00 | 7.00 P.m |
| யாழ்ப்பாணம் | 10.00 | 8.00 P.m |
| வெள்ளவத்தை | 9.00 | 7.00 P.m |
| கொட்டாஞ்சேனை | 10.00 | 8.00 P.m |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

## 5ம் ஆண்டு சிறார்களின் எதிர்காலத்திற்கான

# சிறந்த முதலீட்டை

## அபான்ஸ் வழங்குகிறது

இம்முறை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோன்றிய சிறார்களுக்கு பெறுமதியான **பிரின்டர்** மற்றும் **வைரஸ் பாதுகாப்பை** இலவசமாக அபான்ஸ் வழங்குகிறது. Lenovo மற்றும் Acer மடிக்கணினிகளை அபான்ஸில் கொள்வனவு செய்து இந்த இலவச பரிசுகளை வென்றிடுங்கள். நீங்களும் இன்றே உங்கள் அருகாமையிலுள்ள அபான்ஸ் காட்சியறைக்கு வாருங்கள்.




- ✓ மாணவர்களுக்கான பிரத்தியேக மடிக்கணினிகள்.
- ✓ பெற்றோரின் கண்காணிப்பில் **பிள்ளைகளை** பாதுகாப்பாக **இணையத்தளத்தில்** உலாவ விடவும்.

acer
explore beyond limits™

Lenovo



**Aspire Veriton M**
- Intel Dual Core CELG3260
- 4GB RAM
- 1TB HDD
- Acer 19" LED Monitor
- **3 Year Warranty**

ரூ.65,990
விசேட விலை ரூ.59,990
12
மாதாந்தம் 2,999

*நிபந்தனைகள் உண்டு

**Aspire 531DC**
- Intel Dual Core CEL N3050DC
- 4GB RAM
- 500HDD
- Intel Graphics
- 15.6" Display
- **3 Year Warranty**

ரூ.52,990
விசேட விலை ரூ.47,990
12
மாதாந்தம் ரூ.2,399

**LENOVO IP 100 CEL**
- INTEL CEL DC
- 2GB RAM
- 500GB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- Windows 10
- 1 Year Warranty

ரூ.49,900
விசேட விலை ரூ.44,990
12
மாதாந்தம் ரூ.2,249

**LENOVO IP 300 i3**
- INTEL CORE i3
- 4GB RAM
- 1 TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- DOS
- **3 Year Warranty**

ரூ.79,900
விசேட விலை ரூ.71,990
15
மாதாந்தம் ரூ.3,599

AMEX கடனட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு 20 மாதங்களுக்கு வட்டியற்ற தவணைத் திட்டங்கள்.
ஏனைய கடனட்டைகளுக்கு 12 மாதங்களுக்கு வட்டியற்ற தவணைத் திட்டங்கள்.

IT HOTLINE 5886655 | us at www.facebook.com/abansit | நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் லைட் காட்சியறைகளில் கிடைக்கும்.

Abans



## இம்முறை சம்பத் e ரெமிட்டன்ஸ் கேஷ் வாசி - 4 சீட்டிழுப்பினூடாக 10 இலட்சம் ரூபாய் வெற்றியாளர் மற்றும் 10 பேருக்கு மாதாந்தம் தலா 1 இலட்சம் ரூபாய் பரிசு




உங்கள் பணத்தை சம்பத் e ரெமிட்டன்ஸ் ஊடாக 2016 மார்ச் மாதம் 1ம் திகதி முதல் 2017 ஜனவரி மாதம் 31ம் திகதி வரை இலங்கையில் பெற்றுக்கொண்டு இறுதி சீட்டிழுப்பில் பரிசுகளை வென்றிடுங்கள்.

# 10 இலட்சம் ரூபாய்

**ஹொண்டா டியோ ஸ்கூட்டர் ஒன்று. வீட்டு மின் உபகரணங்கள் ஏராளம்.**

- 32" LED TV
- இரு கதவுகளை கொண்ட குளிர்சாதனப் பெட்டி
- முழு தன்னியக்க சலவை இயந்திரங்கள்
- Hifi setup
- Home theater system

**மேலும் மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் 10 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபாய்.**

Sampath remittance service
MoneyGram. money transfer
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) | 0112 30 30 50 | www.sampath.lk

No. WP/GT/4342

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.9

நடப்பு வருடத்தில் நியமனம் பெற்ற வட மாகாண பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை நடை பெறவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு, யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும், வட மாகாண கல்வி பணிப்பாளரும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் வட மாகாணத்தைச் சேர்ந்த புதிய தரம் III அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ற-ரி4)

## இளையோர் திட்டத்துக்கான விதப்புரைகள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு மாகாண இளையோருக்கான முழுமையான திட்டமொன்றை உருவாக்குவதற்கான விதப்புரைகளை பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார். கல்வி மற்றும் திறன் விருத்தி – வாழ்க்கை தொழிற் பயிற்சி உள்ளடங்கலாக, வேலை வாய்ப்பும் தொழிற்பயிற்சி முயற்சியாண்மையும், சுகாதாரமும் நல்வாழ்வும் (இனப்பெருக்க, சுகாதாரக் கல்வி உள்ளடலங்கலாக), சூழல் பாதுகாப்பு, சமாதானமும் நல்லிணக்கமும். பொழுதுபோக்கு அம்சங்கள் – விளையாட்டுக்கள், கலைகள் மற்றும் விழுமியங்கள் சமய, பிரதேச கலாசார சிறப்பம்சங்கள் உள்ளடங்கலாக முக்கிய துறைகளில் விதப்புரைகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன. விதப்புரைகளை youthmoenpg mail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இளையோர் கொள்கைக்கான பரிந்துரைகள் எனக் குறிப்பிட்டு கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ற-ரி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 12.08.1952

இறப்பு 21.10.2015

திதி:-09.10.2016

**அமிர்தானந்தசிவம் சிவயோகம்**

(பளவத்தை - பொலிகண்டி)

அன்பால் பண்பால் உயர்ந்து - எமை
அன்போடு அரவணைத்த எம் அன்னையே
ஆண்டு ஒன்று சென்றதுவே!!
நீங்கள் எமைவிட்டுச் சென்றது
நம்பமுடியவில்லை தாயே
ஆண்டுகள் பல சென்றாலும் - உம்
நினைவுகள் என்றும் மாறாது அம்மா....

யோகபுரம், மல்லாவி. மருமகன் செ.மயில்வாசன்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பாலசிங்கம் நடனகுமார்(சிவா)**

அன்பிற்காக அன்னையின் மடியில் சரண்
12.02.1962

ஈழத்து சிதம்பர நடராஜன் திருப்பாதக் கமலங்களில் சரண்
10.10.2005



திதி: புரட்டாதி மாத பூர்வபட்ஷ அட்டமி : (09.10.2016)

பண்ணோடு பிறந்த தாளம் போல - இம்
மண்ணில் எம்மோடு பிறந்த நம் உயிரான சிவா
மாசியிலே பிறந்தாய் நீ. தேவியர் திருநாளாம்
ஐப்பசியில் மறைந்தாய் எம்மைவிட்டு
வருடங்கள் பதினொன்று உருகியது பனிபோல
வாடாத மலராக உன் நினைவுகள் கருகாது எம்நெஞ்சங்களில்
உன் ஆத்மா சாந்திபெறுக.

"துவாரகா"
கதிர்காமசுவாமி கோயிலடி, காரைநகர்.
உன் அன்புப் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி தவம் யோகலிங்கம்**



தோற்றம் 10.03.1946

மறைவு 09.09.2016

கடந்த 09.09.2016 காலமான எமது குடும்பத் தலைவி திருமதி தவம் யோகலிங்கம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு அனுதாபம் மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அண்ணா சிலையடி, கரணவாய், கரவெட்டி.
குடும்பத்தினர். 021 226 4354

## நெஞ்சகலா நினைவுகளில் இரண்டாம் ஆண்டு



அமரர்
**பொன்னம்பலம் சிவதாஸ்**

(சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர்)

கனவுகளின் வித்தாய் 06.05.1960
கடவுளின் சொத்தாய் 02.10.2014

திதி - (பூர்வபட்ஷ அட்டமி)


ஆற்றல்களின் அரசனாய் ஆளுமையின் சிகரமாய்
அன்புடன் முறுவலித்து ஆதரவாய்த்தலைதடவி
கற்றோரும் பெரியோரும் கலந்திடும் சபையெல்லாம்
கால்பதிக்க வழிசமைத்த கலங்கரை விளக்கானீர் !
தேற்றிட முடியவில்லை தேம்புகின்றன மனங்கள்
தெளிவே பிறக்கவில்லை தேடுகின்றன விழிகள்
இறைவனோடு இறையருகில் நீர் சென்று இரண்டாண்டுகள்
இங்கிருக்கும் இதயமெல்லாம் வாழ்வீரே பல்லாண்டு !

இல.140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தாங்கள் நினைவுகளில் வாழும் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
டாக்டர்
**கனகரட்ணம் சிவனேசன்**

(விரிவுரையாளர், மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)



அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவத்துறை
பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 07 1942



மறைவு 10 09 2016

**திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி**

திதி: (பூர்வப்ட்ஷ நவமி)

10.09.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும். நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் பிரசுரித்தவர்களுக்கும் மலர்வளையங்களை அனுப்பி வைத்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை( 10.10.2016') திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம்**


**குடும்பத்தினர்.**

டச் றோட், சாவகச்சேரி.

ஸ்ரீமுத்துமாரியம்மன் றேடர்ஸ்(யாழ்ப்பாணம்)
சிவா றேடிங் கம்பனி (கொழும்பு , சாவகச்சேரி)
V.S.S அரிசி ஆலை (வவுனியா)

(கு/25736) (2.18)

## மரண அறிவித்தல்



### மாரிமுத்து அமுதலிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் விவசாயத் திணைக்களம் - பரந்தன்)

மண்டதீவைப் பிறப்பிடமாகவும் கோகுல வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து அமுதலிங்கம் 06.10.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - மாரிமுத்தா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நாகராசா, அன்னலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், குண ரத்தினம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் உரும்பிராய் இந்துக்கல்லூரி) பாசமிகு கணவரும், கேதீஸ் (பிரான்ஸ்), குமுதினி (ஆசிரியர்), நளாயினி (பிரான்ஸ்), லோஜினி (பிரான்ஸ்), சறோயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி (பிரான்ஸ்), இராஜேந்திரன், சிற்சபேசன் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாமினி, சரண்ணியா, சிந்திஜா, சுஜீவன், சகாணா, அஜந்தா, பிருந்தா, சிந்தூரன், சிந்துஜன், சிந்துராஜ், நிரூசன், இசைப்பிரியன், மயூரி, லோசன், வைஷ்ணவி, சங்கவி, சாம்பவி, அச்யூதன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி யளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலை வாணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்**

ராஜன் - **077 101 4505**

(J/5232)
(11,18)

## மரண அறிவித்தல்



### கந்தையா அமரசிங்கம்

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி R.M.P)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் , இல.8 கந்தபுராணவீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அமரசிங்கம் 07.10.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினி தேவியின் (தேவி) அன்புக் கணவரும் சற்குணராணியின் (லண்டன்) அருமைச் சகோதரனும் சோதிநாதனின் மைத்துனரும் கீத்தா (கனடா), சபேசன்(கனடா), சங்கீதா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகரன்,றஜித்தா, லக்ஷ்மன் ஆகியோரின் மாமனாரும் சஞ்ஜெய், அன்சி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.8, கந்தபுராண வீதி,**
**கந்தர்மடம்.**

(ஜே/5235)(12.18)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மகன்- சபேசன்**
**மைத்துனர்- சோதிநாதன்**

077 436 9212, 021 222 9168

## மரண அறிவித்தல்

### திருமதி லோறா பியற்றிஸ் செல்வநாயகம்

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட லோறா பியற்றிஸ் செல்வநாயகம் 06.10.2016 வியாழக்கிழமை இறைவனின் பாதத்தில் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லாசாறஸ்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மனுவற்பிள்ளை - முத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சேவியர் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் சிந்தியா திரேஸ் (Canada), சிசில்ட யோனியஸ் (உரிமையாளர்- சிற்றி பாமா), காலஞ்சென்ற பசில் பிளன்டன் (Canada), பேர்ணடின் நிமல்கா, மெல்வின் யோசப் எமில் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமிலஸ், செல்வரட்ணம், விற்றறின் சிங்கராயர் (உரிமையாளர் சிற்றிமெடிக்கல்ஸ், யாழ்ப்பாணம்),மேரி மாகிறற் (வினிற்றியா) காலஞ்சென்ற அருளானந்தம் சேவியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜநாயகம் (கனடா), சாமிளா, ஊர்மிளா (கனடா), பிறிமிளா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கேற்றூட், மரீனா வனித்தா, மரியநாயகம், ராஜேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஜெரின் (Canada), மரியா (Canada), தமித்தா (Canada), சின்ஸ்கா (London), சரூன், நிவேத் (Canada), நிரோமி(Canada), ரானியா (Canada), கெல்சியா(Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றெறனி(Canada), நேவியன் (Canada), டனிஷா(Canada), அன்றீனா(Canada), சிவோனா (London) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை A.F றேமன்ட்ஸ் மலர்ச்சாலையில் 09.10.2016 காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் 10.10.2016 காலை 8.00 மணியில் இருந்து பிற்பகல் 4.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.10.2016 மாலை 4 மணியளவில் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

**சிசில் (மகன்) 077 9550026**

26,3/4, Moor Road,Wellawatta,
Colombo-06
011 2580258

(ஜே/5235)(12.18)



**தாயின் மடியில்**
**16.05.1932**

**ஆண்டவன் அடியில்**
**06.10.2016**

## அறநெறி பாடசாலை ஆரம்பவிழா

யாழ்ப்பாணம், ஒக். 9

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தின் அறநெறிப்பாடசாலையின் ஆரம்ப விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 ஆம் திகதி முற்பகல் 8 மணியளவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் கலந்துகொள்வார். சின்மயா மிஷன் ஜாக்கிரத சைத்தன்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (ற-ரி1)

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக்.9

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் வாணி விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம் பெறும். பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ள நிகழ்வின் தலைமை விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் ஆறுமுகம் நடராஜன் கலந்துகொள்வார் என்று பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.(ற)

# வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக்.9

வலிகாமம் மேற்கு தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

சி.முத்துராசா தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி கு.சண்முகலிங்கமும், சிறப்பு விருந்தினராக தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை அதிபர் சி.முத்தரசனும் கலந்து கொள்வர்.

விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை என்பவற்றில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் ஆகியோருக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

'வாழ்வின் முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் உகந்தது கிராம வாழ்க்கையா ? நகர வாழ்க்கையா ? என்னும் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும். அதற்கு நடுவராக சட்டத்தரணி கு.புரந்தரன் பங்குபற்றவுள்ளார்.(ற-9)

**உடல் பருமன் கொண்டோருக்கும் உடல்எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)**

ஆண், பெண் இருபாலருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை, டொனிக், கிறீம்.

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல்எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல், வயிற்றுக் கோளாறு , நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

**ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.**

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/= 3 மாதத்திற்குரியது)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணைசூடு, எதைச் சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கரும்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு

**(விலை 3500, 5500)**

**தொடர்பு: 077 210 6155** 221, நாவலர் றோட் (பிறவுன்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

10நாள். 3மாத ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 076 348 8645**

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியிலுள்ள இரண்டு அறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு. நாள், கிழமை வாடகைக்குண்டு.

**தொடர்பு: 077 837 8597**

**பணிப்பெண் தேவை**

கொழும்பு வெள்ளவத்தை தொடர்மாடியில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நோயாளிகளான வயதான தம்பதியினரைப் பராமரிக்க பணிப்பெண் தேவை. தங்குமிடம், உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

வயது எல்லை 35 - 50

**011 250 0219/ 077 036 8645**

**MAJESTIC CINEPLEX** A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres

www.ceylontheatres.lk

**இனி இல்லை மூட்டுவலி**

**மூட்டுகளில் வலி, இறுக்கம், வீக்கம்**

அடிபட்ட காயங்கள், தொற்றுக்கள் என்பவற்றினால் முழங்கால், இடை, முழங்கை,தோள்பட்டை, விரல்கள் ஆகியவற்றில் உட்புறத்தில் ஏற்படும் சிராய்ப்புக்கள், கிழிசல்கள் காரணமாக இவை ஏற்படுகின்றன.

ஒஸ்ரியோ ஆர்த்தரைடீஸ், யூரிக் அமிலப்படிவுகள், எஸ்.எல்.ஈ, வாதமூட்டழற்ச்சி, முள்ளந்தண்டு அழற்ச்சி, மென்சவ்வுகளில் ஏற்படும் அழற்ச்சி மூட்டுகளில் வலிக்கான காரணிகளாகும்.

மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினைகளை எமது சிக்கலற்ற ஆயுர்வேத சிகிச்சை மூலம் வலி,வீக்கம் என்பனவற்றை நீக்கி விரைவாக குணப்படுத்தும்

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**




**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA. BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

**இலங்கையில் சாக்கடை மற்றும் கழிவுநீருக்குரிய ஜப்பானிய புதுமைமிகு தீர்வு**

**சுற்றாடல் நட்புறவுமிக்கது**

ஜப்பானிய குபோட்டா நிறுவனத்தின் உற்பத்தி.

**ஒமேகா ஜொகாசோ அழுக்குத்தொட்டி**

மனிதக் கழிவுகளுக்கும் கழிவு நீருக்குமான புதுமையான தீர்வு




பாரம்பரிய அழுக்குத் தொட்டியுடன் ஒப்பிட்டுகையில் ஜொகாசோ தொகுதியால் பெறப்படும் நன்மைகள்

சகல கழிவுநீரும் சாக்கடையும் ஓரே இடத்துக்குச் திசைதிருப்பப்படுவதால் பல குழிகளைத் தோண்ட வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பராமரிப்பானது தேவைப்பட மாட்டாது. அத்துடன் விற்பனையின் பின்னர் பராமரிப்பின் பொருட்டு விசேடமாக ஜப்பானில் பயிற்றப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களைத் தங்களுக்கு நாம் வழங்குவோம்

மழை காலத்தின்போது குறித்த பிரதேசங்களில் ஏற்படும் நீர்மட்ட அதிகரிப்பானது தொட்டியின் இயக்கத்தில் தடங்கலைஏற்படுத்தமாட்டாது என்பதுடன் நிரம்பிவழியவும் மாட்டாது.

சுகாதார ரீதியிலான பயனொன்றானது, பாரம்பரிய தொட்டிகளைப் போன்றல்லாது இவ் ஜொகாசோதொகுதியினூடாக எந்தவொரு நச்சு வாயுக்களோ அல்லது கிருமிகளோ வெளியேற்றப்படுவதில்லை

சகல திண்மக்கழிவுகளும் மீளப் பயன்படுத்தப்படவல்ல சுத்தமான நீராக மாற்றியமைக்கப்படுகின்றன. ஜப்பானில் மாத்திரமல்லாது, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பல ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளும் இத்தொட்டிகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. தாங்கியானது பாரம்பரிய அழுக்குத்தொட்டி போன்று நிரம்பிவழியமாட்டாது.

தொட்டியைப் பொருத்துவதில் வினைத்திறன்மிக்க நிபுணர்காளல் தொட்டி பொருத்தப்பட்டு பேணும் தன்மையையும் அறிவுறுத்தப்படும்.

வெளியேற்றப்படும் இந்நீரானது எந்தவொரு மணத்தையும் கொண்டிராமையால், பல்வேறு வீட்டுப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட முடியும் (தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுதல். நீர்ப்பாசனத் தொகுதி போன்றன)

**Omegaa Johkasou** Engineering Lanka (Pvt) Ltd

**Omegaa Johkasou Engineering Lanka (Pvt) Ltd.**

Project Office: 12/1 A, Horana Road, Mavittara South, Kesbewa, Piliyandala.

Fax: +94-11-2620737 Web: www.omegaajohkasou.com Email: info@omegaajohkasou.com

**Geetha - 075 9099000, Thilanka - 011 2620620, Sunil - 076 8211438**

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் அரச உத்தியோகம், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு /வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப்பொருத்தமான ஜாதகங்கள் போட்டோக் களுடன் உடன் தெரிவு செய்து தரப்படும். (J.5124) (14,17,18)

383/14 B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப்பக்கம்)
021 222 9306 / 077 138 7596

## விநியோகஸ்தர் தேவை

Norfolk Foods (pvt)Ltd ஆனது ஆசிய பிராந்தியத்தின் முன்னணி Poultry உற்பத்தியாளர்களான தாய்லாந்தின் Charoen Pokphand Foods PLC இனுடைய கூட்டு பங்குதாரராகும். நிறுவனத்தின் துரித விரிவாக்கத்துக்குப் பின்வரும் பிரதேசங்களில் விநியோகஸ்தர்கள் தேவை.

✓ யாழ்ப்பாணம் ✓ வவுனியா ✓ கிளிநொச்சி ✓ திருகோணமலை

கீழ்க்காணும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- © வங்கி உத்தரவாதம்
- © விற்பனைப் பிரதிநிதிக்கான அலுவலக வசதி
- © Freezer Truck மற்றும் அதற்கான சாரதி
- © அதி குளிரூட்டிகளுடனான களஞ்சிய வசதி.

மேல்காணப்படும் தகைமையுடையவர்கள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாள்களுக்குள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Head of Sales
Norfolk Foods (Pvt) Ltd
142, Katuwana Industrial Estate, Katuwana, Homagama.
T.P: 011 285 7340
Mobile: 077 294 7735 (Sibly)
Fax : 011 285 7341
Email: hr@norfolk.lk,
Web- www.norfolk.lk

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**

- 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
- GCE (O/L, A/L)
- சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**

- Basic Salary
  - *Marketing Executive - 15,000/= +++
  - *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

## விநியோகஸ்தர்கள் தேவை

**AQUA SAFE (Pvt)LTD**

எமது நிறுவனம் மேற்குறிப்பிட்ட பிரபல வர்த்தக நாமத்தின் கீழ்

குடிநீர் உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமாகும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரச் சான்றிதழ்கள் அனைத்தும் உண்டு.

எமது விநியோக வலையமைப்பை நாடளாவிய ரீதியில் வியாபிக்க

வட, கிழக்கு மாகாணத்தில் அனைத்து பிரதேசங்களிலும் உங்களுக்கு எம்முடன் இணைய முடியும்.

தேவையானவை: பிணை வைக்கக் கூடிய இயலுமை; பிரதேசம் தொடர்பில் சிறந்த அறிவு; உங்களிடம் வாகனம் களஞ்சியவசதி

உயர் அனுகூலங்கள் மற்றும் விசேட கொடுப்பனவுகள் பல மேலதிக தகவல்களுக்கு இன்றே அழையுங்கள்.

விநியோக முகாமையாளர்
தொ.பே: 077 480 3048



STANDARDS CERTIFIED COMPANY

யாழ்ப்பாணத்தில் அங்கீகாரம்பெற்ற ஒரே ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் LIC NO. 3097

## ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வேலைவாய்ப்புக்கள்

உடனடி பயணம்

**கட்டார்** (1QR=40.17)

| | |
|---|---|
| விருந்தி பராமரிப்பு | 900+200 QR |
| சாரதி G.C.C அனுமதிப்பத்திரம் | 1800+200 QR |
| உதவியாளர்கள் | 900+200 QR |
| வெல்டர் | (தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்) |
| சுத்திகரிப்பாளர் | 900+200 QR |

**சவுதி**

| | |
|---|---|
| சுத்திகரிப்பாளர் (பெண்கள்) | 1000+200 SR |

**டுபாய்**


| | |
|---|---|
| சுத்திகரிப்பாளர் | 800+200 DHS |
| சுத்திகரிப்பாளர் (பெண்கள்) | 900+250 DHS |

நிபந்தனைகள்:

- காப்புறுதி, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து கம்பனியால் வழங்கப்படும்.
- வேலை நேரம் நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலங்கள், வாரத்தில் 6 நாள் வேலை.
- மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஏனையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டத்துக்கு அமையும்.

ikea — Your Search Ends Here.
Call us 0766 476 877
0777 881 235
0212 224 220
Ikea Travels & Tours (Pvt) Ltd.
#62/34, Stanly Link Road, Jaffna
Sri Lanka.
www.ikeatourslk.com
(J/5229)(10,18)

## 8th Jaffna International Trade Fair 2017



JITF 2017

27th, 28th, 29th January 2017
10.00am - 8.00pm
Municipal Grounds - Jaffna

## STALL RESERVATIONS OPEN FOR CCIY PAVILION

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY
CO-SPONSOR: S-lon
OFFICIAL
SUPPORTED BY
ENDORSED BY
www.jitf.lk
Find us on facebook.

for information: Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY)
Jurison Jenaraj
Chief Executive Officer,
124, Rasavinthoddam Road, Jaffna
Tele / Fax- 0212226609/ 07767 80894

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஒக். 9
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சி நெறியில் பயிலுநர்களாகக் கலந்து கொண்டவர்களில் 10 பேர் ஒரு வருடப் பயிற்சி நெறி முழுமையானதை முன்னிட்டு குருதிக் கொடை வழங்கினர். கடந்த வருடம் நடைபெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 18 மாதகாலப் பயிற்சி நெறி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறுகின்றது. பயிற்சிநெறியில் கலந்து கொண்டவர்களில் 10 பேர் ஒரு வருடத்தை முழுமைப்படுத்தியதை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதிக் கொடை வழங்கினர். (ற-115)

## மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.9
சைவசமய விழுமியங்களை வளர்க்கும் நோக்குடன் சைவ சமய விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். சுன்னாகம் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் நிகழ்வு பாடசாலை முன்றிலில் இடம்பெற உள்ளது எனப் பாடசாலை அதிபர் தெரிவித்தார். (ற)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு தாமரைத் தடாக அரங்கியல் மண்டபத்தில்
05.10.2016 புதன்கிழமை எமது நாட்டின் அதிமேதகு
ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன
அவர்களிடமிருந்து
'குரு பிரதீபா பிரபா' ஆசிரியருக்கான விருதினைப் பெற்ற
கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியையான
திருமதி ஜெயலலிதா துரைசிங்கம்
(B.A.Dip.in Edu, "வித்தியா கீர்த்தி ஸ்ரீ சம்மனா" J.P)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்விச் சமூகத்துக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டி மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: சகோதரர்கள், மச்சாள்மார், மச்சான்மார், மருமக்கள், கணவர், பிள்ளைகள்.
இல.229, விவேகானந்தநகர், கிளிநொச்சி.

# ஹைட்டி இழப்புக்கள் 900 ஐ எட்டியது; மேலும் அதிகரிக்கும் அபாயம்



போட்-அலு. பிரின்ஸ், ஒக். 9
கரீபியன் தீவான ஹைட்டியில் கடந்த புதன்கிழமை வீசிய கடும் புயலால் நேற்று மாலை வரை 900 பேர் சாவடைந்ததாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்தது.

கரீபியன் தீவுகளான ஹைட்டி மற்றும் கியூபாவில் கடந்த புதன் கிழமை மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் கடும் சூறாவளி வீசியது. குறைசேன் மத்தியூ எனப் பெயரிடப்பட்ட குறித்த புயலால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. ஹைட்டியே அதிக சேதத்துக்கு முகம் கொடுத்தது. அங்கு மட்டும் நேற்று மாலை வரை 900 உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. கட்டட இடிபாடுகள் இன்னமும் முழுமையாக நிறைவடையவில்லை. இதனால் சாவடைந்தவர்களின்எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டது.

அமெரிக்காவின் வறுமையான நாடு என விமர்சிக்கப்படும் ஹைட்டியில் 2010 ஆம் ஆண்டு நில அதிர்வு ஏற்பட்டது. 2013 ஆம் ஆண்டு கொலரா நோய் பரவியது. கொலராவால் மட்டும் 9 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அங்கு சாவடைந்தனர். இவற்றிலிருந்து படிப்படியாக மீண்டுவந்து கொண்டிருந்த ஹைட்டிக்கு மத்தியூ சூறாவளி பலத்த அடியாக வந்து சேர்ந்துள்ளது. அமெரிக்கா 4 லட்சம் டொலர்களும், பிரிட்டன் 5மில்லியன்ஸ்டேர்லிங்பவுண்ஸ்சுகளையும் நிதியுதவி செய்வதாக அறிவித்தன.

ஹைட்டியை தாக்கி சில மணிநேர இடைவெளியில் கியூபாவையும் மத்தியூ தாக்கியது. இருப்பினும் அங்கு இடம் பெற்ற சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சூறாவளி தாக்கியது. நால்வர் சாவடைந்தனர்.

20 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். 10 லட்சம் மக்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. (ம-ரி4)

011 5 411 411

மாற்றம் ஏற்படாத
CHANGE

பலமான அடித்தளத்துடன் நிகரற்ற மகத்துவத்துடன் எதிர்கால தலைமுறையின் நோக்கங்களை வெற்றியுள்ளதாக்குவதன் மூலம் தேசத்தின் அபிவிருத்திற்கு பங்களிப்பு செய்வோம்.



சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, எனும் பெயரில் பலமான அடித்தளத்துடன் பல்லாயிரம் இலங்கை மக்களின் நிதித் தேவைகளை உணர்ந்து, அவர்களின் வாழ்க்கை வெற்றியுள்ளதாக பங்களிப்பு செய்த நாம், தற்போது SDB வங்கி எனும் பெயரில் நிகரற்ற மகத்துவங்கள் பலவற்றுடன் சிறப்பான செயற்திறன் மற்றும் விரிவான சேவையை வழங்கி எதிர்கால தலைமுறையின் நோக்கங்களை வெற்றியுள்ளதாக்க கைகோர்த்துள்ளமை தேசத்தின் அபிவிருத்திற்கு பங்களிப்பு கொண்டதாக அமையும்.

SDB வங்கி, இல.12, எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி

அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்

LG
Life's Good

## 6 இலவச சர்விஸ்களுடன் 2 வருட உத்தரவாதம்


### அபான்ஸிடமிருந்து மட்டுமே கிடைக்கும் LG வளிச்சீராக்கிகள்



உங்கள் வீடுகளில் நீண்ட காலம் சுத்தமான காற்றை அனுபவிப்பதற்கு அபான்ஸ் இப்பொழுது உங்களுக்கு நிலைபேறான வாய்ப்பை தருகிறது. தூசு துகள்களை கட்டுப்படுத்தி காற்றினால் பரவும் நுண்ணுயிரிகளை தடுத்து காற்று மாசடைவதால் ஏற்படும் தீங்குகளிலிருந்து உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் விசேட அம்சங்களைக் கொண்ட LG வளிச்சீராக்கிகளை 2 வருட உத்தரவாதத்துடனும் 6 சர்விஸ்களுடனும் பெற்றுக் கொள்ளுங்கள்.
LGயின் புரட்சிகரமான inverter compressor காரணமாக 60 சதவீதம் வரை மின்சாரத்தை சேமிக்கிறது.

- அபான்ஸிடமிருந்து மட்டுமே கிடைக்கும் செப்பு மின் சுருள் அமைப்பு
- அபான்ஸின் வாடகை கொள்வனவிற்கு 15 மாதங்கள் வரை வட்டி தள்ளுபடி
- inverter compressorக்கு 10 வருட உத்தரவாதம்
- அதிவேக குளிரூட்டும் சக்தி
- இலவச பொருத்துதல்





Split Type

| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.89,900 | ரூ.96,900 | ரூ.117,900 | ரூ.126,900 |
| விசேட விலை | ரூ.81,900 | ரூ.84,900 | ரூ.99,900 | ரூ.114,900 |
| ஊக்குவிப்பு | 9 மாதங்கள் வட்டி இல்லை | 12 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை |

Inverter Split Type

| கொள்ளளவு | 9000btu | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.109,900 | ரூ.124,900 | ரூ.204,900 | ரூ.214,900 |
| விசேட விலை | ரூ.99,900 | ரூ.107,900 | ரூ.186,900 | ரூ.204,900 |
| ஊக்குவிப்பு | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை |

Mosquito Away

| கொள்ளளவு | 12000btu | 18000btu | 24000btu |
|---|---|---|---|
| வழமையான விலை | ரூ.127,900 | ரூ.210,500 | ரூ.220,900 |
| விசேட விலை | ரூ.119,900 | ரூ.192,900 | ரூ.210,900 |
| ஊக்குவிப்பு | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை | 15 மாதங்கள் வட்டி இல்லை |

மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பு

1 இலவசம்
2 இலவசம்
3 இலவசம்

20 மாதங்களுக்கு வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு

Nations TrustBank

துரித எண் 0115999000
Abans.com
us at www.facebook.com/abans
Abans

# மஹ்ரூப் எம்.பியும் பிள்ளைகளும் விபத்தில் காயம்

கொழும்பு, ஒக் 9
திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அப்துல்லாஹ் மஹ்ரூபின் வாகனம், தம்புள்ளைப் பகுதியில் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், அவரும் அவரது பிள்ளைகளும் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து கிண்ணியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, நேற்று அதிகாலை இந்த விபத்த இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

7111 FOLLOW US www.mcash.lk

Trail
நல்லை-பாதை
Walk · Unite · Heal

## மாற்றம் ஒன்றை ஏற்படுத்த கைகோருங்கள்

புற்றுநோய்க்கு எதிராக போராடுவதற்கு தேசம் எடுத்திருக்கும் இன்னுமொரு முயற்சியான Trail 2016 உடன் கைகோருங்கள்

2016 அக்டோபர் 06 - நவம்பர் 02 மேலதிக விபரங்களுக்கு விஜயம் செய்யுங்கள் trailsl.com

நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஆரம்பிப்பதற்கு #111# இனை டயல் செய்யவும்.

Sri Lanka Telecom Mobitel etisalat

m Cash



ashok STEEL
நீடித்த வலிமை

## அசோக் TMT

அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/076 6084369, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS 375

## உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்

from University of Bedfordshire UK

★ Winner of Prestigious Queens Anniversary Award

92%
பட்டதாரிகள்
6 மாதத்திற்குள்
வேலை வாய்ப்பு
பெற்றுள்ளனர்

■ கடந்த 2 வருடங்களாக 86% மாணவர் திருப்தி அடைந்துள்ளது. இது ஐக்கிய ராஜ்ஜியத்தில் UK அதி கூடியதாகும்



உயர்தரப் பெறுபேறுகளினை
எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேளையில்

### தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்
- BSc (Hons) Computer Science & Software Engineering
- BSc (Hons) Computer Networking

### வியாபார நிகழ்ச்சித்திட்டங்கள்
- BSc (Hons) Human Resource Management
- BA (Hons) Business Administration

### அடிப்படை பாடநெறிகள் - சாதாரண தரத்தின் பின்னர்
- Foundation Certificate in Information Technology – FCIT
- Foundation Certificate in Business Management – FCBM

HOTLINE 0772 665555

SLIIT COMPUTING
University of Bedfordshire

Email : computing@sliit.lk

SLIIT COMPUTING (PVT) LTD, 13th floor, BOC Merchant Tower, No 28 St. Micheal's Road, Colombo 03

www.sliitcomputing.lk

# ஓட்டோக்களுக்கும் பயணிகள் லைசன்ஸ்

## திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 9

பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரகளைச் சகல ஓட்டோக்களும் பெற்றிருக்க வேண்டும் என அரசு விதித்திருக்கும் புதிய நிபந்தனைக்கு ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது,

இந்தத்திட்டம்கட்டாயப்படுத்தப்பட்டால் நாடெங்கும் உள்ள ஓட்டோ உரிமையாளர்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவார்கள் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

ஏழைகளின் வாகனமாகக் கருதப்படும் ஓட்டோக்களும் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டுமென அரசு விதித்திருக்கும் நிபந்தனை அசாதாரணமானது எனவும், தற்போதுமாகாணமட்டங்களில் மாகாண சபைகளில் ஓட்டோக்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச்செல்வதற்கும் அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தேசிய ஓட்டோ ஒருங்கிணைக்கப்பட்ட சங்கத்தின் தலைவர் கே.டி. அல்விஸ் தெரிவித்தார்.

"வீதிகளில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகவே ஓட்டோக்களுக்குப் பயணிகள் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக அரசு கூறுகிறது.

ஓட்டோக்களுக்குப் பயணிகள் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதால் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாது.

அதற்கு வேறு வழிகள் உள்ளன. பய ணிகள் அனுமதிப் பத்திரம் என்ற பெயரில் அவர்கள் மீது புதிய சுமையொன்றை ஏற்ற வேண்டாம் - என்றார்.

(த)

# பௌசிக்கு அழைப்பாணை

கொழும்பு, ஒக். 9

இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம்.பௌசியை எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலை யாகுமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பிலேயே அவருக்கு இந்த அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

அவர், இடர் முகாமைத்துவ அமைச்சரா கப் பதவி வகித்த காலத்தில் அமைச்சுக்குச் சொந்த மான 1 கோடி 90 இலட்சம் ரூபா பெறுமதியான ஜீப் வண்டியை முறைக்கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(த)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தனது பொறுப்பை ரணில் தட்டிக் கழிக்கக் கூடாது

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தீர்க்க தரிசனம் எதுவுமின்றி எடுத்தோம், கவிழ்த்தோம் என முன்னெடுத்த ஊர்வலம் தெற்கில் இனவாதத்திற்குச் சரியான தீனி போட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. அது தொடர்பில் இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒரு சிறப்பு அறிவிப்பை வழங்க வேண்டியளவுக்கு இந்த விடயம் பூதாகரமாக்கப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில், வடக்கு முதலமைச்சரையும் அவரது உரையையும் ஒரு பொருட்டல்ல என்று ஊதித் தள்ளிவிட்டார். அது விக்னேஸ்வரனாகத் தருவித்துக்கொண்ட மரியாதைக் குறைவு. அதில் கவலைப்பட எதுவுமில்லை. ஆனால், அதைத் தொடர்ந்து ரணில் தெரிவித்திருக்கும் ஒரு கருத்து தமிழ் பேசும் மக்களால் கூர்ந்து கவனித்து ஆராயப்பட வேண்டியது.

"வடக்கு முதலமைச்சர் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் புதிய அரசமைப்பை நாம்தான் உருவாக்கப்போகின்றோம். எமக்குத் தேவையானதை நாம் செய்வோம். பெரும்பான்மை மக்கள், கட்சிகள் அனைத்தும் இணங்கி எடுக்கும் தீர்மானத்தையே நாம் நடைமுறைப்படுத்துவோம்" என்று தனது உரையில் தெரிவித்திருக்கிறார் ரணில்.

பெரும்பான்மை மக்கள், கட்சிகள் அனைத்தும் இணங்கி எடுக்கும் தீர்மானமே புதிய அரசமைப்பாக உருவாக முடியும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. ஆனால், தமிழர்களுக்கு நியாயமான ஒரு தீர்வு கிட்டுவதை ரணில் கூறும் "பெரும்பான்மை ஆதரவு" என்ற விடயம் தடுத்து விடக்கூடாது.

ஒரே இலங்கைக்குள் சேர்ந்து வாழ்வதற்கு அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப்போனதன் பின்னர்தான், தனிநாடு கேட்டு ஆயுதங்களைத் தூக்கினார்கள் தமிழர்கள். அந்தச் சண்டையில் அவர்கள் தோற்றுப்போய்விட்டபோதும், தனிநாடு கேட்டதற்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன. எனவே மீண்டும் ஒரு தடவை தமிழர்கள் தனிநாடு கேட்காத வகையில், அவர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வு ஒன்றே வழங்கப்படுவது கொழும்பு அரசின் தலையாய கடமை.

அந்தத் தீர்வு எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதையும் தமிழர்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் அறிக்கைகளை அங்கீகரித்து அந்தக் கட்சிக்குப் பெரும் ஆதரவு வழங்கியதன் மூலம் தாங்கள் விரும்பும் தீர்வு எது என்பதைப் போருக்குப் பின்னரும் திடமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய நிலையில் பெரும்பான்மையினரின் ஆதரவு கிட்டாது என்ற காரணத்தைக்கூறி தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை கொழும்பு இலகுவாகப் புறந்தள்ளிவிட முடியாது; கூடாது.

உண்மையில் கொழும்பு செய்யவேண்டியது எல்லாம், தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வு கிட்டுவதைப் பெரும்பான்மை மக்கள் ஆதரிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதுதான்.

ஒரே இலங்கை தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்றால், சிறுபான்மை மக்களுக்குச் சமமான உரிமைகள் வழங்கப்படுவதன் நியாயத்தைப் பெரும்பான்மை மக்களையும் ஏற்றுக்கொள்ள வைப்பதற்குக் கொழும்பு கடுமையாக உழைக்கவேண்டும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கையின் அதிபர் மைத்திரிபால சிறிசேனவும் இதுவிடயத்தில் கூடுதல் அக்கறையுடனும், நேர்மையுடனும் செயற்படுவது மிக மிக அவசியம்.

அதைவிடுத்து பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வைத்தான் நடைமுறைப்படுத்த முடியும் என்று சொல்லி நழுவிச் செல்ல முடியாது; கூடாது. அப்படிச் செய்வது இலங்கைக்கு ஒருபோதும் நன்மை பயக்காது. சரியானதைப் பெரும்பான்மை ஏற்கும் வகைசெய்யவேண்டுமேயொழிய, பெரும்பான்மை ஏற்காது என்று கூறி சரியானதைச் செய்யாது விடக்



போர் முடிவடைந்ததும் இனியாவது தமது உயிரிழப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழர் விரும்பினர். அந்த நிலமையை ஏற்படுத்துவதற்காகவும், அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவும் போர் வேளையில் காணாமற் போன உறவுகளைக் கண்டுபிடிப்பதற்காகவுமே தமிழர்கள் ஜனநாயகப் போராட்டத்தைத் தொடங்கினர்.

**எம்.ஐ.முபாறக்**

30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழர்களது உரிமைப் போராட்டம் அவர்களின்எண்ணற்ற உயிர்களைக் காவு கொண்டதை எவராலும் மறுக்க முடியாது. போரில் நேரடியாக ஈடுபட்டு உயிரிழந்த புலிகளைத் தவிர, அந்தப் போரில் எந்த விதத்திலும் தொடர்புபடாத எத்தனையோ அப்பாவித் தமிழர்கள் இறந்தமைதான் பரிதாபம்.

இந்தப் பேரவலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து தாம் நிம்மதியாக வாழும் காலம் பிறக்காதா எனத் தமிழர்கள் ஏங்கிய நாள்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. மகிந்தவின் ஆட்சியில் 2006 இல் தொடங்கப்பட்ட புலிகளுக்கு எதிரான இறுதிப் போர் 2009 இல் முடியும் போது தமிழர் தரப்பில் எண்ணற்ற உயிர் இழப்புகளும், சொத்து இழப்புகளும், உடல் உறுப்புகள் இழப்புகளும் ஏற்பட்டன. இடம் பெயர்ந்து சொல்லொண்ணாத் துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்தனர்.

போர் முடிவடைந்ததும் இனியாவது தமது உயிரிழப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழர் விரும்பினர். அந்த நிலமையை ஏற்படுத்துவதற்காகவும், அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவும் போர் வேளையில் காணாமற் போன உறவுகளைக் கண்டுபிடிப்பதற்காகவுமே தமிழர்கள் ஜனநாயகப் போராட்டத்தைத் தொடங்கினர்.

### ஜனநாயகப் பேராட்டம் பன்னாட்டின் கவனத்துக்கு

போர் முடிந்து சுமார் 5 வருடங்களாகத் தொடர்ந்த மகிந்தவின் ஆட்சியில் தமிழர்களின் ஜனநாயகப் போராட்டம் உச்சத்தில் இருந்தது என்றே சொல்ல வேண்டும். அந்தப் போராட்டம் பன்னாட்டு மயப்படுத்தப்பட்டது. தமிழர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று சர்வதேச நாடுகள் மகிந்த அரசுக்கு அழுத்தங் கொடுக்கும் வகையில், அந்தப் போராட்டங்கள் வலுவானதாகவும் அனைவரது கவனத்தை ஈர்க்கக்கூடியவையாகவும் இருந்தன.

ஆயுதப் போராட்டத்தைப் போன்று இந்த ஜனநாயகப் போராட்டத்தையும் நசுக்குவதற்காக மகிந்த அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தபோதிலும் அது எல்லாத் தடைகளையும் தாண்டி வீறுநடை போடவே செய்தது. இறுதியில் மகிந்தவின் அரசைக் கவிழ்க்கும் அளவுக்கு அந்தப் போராட்டம் வலுவடைந்தது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அந்த ஜனநாயகப் போராட்டத்தின் நோக்கத்தை இந்தப் புதிய ஆட்சியில் எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்பதில் தமிழர்கள் குறியாகவே உள்ளனர். அந்த அடிப்படையில் தமிழர்களின் அரசியல் போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதுதான் "நெகிழ்வுப் போக்கு" என்ற மாற்றம்.

மகிந்தவின் ஆட்சியில் தொடங்கப்பட்ட ஜனநாயகப் போராட்டம் அந்த ஆட்சிக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. ஆனால், இந்த ஆட்சியில் நெகிழ்வுத் தன்மைகொண்ட-இணக்கப்பாட்டுத் தன்மையைக் கொண்ட போராட்டமாக அந்த ஜனநாயகப் போராட்டம் மாற்றப்பட்டுள்ளது.

### தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டும் அரசின் நகர்வுகள்

அது சரியான வியூகமாக இருப்பதால்தான் மகிந்தவின் ஆட்சியில் அடைய முடியாத சில விடயங்களை இந்த ஆட்சியில் அடைய முடிந்திருக்கின்றது. ஆனால், அது முழுமையான அடைவாக இல்லாதபோதிலும், இந்த ஓட்டத்தைப் பார்க்கும்போது ஒரு நாள் "முழுமை" என்ற ஒன்றை அடைய முடியும் என்றே தெரிகின்றது.

குறிப்பாக, கடந்த அரசால் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்ற பிரதான எதிர்க் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை, காணிகள் விடுவிப்பு, சில அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றை நம்பிக்கையூட்டும் சாதகமான சில விடயங்களாக எடுத்துக் கொள்ள முடியும்.

அந்த வரிசையில்தான் தமிழர்களின் இலக்கான அரசியல் தீர்வு விவகாரமும் அமைந்துள்ளது. புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவந்து அதனூடாக அரசியல் தீர்வை முன்வைக்கும் நடவடிக்கையை அரசு தொடங்கியுள்ளதை நாம் அறிவோம்.

தமக்கான அரசியல் தீர்வு இவ்வாறுதான் அமைய வேண்டும்



## கூட்டமைப்பின் நகர்வு குறித்து சந்தேகம் கொள்ளும்

# நல்லாட்சி அரசு

என்றொரு வரைவை மனதில் வைத்துக் கொண்டு இருக்கின்றது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு.அந்த வரைவுக்கு அமையாத விதத்தில் அரசால் முன்வைக்கப்படும் தீர்வு இருக்குமாக இருந்தால் அதை ஏற்பதில்லை என்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்பு இருக்கின்றது.


வடக்கு–கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தான் தமக்குத் தேவை; அதுவே தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வரும் என்று கூட்டமைப்புக் கூறுகின்றது.

ஆனால்,அரசோ சமஷ்டி இல்லை ஒற்றையாட்சிதான்.காணி, பொலிஸ் அதிகாரங்களும் இல்லை. வடக்கு–கிழக்கு இணைக்கப்படவும் மாட்டாது என்று கூறி வருகின்றது.

இதை முற்றாக எதிர்க்கும் கூட்டமைப்பு, நாம் விரும்புகின்ற தீர்வைத் தமக்குத் தராவிட்டால் நாம்அதைஏற்கமாட்டோம். மாறாக, அரசு எம்மை ஆள்வதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். அதற்காக ஆயுதமும் ஏந்த மாட்டோம் என்று கூறி வருகின்றது.

அண்மையில் இலங்கை வந்திருந்த ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், நாம் கோரும் தீர்வு எமக்குக் கிடைக்காவிட்டால் அரசு திணிக்கும் தீர்வை நாம் ஏற்க மாட்டோம்.

மாறாக,அரசு எம்மை ஆள விடமாட்டோம். அதற்காக ஆயுதம் ஏந்தமாட்டோம் என்று கூறி இருந்தார். இதனைத் தொடர்ந்து இந்த வாரம் திருமலையில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கூறும்போதும் இவ்வாறே கூறி இருந்தார்.



**சம்பந்தனின் கருத்தில் பொதித்திருக்கும் உண்மை என்ன?**

சம்பந்தன் இப்போது "ஆயுதம் ஏந்த மாட்டோம் ,ஆனால், “எம்மை ஆளவிட மாட்டோம்” என்ற வசனத்தை அடிக்கடி பயன் படுத்துவதால் அதில் “எம்மை ஆளவிடமாட்டோம்” என்பதன் அர்த்தம் என்ன என்று அறிவதற்கு தமிழருக்கு இப்போது ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

அரசுக்கான முழு ஆதரவையும் நீக்குதல் அல்லது அரசால் அல்லது தம்மைத் தாம் ஆளுதல் என்பதா இதன் அர்த்தம் என்ற கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன.அரசியல் தீர்வை அரசிடம் கேட்பதை விட்டுவிட்டு பன்னாட்டின் நேரடி உதவியுடன் தம்மைத் தாமே ஆளக்கூடிய இராஜதந்திர ஏற்பாடுகள் எதிலும் கூட்டமைப்பு ஈடுபடப் போகிறதா என்ற கேள்வியும் எழுகின்றது.

“எம்மை ஆளவிடமாட்டோம்” என்ற வசனத்தை சம்பந்தன் அடிக்கடி பாவிப்பதால், அரசும் அந்த வசனத்தின்மீது இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

ஆயுதமும் ஏந்தாமல், அரசு வழங்கும் அரசியல் தீர்வையும் ஏற்காமல் தம்மைத் தாமே ஆள்வதாக இருந்தால் அது பன்னாட்டின் உதவியால் மாத்திரம் தான் முடியும்.அப்படியென்றால் பன்னாட்டின் தலையீட்டுடன் சுயாட்சியைப் பெறுவதற்கான நகர்வை கூட்டமைப்பு மேற்கொள்கிறதா என்றும் அரசு இப்போது எண்ணத் தலைப்பட்டுள்ளது.

ஐ.நாவின் தலையீட்டால் புதிய நாடுகள் உருவானமையும், ஒரு நாட்டுக்குள் சுயாட்சி பெற்றுக் கொடுக்கப்பட்டமையும், உலக வரலாறாக இருப்பதால் சம்பந்தனின் இந்தக் கூற்றை அரசு சற்று ஆழமாக நோக்குவதாகவே அரசுக்குள் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

**அண்மையில் இலங்கை வந்திருந்த ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், நாம் கோரும் தீர்வு எமக்குக் கிடைக்காவிட்டால் அரசு திணிக்கும்தீர்வைநாம்ஏற்கமாட்டோம். மாறாக, அரசு எம்மை ஆளவிட மாட்டோம். அதற்காக ஆயுதம் ஏந்தமாட்டோம் என்று கூறி இருந்தார். இதனைத் தொடர்ந்து இந்த வாரம் திருமலையில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கூறும்போதும் இவ்வாறே கூறி இருந்தார்.**

---

# தமிழ் முஸ்லிம் மக்களது நல்லுறவுக்கு உதாரணமிது

தமிழ் முஸ்லிம் இனமக்களினது பழக்க வழக்க, பண்பாடுகள் மற்றும் அந்நி யோன்ய உறவுக்கு எடுத்துக்காட்டாக முல்லைத்தீவு நகரைக்குறிப்பிட இயலும். இங்கு பெரும்பாலும் முஸ்லிம் வர்த்தக அன்பர்கள் நீண்ட நெடுங்காலமாக வர்த்தகம் புரிந்ததை விசேடமாகக் குறிப்பிட முடியும். குறிப்பாக இவர்களுள் பிரபலமானவர் பெரியார் வி.எம். அப்துல்சமத்து. இந்தப் பகுதிக்கு சிகரெட் கம்பெனி யான சிலோன் டுபாக்கோ கம்பெனியின் ஏக விநியோகத்தர் அவர். அடுத்து பிரபலமான பல சரக்கு வியாபார நிலையமான கபீர் ஸ்ரோஸ் ஸ்தாபனம், பிரின்ஸ் புடவைக்கடை, ஜெஸி படமாளிகை, ஆகியவற்றின் உரிமையாளர்களான முஸ்லிம் பிரமுகர்கள் எமது தமிழ் மக்களுடன் அன்னியோன்ய உறவு பேணி வாழ்ந்தவர்கள்.


இன்றும் இலங்கையின் புகழ்பெற்ற முல்லைச் சகோதரிகள் இசைக்குழுவை நாட்டின் சகல பாகங்களுக்கும் ஏற்றிச் செல்லும் மோட்டார் காரை வைத்திருந்த முகமட்ராசாவின் (சோமசெற்கார் இல EY 3669) சிரித்த முகம் மனதில் என்றும் நிலைத்து நிற்கிறது. முல்லைத்தீவு நகரின் முஸ்லிம்மக்கள் இவர்கள். ஆனால் நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடம் தண்ணீரூற்று. எனவே எனது அயலூராகிய நீராவிப்பிட்டி முஸ்லிம் மக்களிலேயே ஏராளமானவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள்; பழகியவர்கள்; அன்னியோன்யமாகப் பழகி ஒன்றாக உணவு உண்டவர்கள். என்னுடன் கல்வி கற்றவர் தண்ணீரூற்று நெடுங்கேணி சந்தியில் வர்த்தக நிலையம் வைத்திருந்த பெரியார் வி.எம். பொன்னுதம்பி. பிரபல தமிழ் மருந்து பலசரக்கு வர்த்தக நிலையம் அது. பெய ரைப் பார்த்தால் தமிழ் இனத்தவர் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இவர் முல்லை வர்த்தகர் வி.எம். அப்துல் சமத் அவர்களின் உடன்பிறந்த சகோதரர் . இவர் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர்.

எம்மினத்து மக்களுடன் மிகவும் நெருங்கியவர்களாக வாழ்ந்தவர்கள் குறித்துக் குறிப்பிடுகையில் எம்.எம். சரிபு, மாம்பழம் சரிபு, வண்ணாங்குளம் கச்சுக்காக்கா, விசுகடி வைத்தியர் சாய்பு காக்கா, வர்த்தகர் வெற்றிலை குப்பைத்தம்பி காக்கா, புலவர் மிஸ்கின் அப்பா, கம்படி பையன்னா காக்கா, ஒரு மிருகம் ஓடும் போதே குறிதவறாறு சுடவல்ல அகமது லெவ்வை, சிலம்படி வித்தகர் அலியார், லதீப் பார்ப்போர் வியக்கும் வண்ணம் உடற்கட்டுக்கொண்ட பனியன் சரிபு, பகிடிக்கதைகள் கூறும் மாட்டுக்கார மம்மத்தம்பி அவரது பிள்ளைகள் ஜமால்தீன் கபூர் பசீர் உசனார் மரக்காயர் ஆகியோர் பற்றிக் குறிப்பிடாது இருக்க இயலாது. சடையர் அபூபக்கர் மிகவும் பகிடிக் கதைகள் கூறுபவர். இவரது பிள்ளைகள் சுல்தான், தகாமுகம்மது அஸீஸ் (விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி), றாசீக் பரீத் எனது பாரிய நண்பன் நூறுதீன் அமின் குறிப்பாக தண்ணீரூற்று பிரபல சமாதான நீதிவான் அப்துல்லா லெவ்வை. இனமத பேதம் பாராது இரவு நேரங்களில் போனால் கூட தேவையான ஆவணங்களில் கையொப்பம் வைத்து தருபவர் இவர். இவரது மகன் அன்வர் என்னுடன் கல்வி பயின்றவர். இப்படியே இந்த மக்களும் நாங்களும் இனமத பேதமின்றி உறவினர்கள் போன்று வாழ்ந்த காலமது.

குறிப்பாக இவர்களது சில பெயர்கள் தமிழ் பெயர்களாக இருந்துள்ளன. வயது முதிர்ந்த ஒரு மூதாட்டி எனது தாயாருடன் நெருங்கிப்பழகியவர் பெயர் தங்கம்மா உம்மா. இவரது உறவுப்பெண் முத்தம்மா பெரியதம்பி, முத்தராசா ஆகியோர் முஸ்லிம்களான போதிலும் அவர்களது பெயர்கள் தமிழ்ப்பெயர்களே! 1982ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து அதே அன்பு பாசம் இன்றும் எமது இந்த ஊரிலே இவ்விரு இனத்தவர்களிடையே நிலவுகிறது. இலங்கையின் எப்பாகத்திலும் எமது முஸ்லிம் நண்பர்கள் இங்குபோன்று மொழியால், பேச்சு வழக்கால், பண்பாட்டால் தமிழர்களான எம்முடன் ஒன்றிணைந்து வாழ்வதாக நான் கேள்விப்பட்டதில்லை. இவைகளை இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற பேராவலால் இவைகளையெல்லாம் குறிப்பிட்டுள்ளேன். மற்றொரு முக்கிய விடயம், குமாரபுரத்திலுள்ள பக்கிரிபாவா சமாதி. தாம் இறந்த பின்னர் தனது ஜனாசாவை குமாரபுரம் முருகன் கோயில் மணிஓசை, நீராவிப்பிட்டி பள்ளி வாசல் பாங்கு ஓசை, ஊற்றங்கரை விநாயகர் ஆலய மணி ஓசை ஆகியவை கேட்கும் இடத்தில் அடக்கம் செய்யவேண்டும் என்று கேட்டதற்கிணங்க அந்தவிதமே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றும் இவரது சமாதிக்கு தமிழ் மக்கள் சென்று ஆராதனை செய்கிறார்கள். இன ஒற்றுமை எப்படி இருக்கிறது என்பதற்கு இவை சான்று பகருகின்றனவல்லவா? எனவே எமது தமிழ், முஸ்லிம் உறவு மேன்மேலும் நெருக்கமாக வளர வேண்டும். எல்லாப்புகழும் இறைவனுக்கே.

தமிழ் முஸ்லிம் நல்லுறவு நிலைக்க ஏங்கும் வைரமுத்துசேனாதிராசா.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.




# உளவியல் ரீதியான முதலுதவி

திருமதி ச.சஸ்ரூபி

உலகளாவிய உள சுகாதார தினமானது வருடந்தோறும் ஏதாவதொரு தொனிப் பொருளுடன் விழிப்புணர்வு நாளாகப் பிரகடனப்படுத்தப் படுகின்றது. உள சுகாதாரப் பிரச்சினையால் ஒரு மனி தனது உரிமை மற்றும் அவன் சார்ந்த குடும்பத்தினரின் வாழ்க்கைத் தரத்திலும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் உள சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்துவதும், உள சுகாதார பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உதவி செய்தலும் அவசியமானதாகும். அந்த வகையில் இந்த வருடத்துக்குரிய தொனிப்பொருளாக அமைவது யாதெனில் "உளவியல் ரீதியான முதலுதவியைச் செய்தல்" என்பதாகும்.

ஏதேனும் ஓர் உளநெருக்கீட்டால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு முதலில் அடிப்படைத் தேவையான உணவு, குடிதண்ணீர், இருப்பிடம் போன்ற சில குறிப்பிடத்தக்க வசதிகள் கிடைக்கும்படி ஆவன செய்து அவர்களின் கதைகளைச் செவிமடுத்து அவர்களுக்குச் சௌகரியமான சூழலை ஏற்படுத்தி அமைதியான மன நிலையை உணரும்படி செய்து அவர்களைப் பொருத்தமான தகவல் தொடர்பாடல் முறை, சேவைகள் மற்றும் சமூக ஸ்தாபகங்களிடம் பொறுப்புக் கொடுத்து மேலும் பாதிப்பு ஏற்படாமல் இருக்குமாறு செய்து விடலே அவர்களுக்கு நாம் வழங்கும் உளரீதியான முதலுதவி ஆகும்.

ஆக மொத்தத்தில் இந்த வகையான முதலுதவியானது மருத்துவத் துறையுடன் தொடர்புடைய ஒருவரால் அல்லது முறையாகப் பயிற்றப்பட்ட உள வளத்துணையாளர் ஒருவரால் மட்டும்தான் செய்யப்பட வேண்டும் என்றில்லை. உதாரணத்துக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி அவருக்கு உணவு, இருப்பிடம் போன்ற வசதிகளை வழங்கி பொருத்தமான உதவும் கரம் ஒன்றில் ஒப்படைத்துவிடல் நாம் அவருக்கு செய்யும் உளரீதியான முதலுதவி ஆகும்.

உளரீதியான முதலுதவி யார் யாருக்கு தேவை? முன்னர் கூறியது போன்று இயற்கை இடரால் பாதிப்புற்றோர், போர் நடவடிக்கையால் இன்னலுற்றோர், பொருள் இழப்பை சந்தித்தோர், மீளா நோயின் தாக்கத்துக்குட்பட்டோர், வாகன விபத்துக்குள்ளானோர் மற்றும் இடப்பெயர்வுக்குட்பட்ட மனிதன் அல்லது சமுதாயமாக இருக்கலாம்.

அப்படியென்றால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நேரடியாக, உடனடி யாக அருகில் உள்ள மற்றவருக்கு உளரீதியான முதலுதவி பற்றிய அறிவு இருக்கவேண்டும். அந்த அறிவு எமக்கும் தெரிந்திருந்தால் நன்று. குடும்ப அங்கத்தவர், வீட்டு அயலவர், சமுதாய அங்கத்தவர், பாடசாலை ஆசிரியர், பொலிஸ், தீயணைப்பு உதவியாளர், தாதியர், மருத்துவர் மற்றும் ஏனைய மருத்துவ துறையினர். உளவளத் துணையாளர் போன்ற தரப்பினர் இந்த வகையான முதலுதவி செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும்.

**முதலுதவியானது ஏன் தேவைப்படுகிறது?**

பாதிக்கப்பட்ட ஒருவர் மற்றவர்களிடமிருந்து உடல் உள மற்றும் சமூக ரீதியான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதன் மூலம் தம் பாதுகாப்பு பற்றித் திருப்தியடைந்து ஆறுதலடைவர். இவ்வகையான முதலுதவி ஆண், பெண் என இருபாலாருக்கும் தேவையானது. அதிலும் உயி ராபத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்பாட்டில் சிக்குண்ட வர்களுக்கும் தம்மைத் தாமே அல்லது தம் பிள்ளை களால் கவனிக்க முடியாத நிலையிலுள்ளவர் மற்றும் தனிமையிலுள்ளவர்களுக்கும் மிக மிகத் தேவையானது.

அடுத்து உள ரீதியான முதலுதவி செய்ய விரும்பும் ஒருவர் எவ்வாறான விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும் என்று பார்ப்போம். முதலுதவி தேவைப்படுவோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அமைய வேண்டும். அவரின் உரிமையை மதித்து அவராகத் தீர்மானம் எடுக்க உதவ வேண்டும். அவர்களுடனான உரையாடலை இரகசியமாக பேணி வைத்திருக்க வேண்டும். அதை விடுத்து மனரீதியான குழப்பமற்றுக் காணப்படும் ஒருவரிடம் சென்று அவரது கதைகளை சொல்லும்படி வற்புறுத்தல், அவரின் கதைகளை மற்றவரிடம் பகிர்ந்துகொள்ளல், தம்மை உதவியாளராகக் காட்டி பொய்யாகச் சத்தியமளித்தல் போன்றவை செய்யப்படக்கூடாதவை. சிறந்த தொடர் பாடலைப் பேணுதல் மிகவும் முக்கியமானது. உதவி தேவைப்படுவோரை அமைதியான இடத்துக்குக் கூட்டிச் சென்று அருகில் அமர்ந்து கதைக்கவேண்டும். அவர்கள் சொல்லும் விடயங்களுடன் தொடர்புபட்ட உண்மை நிலவரம் எமக்கு தெரிந்திருப்பின் அவர்களிடம் பகிரலாம். அவர்களின் உணர்வுக்கு ஒத்த உணர் வைக் காட்டுதல் (நானும் கவலையடைகிறேன் என்று கூறுதல்), அவர்களின் தனிப்பட்ட விடயங்களை இரகசியமாக வைத்திருத்தல் போன்றவை முக்கியமானவை.

இவ்வாறாக உளரீதியான முதலுதவி செய்தல் என்பது அவதானித்தல் கிரகித்தல் மற்றும் உரியவர்களின் தொடர்பை ஏற்படுத்திவிடல் என்பதாகும். சுருக்கமாகக் கூறின் அவசியமான வெளிப்படையான அடிப்படை வசதிகளை அவதானித்து மேலதிக தேவைகளை அவர்களிடமிருந்து கிரகித்து உரிய சமூக ஒத்துழைப்பு வழங்குபவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திவிடலாம். இவ்வாறான முதலுதவியைச் செய்தாலேபோதும் உள ரீதியான பாதிப்புக்குட்பட்டு உதவி தேடும் ஒருவரின் உள்ளத்தில் இடம்பிடித்து விடலாமே.




## அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கட்டுரை, சித்திரப் போட்டி

கீழே தரப்பட்டுள்ள விளக்க முறைகளுக்கேற்ப போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆக்கப் பிரதிகளை முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இலங்கை நீரிழிவு சம்மேளனம், மே/பா இலங்கை அகஞ்சுரக்கும் நிபுணர்களின் கல்லூரி. இல.6 விஜேராம ஹவுஸ், விஜேராம மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். பிந்தி வந்து சேரும் ஆக்கப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கிடைக்கும் ஆக்கப் பிரதிகளின் பதிப்புரிமையானது "இலங்கை நீரிழிவு சம்மேளனம்" அமைப்பை சேர்வதுடன் இவற்றை பயன் படுத்தி டிஜிட்டல் மற்றும் அச்சு பதிப்புகளின் மூலம் விழிப்புணர்வை உருவாக்கும் உரிமையையும் கொண்டிருக்கும்.

இந்த ஆக்கங்களை நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கமுடியும்.

### தலைப்பு

நாளைய மாற்றத்துக்காக இன்றே செயற்படுவோம்

### கட்டுரைப் போட்டி

01.வயதுப் பிரிவு வகைகள்: கனிஷ்ட பிரிவு, இடைநிலை பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு.

02.சொற்களின் வரம்பு : கனிஷ்ட பிரிவு 250 செற்கள், இடைநிலைப் பிரிவு 1000 சொற்கள், சிரேஷ்ட பிரிவு 1500 சொற்கள்.

கட்டுரையானது எந்தவொரு வகையான திருட்டுமற்ற சுயமான படைபாக இருத்தல் அவசியம். கட்டுரை சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில ஆகிய மொழிகளில் எழுதப்பட முடியும்.

01.அனுப்பும் முறை: கட்டுரையானது தட்டச்சு செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவத்துடன் பதிவுத் தபால் முலமாக அல்லது நேரடியாக மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பரிசுகள்:**

1ஆம் பரிசு 10,000 ரூபா
2ஆம் பரிசு : 7,500ரூபா
3ஆம் பரிசு: 5,000ரூபா

முதல் பத்து இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### சித்திரப் போட்டி

01.வயதுப் பிரிவு வகைகள் : மூன்று வயதுப் பிரிவுகளும்

02.சிறப்பு விவரம்: தாளின் அளவு "ஏ3சித்திரத்தாள் (3art paper)
ஊடகம் ஏதாவது (சார்க்கோல் (charcoal), டிஜிட்டல் (Digtal), க்ரயோன்ஸ் (crayone), நீர் (water), எண்ணெய் வர்ணம் (oil) அல்லது வேறு

சித்திரமானது எந்தவொரு வகையான திருட்டுமற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசியம்

01.அனுப்பும் முறை: சித்திரமானது முழுமைப்பட்ட விண்ணப் படிவத்துடன் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக மேலே குறிப் பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பரிசுகள்**

1அம் பரிசு 10,000 ரூபா,
2ஆம் பரிசு 7,500ரூபா,
3அம் பரிசு 5,000ரூபா

முதல் பத்து இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர்
பிறந்த திகதி
வகுப்பு
பாடசாலை முகவரி
வீட்டு முகவரி
தொலைபேசி இல
மின்னஞ்சல் முகவரி

### போட்டியில் கலந்து கொள்பவரின் உடன்படிக்கை

நான் மேலே குறிப்பிட்ட போட்டி விதிமுறைகளை நன்கு வாசித்து அறிந்ததோடு அவற்றுக்கு சகல வழிகளிலும் கட்டுப்படுவேனெ்வும் உறுதியளிக்கிறேன். "இலங்கை நீரிழிவு சம்மேளனம்" அமைப்பானது எனது கட்டுரையையோ அல்லது சித்திரத்தையோ அச்சுப் பிரதி / டிஜிட் டல் முறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக உபயோகிக் முடியுமென்பதை அறிந்து கொண்டுள்ளேன். "இலங்கை நீரிழிவு சம்மேளனம்" அமைப்பின் முடிவே இறுதியானதெனவும் அறிந்து கொண்டுள்ளேன். அத்துடன் இந்தப் படைப்பானது எனது சொந்த படைப்பு என்பதையும் உறுதிப் படுத்துகிறேன்.

கையொப்பம்................ திகதி......................

### பாடசாலை அதிபரின் உறுதிமொழி

இந்தப் படைப்பானது மேலே குறிப்பிட்ட மாணவனின் சொந்தப் படைப்பென்பதையும் முன்னர் பிரசுரிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்துவதோடு இந்த மாணவன் அல்லது மாணவி போட்டியில் கலந்து கொள்வதற்கான சகல விதிமுறைகளையும் முழுமை செய்துள்ளார் என்பதையும் உறுதி செய்கின்றேன்.

கையோப்பமும் பதவி முத்திரையும்.......... திகதி......................

சூரியகாந்தி
உதயன்



விலை பேசப்படும் ஆசிரியம்
ப.28



ஜெயாவுக்கு என்ன ஆயிற்று?
ப.23

மருதநிலமகள் காத்திருப்பு
ப.27



பயங்கரவாத எதிர்ப்பு
ப.37

# ஓடக்கரை அப்பம்

■ குணசேகரன் சக்தீனா

"25 வருசமா அப்பம் சுடுறன் என்ர சீவியம் அப்பம் விற்கிற தால வாற வருமானம் தான். என்ர பிள்ளையள வாழ, வளர்த்து விட்டதும் இந்த அப்பம் தான். ஆனால் பிள்ளையள் தாங்கள் வளர்ந்திட்டினம் எண்டதும் அப்பம் சுட வேண்டாம் எண்டிச்சினம். எனக்கு இத விட்டிட்டு இருக்க மனம் இல்ல" கூறிக் கொண்டே பொங்கியெழுந்த அப்பத்தைத் தட்டிலிட்டார் தேவி அக்கா.

'ஓடக்கரை அப்பம்' என்றாலே யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான ஓர் உணவு வகை. பருத்தித்துறை வடை அல்லது தட்டை வடை, சாவகச்சேரிப் பிலாப்பழம், ரியோ ஐஸ்கிரீம்மாதிரி ஓடக்கரை அப்பமும் வடக்கில் அடையாளங்களில் ஒன்று. யாழ்ப் பாணம்– பருத்துறையில் உள்ள ஓடக்கரை என்ற இடத் தில் தான் இது தயாரிக் கப்படுகின்றது.

ஒரு காலத்தில் மிக மிகப் பிரபலமானது. போரின் போது இராணு வக் கெடுபிடிகளால் சற்று ஓய்ந்து போயிருந்தது. இப்போது மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கிறது.



## வடக்கின் அடையாளங்களில் ஒன்று



மாலை நேரம் அந்த வீதியால் போய்க்கொண்டிருந்தேன். ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மக்கள் வரிசையாக நின்றார்கள். மதிலோரங்களில் சதுர வடிவமான ஒரு சிறிய பகுதியை மட்டும் திறந்து விட்டிருந்தார்கள். அதனுள்ளே யாரோ ஒருவர் இருப்பதை வெளித்தெரிந்த அவருடைய கால்களை வைத்துத்தான் அறிந்துகொண்டேன். அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய பகுதியைச் சுற்றி வரிசையாக மக்கள் நின்றார்கள். இரண்டு இடங்களைக் கடந்து விட்டேன். மனதில் சந்தேகம் எழுந்தது. இப்படியே மூன்றாவது இடமும் கடக்கிறேன். நான்காவது இடத்தில் மூன்று பேர் மட்டுமே நின்றார்கள். அவர்கள் அந்த இடத்தில் இருந்து விலகியதும் அந்த இடத்தை அவதானித்தேன். உள்ளே ஒருவர் இருந்தார். கால்கள்தான் தெரிந்தன. அருகில்போய் 'அம்மா' என்று அழைத் தேன். "எத்தனை அப்பம் அம்மா வேணும்" என்று பதில் வந்தது. "அம்மா நான் அப்பம் வாங்க வரவில்லை" என்று கூறி எனது சந்தேகத் தைக் கேட்கத் தொடங்கினேன். அப்பம் சுட்டுக் கொண்டே அந்த அப்பத்தைப் பற்றிக் கூறினார்.

**வயது முதிர்ந்தவர்களுக்கு வாழ்வாதாரம்**

"பிள்ள இந்த அப்பம் ஓடக்கரை அப்பம் என்று பெயர் போன அப்பம். எல்லோரும் விரும்பிச் சாப்பிடுவினம். இந்த அப்பத்தின்ர சுவையோ தனி. நாங்கள் சுடுறதைப்போல யாரும் சுட மாட்டினம். 90ஆம் ஆண்டில் இருந்து நான் அப்பம் சுடுறன். இது என்ர அம்மம்மா, அம்மா காலத்தில இருந்தே நான் அறிஞ்ச அப்பம். என்ர குடும்பத்தைக் வறுமை தெரியாமல் பார்த்ததும் இந்த அப்பம்தான். ஒரு நாளைக்கு 1000 ரூபா கிடைக்கும். பிள்ளையள் மூன்று பேரையும் படிப்பிச்சது, அவையள வளர்த்ததும் அப்பம் சுட்டு விற்றுத்தான். ஆனால்..." என்று சிறிது பின் வாங்கினார்.

இந்த இடைவெளிக்குள் அப்பம் வாங்கக் காத்துக் கொண்டு நின்ற தாயொருவர் "தேவி அக்கா பெடியன் அப்பம் சாப்பிடாம நித்திரை கொள்ளுறான் இல்ல. இரண்டு சோடி அப்பம் தாங்கோ" என்றார். அப்பத்தைக் கொடுத்துவிட்டு என்னைப் பார்த்த அவரின் முகத்தில் ஏதோ ஓர் ஏக்கம் இருந்தது. சிறிது நிதானித்த அவரே அதையும் கூறினார்.

"பிள்ளையள் எல்லோரும் வளர்ந்திட்டினம். அப்பம் சுட வேண்டாம் என்று சொல்லிப் போட்டினம். என்னால இத விட்டிட்டு இருக்க ஏலாது பிள்ள" என்றார். அப்பம் சுட்டு முடிந்த பின்னர் அந்த இடத்தை விட்டு வெளியேறத் தயாராகினார். நானும் விடைபெற்றேன்.

**'ஓடக்கரை' - அர்த்தம்**

தேவி அம்மாவைப் போலவே. அந்த வீதியில் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தார் ரஜனி அக்கா. அவவுடன் சிறிது கதை கொடுத்தேன். "நான் 20 வருசமா அப்பம் சுடுறன். 70, 80களுக்கு முற்பட்ட அப்பம் இது. எனக்கு எட்டு வயசிருக்கும் போதே அம்மம்மா அப்பம் சுட்டுத்தர கொண்டுபோய் கடையில கொடுத்திட்டுத்தான் பள்ளிக்கூடம் போறனான். அம்மம்மா, அம்மா என தொடர்ந்த அப்பத்தை இப்ப நானும் சுடுறன். ஓடக்கரை அப்பம் என்றால் எல்லோருக்கும் அவ்வளவு பிடிக்கும்." என்றவரிடம் "ஓடக்கரை அப்பம் என்று ஏன் பெயர் வந்தது" என்று கேட்டேன்.

"இது ஒரு பள்ளமான இடம். மழை வந்தால் இடுப்பளவு தண்ணீர் நிற்கும். மழைக் காலத்துக்கு முதலே வீட்டுக்குத் தேவையான சாமான்களை மொத்தமாக வாங்கிச் சேமித்து விடுவோம். ஏனென்றால் ஓடத்தில் சென்று தான் பொருள்கள் வாங்கிக் கொண்டு வரவேணும். அதாலதான் இந்த இடத்த ஓடக்கரை என்று அப்ப விருந்து சொல்லினம். நாங்கள் அப்பம் சுட்டதைத் தொடர்ந்து ஊரின் பெயருடன் இணைந்து ஓடக்கரை அப்பம் என்று எல்லோரும் சொல்லத் தொடங்கிச்சினம்."

**ஓடக்கரை அப்பத்தின் தனிச்சுவை**


"எங்கட அம்மம்மா சொல்லுவா, ஓடக்கரையாரைப் போல அப்படி ஒரு சுவையுடன் யாரும் அப்பம் சுட மாட்டினம் என்பா. உண்மையும் அதுதான். நாங்கள் சுடுற அப்பம் வித்தியாசமாத்தான் இருக்கும். முதலில வெள்ளைப்பச்சை அரிசியை நனைய விட்டு திரிச்சோ அல்லது உரலில இடிச்சோ மாவாக்குவம். பிறகு வறுத்தெடுப்பம். வறுத்தெடுத்த மாவுக்குள் கள் மற்றும் துருவும் பருவத்திலான தேங்காயின் இளநீரையும் விட்டு குழைச்சு ஐந்து மணித்தியாலம் வரை ஊறவைப்போம். ஐந்து மணித்தியாலம் வரை மாவைக் குழைத்து வைக்கவில்லை என்றால் அப்பம் பொங்கி வராது. கள்ளும், இள நீரும் விடுறது மா புளிச்சு வாறதுக்காகத்தான். ஐந்து மணித்தியாலங்கள் கழிச்சு இளநீர் எடுத்த தேங் காயத் துருவி தடித்த பால் எடுத்து அந்த மாவுக்குள்ள கரைக்க வேணும். இதனை ஒரு மணித்தியாலம் விடவேண்டும். இவ்வாறு செய்வது அப்பம் பொங்கிப் பதமாக வருவதற்கு. ஒரு மணித்தியாலம் கழிச்சுச் சுட வெளிக்கிட லாம். சுட வெளிக்கிடும்போது சொட்டு அப்பச் சோடா போடவேண்டும்." ரஜினி அக்கா அப்பத்தைப் பதமாகத் தான் சுட்டுக் கொண்டிருந்தார். சுடுகின்ற அப்பத்தைப் போலவே அப்பம் பற்றி சொல்லுகின்றபோதும் அவரிடம் கம்பீரம் இருந்தது. "நாங்கள் அப்பம் சுடுகிற சட்டிய வேற தேவைக்குஎடுக்கமாட்டம். தண்ணி விட்டு கழுவமாட்டம். ஏனென்றால் அப்பம் ஒட்டும். அப்பச் சட்டி எந்த நேரமும் எண்ணெயாகவே இருக்க வேணும் என்றவர், பிள்ள நான் அப்பம் சுட்டு முடிஞ்சிது என்றார். அந்த சிறிய தட்டி மூடப்பட்டது. அப்பொழுது மாலை நேரம் 6.30 ஆக இருந்தது.

**பகுதி நேரத் தொழில்**

இறுதியாக அந்த இடத்தில அப்பம் சுட்டுக் கொண்டிருந்தவர் கலைவாணி அக்கா. "தங்கச்சி நாங்கள் பின்னேரம் மூன்று மணிக்கே அப்பம் சுடத் தொடங்கிடுவம். அது தான் வழக்கமாக இருந்தது. அப்ப தொடக்கம் இப்ப வரைக்கும் இந்த நேரத்தில எல்லோரும் ஓய்வா இருப்பினம். குழந்தைப் பிள்ளையளுக்கு இரவுச் சாப்பாடாகவும் இருக்கும். வருத்தக்காரர் இலகுவாக சாப்பிடக் கூடியதாகவும் இருக்கும். அதேநேரம் எல்லோரும் விரும்பி அப்பம் சாப்பிடுபவர்களாகவும் இருப்பினம்" என்றவர், அப்பம் சுடப் பயன்படுத்தும் சட்டியைப் பற்றியும் கூறினார். புதுச்சட்டி வாங்கினால் அந்தச் சட்டிக்குள்ள அரைவாசிக்கு தேங்காய் எண்ணெய் விட்டு வைப்போம் 10 நாள் வரைக்கும். சட்டி பழக்கத்திற்கு வாறதிற்காகவும் அப்பம் ஒட்டாமல் இருப்பதற்காகவும் இப்படிச் செய்வம். அப்பம் நிறைய வகைகளில் இருக்கு. ஆனால் வெள்ள அப்பம் தான் ஓடக்கரை அப்பம். ஒரு சோடி அப்பம் 12 ரூபாக்கு விற்பம். ஆனால் ஒரு கொத்து மாவுக்கு குறைய ஒரு நாளைக்கு சுடமாட்டம். இலாபம் 300 இற்கு மேல தான் வரும். இப்ப இந்த ஓடக்கரையில் அப்பம் சுடுறது என்ர அக்காவாக்கள் மற்றும் மச்சாள்மார்தான். ஆனால் எங்களோட அப்பம் சுடுறதே காணாமல்போயிடும்போல இருக்கு. என்னை கஷ்டம் தெரியாமல் வாழ வைச்சது இந்த அப்பம்தான். அதனால்தான் நான் இதை இன்னும் மறக்கவில்லை. என்ர பிள்ளைகளையும் அப்பம்தான் வளர்த்தது. அப்பம் வித்து வாறகாசு மட்டுமே எனக்குப் போதுமாக இருக்கும்" என்றார்.

ஓடக்கரை அப்பம் மிகவும் சுவையானது என்று இதுவரை எண் ணிய எனக்குள் இவ்வளவு சுவாரஸ்யமானதா என்ற வியப்புடனும் ஓடக்கரையில் இருந்து விடைபெற்றேன்.

"பிள்ள இந்த அப்பம் ஓடக்கரை அப்பம் என்று பெயர் போன அப்பம். எல்லோரும் விரும்பி சாப்பிடுவினம். இந்த அப்பத்தின்ர சுவையோ தனி. நாங்கள் சுடுறதைப் போல யாரும் சுட மாட்டினம். 90ஆம் ஆண்டில் இருந்து நான் அப்பம் சுடுறன். இது என்ர அம்மம்மா. அம்மா காலத்தில இருந்தே நான் அறிஞ்ச அப்பம். என்ர குடும்பத்தைக் வறுமை தெரியாமல் பார்த்ததும் இந்த அப்பம் தான். ஒரு நாளைக்கு 1000 ரூபா கிடைக்கும். பிள்ளையள் மூன்று பேரையும் படிப்பிச்சது. அவையள வளர்த் ததும் அப்பம் சுட்டு விற்றுத் தான்"







# ஜெயலலிதாவுக்கு என்ன ஆயிற்று?

■ யாதுமாகி

தற்போது சமூகவலைத் தளங்களை ஆட்கொண்டுள்ள பிரபலமான செய்திகளில் ஒன்றுதான் இது. தமிழக முதல்வர் "ஜெயலலிதாவுக்கு என்ன ஆயிற்று?" பரபரப்பையும் ஆர்வத்தை ஏற்படுத்த சில பொழுது போக்குப் பிரியர்கள் தாறுமாறாகத் தத்தமது தேவைக்கேற்றவாறு ஜெயலலிதாவின் உடல்நிலை சரியில்லை என்ற விடயத்தைப் பல கோணங்களில் ஊகித்தறிந்து கருத்துக்களைப் பதிவேற்றி, பகிர்வுகளையும் விருப்பங்களையும் பெற்று இந்த விடயத்தைத் தாறுமாறாக்கி வருகிறார்கள். சிலர் தமக்குத் தெரிந்தவற்றைச் சொல்கிறார்கள். பகுதி பகுதியான தகவல்கள். பல்வேறு வகையிலான விமர்சனங்கள் என ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் ஜெயலலிதா பற்றிப் பிரபலமடைந்து வருகின்றன.

### உண்மை யாது?

சென்னை-கிரீன்ஸ் வீதியிலமைந்துள்ள அப்போலோ வைத்தியசாலையில் செப்டம்பர் 22ஆம் திகதி இரவு ஜெயலலிதா சேர்க்கப்பட்டார். மறுநாள் காலை "சாதா ரண காய்ச்சல். இன்றே ஜெயலலிதா வீடு திரும்புவார்" என்றே எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் வைத்தியசாலையின் சூழல் முழுவதும் கடுமையான பாதுகாப்பு.

வைத்தியசாலை மட்டுமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள சூழல் முழுவதும் பலத்த பாதுகாப்பு. அப்படியாயின் வெறும் காய்ச்சலுக்கு ஏன் இவ்வளவு அமைதி அற்ற சூழலை உருவாக்கவேண்டும்?

ஜெயலலிதாவுக்கு சுகவீனம் என்ற விடயத்தில், மருத்துவமனை அறிக்கைகளுக்கும், அரச மற்றும் கட்சி சார்பில் வெளியிடப்படும் தகவல்களுக்கும், வெளியே காணக் கிடைக்கும் சூழலுக்கும் இடையில் நிலவும் முரண்பாடே பெருமளவிலான வதந்தியாக ஜெயலலிதா பற்றிய விவாதத்தை வளர்த்தெடுத்தது. செப்ரம்பர் 23, 25, 29, ஒக்டோபர்02,03ஆம்திகதிகளில் என்று இதுவரை ஐந்து அறிக்கைகளை ஜெயலலிதாவின் உடல்நிலை சம்பந்தமாக அப்போலோ மருத்துவமனை வெளியிட்டிருக்கிறது. "காய்ச்சலுக்காக முதல்வர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்; உடல் நலன் மேம்பட்டு வழக்கமான உணவு எடுத்துக்கொள்கிறார். சிகிச்சைதொடர்கிறதுபிரிட்டன்மருத்துவர் ரிச்சர்ட் ஜான் பீலேவுடன் ஆலோசிக்கப்பட்டது, மேலதிக நாள்கள் முதல்வர் சிகிச்சையில் இருக்க வேண்டும்; முதல்வர்உடல்நிலைமேம்பட்டிருக்கிறது" என்பனவே அந்த ஐந்து அறிக்கைகளும்.

இது வரை 10 நாள்களுக்குள் குறைந்தது 10 அறிக்கைகள் மருத்துவமனையில் ஜெயலலிதா அன்றாட அலுவல்களைத்தொடர்வதாகச் சொல்லும் வகையில் அரசு மற்றும் அ.தி.மு.க. சார்பில் வெளியிடப்பட்டன. அவற்றில் முக்கியமானவை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை உள்ளடக்கிய அ.தி.மு.கவின் மூன்று வேட்பாளர்கள் பட்டியல்கள், தொழில்நுட்பத் துறை, அறங்காவல் துறை தொடர்பான அறிவிப்புகள், பிரதமருக்கும் ஆளுநருக்கும் ஜெயலலிதா சார்பில் அனுப்பப்பட்ட கடிதங்கள். தவிர, காவிரி விவகாரம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தையும் அவர் நடத்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், "முதல்வரை நான் சந்தித்தேன், அவர் என்னுடன் பேசினார்" என்று இதுவரை அவரைச் சந்திக்கச் சென்ற மத்திய அமைச்சர், ஆளுநர் உட்பட கட்சிக்காரர்களில் ஒருவர்கூடச் சொல்லவில்லை.

### வலைத்தளங்களுக்குத் தீனி

அத்தோடு அப்போலோ மருத்துவமனையில் "லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் ஜான் பீலே ஜெயலலிதாவின் சிகிச்சைக் குழுவோடு இணைந்து பணியாற்றுகிறார்" என்று அறிவித்த உடனே, சமூக வலைத்தளங்களில் பலர் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்கள். "ரிச்சர்ட் ஜான் பீலே தீவிரமான கிருமித்தொற்று, நுரையீரல் பாதிப்பு, ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்புகளின் செயலிழப்பு, தீவிர சிகிச்சைப் பிரிவுக்குரியவர், சாதாரண காய்ச்சல்தான் ஜெயலலிதா நலமுடன் இருக்கிறார் என்றால், ஏன் இந்த மருத்துவரை வரவழைக்க வேண்டும்?"

இதுபோன்ற கேள்விகள் அர்த்தமற்றவை அல்ல. இவ்வாறான நிலமைகளால் வதந்திகள் தோன்றிவிடுகின்றன. இந்த நிலையில் ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்து அதிர்ச்சியூட்டும் தகவல்களைப் பிரான்சில் வாழும் தமிழச்சி என்ற பெண் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந் தார். இவர் ஏற்கனவே சுவாதி, ராம்குமார் விடயங்களிலும் தொடர்ந்து பல்வேறு பரபரப்பான கருத்துக்களைப் பதிவிட்டவர். ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்து அவர் பதிவு செய்திருந்த கருத் துக்கள் வேகமாகப் பரவின. ஏனெனில் அது அவ்வளவு தீவிரமான கருத்து. ஜெயலலிதா இறந்துவிட்டார் என்று கதையை முடித்துவிட்டார் தமிழிச்சி.

இதன் அடிப்படையில் அ.தி. மு.க.வின் தகவல் தொழில்நுட்பப்பிரிவு மாநில செயலாளர் ராமச்சந்திரன் அவருக்கெதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இதற்கு "சென்னை காவல் துறை என் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதை வரவேற்கிறேன். பிரான்ஸ் காவல்துறையினர் மேற்கொள்ள உள்ள விசாரணைக்குக் காத்திருப்பேன். தகுந்த உண்மைகள் வெளிவர எனக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகவே இந்தச் சந்தர்ப்பத்தைக் கருதுகிறேன்" என்றும் பதிலுக்கு முகநூலில் பதிவு செய்தார் தமிழச்சி.

> ஜெயலலிதாவுக்கு சுகவீனம் என்ற விடயத்தில், மருத்துவமனை அறிக்கைகளுக்கும், அரச மற்றும் கட்சி சார்பில்வெளியிடப்படும் தகவல்களுக்கும், வெளியே காணக் கிடைக்கும் சூழலுக்கும் இடையில் நிலவும் முரண்பாடே பாரிய அளவிலான வதந்தியாக ஜெயலலிதா பற்றிய விவாதத்தை வளர்த்தெடுத்தது.

### மக்கள் பிரதிநிதியின் கடப்பாடு

உலகில்எல்லாமனிதர்களும்நோய்ப்பாதிப்புக்குள்ளாவது இயல்பானது. அது பற்றிக் கேள்வி எழுப்பும் உரிமை எவருக்குமில்லை. ஆனால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் ஒருவரைப் பற்றி மக்களிடம் பகிர்ந்து கொள்வது கட்டாயமானது. ஏனெனில் அவர் நாட்டு மக்கள் அனைவருக்கும் உரித்தானவர். எனவே இந்த விடயத்தில் இந்திய அரசு பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும். இவ்வாறான கடப்பாடுகளில் இருந்து விலகிச் சரியான தகவல்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தாமையே தேவையற்ற வதந்திகள் தோன்ற வழிவகுக்கின்றன எனலாம்.

உடல்நலக் குறைவால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் அவரது உடல்நலன் தொடர்பான அக்கறைகளையும் கவலைகளையும் புறந்தள்ள முடியாது. ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்படுபவர்கள்கூட அவரைச் சந்தித்ததாக இதுவரை நம்பத்தகுந்த தகவல்கள் இல்லை. ஆளுநரின் அறிக்கையிலும்கூட அவரைச் சந்தித்ததாகவோ, பேசியதாகவோ குறிப்புகள் ஏதும் இல்லை.

### எதிர்க் கட்சியினரின் கருத்து

இப்படியான சூழலில், முன்னாள் முதல்வர் கருணாநிதி, ராமதாஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சியினர் பலரும், "இந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முதல்வரின் தற்போதுள்ள புகைப்படத்தையோ, காணொலியையோ வெளியிடலாம்" எனும் தொனியில் முன்வைத்திருக்கும் கோரிக்கை பரிசீலிக்கப்படவேண்டியது என்றே தோன்றுகிறது. சர்வதேச அளவில் தலைவர்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் சூழலில், தேவையற்ற வதந்திகளைத் தவிர்க்கக் கையாளக் கூடிய ஒரு வழிமுறைதான் இது.

இந்திய அரசியல் சூழலில், ஒரு தலைவரின் உடல் நல விவகாரம் மக்களின் உரிமையின்பாற்பட்டது மட்டும் அல்லமாறாக, அவர்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்தது. மக்களை உயிரினும் மேலானவர்களாக, உடன்பிறப்புகளாகச் சித்திரித்து உறவை வளர்க்கும் அரசியல் தலைவர்கள், சமூகத்திடம் தம்முடைய உடல்நிலை குறித்து தகவல் வெளியிடுவதில் தயக்கம் காட்டத்தேவையில்லை.



டினேசன் நெழூந்துப்பிள்ளை

# மருந்துகளுக்கு அறிமுகமாகும் நிர்ணயவிலை!

மருந்துப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை அறிமுகப் படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக சுமார் 47 மருந்துகளுக்கான விலை குறைப்பு அறிவிக்கப் பட இருக்கிறது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்பட இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் இலங்கையின் சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன. குறித்த அறிவிப்பு கடந்த மாதம் 23ஆம் திகதி இம்பெற்ற பேராசிரியர் சேனக் சுபிபிலேயின்39ஆவது ஞாபகார்த்த நினைவு நிகழ்விலேயே பகிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது. சுகாதார அமைச்சர் அறிவித்ததன் பிரகாரம் தொற்றா நோய்களான நீரிழிவு, இருதய நோய்கள் என்பவற்றுக்குப் பரிந்துரைக்கப்படும் மருந்துகளுக்கும் பொதுவாக உபயோகிக்கப்படும் (அன்டிபயோட்டிக்) நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கும் விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. இதன் மூலம் மருந்துகளின் விலையில் 30 தொடக்கம் 50 வீதம் வரையில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மருந்தியல்துறை முன்னோடியான பேராசிரியர் சேனக்க பிபிலேயின் 39ஆவது நினைவு தினம் இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றிருந்தது. அந்த நிகழ்வில் மறைந்த சேனக்க பிபிலேயின் பாரியார் லீலா பிபிலே, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் அசித டி சில்வா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அத்தியாவசிய மருந்துகள் அல்லது உயிர்காக்கும் மருந்துகள் என்று வகைப்படுத்தப்படும் மருந்துகளுக்கே முதலில் இந்த விலைக் குறைப்பு அறிவிக்கப்பட இருக்கிறது. தொடர்ந்து ஏனைய வகை மருந்துகளுக்கும் இந்த விலைக் குறைப்புப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்படும் என்றார் ராஜித சேனரத்ன.

உத்தியோகபூர்வமற்ற தகவல் ஒன்றின்படி பின்வரும் 47 மருந்துகளுக்கே விலைக் குறைப்பு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அல்பெண்ட சோல், கோ - அமொக்ஸிகிளேவ், கிளரித்திரோமைசின், அசித்திரோமைசின், செபியுரொக்ம், செபிக்ஸிம், செபோராக்ஸிம், செப்ராஸிடிம், டொக்ஸி சைக்கிளின், மிரோபீனம், அமொக்ஸிலின், அசிக்குளோவிர், புகு்ளுக் கோனோஸோல், அம்லோடிப் பின், டில்ரியாஸிம், லொஸார்ட்டன், எனலப் பிரில், அற்றினல்லோல், நிவிடிப்பின், ஐஸோஸோபைட், குளோபிட்டோகிரில், அற்றோவாஸ்ரரின், றொஸ்வாஸ்ரரின், கார்விடில்லோல், மெற்போமின், கிளிக்கிளஸைட், கிளிபென்கிளமைட், இன்சுலின், கிளிமிபிறைட், கிளிப்பிஸைட், தைரொக்ஸின், இபுபுரூபன், டைக்குளோ பெனக், செலிக்கோஸிப், மெதோரெக்ஸேற், கார்பமஸீபின், சோடியம் வல்போறேட், ஒமிபிரஸோல், இஸொமிபிரஸோல், பன்ரோபிரா ஸோல், ரபிபிராஸோல், ரிஸ்பெரிடோன், ஒலன்ஸபீன், அல்பிராஸோலம், புளோக்ஸரீன், பெக்குளோமெதஸோன் மற்றும் சல்பியூட்டமோல்.

2013ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைமுறைப் படுத்தப்பட்ட விலை-நிர்ணய முறைமையை மாதிரியாகக் கொண்டே இலங்கையிலும் மருந்துப் பொருள்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை தீர்மானிக்கப் படவிருக்கிறது. தற்போது சந்தையில் காணப்படும் மருந்துப் பொருள்களுக்கான விலை வேறுபாட்டு எல்லை அகன்றதாக இருக்கின்றது. எனினும் சந்தையில் உள்ள குறித்த ஒருவகை மருந்துக்கென சராசரி விலை அறிமுகம் செய்யப்பட்டபின் அதற்கு மேல் விலையை அதிகரிக்க முடியாது. குறித்த சராசரி விலையே அந்த மருந்துக்கான அதிகபட்ச சில்லறை விலையாகக் கொள்ளப்படும். எனவே உயர் விலைப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் மருந்தின் குறித்த மருந்து வடிவத்துக்குரிய (Formulation) விலையைக் குறைப்பதற்கு சந்தைப்படுத்தல் தரப்பினர் நிர்ப்பந்திக்கப்படுவர். அதேவேளை குறித்த மருந்து வடிவத்துக்குரிய ஆகக்குறைந்த சில்லறை விலையும் தீர்மானிக்கப் படும். அது அதிகரிக்கப் படமாட்டாது.



அமைச்சர் ராஜித சேனாரத்னவின் வழிகாட்டலின் கீழ் மருந்துப் பொருள்களுக்கான ஆகக் கூடிய சில்லறை விலையை நிர்ணயம் செய்வதில் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் விலை தீர்மானிப்புக் குழுவின் தலைவர் மருத்துவர். பாலித அபேயகோன், சுகாதார அமைச்சின் அதிகாரிகள், இலங்கை மருந்துப் பொருள்கள் கைத்தொழிற்றுறை அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் சிறு அளவிலான இறக்குமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் தெரிவிக் கப்படுகிறது.

பெருத்த எதிர்பார்ப்புகளுடன் கடந்த ஆண்டு நடைமுறைக்கு வந்த தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மந்தமான செயற்பாடுகள் கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்த நிலையில் விலைக் குறைப்பு பற்றிய அண்மைய அறிவிப்பு குறித்த அதிகாரசபை தொடர்பில் நேர் நிலைமணப் பாங்கை தோற்றுவித்திருக்கிறது.

### விலை நிர்ணயம் மாத்திரமல்ல தரநிர்ணயமும் தேவை!

தனியார் மருத்துவ சேவைகள் தொடர்பில் அண்மையில் அறிவிக்கப்பட்ட வரிநடைமுறை விசனத்தை தோற்றுவித்திருக்கையில் மருந்துகளின் விலைக்குறைப்பு தொடர்பான சங்கதி வரவேற்புக்குரிய ஒன்றே. எனினும் சந்தையில் உள்ள மருந்துகளின் தரத்தை உறுதிசெய்வதற்கான பொறிமுறைவசதிகளையும்மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று துறைசார் தரப்பினரிடமிருந்து கோரிக்கை விடுக்கப்படுகிறது.

நாட்டிற்கான மருந்து தேவையில் 90 வீதமான பங்கு இறக்குமதி மூலமே நிறைவு செய்யப்படுகிறது. இலங்கை மருந்துச் சந்தையில் உள்ள பல மருந்துகள் உரிய பரீட்சிப்பின்றியே இறக்குமதி செய்யப்பட்டுச் சந்தைக்கு விடப்படுகின்றன. தேசிய மருந்து ஒழுங்கு படுத்தல் தொடர்பான சட்டவரைபு கலந்தோலோசிக்கப்பட்ட காலத்திலிருந்தே தகுந்த வசதி வாய்ந்த மருந்து பரீட்சிப்பு ஆய்கூடமொன்றை நிறுவுவதற்கான தேவை தொடர்பில் குறிப்பிடப்பட்டு வந்தது. எனினும் அந்தத் தேவை இன்னமும் கனவாகவே இருந்து வருகின்றது.

மருந்துகளின் வர்த்தக நாமங்கள் பரிந்துரைக்கப்படுவதைத் தடுப்பதுடன் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதும் சுகாதாரத் தரப்பினரால் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாக இருக்கிறது.

இலங்கைக்கு மாத்திரமல்லாமல் ஏனைய சிலநாடுகளின் மருந்துக் கொள்கைகளுக்கும் முன்னோடியாக விளங்கிய பேராசிரியர் சேனக்க பிபிலேயின் ஞாபகார்த்த தினத்தில் முன்மொழியப்பட்டுள்ள விலைக்குறைப்பு திட்டம் உறுதியளித்தவாறே நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அது சரிவர பாமர மக்களைச் சென்றடைவதும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**தனியார் மருத்துவ சேவைகள் தொடர்பில் அண்மையில் அறிவிக்கப்பட்ட வரிநடைமுறை விசனத்தைத் தோற்றுவித்திருக்கையில் மருந்துகளின் விலைக்குறைப்புத் தொடர்பான சங்கதி வரவேற்பிற்குரிய ஒன்றே. எனினும் சந்தையில் உள்ள மருந்துகளின் தரத்தை உறுதி செய்வதற்கான பொறிமுறை வசதிகளையும் மேம் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.**



# எம்.எஸ்.டோனி

## சொல்லப்படாத கதையைக் காணோம்!

இந்திய கிரிக்கெட் தலைவர் எம்.எஸ்.டோனியின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து ஹிந்தியில் உருவாகியிருக்கும் படத்தின் தமிழ் மொழிமாற்று வடிவம் இது.

2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் இறுதிப் போட்டியே படத்தின் தொடக்கமும் முடிவுமாக அமைந்துள்ளது. வழக்கமாக 5ஆம் ஆட்டக்காரராக இறங்கும் யுவராஜ் சிங்குக் குப் பதில் டோனி களமிறங்கும் காட்சியோடு படம் தொடங்குகிறது. வெற்றிக்கான சிக்ஸரை அடிப்பதோடு முடிகிறது. களமிறங்குவதற்கும் அந்த சிக்ஸருக்கும் இடையே டோனியின் கதை சொல்லப்படுகிறது. இந்தியாவுக்குப் பல வெற்றிகளைச் சாத்தியப்படுத்திய டோனி, இந்தியா உலகக் கிண்ணத்தை வெல்லவும் முக்கிய காரணமாக அமைந்தவர். அந்த இடத்தை அடைய அவர் எதிர்கொண்ட போராட்டங்களைச் சொல்கிறது படம்.

இயக்குநர் நீரஜ் பாண்டேயும் திலிப் ஜாவும் இணைந்து எழுதியிருக்கும் திரைக்கதை, டோனியின் கிரிக்கெட் வாழ்வையும் காதலையும் கலந்து சொல்கிறது. மிகையான நாடகப் பாணி வசனங்களையோ, காட்சிகளையோ கையாளாமல் யதார்த்தமான வசனங்கள், நிகழ்வுகள் மூலம் படம் நகர்கிறது. படத்தின் முதல் பாதி, சிறு வயது முதல் இந்திய அணியில் சேர்வதற்கு முந்தைய கட்டம் வரையிலான டோனியின் வாழ்வைச் சித்திரிக்கிறது. இரண்டாம் பாதி, அணியில் இடம்பெறுவது முதல் 2011 உலகக் கிண்ண வெற்றிவரை பயணிக்கிறது. இடையில் காதல் அத்தியாயங்களும் உள்ளன.

டோனி உருவாகும் விதத்தையும் அவர் அடுத்தடுத்த கட்டங்களை எட்டும் விதத்தையும் உணர்ச்சிகரமாகச் சித்திரிப்பதில் இயக்குநருக்கு வெற்றிதான். டோனியின் குடும்பம், நண்பர்கள், அவரது பயிற்றுநர், காதல்கள், அவரது பயிற்சிகள், காத்திருப்பின் வலி ஆகியவை நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. யுவராஜ் சிங்கை டோனி முதலில் சந்தித்துக்கொள்ளும் காட்சி அபாரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. டோனி ஹெலிகொப்டர் கற்றுக்கொள்ளும் காட்சியும் நன்றாக உள்ளது.

டோனி அணியில் இடம்பெற்றதையும் அதற்குப் பின்பு நடந்தவற்றையும் காட்டும் இரண்டாம் பாதி படுத்துவிடுகிறது. டோனி அணிக்கு வந்த பிறகு இந்திய அணியின் பயணம் ஒரு நபர் ஆட்டமாக மாறிவிடுகிறது. உண்மைக்குப் புறம்பான இந்தச் சித்திரிப்பு, படத்தின் ஆதாரமான நோக்கத்தையே பாதிக்கிறது. டோனியின் வளர்ச்சியில் சவுரவ் கங்குலிக்கு இருந்த பங்கு, டோனி அணித் தலைவர் ஆனதன் பின்னணி, சச்சின் டெண்டுல்கர், அனில் கும்ப்ளே போன்ற மூத்த வீரர்களுடனான டோனியின் உறவு ஆகியவை பற்றிப் பேச்சே இல்லை.

வீரேந்திர சேவாக் - டோனி இடையே சிண்டு முடிந்த ஊடகங்களின் போக்கும், தேர்வு வியத்தில் டோனி மூத்த வீரர்கள் சிலருக்கு எதிராகப் பேசியதும் போகிறபோக்கில் காட்டப்படுகின்றன.

டோனியின் தலைமையில் ஒரு நாள், 20 ஓவர் போட்டிகள் மட்டுமே இடம்பெறுகின்றன. டெஸ்ட் போட்டிகள் ஒரு காட்சித் துணுக்காகக்கூட இடம்பெறவில்லை. இதே கால கட்டத்தில்தான் இந்தியா டெஸ்ட் அரங்கில் முதலிடம் பெற்றது. உலகக்கிண்ண வெற்றிக்கு இணையான இந்தத் தருணம் படத்தில் இல்லை.

டோனியின் கிரிக்கெட் வாழ்வின் ஏற்ற இறக்கங்களும் படத்தில் இல்லை. ஐ.பி.எல். பற்றிப் பேச்சே இல்லை. எல்லாமே ஏறுமுகம்தான். இரண்டாம் பாதியில் வரும் காதல் அத்தியாயங்கள் நன்றாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. டோனியின் முன்னேற்றத்தில் அவரது உறவினர்கள், நண்பர்களுக்கு இருக்கும் ஈடுபாடு நெகிழவைக்கும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

உண்மை வாழ்வை அடிப்படையாகக் கொள்ளும் படங்களில் தலைமைப் பாத்திரத்துக்கான நட்சத்திரத் தேர்வுதான் இயக்குநருக்கான முதல் சவால். நீரஜ் பாண்டே அதில் வென்றிருக்கிறார். டோனி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சுஷாந்த் சிங்கின் தோற்றப் பொருத்தம் நம்பகத்தன்மையை உருவாக்குகிறது.

டோனியின் உடல்மொழியையும் துடுப்பெடுத்தாடும் பாணியையும் கிட்டத்தட்டக் கச்சிதமாகக் கொண்டு வந்திருக்கிறார் சுஷாந்த். உணர்ச்சிகளைத் தேவையான அளவு வெளிப்படுத்தியிருக்கிறார். டோனியின் பயிற்றுநர் கதாபாத்திரத்தில் அசத்தியிருக்கிறார் ராஜேஷ் சர்மா. அனுபம் கெர், பூமிகா, திஷா பட்டானி, கியாரா அத்வானி, ஹெர்ரி டங்ரி என அனைவரும் தங்கள் கதாபாத்திரங்களில் மிளிர்கிறார்கள். குறிப்பாக யுவராஜின் அலட்சியத்தையும் ஆவேசத்தையும் அப்படியே பிரதிபலிக்கிறார் ஹெர்ரி டங்ரி.

உண்மைப் போட்டிகளின் காட்சிகளையும், படத்துக்காக எடுக்கப்பட்ட காட்சிகளையும் இணைத்த விதம் அபாரம். நாராயண் சிங்கின் எடிட்டிங்கும் கிராஃபிக்ஸும் இணைந்து சாதித்துள்ள அற்புதம் இது. யுவராஜ் 'டோனி'யைக் கட்டிப்பிடிக்கும் காட்சி, சச்சின் 'டோனி'யைப் பாராட்டும் காட்சி ஆகியவை உதாரணங்கள்.

ஆட்டம், பயிற்சி தொடர்பான காட்சிகள் மிக நன்றாக உருப்பெற்றுள்ளன. சந்தோஷ் துண்டியிலின் ஒளிப்பதிவும் அருமை. சஞ்சய் சவுத்ரியின் பின்னணி இசை சில இடங்களில் இரைச்சலாக இருந்தாலும் பல இடங்களில் படத்தோடு நம்மை ஒன்றவைக்கிறது.

'சொல்லப்படாத கதை' என்கிறது தலைப்பு. அப்படி எதையும் படத்தில் காணோம். தொழில்நுட்பத் தரம், நடிப்பு, அற்புதமான காட்சி அமைப்புகள் ஆகியவை இருந்தும் படத்தின் தாக்கம் வலுவாக இல்லை. 3 மணி நேரத்தைத் தாண்டும் நீளமும், இரண்டாம் பாதியின் தட்டையான சித்திரிப்பும் விறுவிறுப்பான போட்டியின்போது கொட்டும் பெருமழையாக படத்தைப் பாதிக்கின்றன.

## தவிப்பு

பாசத்தை விடப்
பணமே பெரிதென
பண்பற்ற உறவுகள்
பறந்து விட்டன.

சின்னக்
குழந்தைகளைப் பார்க்க
செலவுகள் அதிகமென
பெற்ற தந்தை
கண்காணாத் தேசம்
சென்றுவிட்டார்.

கடன் எனும் கடலில் மூழ்கி
கரைசேர வழியும் இன்றி
குழந்தைகளைக்
கரைசேர்க்க வழியும் இன்றி
தாய்ப்பறவை இங்கே
தவிக்க
நல்லவருக்கான காலம்
வருமென
காத்திருக்கின்றது இதயம்

வ.நிரோஜினி, வரணி




# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

## அவசரத் திருமணங்கள்

திருமணம் முடிக்கின்ற ஒவ்வொரு ஆணும் தன் துணைவியிடம் தாயையும், அது போன்று ஒவ்வொரு பெண்ணும் தன் துணைவனிடம் தந்தையையும் தேடுகின்றனர். அதுதோற்றுப்போகவே ஆரம்ப மனமுறிவுக்கு உள்ளாகின்றனர். இந்த மனமுறிவு நாளடைவில், மணமுறிவுக்கு வித்திடுகின்றது. இதிலும், காதலித்து அவசர அவசரமாக மணம் முடிப்போரே இந்தப் பிரிவினையை அதிகம் சம்பாதிக்கின்றனர்.

காதலைச் சொல்லி, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, வீட்டில் பெரியவர்களின் அனுமதியோடு நடக்கும் காதல் திருமணங்களைவிட, அவசர அவசரமாகத் தங்களது திருமணங்களை நடத்திக் கொள்ளும் காதலர்கள் விரைவில் நீதிமன்றப் படிக்கட்டுக்களில் ஏறுகின்றனர்.

காதலர்கள் தங்களது காதலைச் சொல்லவேண்டுமானால் அவசரம் காட்டலாம். அதில் தவறில்லை. ஆனால்,கல்யாணம் செய்துகொள்ள அவசரப்படவே கூடாது. நிதானமாகத் தங்களது நிலமையைப் பரஸ்பரம் புரிந்துகொள்ள வேண்டும். தங்களது வருங்காலத்தைப் பற்றித் தெளிவாகப் பேசி ஒருமித்த கருத்துக்கு உடன்பட வேண்டும். அதன் பின்னரே ஆயிரங்காலத்துப் பயிரான திருமண வாழ்க்கையைத் தொடர வேண்டும். காதலிப்பவர்கள்தமது வீட்டில் இருக்கும்பெரியவர்களிடம், தங்கள் காதல் விவகாரத்தைக் கூறி அவர்களிடம் அனுமதிபெற முயற்சிக்க வேண்டும். உடனடியாக அவர்கள் உடன்பட மறுத்தால், சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அதைவிடுத்து, அவர்கள் சம்மதிக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காகத் தமது காதலை வாழவைக்கும் பொருட்டு வீட்டைவிட்டு வெளியேறி அவசர அவசரமாகத் திருமணத்தை முடித்துக்கொண்டால், காதல் வாழ்க்கையும் கசக்க ஆரம்பித்துவிடும்.



அவசர கோலத்தில் இல்லற வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும் காதலர்கள் அநேகமானவற்றை இழக்க நேரிடுகின்றது. தாம் வாழும் சூழலுக்கேற்ப வாழத் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். கிடைத்ததைக் கொண்டு வாழ வேண்டிய சூழலுக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். இது வாழ்க்கை மீதான சலிப்புக்கு, வெறுப்புக்கு வித்திடுகின்றது. காலப்போக்கில், இந்த அவஸ்தைகளுக்கு ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றனர். இதுவே அவர்களைப் பிரிக்கும் கருவியாக அமைந்துவிடுகிறது.

ஓரளவுக்கு வசதியான குடும்பத்தில் இருந்து வந்த ஆணோ, பெண்ணோ, திடீரெனத் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைத் திருமணமான புதிதில் வேண்டுமானால் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், அதையே வாழ்நாள் முழுவதும் சகித்துக்கொண்டு வாழ அவர்கள் விரும்பமாட்டார்கள். மேலும், அவர்களுடைய நல்ல, தீய குணங்கள் பரஸ்பரம் தெரியவரும் போது அவற்றைச் சரிசெய்து, விட்டுக்கொடுத்து வாழப் பழகிக்கொள்ளும் தைரியம் அவர்களிடம் இல்லை. காரணம் – அதி மேதாவித்தனமும் சம்பாதிக்கும் ஆணவமும்தான். இது ஆணும் பெண்ணும் உழைக்கும் காலம்.

ஒவ்வொரு திருமண நிகழ்விலும் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், அதில் இருவருடைய வாழ்க்கை மட்டுமல்ல– இரு குடும்பத்தின் நிம்மதியும் அடங்கி இருக்கிறது. அதனால் திருமணத்தில் ஒருபோதும் அவசரம் காட்டக்கூடாது. பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும் அவர்களைப் பற்றிய தெளிவான– உண்மையான தகவல்களை முதலில் திரட்டவேண்டும். அந்தத் தகவல்கள் உண்மையானதா? என்று உறுதிசெய்ய வேண்டும். படிப்பு, சொத்து, சுதந்திரம், அந்தஸ்து போன்ற அனைத்துக்கும் மேலாக ஒழுக்கம் வாழ்க்கையில் இணையும் இருவரிடமும் இருக்கவேண்டும். இருவரின் மனநிலையும் நன்றாக அமைந்திருக்கவேண்டும்.

தற்போதைய திருமணங்களில் வெறுமனவே வாழ்த்துக்களோடு நின்றுவிடாமல்– மணமுறிவு ஏற்படாமல் இருக்கக் கூடுதலாகப் பிரார்த்திக்கவும் வேண்டியிருக்கிறது. என்னதான் இருப்பினும், மணமுறிவு பெற்றவரின் நினைவில் அவ்வப்போது நிழலாடுவது அவளோடு அவனோடு வாழ்ந்த இனிமையான நாள்கள்.

(தொடரும்...)



**நீதிபதி:** ஒவ்வொரு தவணையும் சட்டத்தரணி இல்லாது நீதிமன்றில் வந்து நிற்கிறாயே. அப்படி ஒரு சட்டத்தரணியை ஏற்பாடு செய்ய முடியாதா உன்னால்?

**குற்றம் சாட்டப்பட்டவர்:** முடியாது ஐயா! என்னிடம் அவ்வளவு பணம் இல்லை.

**நீதிபதி:** ஏன் 100 ரூபாவுக்கு எல்லாம் எனது சார்பில் தோன்றப் பல சட்டத்தரணிகள் முன்வருவார்களே!

**குற்றம்சாட்டப்பட்டவர்:** அந்த100 ரூபாக்காரர்கள் பலர் நீதிவான்களாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்று விட்டார்களாம், ஐயா! நான் என்ன செய்வது?

**நீதிபதி:!!!**




## உயிர்ப்பூ

காகம் வளர்த்த
குயில் குஞ்சுகள்
சத்தமிட்டு முடிய,
குயில்கள் கூவ,
காகங்கள் கரைய
குழந்தைகள்
அம்மா அப்பாவை
கைநீட்டித் தொட,
சூரியன்
கிழக்கிலிருந்து
கிளம்புவான்

கதிரவன் ஒளிபட்டு
பூக்கள் எல்லாம்
மகிழ்ச்சியில் மலரும்
அழகை அலங்கரிக்கும்
மக்கள் எல்லாம் விழித்து
தத்தம் கடமைகளைச் செய்ய
உலகம் உயிர்ப்பூ
காண்கிறது
பெருமகிழ்ச்சியில்
திளைப் பூ காண்கிறது

ஓர் உலகம்
இணைப்பூ
காண்கிறது

ஆ.முல்லைதிவ்யன்



# வெறுமையில் நான்...

நடந்து வந்த பாதைகள்
கற்கள், முட்கள் நிறைந்திருந்தன
அதனால் ஏற்பட்ட காயங்கள்
ஆறியபோதும் அதன் வடுக்களின்
வலிகள் ஆறவில்லை அது மட்டுமல்ல
வாய் விட்டுச் சொல்ல முடியாத
ரணங்கள் எத்தனை! எத்தனை!
போரின் வடுக்கள் ஒரு புறம்!
பொருளாதாரத் தடைகள் மறுபுறம்!
உற்ற உறவுகள் தொடர்ந்த நட்புகள்
உரம் சேர்த்த கைகள் என
பல உறவுகளைப் பாதியில்
தொலைத்து விட்டு
பரதேசிகளாகப் பயணிக்கும் வாழ்வு
பக்குவப்பட்ட நெஞ்சம்
பதறுவது ஏனோ?
கால்கள் தள்ளாடுகின்றன
காலம் சொல்லும்வரை
சாவுக்காய் காத்திருக்கும்
சாமர்த்தியம் இனி இல்லை
விடியலைத் தேடி ஓடிய காலம் மாறி
விசப் போத்தலைத் தேடுது நெஞ்சம்
கடவுளே! வெறுமையான வாழ்வு
இனியும் வேண்டாம்.

–நிலா



# காத்திருக்கின்றாள்

பா.அபிராமி

இதுவரை வெறிச்சோடியும் கால்நடைகளின் ஆதிக்கத்தாலும் சூழ்ந்திருந்த என்னை நோக்கி ஒரு கூட்டம் வருகின்றது. மீண்டும் தமது வேலைகளைத் தொடங்கும் மிடுக்குடனே. வண்டி ஒன்று இயந்திரக் கலப்பைக் கலங்களுடன் வந்துசேர்கின்றது. நிறைந்த இயற்கை விளை பசளைகளான எருக்குவியல் களையும் குப்பைகூழங்களையும் சுமந்துகொண்டிருக்கின்றன ஏனைய வண்டிகள். ஓ... உழைக்கும் உழவர் கரங்கள்தான் தத்தமது நிலம் நேக்கி வந்து என்னை வளப் படுத்த எண்ணுகின்றனர் போலும்.

கும்பி கும்பியாய் கொட்டப்படுகின்றன கூட்டெருக்களும் பசளைகளும். நின்றிருந்த மற் றைய இயந்திரம் வந்து என்னைப் பதப்படுத்த முனைகின்றது. ஆம்! ஆரம்பமாகிவிட்டன உழவர்களின் உழுதல்கள். கடினமான எனது மேற்பரப்பில் இலகுவாக வட்டமிடுகின்றன இயந்திரக் கலப்பைகள். பரப்பப்பட்ட பசளைகள் எல்லாம் என்னுடன் சேர்ந்துவிட என்னுடைய மேற்பரப்பில் வண்ணமயமற்ற ஒரு வகை ஓவியம் வரையப்பட்டுள்ளது. இப்போது புத்துணர்வு பெற்றுவிட்டதாக என்னுள் ஓர் உணர்வு.

என் மீது கால் வைத்து அண்ணாந்து பார்க்கின்றான் ஒருவன். "காலக் கணிப்பு எல்லாம் இன்று பெய்யாகி விட்டது. அது சரி, அது வாறநேரம் வரும்தானே" என மனக் கணக்கிட் டுக் கொள்கிறான். எனக்குள் ஒருவித பூரிப்பு ஏற்படுகின்றது. இவ்வளவு நாளும் வெறிச் சோடிக் கிடந்த என்னுள் இன்று வியர்வைத் துளிகள் வீழ்கின்றன. இதனால் இதுவரை சூரியனின் சுடர்கள் வீழ்ந்ததால் வெந்துவிட்டிருந்த எனது தரைப்பரப்பு சிறிது குளிர்மை யடைந்து கொள்கின்றது. குறைந்த வியர்வை நீரானாலும் தினமும் நான் அனுபவிக்கும் சூட்டைத் தனித்துக்கொள்ளும் திறன் அதற்கிருந்தது. சிறிய மன உவகையுடன் காத்தி ருக்கின்றேன். இப்போதுதான் ஆரம்பமாகிறது எனக்குரிய சவால். மருதநில மகளான என்னை நம்பிய உழவர்களின் வயிறு நிறைய வைப்பதன்றி வேறு என்ன் வேலை எனக்கு?

உலகம் முழுவதற்கும் உணவளிக்கப் போகும் என்னை இப்போதுள்ள கணினி யுகம் கண்டிருக்க வாய்ப்பில்லை. வெளித்தெரியும் கறுத்த தேகங்களையும் அவர்களிடமுள்ள வெளித்தெரியாத, உயிர்களுக்குத் தீங்கிழைக்காத வெள்ளை மனங்களையும் எனது விளைச்சலால் உயரவைக்க வேண்டும். உணர்வு மேலிடக் காத்திருக்கின்றேன். தினமும் வந்து என் மீது படிந்து விடும் பெலித்தீன் பைகளையும் பிளாஸ்ரிக் துண்டுகளையும் எடுத்து வீசிச் செல்லும் அவர்களும் காத்திருக்கிறார்கள். ஆனாலும் மழை இன்னும் வருவதாய் இல்லை. பல நல்லின விதை நெற்களைத் தெரிந்தெடுத்து விதைப்பிற்காய்க் காத்திருக்கிறார்கள் அந்த மனிதர்கள். அவர்களின் நம்பிக்கையை இயன்றவரை ஈடேற்றிக்கொள்ள மழையை நோக்கி நானும் காத்திருக்கிறேன்.

# மருதநில மகள்



# நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே

ஜெ.றியா

அரசன் குற்றமிழைப்பினும் ஆண்டி குற்றமிழைப்பினும் தண்டனை கள் எவையும் அவர் தம் தரா தரத்திற்கேற்ப அமைவதில்லை. நீதி என்பது அனைவருக்கும் சமமானதேயன்றி பதவியுடையார்க்கும் பரிதவித்த மக்களுக்கும் எனப் பிரித்தெழு தப்பட்டதல்ல.

கடல் வளங்கள் அழிவதாயும் வளரவேண் டிய மீன்குஞ்சுகளும் பெருகிக்கொள்ளும் கடல் உயிரிகளும் அழிவதாயும் கூறி ஆய்ந் தறிந்து நிறுத்தப்பட்டது இறால் பிடிக்கப் பயன்படுத்துகின்ற வலையால் பின்னப் பட்ட மீனவர்களின் கூட்டுத்தொழில். அதனை மட்டும்நம்பிவயிற்றுப்பிழைப்பை நகர்த்தும் மக்களின் பரிதாப நிலையைக் கருதாது கடுமையாக்கப்பட்டது அதனை மேற்கொள்ளக்கூடாது என்ற சட்டம். இதன் நேக்கம் கடல்வாழ் உயிரினங்கள் பெருக முடியாமல் குஞ்சுகளாய் இருக்கும்போது பிடிக்கப்படுகின்றன என்பதே. அதனை உணர்ந்த மக்களும் வேறுவலைத் தொழில் களை நாடினர்.

இவ்வாறிருக்க கடல்வளத்திற்கும் உயிரி களுக்கும் அழிவை மட்டுமே சேர்க்கும் பாதகத்தைத் தரக்கூடிய உப்பளம் ஒன்று வெறும் வேலை வாய்ப்பு, முதலீடு என்ற போர்வையுள் ஏலவே மீனவர்கள் செய்த தைதப் பெரும் அளவில் செய்ய முனை வது எப்படி நியாயம்?



# விலைபேசப்படுகிறதா? ஆசிரியம்

கந்தையா சோதிதாசன்

'குரு பிரம்மா குரு விஷ்ணு குரு தேவோ -மகேஸ்வரகா
குரு சாக்ஸ பரபிரம்மா தஸ்மைஸி குருவே நமக'

என்கிறது வேத சுலோகம். தாய்-தந்தைக்கு அடுத்த நிலையிலுள்ள குருவின் சிறப்பின் பின்னரே தெய்வம் நோக்கப்படுகிறது. அறியாமையில் இருந்து நம்மை விடுவிப்பவரே ஆசிரியர். எல்லாத் தானங்களிலும் உயர்ந்ததும் புனிதமானதும் குருவாகி வழங்கும் வித்தியாதானமே.

*"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"* என்றான் பாரதி.

அண்மையில் வந்த ஆசிரியர் தினம் பாடசாலைகளில் பல்வேறு விதங்களில் கொண்டாடப்பட்டது. கல்வி தந்தவரைத் துதிக்கின்ற மரபு எம் பண்பாட்டு வழிசார்ந்தது ஆயினும் இன்று நடைபெறும் ஆசிரியப் புகழ்க் கொண்டாட்டங்கள் உண்மையான துதி செய்தலா? என்பதில் நிறைய கேள்விகளைத் தருகின்றன.

ஆசிரியர் தினத்துக்கு முதல் நாள் நண்பர் ஒருவர் தொலைபேசியில் பேசினார். தான் யாழ்ப்பாணத்தின் பிரபலமான பல்பொருள் அங்காடிக்குச் சென்றதாகவும் ஆசிரியர் தினத்துக்கு அன்பளிப்பு வாங்க வந்தவர்களால் அந்த வளாகம் நிறைந்து காணப்பட்டதாகவும், மாணவர்கள் பரிசில் பொருள்களை அதிகம் வாங்கிச் செல்வதைக் காண முடிந்ததென்றும் சொன்னார். அத்தோடு இன்னொன்றை அவர் என்னிடம் கேட்டார். "பணக்காரப்பிள்ளைகள் பூங்கொத்துக்கள், போட்டோ பிரேம்கள், கைவினைப் பொருள்கள் எனப் பெறுமதியான பரிசில்களை வாங்குகிறார்கள் ஏழைப் பிள்ளைகள் என்செய்வார்கள்?" என்றார்.

உண்மைதான் இத்தகைய கொண்டாட்டங்கள் குருவழிபாடாக இருக்காது. சிலரது பணக்காரத்தனத்தை காட்டுவதாகவும் அமைந்து விடுகின்றன. இதனால் பணத்துக்கு ஆசிரியத்தை வாங்கிவிட நினைக்கின்ற மனநிலையை ஏற்படுத்திவிடக்கூடிய ஆபத்தும் இருக்கிறது.

இது மட்டுமின்றி பாடசாலை அனைவருக்கும் பொதுவானது சமத்துவமானது. இதற்காவே அனைவரும் ஒரே சீருடை அணியும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆடம்பரம் எமது பண்பாடு சாராத (பொக்கே) பிளாஸ்ற்றிக் மலர்க்கொத்து வழங்குதல் போன்றன மாணவரது சமத்துவ நிலைய மாற்றி ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதோடு பொறாமை, தாழ்வு மனப்பான்மை, போன்ற தீய எண்ணங்களையும் மாணவர் மனதில் விதைத்து விடும் அல்லவா?

அது மட்டுமன்றி 'தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்ளும்' ஆசிரியர்கள் தற்போதும் உள்ளனர் ஆயினும் அதிக விலையுள்ள பொருளை அன்பளிப்பாக்கும் மாணவர் மீது அதிக அக்கறை செலுத்தி பாரபட்சமாக நடந்து கொள்ள(சில ஆசிரியர்களை) இந்த நடைமுறை தூண்டலாம் அல்லவா?

எனவே கல்விநிர்வாக துறைசார்ந்தோர் இதில் கவனம் கொண்டு அனைவரும் சமனான(க) பரிசளிப்பதை உறுதிசெய்ய வேண்டும்

வகுப்பு மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை எல்லோரிடமும் சேர்த்து ஆசிரியருக்கு அன்புப் பரிசொன்றினை வாங்கிக் கொடுக்கலாம். அல்லது எல்லா ஆசிரியர்களுக்கும் மதிய விருந்தொன்றை ஏற்பாடு செய்யலாம். அல்லது தமிழர் நம் பாரம்பரியமுறையில் பூக் கொண்டு அவர் பாதம் தொழுதாலே அவர் உள்ளம் அன்பால் நிறையும்.





சில ஆசிரியர்கள் மீது அண்மைக் காலங்களில் விமர்சனங்கள் இருந்தாலும், இன்றைய இயந்திர வாழ்வில் குறைந்த சம்பளத்தில் மேலதிக வருவாயின்றி மாணவர் நலனுக்காக பாடசாலையிலும் அது முடிந்து வீட்டிலும் அவர்களுக்காகவே உழைக்கின்ற நல்ல உள்ளங்கள் ஆசிரியர்கள். அவர்கள் தம்மையே அர்ப்பணித்து தனது பிள்ளைகள் போல் மாணவரை நினைக்கின்றனர். இவர்களை நிச்சயம் கொண்டாடியே ஆகவேண்டும்.

நேற்று ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியையரைச் சந்தித்தேன், இதைச்சொல்லும்போது அவர் கண்கள் கலங்கியிருந்தன. குழந்தையைப் பெற்ற தாயின் வலியை ஒத்திருந்தன அவருடைய வார்த்தைகள். "எனது வகுப்பில் படித்த மூன்று மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறார்கள்" என்றார். இவர்போன்றவர்களை இன்னும் இன்னும் உணர்வு மேலிடப் போற்றுவோமாக.

வகுப்பு மாணவர்கள் ஒருகுறிப்பிட்ட தொகையை எல்லோரிடமும் சேர்த்து ஆசிரியருக்கு அன்புப் பரிசொன்றினை வாங்கி கொடுக்கலாம். அல்லது எல்லா ஆசிரியர்களுக்கும் மதிய விருந்தொன்றை ஏற்பாடு செய்யலாம். அல்லது தமிழர் நம் பாரம்பரியமுறையில் பூக் கொண்டு அவர் பாதம் தொழுதாலே அவர் உள்ளம் அன்பால் நிறையும்.



## தவிப்பு

பாசத்தை விடப்
பணமே பெரிதென
பண்பற்ற உறவுகள்
பறந்து விட்டன.

சின்னக் குழந்தைகளைப்
பார்க்க
செலவுகள் அதிகமென
பெற்ற தந்தை
கண்காணாத் தேசம்
சென்றுவிட்டார்.

கடன் எனும்
கடலில் மூழ்கி
கரைசேர வழியும் இன்றி
குழந்தைகளைக்
கரைசேர்க்க வழியும்
இன்றி
தாய்ப்பறவை இங்கே
தவிக்க
நல்லவருக்கான காலம்
வருமென
காத்திருக்கின்றது இதயம்

வ.நிறோஜினி
வரணி

## சோம்பேறிகள்

நடைபயில்கிறார்களோ..?
இல்லை...இல்லை நகர்கிறார்கள்!
சிரிப்புத் தரும் கட்டைக்
காற்சட்டைகளையும்
குட்டைப் பாவாடைகளையும் போட்டு,
காத்தோட்டமுள்ள கடற்கரை வீதிகளில்
ஏன் ஓடித் திரிகிறார்கள்?
ஓ...இவர்கள் தானா அந்தக் குனிந்து,
நிமிர்ந்து
வேலை செய்யாதிருக்கும் நகர்ப்புற மாந்தர்
கூட்டம்?
இவர் தம் வீடுகளில் உரல், உலக்கை
அம்மியோடு, மண்வெட்டி, கோடரியைக்
கொடுத்து, பொழுதுபோக்கும் நேரங்களைப்
பயனுள்ளதாக்கிவிடின் ஒழிந்துவிடும்
இந்த 'தத்தக்க பித்தக்க' நடைபயில்வு.

– ந. தாஸ்



# சவாலைச் சமாளிக்குமா சவுதி அரேபியா?

ஜோதா.

உலகிலயே அதிகளவில் பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்யும் சவூதி அரேபியா, பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. கடந்த வாரம் சவூதி அரேபிய அரசு, தனது ஊழியர்கள், அலுவலர்களின் மாத ஊதியத்தைத் திடீரென 20 சதவீதத்தால் குறைப்பதாக அறிவித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், கச்சா எண்ணெய்யின் விலை முன்பிருந்த விலையிலும் அரைவாசியிலும் அதிகம் குறைந்ததால் அதன் மூலமான வருமானத்தில் 100 பில்லியன் டொலர் அளவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. அமைச்சர்களின் சம்பளம் தொடங்கி, உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்வரை, அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவில் உள்ள பணியாளர்களில் மூன்றில் இரண்டு பேர், அரச, பொதுத்துறைப் பணியாளர்கள்தாம். அரசின் மொத்தச் செலவில், இவர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மட்டுமே, ஏறத்தாழ பாதி அளவுக்கு வந்து விடுகிறது. செலவுகளைக் குறைத்தே ஆக வேண்டிய கட்டாயத்தால், நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு, வேறு வழியின்றி சம்பளக் குறைப்பு நடவடிக்கையில் இறங்கி விட்டது சவூதி அரேபியா.

### அதிரடி முடிவுகள்

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் விதமாக, 'தொலை நோக்கு 2030' என்கிற மிகப் பெரிய திட்டத்தைச் சில நாள்களுக்கு முன்பு முன் வைத்து இருந்தது சவூதி அரசு. ஏப்ரல் மாதத்திலேயே, சவூதி இளவரசர் (பாதுகாப்பு அமைச்சர்) முகமது பின் சல்மான், செலவுகளைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளில் முழுவீச்சில் இறங்கப் போவதாகத் தெரிவித்து இருந்தார். அதன் தொடர்ச்சியாகத்தான் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பளக் குறைப்பு நடவடிக்கைகள் அமைந்துள்ளன. உயர் அதிகாரிகளின் மேலதிக கொடுப்பனவு நீக்கம், ஆண்டு விடுமுறை நீக்கம் என நடவடிக்கைப் பட்டியல் நீள்கிறது. ஆண்டுதோறும் மூன்று இலட்சம் இளைஞர்கள் வேலை தேடிச் சவூதிச் சந்தைக்கு வருகிற நிலையில், இன்னும் பல கடுமையான நடவடிக்கைகள் மூலமே அவர்களின் எதிர்காலத்தை வளமானதாக்க முடியும் என்று நம்புகிறது சவூதி அரேபியா. அரசின் மொத்த வருமானத்தில் 70 வீதத்துக்கும் மேல், கச்சா எண்ணெய் மூலமே கிடைக்கிறது. இந்த நிலையில், எண்ணெய் விலையில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் சரிவு, மிக மோசமாக வருமானத்தைப் பதம் பார்க்கிறது. இதிலிருந்து மீள்வதற்காக, வருமானத் தொகையில் 40 சதவீதம் வரை மிச்சம் பிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய எண்ணெய் நிறுவனமான 'அரம்கோ'வின் பங்குகளை விற்பது என்றும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதன் மூலம் தனக்கு வேண்டிய அளவு, முதலீட்டு செலவுகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டிக்கொள்ள முடிவு செய்து இருக்கிறது.

### வருங்காலத் திட்டம்

முகமது பின் சல்மான், தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில்: 'எண்ணெய்க்கு அடிமையாகி இருக்கிற இந்த நாடு. 2020இல், எண்ணெய் (தயவு) இல்லாமல், வாழ முடியும் என்ற நிலையை எட்டும். தாதுப்பொருள் உற்பத்தி, ஆயுத உற்பத்தி போன்றவற்றில் முழுக் கவனம் செலுத்தப் போகிறோம்" என்றார். அதாவது இனி எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பிக் கொண்டு இருக்கப் போவதில்லை; பல்வேறு துறைகளில், முன்னேறுவதற்கு எங்களை தயார்ப்படுத்திக் கொள்கிறோம் என்பதே இதன் பொருள். இதற்கும் மேலாக சில அதிரடி அறிவிப்புகளையும் வெளியிட்டு இருக்கிறார் சல்மான். "பெண் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்; வெளி நாட்டுத் தொழிலாளர்கள் நீண்ட காலம் சவூதியில் பணிபுரியும் வகையில் நுழை விசைவு முறையில் மாற்றம் கொண்டுவரப்படும்' உள்ளிட்டவை அவற்றுள் முக்கியமானவை.

### மக்களின் ஆதரவு

பாதிப்புக்குள்ளான சவூதி மக்களில் பெரும்பாலானோர், இந்தச் சிக்கன நடவடிக்கையை வரவேற்று இருக்கிறார்கள் என்பது ஆறுதலான செய்தி. நாட்டு மக்களின் முழுமையான ஆதரவு இருக்கிற காரணத்தினால், சவூதி அரசு தனது சீர்திருத்த நடவடிக்க்கைகளில் இருந்து பின்வாங்காது என்று உறுதியாக நம்பலாம். இத்தனை நெருக்கடியிலும், சவூதி அரசு சர்வதேச நிதியத்தை நாடிச் செல்லவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய மிக நல்ல செய்தி. தம்மைத் தாமே சீர்படுத்திக்கொள்ள முடியும் என்று திடமாக நம்புகிறது சவூதி அரசு.

### மற்றுமோர் சவால்

கடந்த ஒரு மாதத்தில் (ஓகஸ்ட் 2016) மட்டும், சவூதி உள்ளிட்ட பெட்ரோலிய ஏற்றுமதி அரபு நாடுகள், 33 பில்லியன் பீப்பாய் அளவுக்குக் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்து இருக்கின்றன. இதை எல்லாம் சரி செய்து, எண்ணெய் உற்பத்தியைக் கட்டுக்குள் கொண்டு வந்து, அதன் மூலம் எண்ணெய் விலையை உயர்த்தினாலும் கூட, ஓரளவுக்கு மேல் உயர்த்த முடியாது. காரணம், அமெரிக்காவில் கிடைக்கும் எண்ணெய், அதைவிட குறைந்த விலையில் சந்தையில் இறங்கத் தயாராக இருக்கிறது. உலக நாடுகள் அந்தப் பக்கம் திரும்பி விட்டால், முதலுக்கே மோசம் ஆகிவிடும் அபாயம் இருக்கிறது. ஆகவே, வேறு ஏதேனும் செய்துதான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். கிரீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட கதி, தனக்கு நேரக் கூடாது என்பதனால், முன்கூட்டியே நன்கு திட்டமிட்டுக் காய்களை நகர்த்தி, எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் நிலைக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறது சவுதி. இதன் ஒரு பகுதியாகத்தான், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளும், 'எண்ணெய் இல்லா' பொருளாதாரம் என்கிற முழக்கமும் உருவாகியுள்ளது.



### எமக்கும், உலகுக்கும்

சவூதியின் பொருளாதார முனைப்புகள், உலகின் பல முனைகளிலும் கூர்ந்து கவனிக்கப்படும். இந்த நடவடிக்கைகளின் மூலம் சவுதி அரேபியா பெறும் வெற்றி, பலருக்கும் பயன்தரக்கூடியது. எமது நாட்டுக்குப் பெற்றோலிய விலைக்குறைப்பு ஒரு புறமும் சவூதியில் பணிபுரியும் வேலைவாய்ப்பினர் தொகை அதிகரிப்பு மறுபுறமும் என்பதைப் போல பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் அநேக நாடுகளின் எதிர்பார்ப்பும் அடங்கியிருக்கும்.

# இன்பெர்னோ



அமெரிக்காவின் தற்கால நவீன இலக்கியத்துக்கும் பொதுமக்கள் எழுத்துக்கும் நடுவில் நின்று எழுதிப் புகழ்பெற்றவர்களில் முக்கியமான ஒருவர் டொன் பிரவுன். இவரது 'டாவின்ஸி கோட்' 2006இல் திரைப்படமாகி உலகைக் கலங்கடிக்கும் முன்னரே அது 2003ஆம் ஆண்டின் மிக அதிகம் விற்பனையான நாவலாகப் புகழ்பெற்றது. 24 மணிநேரத்துக்குள் நடைபெறும் விறுவிறுப்பும் பரபரப்பும் கொண்ட மர்ம, துப்பறியும் திரில்லர் வகை நாவல்கள் இவருடையவை. நீண்ட நெடிய கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதப் பாரம்பரியத்தில் அவிழ்க்க முடியாத பல கேள்விகளுக்கு விடைகளைக் கண்டடைய சாகசங்களை மேற்கொள்ளும் டராபர்ட் லேங்டன்தான் இவரது நாவல் வரிசையின் முதன்மைக் கதாபாத்திரம்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் மதக் குறியீட்டியல் துறையின் பேராசிரியராகச் சித்திரிக்கப்படும் இவர், புதையல் வேட்டையில் ஈடுபடும் ஒரு ஆக்ஷன் பட நாயகன் போல பார்வையாளர்களைக் கலங்கடிப்பவர். மடங்கள், பேராயர்களின் அரண்மனைகள், தேவாலயங்கள், நினைவுச் சின்னங்கள், புனிதர்களின் கல்லறைகள் ஆகிவற்றில் ஒளிந்திருக்கும் அடையாளங்களின் உண்மையான பொருள், ரகசியக் குறியீடுகள், அவை சுட்டும் கடந்தகால எதிர்கால நிகழ்வுகளின் மறைபொருள், இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மதம் சார்ந்த புள்ளிகள், இவற்றுக்கு இடையிலான தீயசக்திகளின் சதி ஆகியவற்றை மையப்படுத்தி விடைதேடி அலையும் ராபர்ட் லேங்டனின் கதாபாத்திரம் கற்பனையானது. நாவலாசிரியர் சித்திரிக்கும் ரகசிய உலகமும் கற்பனையானது.

ஆனால் பிரவுனின் எழுத்துக்கள் நாவலாக வெளிவரும்போதும் பிறகு அவை திரைப்படமாகும்போதும் கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிக எதிர்ப்பையும் சர்ச்சையையும் சந்தித்து வந்திருக்கின்றன. எனினும் அமெரிக்காவில் 'ஏஞ்சல்ஸ் அண்ட் டெமன்ஸ்', 'டாவின்ஸி கோட்' ஆகியவை அதிகம் வசூல் செய்திருக்கின்றன.

டான் பிரவுன்."எனது புத்தகங்கள் கிறிஸ்தவ மதத்துக்கு விரோதமானவை அல்ல. நானே தொடர்ந்து ஆன்மிகப் பயணத்திற்குள் செல்பவன்தான். எனது எழுத்துக்கள் ஆன்மிகக் கருத்துவிவாதத்தை ஊக்குவிக்கும்பொழுதுபோக்குக் கதைகள் மட்டுமே"என்று கூறிச் சமாளித்திருக்கிறார். 'ஏஞ்சல்ஸ் அண்ட் டெமன்ஸ்', 'டா்வின்ஸி கோட்' படங்களைத் தொடர்ந்து தற்போது அவற்றின் தொடர்ச்சியாக 'இன்பெர்னோ' என்ற தலைப்பில் மூன்றாம் பாகமாக வெளியாகிறது. அத்துடன் பிராந்திய மொழிகள் அனைத்திலும் மொழிமாற்றம் செய்யப்பட இருக்கிறது. நடிப்புக்காக ஒஸ்கர் விருது வென்ற டாம் ஹங்க்ஸ், இதில் பேராசிரியர் ராபர்ட் லேங்டன் கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார். இதனைக் கண்டுகளிக்க வேண்டுமாயின் ஒக்டோபர் 14ஆம் திகதி வரைக் காத்திருக்க வேண்டும்.



நிஷா

# சரஸ்வதி பூஜை



புரட்டாதி மாதத் தொடக்கத்திலயே ஆரம்பமாகியுள்ள நவராத்திரி விரதம் தொடர்ந்து ஒன்பது இரவுகள் கடைப்பிடிக்கப்படுவதாய் அமைகின்றது. அத்துடன் பத்தாம் நாள் விஜய தசமியும் பதினோராம் நாள் மகிசாசூர சங்காரமும் கொண்டதாய் இம்முறை பதினோரு நாள்களைக் கொண்டதாக நவராத்திரி விரதம் அமையப்போகின்றது. பெண் தெய்வங்களான துர்க்காதேவியிடம் வீரத்தைவேண்டி முதல் மூன்று நாள்களும், இலட்சுமிதேவியிடம் செல்வத்தை வேண்டி அடுத்த மூன்று நாள்களும், சரஸ்வதி தேவியிடம் கல்வியை வேண்டியதாய் இறுதி மூன்று நாள்களுமாக ஒன்பதுநாள்கள் நோக்கப்பட்டு பத்தாவது நாள் விஜயதசமியுடன் நிறைவு பெறுவது வழமை. ஆனால் இம்முறை பதினோராவது நாள் வரை நீளுகின்றது நவராத்திரி விரதம். எனவே இம்முறை நவராத்திரி இது வரையிருந்த நவராத்திரிகளைக் காட்டிலும் வேறுபட்டது என்பது தெளிவு. கல்வியா? செல்வமா? வீரமா? என்ற விவாதத்துக்கு மத்தியில் எழுந்த போட்டித் தன்மை மூன்றும் சமம் என்ற கருத்தில் முற்றுப் பெற்றாலும் இன்றுவரை நவராத்திரி விரதத்தை நாம் துர்க்காபூஜை என்றோ இலட்சுமி பூஜை என்றோ அழைப்பதில்லை. அவ்வாறிருக்க 'சரஸ்வதி பூஜை' என்றழைக்கும் பழக்கம் எப்படி வந்தது? ஆம் எவ்வாறுதான் செல்வமும் வீரமும் நிறைந்திருந்தாலும் அவை கல்விக்கு ஈடாகாது என்றுணர்த்தும் கல்வியின் மகிமையே நவராத்திரியை இன்றுவரை சரஸ்வதி பூஜை என்றழைக்கக் காரணமாயிற்று. அத்துடன் நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் அதிகளவில் கல்விச் சமூகத்தினர் ஆதலாலும் கல்விக்கு அதிபதியான சரஸ்வதியை உயர்த்திக் கூறும் மரபு காணப்படுகின்றது. பாடசாலைச் சிறுவர்கள் முதல் ஆசிரியர்கள், அதிகாரிகள் எனக் கல்விப் புலத்தை ஆட்கொண்டுள்ள நவராத்திரி பூஜை இன்று வரை சரஸ்வதி பூஜை என்றழைக்கப்படுவதற்கும் சாத்தியமாயிற்று.

நாம் சரஸ்வதியா? துர்க்கையா? இலட்சுமியா? என்று வேறுபடுத்தி நோக்கிக்கொள்வதுகூட தனி ஒரு சக்திதேவியில் இருந்து உருவான ஞானாசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி ஆகிய சக்தி அவதாரங்களே. இந்தச் செல்வங்கள் மூன்றும் மனித வாழ்விற்கு அத்தியாவசியமானவை. இதன் மூலம் எவற்றிலும் சிறுமை, பெருமை இல்லை என்பதைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது நவராத்திரி விரதம்.



# 19ஆவது சார்க்?

> தினமும் நடைபெறும் எல்லை மீறல்கள், துப்பாக்கிச் சூடுகள் தற்போது அங்கு எப்போதும் போர் ஆரம்பமாகலாம் என்ற பதற்றத் தைத் தோற்றுவித்துள்ளது. இதற்குப் பிரதான காரணமாக காஷ்மீரின் யூரி என்ற பகுதியில் நிலைகொண்டிருந்த இந்தியாவின் இராணுவ முகாம் ஒன்றுக்குள் பாகிஸ்தானுக்குள் இருந்து ஊடுருவிய 4பயங்கரவாதிகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் 18 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

தவபாரதி

ஆசியாக் கண்டத்தின் தென்பிராந்தியங்களான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய 07 நாடுகளும் இணைந்து 1985ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (சார்க்) என்ற பெயருடன் தங்களுக்கான அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டன. இன்று இதன் தலைமைப் பொறுப்பு நேபாளத்திடம் உள்ளது. பொதுச் செயலாளர் அஹ்மது சலீம். 2007 ஏப்ரல் 3ஆம் திகதி இந்தியாவில் நடந்த இதன் பதினான்காவது உச்சிமாநாட்டின்போது ஆப் கானிஸ்தானும் சார்க் அமைப்பில் உத்தியோக பூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. தற்போது எட்டு தெற்காசிய உறுப்புநாடுகளைக் கொண்டு விளங்கும் இது தெற்காசிய நாடுகளுக்கிடையே நல்லுறவைப் பேணிக்கொள்வதையும் தமது பிராந்தியங்களுக்கிடையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதையும் தனது பிரதான நோக்காகக் கொண்டிருந்தாலும் தற்போது அதனைக் கடைப்பிடிக்க முடியாத சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

**கேள்விக்குறியான 19ஆவது சார்க்**

கடந்த காலங்களில் உறுப்பு நாடுகளில் மாநாடு கூடித் தமக்குரிய பிரச்சினைகளையும் தீர்வுகளையும் பங்களிப்புக்களையும் நடைமுறைத் திட்டங்களையும் செயற்படுத்தி வந்த சார்க் இந்த வருடம் தனது 19ஆவது மாநாட்டை எதிர்வரும் நவம்பர் மாதம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நிகழ்த்துவதெனத் தீர்மானித்திருந்தது. ஆசியாவின் வல்லரசு என்ற நிலையிலுள்ள இந்தியாவும் அதன் அண்டை நாடான பாகிஸ்தானும் எப்போதுமே பகைமையுடன் இருந்துவரினும் சார்க் கூட்டமைப்பு விடயத்தில் இது வரையில் அவற்றினிடையே முரண் பாடுகளோ, முறுகல் நிலைகளோ உருவானதில்லை. இது இவ்வாறிருக்க இம்முறை பாகிஸ்தானில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்ட மாநாட்டுத் திகதி அண்மித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் இந்திய-பாகிஸ்தானிடையே ஏற்பட்டுள்ள மோதல் நிலைகளால் அது கேள்விக்குறிக்குள்ளாகியிருக்கின்றது.

**தீவிரமடையும் பதற்றம்**

மதரீதியான முரண்பாடுகளால் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தான் இன்று தனி முஸ்லிம் நாடாகக் காணப்படுகின்றது. அன்றிலிருந்து இன்றுவரை இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியாகவுள்ள காஷ்மீர்ப் பிரதேசத்தில் அவை மோதிக்கொள்ளும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாக இருந்தது. பின்னர் சற்றே குறைந்திருந்த முரண்பாட்டுக்குரிய காஷ்மீர் மோதல்கள் தற்போது மோசமடைந்து காணப்படுகின்றன. தினமும் நடைபெறும் எல்லை மீறல்கள், துப்பாக்கிச் சூடுகள் தற்போது அங்கு எப்பொதும் போர் ஆரம்பமாகலாம் என்ற பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. இதற்குப் பிரதான காரணமாக காஷ்மீரின் யூரி என்ற பகுதியில் நிலைகொண்டிருந்த இந்தியாவின் இராணுவ முகாம் ஒன்றுக்குள் பாகிஸ்தானுக்குள் இருந்து ஊடுருவிய 4ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 18 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனால் கோபமடைந்த இந்தியா அந்தப் பகுதியில் சரமாரியான பதில் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. இதனால் அங்கு போர் நிறுத்தம் மீறப்பட்டதான சூழல் உருவாகி இரு நாடுகளுக்கிடையில் போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் பாகிஸ்தான் மீது போர் தொடுப்பது கடினமானதல்ல. ஆயுத பலம் பொருந்திய இந்த இரு நாடுகளும் மோதிக்கொள்வதால் ஏற்படும் ஆபத்துக்கள் அவர்களுக்கு மட்டுமன்றி நம்மைப்போன்று அவர்களை ஒட்டியுள்ள அனைத்து அயல் நாடுகளுக்கும் ஏற்படும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

**தலைமைக்கு வந்த பொறுப்பு**

நேரடியாகவே இந்தியா, பயங்கரவாதத்துக்குத் துணை போகும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டைத் தான் புறக்கணிப்பதாகவும், அதில் கலந்துகொள்ளப்போவதில்லை என்றும் கூறிவிட்டது. ஆரம்பத்தில் பாகிஸ்தானாகவிருந்து 1971இல் பிரிந்து தனிநாடாகிய பங்களாதேஷ் தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடுகள் அதிகரித்துள்ளதாகக் குற்றம் சுமத்தி வந்த நிலையில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்ளாது எனத் தெரிவித்திருக்கின்றது. பூட்டானும் ஆப்கானிஸ்தானும் இத்தகைய நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளன. "சார்க் அமைப்பு அதன் உறுப்பு நாடுகளுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய பயன்களைப் பெற்றுக்கொடுக்கத் தவறுமானால் அதற்கான மாற்றீடு தொடர்பில் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்" என இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ளதோடு, இலங்கையும் மாநாட்டைப் புறக்கணித்திருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பாகிஸ்தானில் எவ்வாறு 19ஆவது சார்க் உச்சி மாநாட்டை நடத்துவது? என்ற நெருக்கடி தலைமைப் பெறுப்பிலுள்ள நேபாளத்துக்கு ஏற்பட்டுள்ளது.

**தனிமைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்**

இந்தியாவைப் பொறுத்தவரையில் பாகிஸ்தானைத் தனிமைப்படுத்துவதற்கான முயற்சியை உலகளவில் மேற்கொண்டு வருகிறது. மற்றைய நாடுகளும் மாநாட்டைப் புறக்கணித்து அதற்கு ஆதரவளித்தாற்போன்று செயற்படுகின்றன என்றும் கருதலாம். யூரி தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுடனான சிந்து நதிநீர்ப் பகிர்வு ஒப்பந்தம் நீக்கப்படும் என்ற நிலை தொடர்பாகப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய கூட்டம், இந்த ஒப்பந்தத்தில் இப்போதைக்கு எந்த வித மாற்றமும் இல்லையென்ற முடிவை எடுத்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை சிந்து நதி ஒப்பந்தத்தை நீக்கினால் நன்மைகளை விடத் தீமைகளே அதிகம். 1960இல் உலக வங்கியின் முயற்சியால் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கு உலக வங்கியின் முந்தைய அமைப்பான 'மறுகட்டமைப்பு, வளர்ச்சிக்கான சர்வதேச வங்கி' உதவிசெய்தது. இதற்கு முன்பு பாகிஸ்தானுடன் நடந்த போர்களின்போதும், மோதல்களின்போதும் கூட இந்த ஒப்பந்தம் குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டதில்லை. ஆனாலும் இப்போது அதுபற்றி ஆராயப்படுகின்றது. இதற்கிடையே, இது தொடர்பாக உலக வங்கியையும் பன்னாட்டு நீதிமன்றத்தையும் பாகிஸ்தான் அணுகியிருக்கின்றது. உண்மையில், பாகிஸ்தானுக்குள் பாயும் சிந்து நீரின் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றால், அதன் கிளை நதிகள் மீது அணைகளைக் கட்டி தண்ணீரைத் தேக்க வேண்டும். குறுகிய காலத்தில் செய்யக்கூடிய வேலை அல்ல இது. அந்த அணையால் இமயமலைப் பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்பதாலும் புவியியல் நிலமை மோசமடையும் என்பதாலும் எந்தப் பன்னாட்டு அமைப்பும் அணைகளைக் கட்ட கடனுதவி செய்யாது.

**எதிலும் நிதானம் தேவை**

இந்தியா, பாகிஸ்தான் மீது எந்த நடவடிக்கையை எடுப்பதாக இருந்தாலும் நிதானித்து, நன்கு பரிசீலித்து எடுக்க வேண்டியது அவசியம். இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் வர்த்தகத் தொடர்புகள், கொடுக்கல் வாங்கல்கள் குறைவு. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள குறைகளையும் யூரி தாக்குதல் அம்பலப்படுத்தியிருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் நிகழாத வகையில், பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தவேண்டும். ஏற்கனவே, பல்வேறு உள்நாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் இந்தியாவும் பக்கத்து நாட்டின் பக்குவமற்ற சீண்டல்களுக்கெல்லாம் இரையாகிப் பகுத்தறியாமலும் பொறுப்பில்லாமலும் செயற்பட்டுவிடக்கூடாது. இவ்வாறு நாடுகளுக்கிடையிலான மோதல் நிலைகளால் ஐக்கியப்படும் ஏனைய நாடுகளின் நிலையையும் மாற்றி விடக் கூடாது.

# கர்ப்பம் தரிக்க உகந்த வயது



ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் கர்ப்பம் அடைதல் என்பது, அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளிக்கும் ஒன்றாக உள்ளது. அது அவளுக்கு மட்டுமல்லாது, அவளது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பேரின்பத்தை அளிக்கும் தருணம்.

கர்ப்பம் அடைவதற்குத் தகுந்த வயது மிக முக்கியம். இது பெண்களுக்கு அமைதியான கர்ப்ப காலத்தையும் ஆரோக்கியமான குழந்தையையும் அளிப்பதற்குத் தேவையான ஒன்றாகும். அந்தவகையில், 25-30 வயதுக்குள் கர்ப்பம் தரிப்பது உகந்தது என்று கூறப்பட்டுள்ளது. கர்ப்பம் தரிப்பதற்கு முன்னதாக சரியாகத் திட்டமிடுவது, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க உதவும். பெண்கள் கர்ப்பகாலத்தைச் சந்தோசமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது மிக முக்கியம். இதனைப் பொறுத்தே பிள்ளைகளின் நலன் அமைகின்றது.

கர்ப்பம் அடைவதற்கான வயது என்பது, ஒவ்வொரு பெண்ணின் உடல்நிலையைப் பொறுத்து இருக்கும் என்கிறது மருத்துவம். ஆதலால், கர்ப்பம் அடைவதற்கு முன்பு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது மிக முக்கியமான ஒன்றாகும். இதன் மூலம் கர்ப்பத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை இலகுவாகக் கண்டறியலாம்.

மேலும், பெண்கள் கர்ப்பம் அடைவதற்கான வயதைக் கண்டறியும்போது, தம் கணவரின் ஆரோக்கியத்தையும் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஏனெனில், ஆரோக்கியமான குழந்தையைப் பெறக் கணவன்- மனைவி இருவரும் உடல்ரீதியாக ஆரோக்கியமாக இருப்பது முக்கியம்.

# நெற்றித் திலகம் வெற்றி தரும்



பெண்கள் பொட்டு வைப்பதன் இரகசியம் பலருக்குத் தெரிவதில்லை. அவை வெறும் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள இடம் நெற்றிப் பொட்டு என்று அழைக்கப்படுகிறது. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி நினைவாற்றலுக்கும் சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம் அதுவே. யோகக்கலை இதனை 'ஆக்ஞா சக்கரம்' எனக் குறிப்பிடுகிறது. இந்த இடம் எலக்ட்ரோ மக்னடிக் என்ற மின்காந்த அலைகளாக மனித உடல் சக்தியை வெளிப்படுத்துகிறது. அதிலும், முன் நெற்றி மற்றும் நெற்றிப் பொட்டு இரண்டும் மின்காந்த அலைகளை வெளியிடுவதில் முக்கியமானவை. அதனால்தான், நமது மனம் கவலையால் வாடும்போது, தலைவலி அதிகமாவதை உணரலாம்.

நெற்றியில் இடும் திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விக்கிறது. மேலும் நமது உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. எனவே நெற்றித் திலகம், நம்மை இறை அனுக்கிரகத்துடன் வாழ வைப்பதுடன்- தீய சக்திகள் நம்மை அணுகாமல், தீய எண்ணங்கள் நம்மில் எழாமல் காக்கிறது.

நெற்றியில் திலகத்தை வைத்துக் கொள்ளும்போது ஒவ்வொருவரும் "நான் கடவுளை எப்போதும் மனத்தில் நிலைநிறுத்துகிறேன். இறை தன்மையுள்ள இந்த உணர்வு, எனது எல்லாச் செயல்களிலும் ஊடுருவிப் பரவட்டும். என் செயற்பாடுகளில் எப்போதும் நேர்மையும் உண்மையும் நிறையட்டும்" என்று பிரார்த்திக்க வேண்டும்.

நெற்றித் திலகம் இலட்சுமிகரமானது என்பர். எனவே, குங்குமம் வைக்கும்போது, சிறி நமஹ என்றோ, மகாலட்சுமியே போற்றி என்றோ சொல்லியபடி வைத்துக்கொள்வது பெண்களுக்கு நலம் பயக்கும். குங்குமத்தை மோதிர விரலால்தான் நெற்றியில் இடவேண்டும். மற்ற விரல்களைப் பயன்படுத்தக்கூடாது. பெண்கள் தலையிலும், மாங்கல்யத்திலும், நெற்றியிலும் பொட்டு வைக்கிறார்கள்.

இந்த மூன்று இடங்களிலுமே லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். கோயில்களிலோ, வீட்டிலோ குங்குமத்தை எடுத்து இடது கையில் போட்டுக்கொண்டு, வலது கைவிரலால் தொட்டு வைப்பதும் கூடாது.

# பெண்கள் எப்போதும் வெற்றிபெற



- விடியும் முன்னால் எழுந்து விடுங்கள். ஒருநாளின் அலுவல்களை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.
- ஆரோக்கியம் தராத உணவு வகைகள் எவ்வளவு சுவையாக இருந்தாலும் உண்ணாதீர்கள்.
- உங்களுக்கு என்ன வயதானாலும் பரவாயில்லை. விருப்பமான துறைகளில் நடக்கும் பயிற்சி வகுப்புக்களில் பங்கு பற்றுங்கள்.
- வருமானத்துக்கான வழி மிகவும் முக்கியம். அதில் எந்தச் சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்.
- முடிந்தவரை கடன்களைக் கட்டி விடுங்கள். வேண்டாத செலவுகளை நிறுத்திவிடுங்கள்.
- மாதம் ஒரு புத்தகமாவது படியுங்கள்.
- முப்பதுகளைக் கடக்கும் போது, மற்றவர்கள் சொல்லாமலே சீனி, உப்பு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைத்து விடுங்கள். முடிந்தால் தவிர்த்து விடுங்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்க்காதீர்கள்.
- நிற்கையில் நேராக நில்லுங்கள். பேசுகையில் கண்களைப் பார்த்துப் பேசுங்கள்.
- புன்னகை முகமும் இதமான பேச்சும்உங்கள் இயல்புகளாகவே இருக்கட்டும்.
- தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். முடிந்தவரை அருகிலுள்ள இடங்களுக்கு நடந்து செல்லுங்கள்.
- சிறு குறிப்போ, கடிதமோ, கட்டுரையோ, பிழையில்லாமல் எழுதுவதில் கவனம் செலுத்துங்கள்.
- ஒருவர் இல்லாதபோது அவருடைய சிறப்பம்சங்களையே பேசுங்கள்.
- அரட்டைப் பேச்சுக்களையும் அபவாதங்களையும் ஊக்குவிக்காதீர்கள்.
- மற்றவர்களின் தவறுகளை மன்னியுங்கள்.
- கசப்பான சம்பவங்களைத் திரும்பத் திரும்ப நினைத்து அசை போடாதீர்கள்.
- உங்கள் வாழ்வின் இரகசிய அம்சங்கள் முடிந்தவரை குறைவாகவே இருக்கட்டும். தேவையின்றி மற்றவர்களிடம் எதையும் பகிராதீர்கள்.
- குடும்பம், தொழில் என்கிற எல்லையைக்கடந்து, பொது அமைப்பு எதிலாவது ஈடுபடுங்கள்.
- மாதம் ஒரு முறையாவது உங்கள் தகுதிகளையும் தவறுகளையும் பட்டியல் இடுங்கள்.
- மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் மேல் உங்களுக்கு இருக்கும் அக்கறையை உணர்த்துங்கள்.
- முடிந்த அளவு அடுத்தவர்களுக்கு உதவிடுங்கள்.



# கேதாரகௌரி விரதம்

அ.அச்சுதன்

இந்துக்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்களில் அதிக நாள்களைக் கொண்ட விரதம் 'கேதாரகௌரி' விரதமாகும். இந்த விரதம் உலகிலுள்ள பெரும்பாலான சைவ சமயிகளால் ஆண், பெண், முதியோர், சிறியோர் எனப் பேதம் பாராமல் நோக்கப்படும் 21 நாள்கள் கொண்ட நோன்பாகும். இது வருடம்தோறும் கன்னி மாதம் எனப்படும் புரட்டாதியில் வரும் பூர்வபட்ச விஜயதசமி திதி முதல் ஆரம்பித்து, ஐப்பசியில் வரும் கிருஷ்ணபட்சத்தில் அமாவாசை வரை 21 தினங்கள் கடைப்பிடிக்கப்படும் விரதமாகும். சில காலங்களில் திதி அமைவதைப் பொறுத்து இந்த விரதம் 20 நாள்கள் வருவதுமுண்டு இப்படிவரும் காலங்களில் விஜயதசமிக்கு முன்பு வரும் மகாநவமித் திதியைக் கேதார கௌரி விரத ஆரம்ப நாளாகக் கொள்ள வேண்டும். இது 'சைவ விழாக்களும் விரதங்களும்' என்ற நூலிலும் 'விரத அனுஷ்டானங்களும் விரத விவரங்களும்' என்ற நூலிலும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்து ஆலயங்களை நிர்வகிக்கும் சபையினரும் ஆலயப் பூசையை மேற்கொள்ளும் அர்ச்சகர்களும், விரதம்நோற்பவர்களும் அவசியம் இதை அறிந்து, இந்தமுறை நோக்கின்ற கேதார கௌரி விரதத்தை உரிய முறைப்படி கடைப்பிடித்தாலே நற்பயனைப் பெறமுடியும்.

கேதாரகௌரிவிரதம் இந்த வருடம் (எதிர்வரும் திருவள்ளுவர் ஆண்டு 2047 கன்னி மாதம் 24ம் நாள்) 10.10.2016 அன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் இந்த விரதம் 21 நாள் எண்ணிக்கை கொண்டதாக முழுமை அமையும். அதைவிடுத்து 11.10.2016 செவ்வாய்க்கிழமை விஜயதசமியில் நோன்பை ஆரம்பித்து பின்வரும் 20நாள்கள்வரை அனுஷ்டித்தால் அது முழுமைமற்ற விரதமாக அமையும் .

கேதாரகௌரிவிரதத்தில் 'சம்சார கோரம்பு' எனப் போற்றப்படும் திருக்காப்பு கட்டும் நிகழ்வு முக்கிய வகிபாகம் வகிக்கிறது. இது 21 இழையில்திரிக்கப்பட்ட சிவப்புப்பட்டுநூலை முறைப்படி 21 முடிப்புக்கள் இட்டு, 21 நாள் பூசை ஆராதனைகளில் சிவலிங்கம் அல்லது சிவகும்பத்தில் சாத்தி 21 எண்ணிக்கையில் வெற்றிலை, பாக்கு, பழம், அரியதரம், வெல்லம், மஞ்சள், உருண்டை முதலிய நிவேதனப்பொருள்களைக் கேதாரநாதருக்கு நிவேதித்து,

ஆயுள்ஸ்ஸ வித்தியாம்ஸ்ஸ ததா சுகம்ஸ
சௌபாக்கிய வ்ருத்திக் குரு தேவ வேத
சம்சார கோரம்பு நிதள நிமக்னம்
மாம் ரட் கேதார பதயே நமஸ்து

என ஸ்தோத்திரம் செய்து அமாவாசைத்திதியில் பரிசுத்தராக உபவாசம் இருந்துபக்குவமாகக் கட்டிக்கொள்ளவேண்டும். உபவாசமிருக்க வேண்டிய அமாவாசைக் காலம் ஐப்பசி மாதம் 30ஆம் திகதி ஒக்ரோபர் ஞாயிற்றுக்கிழமையாகும். 29.10.2016 சனிக்கிழமை சதுர்த்தசித்திதியில் விளக்கேற்றுவதற்கு முன்பு அன்று மு.இரவு 9.08 மணி முதல் 30.10.2016 ஞாயிறு மு.இரவு 11.01 மணிவரை அமாவாசை உபவாசம் மேற்கொள்ள வேண்டிய காலம். இந்தவேளை முழுவதும் பசித்திருத்தல், பரிசுத்தமாயிருத்தல், பொறுத்திருத்தல், பொய், பொறாமை தவித்திருத்தல், விழித்திருத்தல், வீண் வார்த்தைகளை விடுத்து சிவன் சிந்தனையில் லயித்திருத்தல் வேண்டும். இதுவே பூரண விரத பயனைப் பெற வழிவகுக்கும் அமாவாசை அற்றதன் பின் மறுநாள் 31.10.2016 திங்கள் காலை 8.00 மணிக்கு முன்பு (பிரதமைத்திதி) பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். முக்கியமாக விரதமிருந்து திருக்காப்பு கட்டுபவர்கள் காப்புக் கட்டி முடிந்தாலும் அமாவாசை வியாபித்திருக் கும்போது பால், பழம், பாயாசம், வடை, கடலை மரவள்ளிக்கிழங்கு, பலகார வகை கள் போன்றவற்றில் கொஞ்சமும் உண்ணாமல் இருப்பதே அதிஉத்தமமாகும்.

21 நாள்கள் விரதம் கடைப்பிடிக்க முடியாதவர்கள் விரதம் ஆரம்பித்ததிலிருந்து ஒன்றுவிட்ட நாள்கள் (01,03,05,07,09,11) பூரணமாக விரதமிருந்தும் திருக்காப்பினை அணியலாம். 21 வருடங்கள், 14 வருடங்கள், 7வருடங்கள் என இதனை அனுஷ்டித்துவிட்டு விரதத்தை நிறைவு செய்ய விரும்பும் அடியார்கள் சிவாச்சாரியாரை அணுகி விரதநிறைவை முறைப்படி செய்து முடிப்பதன் மூலமே விரதப் பயனை சம்பூரணமாக அடைய முடியும்.

# காசினியில் இனிக்கும் கற்கண்டுகள்

காசினியில் இனிக்கும் கற்கண்டுகள்
காலத்தால் கரைவதில்லையே
கல்வியால் மிளிரும் பதக்கங்கள்
காலத்தால் தொலைவதில்லையே
மாசிலாத மணி இரத்தினங்கள்
காலத்தால் மங்குவதில்லையே
மாணவர்களாம் முத்துக்களை (குரு)
மாண்பு கெட விடுவதில்லையே

சேதாரம் இல்லாத செல்வங்கள்
தேசத்தில் பொய்ப்பதில்லையே,
செருக்குடைய பேராசான்கள் இச்
செகத்தினில் நிலைப்பதில்லையே
ஆசாரம் இல்லாத ஆசிரியர்கள்
அவனியில் வாழ்வதில்லையே
ஆசிரியம் போற்றிய மகான்களோ
ஒருபோதும் வீழ்வதில்லையே.

நடை, உடை , பாவனை சாயமோ
வகுப்பை மயக்கி விடக்கூடாது
ஒன்றுக்கு இரண்டு தொலைபேசிகளோ
வகுப்பைக் குலைத்து விடக் கூடாது
தடையென்ற கட்டுப்பாட்டை மீறி
தடியடி விளையாடக்கூடாது

தாற்பரியமான ஆசிரியர்கள் தான்
இத்தரணிக்கு வாய்த்த கற்கண்டுகள்

எட்டுப்பாடங்களும் கற்பித்தவன்
இவ்வுலகில் தோற்றதில்லையே
எழுத்துக்களை ஒழுங்காக எழுதுபவன்
இல்லத்தில் குறையொன்றுமில்லையே
காலத்தால் அழியாத மேதாவியாவதற்கு
கடமை ஒருபோதும் தடையாவதில்லையே.

மாணவரின் மூளைக்குத் தீனியிடுங்கள் இந்த
மண்ணுக்கு அவர்கள் பாரமில்லையே
மாணவரை ஏணியில் ஏற்றிவிடுங்கள்.
இந்த மண்விடிவு அவ்வளவு தூரமில்லையே
மாணவருக்கு ஏற்ற சந்தர்ப்பம் கொடுங்கள்
மண்ணுக்குத் தோல்வியில்லையே

மாணவர்களை வாசிக்கப் பழக்கி விடுங்கள்
மண்ணில் எந்த வதைகளும் இருப்பதில்லையே!

*கே.எஸ்.சிவஞானராஜா*



# காகமும் நாய்க்குட்டியும்



ஒரு வீட்டில் நாய்க்குட்டி ஒன்றை வளர்த்து வந்தனர். அந்த நாய்க்குட்டி ஒரு காகத்துடன் நட்பாக இருந்தது. ஒருநாள் காகம் மிகுந்த கவலையுடன் அமர்ந்திருந்தது. இதனைக் கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று, "என்ன காக்கையாரே, ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்ன நடந்தது?" என்று அன்புடன் வினவியது.

அதற்குக் காகம், "மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றனர். அவற்றின் செயல்களைப் பாராட்டுகின்றனர். ஆனால், எங்கள் இனத்தை வெறுக்கின்றனர். எம்மைக் கண்டாலே கல்லால் எறிந்து துரத்துகின்றனர். இது எமக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. இந்தப் பேதம் ஏன்?" என்று கேட்டது காகம்.

"இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதனை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள் மனிதர்கள்" என்றது நாய்க்குட்டி.

"எங்களிடம் அப்படி என்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், ஒற்றுமை உணர்வு என்று பல நல்ல குணங்களில் நாங்கள் தானே சிறந்து விளங்குகின்றோம். எங்கள் நற்குணங்களைப் பார்க்கமாட்டார்களா மனிதர்கள்?" என்றது காகம்.

"உண்மைதான்" என்றது நாய்க்குட்டி.

"பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள் தான்" என்று பெருமையுடன் சொன்னது காகம்.

"ஆமாம், அதுவும் உண்மைதான்" என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

"இப்படி நல்ல குணங்கள் எங்களிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே. குயில் கூவும் போது, அதன் இனிமையை இரசிக்கின்றனர். மயில் ஆடும் போது, அதன் அழகை இரசித்துப் பாராட்டுகின்றனர். கிளியை வீட்டில் வைத்துப் பேசக் கற்றுக்கொடுக்கின்றனர். ஆனால், எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகின்றனர் மனிதர்கள். இது ஏன்?" என்றது காகம்.

"ஏன் என்று நான் சொல்கின்றேன் காக்கையாரே. உங்களிடம் பல நல்ல குணங்கள் இருந்தாலும், சில தீய குணங்களும் இருப்பதால்தான் மனிதர்கள் வெறுக்கின்றனர்" என்று சொன்னது நாய்க்குட்டி.

"அப்படி என்ன தீய குணங்கள் எம்மிடம் உள்ளன?" என்று மீண்டும் கேட்டது காகம்.

"அவற்றை நான் சொன்னால், நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கக்கூடாது காக்கையாரே. திருடுதல், தந்திரத்தால் ஏமாற்றுதல் என்பன உங்களிடம் உள்ள தீய குணங்கள்" என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலைகுனிந்தது.

நீதி: ஒருரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும், அவருடைய ஒரு சிறிய தீய செயலே அவரை அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அவரை வெறுக்கத் தூண்டுகின்றது.

பெற்றோர்களே!உங்கள் விருப்பங்களை பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள். – யாரோ

## வாழ்க்கை ஒரு மொபைல்

நாம், வாழ்க்கையில் பின்வருவனவற்றைத் தினமும் செய்தால் அது என்றும் பூத்துக்குலுங்கும் நந்தவனமாக இருக்கும். நீங்களும் செய்து பாருங்களேன்...

- சோகத்தை Delete செய்யுங்கள்.
- சந்தோசத்தை Save செய்யுங்கள்.
- சொந்தங்களை Recharge செய்யுங்கள்.
- நட்புக்களை Download செய்யுங்கள்.
- எதிரிகளை Erase செய்யுங்கள்.
- உண்மையை Broadcast செய்யுங்கள்.
- துக்கத்தை Switch off செய்யுங்கள்.
- வேதனையை Not Reachable செய்யுங்கள்.
- பாசத்தை In Coming செய்யுங்கள்.
- வெறுப்பை Out going செய்யுங்கள்.
- சிரிப்பை In Box வெய்யுங்கள்.
- அழுகையை Out Box செய்யுங்கள்.
- கோபத்தை Hold செய்யுங்கள்.
- இன்முகத்தை Send செய்யுங்கள்.
- உதவியை Ok செய்யுங்கள்.
- இதயத்தை Vibrate செய்யுங்கள்.

*பின்னர் பாருங்கள் வாழ்க்கை எனும்* Ring tone *சந்தோசமாக ஒலிக்கும்.*

Have a relaxing day everyday

## சிட்டுக்குருவி

பட்டுப்போர்த்த உடலைச் சுமந்து லாவகமாகப் பறந்து வரும் சிட்டுக்குருவி களைப் பிடிக்காத மனிதர்களே இல்லை. இந்தப் பறவையினம் தற்போது அருகி வருகிறது. தொலைபேசிக் கோபுரங்கள் வந்ததனால் தான் இது அழிவதாகக் கட்டுக் கதை விடுகின்றனர்மனிதர்கள். உண்மை அதுவல்ல. சிட்டுக்குருவிக்குக் கூடு கட்டத் தெரியாது. அதன் இருப்பிடம் என்பது பழைய ஓடு மற்றும் பனையோலையால் வேய்ந்த வீடு. இவ் வீடுகளின் தாழ்வாரத்தில்தான் இந்தக்குருவி வசிக்கும். இப்போது பனையோலையால் வேய்ந்த வீடுகள் இல்லை. அநேகமான இடங்களில் மாட மாளிகைகளும்கூட கோபுரங்களும் தான் உள்ளன. இங்கே தங்குவதற்கு ஏது இடம் சிட்டுக்குருவிக்கு?


ஆதலால், உங்கள் வீட்டின் முன்பு ஒரு அட்டைப் பெட்டி தயார்செய்து வையுங்கள். உங்கள் வீட்டுக்கும் சிட்டுக்குருவி வரும். உலகம் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது.



# உயர்ந்த உள்ளம்

அந்த விஞ்ஞான ஆய்வுகூடம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒருவர், மிகுந்த பரபரப்புடன் காணப்பட்டார். காரணம், அன்று மாலை தன் பிள்ளைகளைக் கண்காட்சிக்கு அழைத்துச் செல்வதற்காக அவர் வேளைக்கு வீடு செல்ல வேண்டும். தன் உயரதிகாரியிடம் அதற்கு அனுமதி எடுக்க வேண்டும். இப்படி எண்ணங்களைச் சுமந்து இயங்கிக்கொண்டிருந்த அவரருகே அந்த உயரதிகாரி வந்தார். அவரிடம், "பிள்ளைகளைக் கண்காட்சிக்கு அழைத்துச் செல்லவேண்டியிருப்பதால், இன்று மாலை 5.30 மணிக்கு நான் வீட்டுக்குச் செல்ல வேண்டும். அனுமதி தருவீர்களா?' என்று அவர் கேட்டார். 'சரி' என்று கூறிவிட்டு உயரதிகாரி சென்றுவிட்டார்.

வீட்டு நினைவு வந்ததும் கைக்கடிகாரத்தை ஏறிட்ட அந்தப் பணியாள், நேரம் 8.30 மணியாகியிருந்தமையைக் கண்டு திகைத்தார். பிள்ளைகள் கண்காட்சிக்குச் செல்லாமையால் கவலையுடன் இருக்கப்போகின்றனர் என்ற வருத்தம் அவருக்கு. சோர்வுடன் வீட்டுக்குச் சென்றார். அங்கே மனைவி மட்டுமே இருந்தார். "பிள்ளைகள் எங்கே?' என்று மனைவியிடம் அவர் கேட்டார். "அவர்கள் கண்காட்சிக்குச் சென்றுவிட்டனர்' என்றார் மனைவி. "எப்போது, யாருடன் சென்றனர்?" என்று அவர் ஆச்சரியத்துடன் கேட்டதும், "5. 30 மணிக்கே அவர்கள் சென்றுவிட்டனர். உங்கள் உயரதிகாரிதான் வந்து அவர்களை அழைத்துச் சென்றார்" என்றார் மனைவி. அவர் வேறு எவருமல்ல, அப்துல்கலாம் தான் அவர்.



பணியாளருக்கு விடுப்புக் கொடுப்பதற்காக மாலை 5.30 மணி போல அவர் காரியாலயம் சென்று பார்த்தபோது, பணியாளர் வேலையில் மூழ்கிப்போயிருந்தார். அவரைக் குழப்ப விரும்பாத கலாம் அப்படியே சென்றுவிட்டார். பின்பு பிள்ளைகளின் மனம் நோகக்கூடாது என்ற காரணத்தால், நேரே பணியாளரின் வீட்டுக்குச் சென்று அவர்களைக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றார். இந்த உயர்ந்த உள்ளம் எவருக்கு வாய்க்கும்?






சோ.கரிகரன்,
தரம் – 3,
யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.



ப.ஜித்தேஸ்,
தரம் – 6A,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## வரலாற்றில் இன்றைய தினம்

1410 – பராகுவே வானியல் கடிகாரம் 1410 இல் பொருத்தப்பட்டும் இன்றும் இயங்கும் நிலையிலுள்ளதாகத் தெரிவிப்பு.
1594 – போர்த்துக்கேயப் பேரரசின் இராணுவம் கண்டி இராச்சியத்தால் தோற்கடிக்கப்பட்டது.
1595 – பிரான்சின் காம்ராய் ஸ்பானிஷ் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது.
1760 – ரஷ்யப் படைகள் பேர்லினில் நிலைகொண்டன.
1790 – அல்ஜீரியாவைக் குலுக்கிய நில நடுக்கத்தில் பெரியளவில் சேதம் ஏற்பட்டது. மெடிற்றேனியன் கடலில் ஏற்பட்ட சுனாமியால் 3ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.
1799 – HMS லுரைன் கப்பல் கடலில் மூழ்கியதில் 240 பேர் உயிரிழந்ததுடன் 1,200,000 பவுண் பெறுமதியான சரக்குகளும் இழக்கப்பட்டன.
1820 – ஸ்பெயினிடமிருந்து குயாகுயில் சுதந்திரமடைந்தாகப் பிரகடனப்படுத்தியது.
1824 – கொஸ்ராரிகாவில் அடிமைத்தனம் இல்லாமலாக்கப்பட்டது.
1831 – சுதந்திர கிரேக்கத்தின் முதற் தலைவர் இயானிஸ் கபோடிற்றியஸ் படுகொலை செய்யப்பட்டார்.
1847 – செயின் பாத்லெமியில் அடிமைத்தனம் இல்லாமல் செய்யப்பட்டதுடன் எஞ்சிய அடிமைகள் விடுவிக்கப் பட்டனர்.
1900 – குக் தீவுகள் ஐக்கிய ராச்சியத்தின் ஒரு பகுதியாகியது.
1981 – பிரான்சில் சாவுத் தண்டனை இல்லாமல் செய்யப்பட்டது.
1980 – வத்திக்கான் நகரில் பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல் தலாய்லாமாவுடன் கைகுலுக்கினார்.
1992 – ஆயுதங்களைக் கைவிட்டவர்களுடனேயே இனப்பிரச்சினை பற்றிய தீர்வு என பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.
2006 – வட கொரிய தனது முதலாவது அணு கருவியைப் பரிசோதித்துப் பார்த்தது.
2007 – லூயிஸ் ஆர்பரை சிறைக்கு வருகை தரக் கோரி வெலிக்கடை சிறைக் கைதிகள் உணவு தவிர்ப்பு.
– குடாநாட்டில் மனிதப் பேரவலத்தை தடுத்து நிறுத்த முன் வருமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை
– போர் நடைபெறும் எந்த நாட்டிலும் மனித உரிமை மீறல் தவிர்க்க முடியாதவையே என்கிறார் அமைச்சர் ராஜித.
2012 – பாகிஸ்தான் பாடசாலைச் சிறுமதி மலலா யூசப்சை கொல்லும் தலிபான்களின் முயற்சி தோல்வியடைந்தது.

# அழுக்கானவர்களுக்கு இயற்கை வரம்



சுர்ஜீவா

நீங்கள் நோயில்லாமல் வாழ்வதற்கு எது காரணம் என்று சொல்வீர்கள்? உண்ணும் உணவு? உடற்பயிற்சி? அல்லது வாழ்க்கை முறை? இவையெல்லாம் ஒருவகையான காரணங்கள்தான் என்றாலும், முழுமுதற் காரணம் எது தெரியுமா? உங்களுக்கு ஏற்படும் நோய்களை எதிர்க்கும் சக்தி உங்கள் உடலுக்கு இருப்பதே. நோய் எதிர்ப்பு சக்தி இருந்தால் மட்டுமே உங்களுக்கு ஏற்படும் நோய்களைத் தாங்கிக்கொள்ள முடியும்.

அத்தகைய நோய் எதிர்ப்பு சக்தி நமது உடலில் உருவாவதற்கான காரணங்களைக் கண்டறிய ஆராய்ச்சியாளர்கள் உணவு, உறக்க நேரம், வாழ்க்கை முறை, மனஅழுத்தம் ஆகியவற்றையொட்டி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், ஆச்சரியப்படும்விதமாக அவர்களுக்குத் தெரிய வந்தது என்னவென்றால், சுற்றுப்புறச் சூழ்நிலைதான் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிறது என்பதே. நமது உடலிலுள்ள மரபணுக்கள் சுற்றுப்புறச் சூழ்நிலை கொண்டே, தம்மை உருவாக்கிக் கொள்கின்றன. அதன் பின் அதற்கு தகுந்தால்போல் நோய் எதிர்ப்பு ஆற்றல் உருவாகி றது. கடும் வெயிலில் வசிப்பவர்களுக்கு அங்குள்ள தட்பவெப்பத்துக்கு தகுந்தாற்போல் அவர்கள் உடலிலுள்ள மரபணுக்கள் தங்கள் செயல்களைச் செய்கின்றன. அவர்கள் அங்கிருந்து குளிரான பகுதிகளுக்குச் சென்றால் நோய் எதிர்ப்பு ஆற்றல் செயற்பாடு குறைந்துவிடும். அதே போல் குளிர் பிரதேசங்களில் வசிப்பவர்கள் வெயில் பகுதிகளுக்குச் சென்றால் உடல் நிலைக்குக் கடும் பாதிப்பு ஏற்படும். இதற்குக் காரணம் அவரவர் நோய் எதிர்ப்பு ஆற்றல், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் உருவாகியிருப்பதே. ஒருவர் வழமையான தனது சூழலிலிருந்து வேறொரு சூழலுக்கு நகரும்போது அவரது மரபணுக்கள் தமது செயல்களை மாற்ற அவகாசம் எடுத்துக்கொள்ளும்.

ஏன் அழுக்கான பகுதிகளில் வசிப்பவர்கள் நோயினால் அவதிப்படுவதில்லை எனத் தெரியுமா? அழுக்கான பகுதிகளில் வசிப்பவர்கள் அதாவது வீதியோரங்களில் படுத்துறங்கி நகர மையங்களில் அலைந்து திரிவோரிலுள்ள நோய் எதிர்ப்பு ஆற்றலின் வலிமை குளிரூட்டப்பட்ட அறைகளில் வசிப்பவர்களுக்கும், நல்லவசதியுடன் வீடுகளுக்குள் வசிப்பவர்களுக்கும் இருப்பதில்லை. அழுக்கான பகுதியில் வசிப்பவர்களுக்கு நோய்கள் வராது என்பதில்லை. கடி, சொறி, சிரங்கு, வயிற்றோட்டம் வந்தாலும் பல தடவைகள் வந்து அவற்றுக்கு ஈடுகொடுக்க அவர்களின் எதிர்ப்பு ஆற்றல் கள் பழக்கப்பட்டுவிடும். ஏனென்றால் அந்த இடத்துக்கு தகுந்தால்போல் நோய் எதிர்ப்புச் செல்கள் பல மடங்கு பெருகி, அவர்கள் உடலைப் பாதுகாக்கும். எனவே அழுக்கான அவர்களுடன் ஒப்பிடுகையில் நோயாளிகள் ஏனைய சுத்தவாளிகளே!



# ஒழுக்குகள்



ஜெ.காயா

மழையை எதிர்கொள்ளும் வீடுகளும் மனிதக் குடியிருப்புக்களும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் ஆயத்தமாகவுள்ளனவா? கூரைகள் வேயப்பட்டுள்ளனவா? என்பவற்றைக் கவனித்துக்கொள்ளும் அதே வேளை மழைக்காலத்துக்கு முன்னர் உங்கள் வீடுகளிலுள்ள மின் இணைப்புக்கள், வயர்கள் என்பன நல்ல நிலையில் உள்ளனவா? என்பதை அவதானித்துக் கொள்வது கட்டாயமானது. ஏனெனில் மின் ஒழுக்குகள் சாதாரண மழை ஒழுக்குகளைப் போலன்றி உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியன. எவராலும் கவனிக்கப்படாதவாறுள்ள கூரை, வீட்டின் மேற்பகுதிகளில் மின்சாரத்தைக் காவிச்செல்லும் மின் வயர்களை எலிகள் கடிப்பதாலும், முகடுகளில் கூடுகட்டிக்கொள்ளும் அணில்கள் போன்ற உயிரினங்கள் சேதப்படுத்துவதாலும் சரியானமுறையில் மின் இணைப்புச் செய்திருக்காதமையாலும், மின்ஒழுக்குகள் ஏற்படுகின்றன. மழைகாலத்தில் சுவரோடு கசியும் மழைநீர் அங்கே இழையோடியுள்ள மின் வயர்களின் பாதுகாப்பற்று வெளித்தெரியும் கம்பிகளில் தொடுகையடைந்தவுடன் அதனுடன் மின்சாரமும் ஊடுகடத்தப்படுகின்றது. கண்ணுக்குத் தெரியாமல் நீர் நிலையோடு பரவியிருக்கும் அந்த மின்சாரம் மனிதர்களைக் காவுகொள்ளக்கூடியது. அத்துடன் கூரைகளில் உள்ள நீக்கல்களிடையே விழும் மழைநீர் நேராக மின்இணைப்புகளில் தொடுகையடையுமாயின் மின்னை இடைநிறுத்தும். ஆளி மின்னிணைப்பைத் துண்டித்துவிடும். இது சரியான முறையில் மின் இணைப்புச் செய்யப்பட்டால் மாத்திரமே சாத்தியம்.

அத்துடன் அந்த ஆளி இப்போதும் செயற்றிறனுடன் உள்ளதா? என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இன்று கல்வீடுகளில் மாத்திரமன்றி குடிசைகளிலும் மின்னிணைப்புக் காணப்படுகின்றது. நெடுங்காலமாக இருந்துவரும் கல்வீடுகளிலுள்ள மின்னிணைப்புக்களில் மின்னை இடைநிறுத்தும் ஆளி செயற்றிறனுடன் உள்ளதா? என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்துடன் ஏனைய மின் ஆளிகளை இயக்க முற்படும்போது, அதில் நீர்க்கசிவு உள்ளதா? என்பதையும் கவனித்துக் கொள்ளவேண்டும். அவற்றைக் கையாள்வதில் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

மழைக்காலத்தில் மின்சாதனங்களின் பாவனையில்கூட அவதானமாகயிருக்க வேண்டும். ஏனெனில் அவ்வேளை மின்சாரம் அளவுகளில் கூடிக் குறைந்து வரும் தன்மை காணப்படும். அதனால் மின்சாதனங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், அவற்றைக் கையாள்வதில் கவனமாயிருத்தல் வேண்டும். அவற்றுக்கு ஏற்ற அளவிலும், சீரான தன்மையிலும் மின்சாரம் வழங்கும் மின்இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனாலும், பயங்கரக் காற்று, இடி, மின்னல் வேளைகளில் மின்சாதனங்கள் செயற்பாட்டில் உள்ளதைத் தவிர்க்க வேண்டும். கூடுதலாகத் தொலைக்காட்சி, வானொலி, இணையத் தொடர்பு சாதனங்கள் (கணினி, கைபேசி) போன்றவற்றைப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்ப்பதுவும் பாதுகாப்பானது. அத்துடன் அவ்வேளைகளில் பயன்படுத்தும் ஏனைய மின்சாதனங்களிலும் அவதானமாயிருக்க வேண்டும். அதிகூடிய இடி, மின்னல் வேளைகளில் தன்னிச்சையாக மின்னை இடைநிறுத்தும் ஆளிமூலம் பிரதான மின்னிணைப்புத் துண்டிக்கப்படுவதும் உண்டு. அவ்வாறு தன்னிச்சையாக நிகழாத சந்தர்ப்பங்களில் வீட்டின் பிரதான மின் ஆளிமூலம் மின்இணைப்பைத் துண்டித்துக் கொள்வதும் சிறந்ததே.

# என்ன அழகு! எத்தனை அழகு!

> “எனது சீற்றுக்கு எதிர் வரிசையில் சற்றுப் பின்புறம் ‘அட என்ன அழகு எத்தனை அழகு! கோடி மலரைக் கொட்டிய அழகு’ என்று பாடவேண்டும் போன்றதொரு ஆசை என்னை அலைக் கழித்தது. அப்படியொரு அழகு! அவளின் இலட்சணங்களை என்னைப் போன்றவர்களால் வர்ணிக்க முடியாது. கம்பனோ, காளமேகமோ யாராவது மறு பிறப்பெடுத்து வந்தால் தான் அவளுடைய அழகைப் பாட முடியும்.

சீரான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது அந்தப் பஸ் வண்டி. ஞாயிற்றுக் கிழமையென்றதாலோ என் னவோ பயணிகளின் எண்ணிக் கையும் வெகுவாகக் குறைந் தேயிருந்தது. அதுவும் ஒருவகையில் எனக்கு சௌக ரியமாகப்பட்டது. “கோணர்சீற்” என்னும் கரை சீற்றிலே யன் னலைத் திறந்து விட்டுக் காற்று வாங்கியபடி உல்லாசப்பயணம் செய்து கொண்டிருந்தேன்.

நேரம் நண்பகல் ஒரு மணியாகியிருந்தது. அவசர அவசர மாக மனைவி சமைத்த சோற்றையும் அடுப்பும் நெருப்புமாக இருந்த கறிவகைகளையும் சுடச்சுட அள்ளி வாயில் போட்ட எனக்கு ஒரு மெல்லிய தூக்கம்வருவது போன்றி ருந்தது. உண்டகளை தொண்டர்க்குமுண்டு. அதுவும் பஸ்சில் ஏறி விட்டால் எங்கிருந்து தான் அந்தத் தூக்கம் வருகின்றதோ..! ஞாயிற்றுக்கிழமை விடுமுறைநாள். இன்றைக்காவது மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்து சாப்பிட்டுச் சற்று மகிழ்ச்சியாயிருக் கலாமென்றால்...! எல்லாம் எனது அலுவலக மனேஜர் சிவநாதனால் வந்தவினை. மீற்றிங், கலந்து ரையாடல், செமினார் என்று ஏதேதோ சொல்லி ஞாயிற்றுக் கிழமைகளி லேயே எங்கள் உயிரை வாங்கும் அந்தப்பழசின் உயிரை எடுக்க வேண்டும் போன்றதொரு கோபம் அவ்வப் போது உண்டாவதுண்டு. இருந்தும் என்ன செய்ய! அவரோ புத்திர பாக்கியமில்லாதவர். ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டிலி ருந்து எத்தனை மணிநேரம் தான் தன்னுடைய மனைவியின் வாயைப் பார்த்துக் கொண்டிருப்பது. ஞாயிற்றுக்கிழமைகளில் அவருக்கொரு பொழுது போக்கு வேண்டும். அதற்குத் தான் நாங்கள் பகடைக்காய்களாக்கப்பட்டிருக்கின்றோம். கூட்டம் கொமிற்றிகளை ஒரு வேலை நாளில் நடத்தினால் எங்களுக் கும் பொழுது போகும். மீற்றிங்கும் நடத்தின மாதிரியிருக்கும் இதுவெல்லாம் அந்த மரமண்டைக்குப் புரிந்தால்தானே!

பஸ்சின் யன்னல் கண்ணாடி ஊடாக வீசிய காற்று இதமாகத் தடவிச்சென்று கொண்டிருந்து. என்னையுமறியாமல் கண்கள் சொருகிக் கொண்டுவந்தன. கொஞ்சம் அசந்தால் பஸ்சிற்குள் தூங்கிவிடுவேனோ என்ற பயமும் எனக்கில்லாமலில்லை. முன் பொருதடவை பஸ் பிரயாணத்தில் கண்ணுறங்கி இறங்க வேண்டிய இடத்தைத் தவறவிட்டு அவமா னப்பட்டதை நான் மறக்கவில்லை. அப்படியொரு நிலமை வந்து விடக்கூடாதென்பதில் மிகவும் எச்சரிக்கையாகவிருந்தேன். யாராவது பேச்சுத் துணைக்கி ருந்தாலும் எதையாவது பேசிப் பொழுதைக் கழிக்கலாம். அதற் கும் வழியில்லை. பஸ்சிற்குள்ளி ருந்த பிரயாணிகளைச் சற்று நோட்டம் விட்டுப் பார்க்கலாமென்று ஒரு ஆசையும் வந்து விட்டது.

எனது சீற்றுக்கு எதிர்வரிசையில் சற்றுப் பின்புறம் ‘அட என்ன அழகு எத்தனை அழகு! கோடி மலரைக் கொட்டிய அழகு’ என்று பாட வேண்டும் போன்றதொரு ஆசை என்னை அலைக் கழித்தது. அப்படியொரு அழகு! அவளின் இலட்சணங்களை என்னைப் போன்றவர்களால் வர்ணிக்க முடியாது. கம்பனோ, காளமேகமோ யாராவது மறு பிறப்பெடுத்து வந்தால் தான் அவளுடைய அழகைப் பாட முடியும். செக்கச் செவேலென்று பள பளக்கும் தக்காளிப்பழ மேனி. அவளைக் கருப்பையில் வைத்திருந்த காலத்தில் அவ ளின் தாயானவள் ஏராள மாகக் குங்குமப் பூவை அள்ளித் தின்றி ருப்பாளோ! அப்படியொரு வசீகரமான நிறம். சுருள் சுருளாக கரிய கேசம்! அளந்து கத்தரித்து விட்டது போல அழகாக விருந்தது. மருண்ட விழிகள், சிரித்தால் குழிவிழும் கன் னங்கள் அவளினழகை எப்படித் தான் எடுத்துரைப்பது. அவளுடைய பூர்வீக மென்ன! இந்திர லோகமாக இருக் குமா! அல்லது ஏதாவது வேற்றுக்கிரக வாசியாயிருப் பாளோ! ஒன்றுமே புரியவில்லை இவளைப் போன்ற ஒரு அழகுச் சிலையை சத்தியமாக என்னுடைய வாழ் நாளில் பார்த்தது கிடையாது.

எனக்கு இன்னும் அரைமணி நேரப் பயணம் இருக் கின்றது. இரண்டு மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் கூட் டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அதுவரைக்கும் அவளினழகையே பார்த்து ரசித்துக் கொண்டிருக்கலாம். இமை வெட்டாது நான் தான் அவளைப் பார்த்தபடியி ருக்கின்றேன். அவள் என்னை மறந்து கூடப்பார்க்க வில்லை. இது எனக்கு மிகவு ஏம்பலிப்பாகத் தானி ருந்தது. எதற்கும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்.

இதுவரைக்கும் அவளும் என்னைப் போலவே கோணர் சீற்றிலமர்ந்தபடி வீதியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். அவளு டைய அம்மாக்காரி தன்னை மறந்து ஆனந்த சயனம் செய்து கொண்டி ருந்தாள். நேற்றிரவு தூங்காது கண்விழித்திருப்பாளோ என்னவோ!

ஒவ்வொரு தரிப்பிடங்களிலும் தவறாது தரித்துப் பயணி களை ஏற்றி இறக்கியபடி ஓடிக் கொண்டிருந்தது பஸ் வண்டி. இத்தனை நேரமும் நெரிசல் இல்லாதிருந்த பஸ் சிற்குள் திடீரென்று ஒரு பெருங்கூட்டம் தட தடவென ஏறியது. பெண்களே அதிகமாகக் காணப்பட்டார்கள். அவர்களின் கண்கள் சிவந்திருந்தன. எங்கேயோ மரணச் சடங்குக்குப் போய் வருபவர்கள் போலவே காணப் பட்டார்கிள். எல்லோ ரும் பஸ்சின் முகட் டுக் கம்பியில் பிடித் தபடி வௌவால் பிர யாணம் செய்து கொண்டிருந்தனர்.

“எல்லோரும் முன் னுக்குப் போங்கோ! இஞ்சாருங்கோ! நீலச் சேட்டுப் போட்ட அண்ணை! இஞ் சாலை பெம்பிளை கள் நிக்க இடமில்லா மல் கஸ்டப்படு கிது கள். பஸ் ஓடுற பக்கம் பார்த்துக் கொண்டு நில்லுங்கோ!”

கொண்டக்டர் பெடி யன் தனக்கேயுரிய பாணியில் கர்ச்சித் துக் கொண்டிருந் தான்.


“எங்கையடாப்பா! இதுக்கை கிழங் கடிக் கினது மாதிரி ஆக் களை ஏத்திப் போட்டு பஸ் ஓடுற பக்கம் பார் எண்டால்.. பஸ் எந்தப் பக்கம்போகுதெண்டே தெரியயில்லை. இதுக்கை பஸ் ஓடுற பக்கம் போ எண் டால்... எங்கை போறது!”

வயோதிபர் ஒருவர் இப்படிக் கூறியதும் பஸ்சிற்குள்ளிருந் தவர் களனைவரும் கொல்லென்று சிரித்த னர். அவர்கள் என்ன வும் சொல்லட்டும். எதை யும் செய்யட்டும் எனக்கு இப்போதுள்ள கவலை என்னவென் றால்நின்றுபிரயாணம் செய்து கொண்டிருக் கும் இந்தக் கூட் டத்தி னரால் எதிர்ப்புறத்து சீற்றை என்னால் பார்க்கமுடியவில்லை.



மிருசுவில் தமிழ்தாசன்

பக்.43



# பயங்கரவாதத் தடையும் பயங்கரவாத எதிர்ப்பும்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் நியூசிலாந்துக்குப் பயணம் செய்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நாட்டின் பிரதமருடன் மேற்கொண்ட பேச்சுக்களின்போது எதிர்வரும் மார்ச் மாதத்தின் முன்பாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமெனவும் அதற்குப் பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்பட்ட இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானத்துக்கு இலங்கையும் தனது அனுசரணையை வழங்கியிருந்தது. அந்தத் தீர்மானத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது ஒரு முக்கிய அம்சமாகும். அது மட்டுமன்றி நீண்ட காலமாகவே பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள் மேற்படி சட்டம் விலக்கிக் கொள்ளப்படவேண்டுமென அழுத்தம் கொடுத்து வந்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற உலக நாடுகளும் காலத்துக்குக் காலம் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாகத் தமது கண்டனங்களை வெளியிட்டுவந்தன. இப்படியான ஒரு நிலையில் பிரதமர் நியூசிலாந்தில் தெரிவித்த கருத்துப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி விடப்போவதில்லை. எனினும் அவர் அங்கு வெளியிட்ட கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் சில கேள்விகளை எழுப்பியுள்ளதுடன், சில சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

## தமிழ் மக்கள் மீதான சட்டமா?

கடந்த காலத்தில் ஆட்சி செய்த அரசுகள் நீண்ட காலமாகவே நாட்டை அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சிசெய்து வந்தன. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் சிவில் நிர்வாகம், நீதித்துறை என்பனகூடக் கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன் மனித உரிமை மீறல்கள் வரையறையின்றிக் கட்டவிழ்த்து விடப்பட்டன. போர் நிறைவுக்கு வந்த பின்பும், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளைத் தொடர இந்தச் சட்டம் வாய்ப்புக்களை வழங்கியது.

சர்வதேச நாடுகளும் மனித உரிமை நிறுவனங்களும் தொடர்ந்து தெரிவித்து வந்த எதிர்ப்புகள் காரணமாக கடந்த அரசால் மீளப்பெறப்பட்டது. ஆனால் அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சேர்க்கப்பட்டன. அந்தச் சட்டம் சட்டப்படி மீளப் பெறப்பட்டுவிட்ட போதிலும், தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளும் அநீதிகளும் எந்தவித மாற்றமுமின்றித் தொடர்ந்து வருகின்றன.

எனவே அவசரகாலச் சட்டம் மீளப்பெறப்பட்டமை என்பது அரசு பன்னாட்டு அழுத்தங்களைப் குறைப்பதற்கு மேற்கொண்ட ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகச் சுருங்கிக் கொண்டது.

இந்த அனுபவத்தின் அடிப்படையில் பிரதமர் தெரிவித்த கருத்து பயங்கரவாதத் தடைச் சட்டம் தன் வடிவத்தை மாற்றி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையைத் தொடரப் போகிறதா? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

## மாறுபட்ட கருத்துக்கள்

அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதிகள் தொடர்பாகவும் அவற்றின் உண்மைத் தன்மை தொடர்பாகவும் மேலும் கேள்விகளை எழுப்பியுள்ளது. யாழ்ப்பாணம் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், மாகாணசபைகளுக்கு மட்டுமன்றி உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரங்கள் பகிரப்படுமெனத் தெரிவித்திருந்தார். அந்த நிகழ்வில் வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார். ஆனால், சில நாள்களில் கொழும்பில் கருத்து வெளியிட்ட மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபா உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலான சட்டம் வெகு விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எனத் தெரிவித்தார்.

பிரதமர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங் களைப் பரவலாக்கப்போவதாக வடக்கில் கூறத் தெற்கில் சம்பந்தப்பட்ட அமைச்சர் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் அதிகாரங்களைப் பறித்துச் சட்டம் கொண்டு வரப்போவதாகக் கூறுகிறார். அப்படியா னால் நாம் எதை நம்புவது? இப்படியான நிலையில், நாம் ஒரு நியாய பூர்வமான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்க முடியுமா? அதுவும்கூட கொடுப்பது போல் பாவனை செய்து கொண்டு இருப்பதையும் பறிக்கும் ஒரு தந்திர நடவடிக்கையாக மாறுமா?

வடக்கிலுள்ள இராணுவமுகாம்க்ள் அகற்றப்படவேண்டும் என்பதும் இராணுவத் தலையீடற்ற இயல்பு வாழ்வு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கைக்கு இங்கு பயணம் செய்யும் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் மனித உரிமை நிறுவனங்களும் ஆதரவு வழங்கி வருகின்றன. அரச தரப்பும் படை முகாம்கள் பாதுகாப்புத் தேவைகளின் அடிப்படையில் படிப்படியாக அகற்றப்படுமெனத் தெரிவித்து வருகிறது. அந்த நிலையில் அண்மையில் எந்த ஒரு முகாமும் அகற்றப்படமாட்டாதென இராணுவத்தளபதி கிரிஷாந்த டி சில்வா கூறியதைக் கவனத்தில் எடுக்காமல்விடமுடியாது.

அதே வேளையில், முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமாகிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுக தமிழ் ஊர்வலத்தில் வட மாகாண முதலமைச்சர் உரையாற்றியதை அடுத்து, முதலமைச்சருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு ஏற்பட்ட கதியே நேரும் என மிரட்டியிருந்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து முதலமைச்சர் தனக்கு உயிராபத்து உள்ளதெனவும் அந்தப் பழியை விடுதலைப் புலிகள் செய்ததாகக் கதை கட்டி விடப்படக் கூடுமெனவும் தெரிவித்து, ஒரு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதைத் தவிர்த்திருந்தார்.

அதையடுத்து முதமைச்சருக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கத் தயார் என இராணுவப் பேச்சாளர் கூறினார் எனும் செய்திகள் வெளியாகியிருந்தபோதும் அவற்றை அவர் மறுத்திருந்தார். ஒரு வேளை முதலமைச்சருக்கு இராணுவம் பாதுகாப்பை வழங்க முன்வந்திருக்குமாக இருந்தால் அதன் பின்னணி குறித்து கடுமையாக சந்தேகிக்க வேண்டியே இருக்கும்.

சில மாதங்களுக்கு முன்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டபோது, பலத்த சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. அப்போது அரசியல் பிரமுகர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுவது வழமையல்லவெனவும் பாதுகாப்பு விடயங்களில் பயிற்சி பெற்ற சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பே வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதிக்கே பாதுகாப்பு வழங்குவதை நிறுத்திய இராணுவத்தினர் ஒரு மாகாண முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கத்தா மாகவே முன்வருவது பெரும் வியப்புக்குரிய சங்கதி என்பதில் மறுப்புக்கு இடமில்லை.

## அரச பாதுகாப்பு ஒரு கண்துடைப்பு வித்தை

தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும் தமிழ் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையிலும் இராணுவப் பாதுகாப்பு எப்படிப்பட்டது என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவர். இறுக்கமான இராணுவப்பிரசன்னம் உள்ள நிலையிலும் மக்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டதும் வீதி வீதியாகச் சுட்டு வீசப்பட்டதும் மறந்து விடக்கூடிய விடயங்களல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், யோசெப் பரராஜசிங்கம், திருமலை பாடசாலை மாணவர்கள் கொலை போன்ற விடயங்களில் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டவர்கள் யார் என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவர். தமிழர்களுக்கான இராணுவப் பாதுகாப்பு என்பது நம்பிக்கைக்குரியதல்லஎன்பதைச்சகலரும் அறிவார்கள். ஆனால் இராணுவத்தினர், வடக்கை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரிக்கைகள் வலுத்து வரும் நிலையில் முதலமைச்சரின் பாதுகாப்பு என்ற பேரில் இராணுவப் பிரசன்னத்தை மேலும் அதிகரிக்கும் தந்திரம் மேற்கொள்ளப்படுகிறது. என்பதுபுரிந்துகொள்ளப்பட முடியாத விடயமல்ல. அடிப்படையில் இலங்கை இராணுவம் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர்கள் என இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் ஒரு தேசிய இராணுவமாக இல்லாமல் இது ஒரு பௌத்த சிங்கள இராணு வமாக இருப்பதே கவலையளிக்கும் விடயமாகும். இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பது பாதுகாப்புக் காரணங்களுக்காக என்று கூறப்பட்டாலும்கூட. அதைவிட ஆக்கிரமிப்புத் தொடர்பான காரணங்கள் உண்டு. வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டுமெனக் கோரிக்கைகள் எழுந்தபோது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சொன்ன ஒரு கருத்து முக்கியமானதாகும். அதாவது த்ற்சமயம் இராணுவ முகாம்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவம் வெளியேறினால் அவை பராமரிக்காமல் விடப்பட்டு மெனக் கவலை தெரிவித்துள்ளார். இந்த வார்த்தைகளின் பின்னால், இந்த நிலங்களை நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் உள்நோக்கம் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அத்துமீறல்

அண்மையில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட இராணுவக் குடியிருப்புக்கு எதிர்ப்பு வெளியிட்ட முன்னாள் போராளி ஒருவர், கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார். சிலாவத்துறை, மறிச்சுக் கட்டி ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களது காணிகள் அபகரிக்கப்பட்டு அவர்களால் கைவிடப்பட்ட காணிகளில் கடற்படையினரின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. வட்டு வாகல், கேப்பாப் பிலவு உட்படப் பல பகுதிகளில் புதிதாகப் படையினர் பொதுமக்க ளின் காணிகளை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொக்கிளாயில் ஒரு தனிநபரின் காணி அபகரிக்கப்பட்டு, ஒரு பெரும் விகாரை அமைக்கப்பட்டு வருகிறது.

அதாவது தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாப்பு என்ற போர்வையில் அவற்றைப் பிடித்து வைத்துக்கொண்டு புத்த விகாரைகளையும் குடியிருப்புக்களையும் அமைத்து நிரந்தரப்படுத்தி வருகின்றனர் ஆயுதப்படையினர். அவர்களின் எந்த ஓர் அநீதிகளையும் தட்டிக்கேட்க முடியாமல் அவர்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் வலிமை கொடுக்கிறது.

எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும்கூட, அது அல்லது அதை விட மோசமான சட்டம் வேறு வடிவங்களில் நடமுறைப்படுத்தப்படும் என்பது நிச்சயம். நியூசிலாந்தில் பிரதமரால் தெரிவிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது அதற்கான ஒரு முன்னறிவித்தலாகும். இப்படியான ஒரு சூழலில் நியாயமான அதிகாரப் பகிர்வை இந்த ஆட்சியாளர்கள் வழங்குவார்கள் என இலவு காத்த கிளியாக ஏமாந்து போகாமல் எல்லா முனைகளிலும் விட்டுக் கொடுக்காத உறுதியுடன் அழுத்தங்களைக் கொடுத்து முன் செல்வதே ஒரே வழியாகும்.



# சீரழிவுக்கு புதிய அடிக்கல்

ஜெயா

இலங்கையில் சினிமாத்துறை இருந்துவரினும், தமிழர்களை மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் உட்பட்ட அனைத்து இன மக்களையும் ஆரம்பகாலங்களிலிருந்தே தன் வசப்படுத்தியிருந்தவை தென்னிந்திய சினிமாக்களே. இன்றைய தென்னிந்திய சினிமாச் சித்திரிப்புக்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டு நல்ல சமூகக் கருத்துக்களைப் போதிப்பவையாகவே ஆரம்ப காலத் தென்னிந்திய சினிமாக்கள் அமைந்திருந்தன. அவை எடுத்துக்கொண்ட திரைக்கதை மட்டுமன்றிப் பாடல்கள், கதாபாத்திரச் சித்திரிப்புக்கள், காட்சிப்படுத்தல்கள் அனைத்திலுமே சமூகத்தை நன்னிலைப்படுத்துவதையே முக்கிய நோக்காகக் கொண்டிருந்தன. அவற்றை இலங்கை வாழ் மக்கள் அனை வரும் தத்தமது மொழிபெயர்ப்புக்களுடன் பார்வையிட்டு அவற்றிலுள்ள சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பின்பற்றியும் வந்தனர். ஆனால் இன்றைய தென்னிந்திய சினிமாக்கள் அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

## தவறான வழிநடத்தல்

இளைஞர்கள், பெண்களையும் தமிழ்மொழியையும் சீரழிக்கும் சமூகத்துக்கு உதவாத பேச்சுத் தமிழ், நாகரிகம் என்ற போர்வையில் அரைகுறை ஆடை, சண்டைக் காட்சிகள், போதைப் பாவனை, இளவயதினரிடையே பால் உணர்ச்சியைத் தூண்டும் காட்சிகள் என நிரம்பி வழியும் இன்றைய திரைப்படங்கள் சமூகத்துக்கு எவ்வகையிலும் உதவாதவற்றைப் போதித்துச் செல்கின்றன. கூடுதலான திரைப்படங்கள் கலைப்படைப்பு, யதார்த்த சித்திரிப்பே எனத் தம் பக்கமுள்ள பல நியாயப்படுத்தல்களை அடுக்கிக் கொண்டுபோகின்றன. ஆனாலும் இவ்வாறானவற்றைப் பார்வையிடும் இளைய சமூகத்தினர் அதிலுள்ள நல்ல கருத்துக்களைப் புறமொதுக்கி, தகாதது என உரைக்கப்படும் வழியையே பின்பற்றுகின்றனர். அத்துடன் இணையவழி ஊடுருவியுள்ள ஆபாசக் காட்சிகளையும் இலகுவாகக் கண்டறிந்து தவறான பாதைக்குள் செல்கின்றது இளைய சமூகம். இவ்வாறான நிலையில் தான் தற்போது இலங்கையில் உருவெடுக்கின்றது ஆபாசப்படத் தயாரிப்புக்களின் அதிகரிப்பு.

## இலங்கையில் ஆபாசம்

இணைய யுகம் கண்ட உலகம் எல்லாவற்றிலும் விருத்திகண்டுவிட்டது என்பதற்கமைய சமூகச் சீரழிவுகளிலும் உச்சம் கண்டுள்ளது. ஏலவே இணையம் மூலம் விரிவாக்கம் பெற்றுவிட்ட ஆபாசக் காட்சிகள் இளவயதினரிடம் பரவி ஏற்படுத்திவிட்டிருக்கின்ற சீர்கேடுகளின் மத்தியில் தற்போது இலங்கையிலேயே ஆபாசப் படத்தயாரிப்புகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. அண்மையில் வெயாங்கொடப் பிரதேசத்தில் ஆபாசப்படத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தனர் என இயக்குநர், நடிகர், நடிகை, உதவியாளர் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அத்துடன் அங்கு ஏலவே தயாரிக்கப்பட்டிருந்த 6ஆயிரம் ஆபாசப்பட இறுவட்டுக்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. இவை சந்தைக்கு விடப்பட்டும் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுமிருந்தன. தற்போது கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்ட இவர்கள் மட்டும் இலங்கையில் ஆபாசப் படத் தயாரிப்பில் ஈடுபடுகின்றனர் என்பதையும் தாண்டி கண்டுகொள்ளப்படாமல் இன்னும்ஏராளமானவர்கள் இருக்கக்கூடும்.

## கவனம் தேவை

ஏற்கனவே இளைஞர் சமூகத்தை ஆட்கொண்டுள்ள கட்டுக்கடங்காத குற்றங்களும் சீர்கேடுகளும் இலகுவாகக் கிடைத்து விடக்கூடிய இத்தகைய ஆபாசப் படங்களால் இன்னும் அதிகரிக்கப்போகின்றன. இளவயதினரை இது பாதிக்காத வண்ணம் நாம்தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் வேகமாக வளரக்கூடிய ஆபாச சினிமாத் துறையினரைக் கட்டுப்படுத்தக்கூடிய கடுமையான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நமது வீட்டில் நமது பிள்ளைகளுக்குச் சரியான வழிநடத்தல்களைப் போதித்தால் மட்டுமே தற்போது உருவேடுத்துள்ள இத்தகைய ஆபாசக் காட்சிகளின் மூலம் ஏற்படுகின்ற சீரழிவுகளைக் குறைத்துக்கொள்ளமுடியும்.



# நானும் அவளும்

அம்மா தோய்ச்சு வைச்ச
காச்சட்டையைப் போட்டாயிற்று.
பொக்கற்றில் சொப்பின் பையுடன்
பழுப்பு நிற வெள்ளைச் சேட்டுமாய்
வீறு நடை கொண்டாயிற்று.
பக்கத்து வீட்டு வகுப்பாளியும்
கூடப்படிக்கும் கூட்டாளியும்
இணைந்தாயிற்று.
இனிதாய்ப் பயணம் ஒன்று தொடர்ந்தாயிற்று.

இனிமை என்ன...?
புத்தகங் கொப்பி காவும் வழமையில்லை
மணியடிக்க முன்னர் செல்லத் தேவையில்லை
போனவுடன் உடற்பயிற்சி தானும் இல்லை
வீட்டுவேலை காட்டு எனக் கேட்பாரில்லை
ஆகமொத்தம்...
இளங்கீரன் சேரின் கம்புக்கு வேலையில்லை.
கா்ரணம்...
ஆடிப் பாடி வழமை மீறி வந்து சேர்ந்து
சகலகலா வல்லி சொல்லக் கூடியாச்சு.



அடுத்ததென்ன...?
அதுக்குத் தானே வந்தனாங்கள்.
சொல்லி ஓய்ந்த வல்லியோடு அவல்,கடலை
புசித்தாயிற்று. அப்புறமும் நேரந்தாழ்த்தி
வந்த புக்கை உண்டாயிற்று.
இன்னுமுண்டு எண்டு சொல்லி
மேடைதனில் பாட்டுங் கூத்தும் கும்மாளமும்
அவை நமக்குத் தேவையில்லை.
அப்புறம் ஒன்றும் கிடைக்கவில்லை.
லைன் ஆக எழும்பச் சொல்லி ஆளுக்கொரு
புக்கைப் பை...!

இதுக்குத் தானே வந்தனாங்கள்.
வெறும் பையை வீசி விட
புக்கைப் பை பொக்கற்றுக்குள்.
கையவிட்டு எடுத்து உண்டு.
மெல்ல மெல்ல வீடு வந்து சேர்ந்தாயிற்று.
உண்ட களை உறக்கந் தரப்
பகல் கனவும் வந்தாயிற்று.
அறம்புறமாய் ஏதோ கடிக்க அலறியடித்து
எழுந்தாயிற்று...!
அவசரமாய்க் காச்சட்டையைக்
கழட்டி எறிந்து விடப் பொக்கற்றுக்குள்
எறும்புகள் நிறைந்தாயிற்று...!
எஞ்சிய அவலைத் தின்ற எறும்புகள்
எனக்கும் நல்லாய்க் கடித்தாயிற்று...!

- ந.தாஸ்

# சதி செய்கிறது அமெரிக்கா!

## வடக்கு-கிழக்கை இணைப்பதற்கும் திருகோணமலையைக் கைப்பற்றுவதற்கும் முயற்சி



தமிழில் : எம்.ஐ.முபாறக்

"ஆசியாவின் முக்கிய கேந்திர நிலையமாகத் திகழும் திருகோணமலை மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி செய்கிறது. அதற்கு வசதியாக வடக்கு -கிழக்கை இணைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு அந்த நாடு துணை போகின்றது."

இவ்வாறு மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார அண்மையில் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின்போது கூறினார். அதன் முழு விவரம் வருமாறு:

*கேள்வி: வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடத்திய எழுக தமிழ் நிகழ்வு தொடர்பில் உங்கள் கருத்து என்ன?*

பதில்: இது உண்மையில் பாரதூரமான ஒன்று. போர் முடிந்த கையோடு இவ்வாறான கருத்தியலுக்கு இடமிருக்கவில்லை. ஆனால், இப்போது நிலமை மாறிவிட்டது. நாட்டுக்கு விரோதமாகத் தாராளமாகப் பேசும் நிலமை தோன்றியுள்ளது.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காகப் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், நாட்டைப் பிரிக்காமல் ஒற்றை ஆட்சிக்குள்தான் அது வழங்கப்படவேண்டும்.

அந்த ஒற்றை ஆட்சியைச் சிதைக்கும் வகையில், இப்போதைய ஆட்சி காய் நகர்த்துகின்றது. பிரதமர் ரணிலுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒற்றையாட்சியைச் சிதைக்கும் வகையில் அமைந்துள்ளது.

புதிய ஆட்சியை உருவாக்குவதற்கு சம்பந்தன் உதவ வந்தமை இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான். இந்த ஒப்பந்தம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. இது உடன் வெளியிடப்படவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு உடன்பட மறுக்கும் எவருக்கும் கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்காது என்பதை நாம் அறிவோம். கூட்டமைப்பு ஆதரவு வழங்குகிறது என்றால் ஒற்றையாட்சிக்கு எதிரான அவர்களின் நிலைப்பாட்டுக்கு அரசு உடன்பட்டுவிட்டது என்றே அர்த்தம்.

*கேள்வி : இந்த விடயத்தில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் ஏதும் உண்டா?*

பதில்: நிச்சயமாக. புலம்பெயர் தமிழர்கள்தான் இதை நெறிப்படுத்துகின்றனர். இதற்கு அப்பால் அமெரிக்காவின் நேரடித் தலையீடு உண்டு.

உலக வல்லரசு என்ற அந்த மதிப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கு அமெரிக்காவுக்கு ஆசியாக் கண்டம் முக்கியமாகத் தேவைப்படுகின்றது. ஆசியாவின் மிக முக்கிய நாடாக இலங்கை அமைந்துள்ளது. இலங்கையின் திருகோணமலை மாவட்டம் இதற்கெல்லாம் மிக முக்கியமான கேந்திர நிலையமாகத் திகழ்கின்றது.

இந்தக் கேந்திர நிலையத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி செய்கிறது. வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் அமெரிக்கா மிக இலகுவாக திருகோணமலைக்குள் நுழையும்.

இதற்காக அமெரிக்கா வடக்கு-கிழக்கை இணைப்பதற்கும் கூட்டமைப்பின் ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் முயற்சி செய்கிறது. இதற்கு ஏற்பவே ஒற்றை ஆட்சியைச் சிதைக்கும் ஒப்பந்தம் ரணிலுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைப்பு, அந்த மாகாணங்களுக்கு அதிகாரத்தை அதிகரித்தல், மத்திய அரசின் அதிகாரத்தைக் குறைத்தல் மற்றும் ஒற்றையாட்சியை சிதைத்தல் போன்றவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளாகும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி செய்து வருகின்றது.

*கேள்வி: உங்களின் ஆட்சியில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தாரே?*

பதில்: ஆம். நான் அதைக் கடுமையாக எதிர்த்தேன். அதை நீக்குமாறு மகிந்தவிடம் கூறினேன். அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவேண்டும் என்றால் நாடாளுமன்ற அங்கீகாரம் தேவை. நாடாளுமன்றம் அதற்கு அனுமதி வழங்காது. ஆகவே அதை பெரிதுபடுத்தத் தேவை இல்லை என்று மகிந்த கூறினார். அவ்வாறே அது நடைமுறைக்கு வரவுமில்லை.

*கேள்வி: தமிழருக்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?*

பதில்: 13ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வு. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்குள் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் அது முழுமையான 13ஆக அமை யும். 13+ என்று கூறப்படுவதும் இந்தக் காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய தீர்வுப் பொதியைத்தான்.

13+என்பது 13 க்கு வெளியே உள்ள அதிகாரங்களை 13 க்குள் புகுத்துவது என்று அர்த்தமில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் அடங்கலாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதைத்தான் 13+ என்கிறோம்.

பொலிஸ் அதிகாரம் என்பது மத்திய அரசின் கீழான பொலிஸ் அதிகாரம்போல் அல்ல. ஆகவே, பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவை இல்லை.

13 என்பது ஒற்றையாட்சிக்குள்தான் உள்ளது. ஒற்றையாட்சியைப் பாதுகாத்துக் கொண்டுதான் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும். ஏனைய மாகாணங்களைப்போல் வடக்கு கிழக்குக்கும் அதிகாரங்கள் சமமாகப் பகிரப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

ஆனால், வடக்கு முதலமைச்சர் கோருவது இதைவிட விரிவானது. அந்த அதிகாரத்தை வழங்கமுடியாது. அது நாட்டுக்கு ஆபத்தானது.

சிங்களவர்களின் இணக்கம் இல்லாமல் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையும் தமிழர்களின் இணக்கம் இல்லாமல் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியாது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அத்தோடு, இந்த அரசு தமிழருக்காக இதுவரை செய்துள்ள சில சேவைகளையும் நான் வரவேற்கிறேன். சிவில் ஆளுநர்கள் வடக்கு, கிழக்கில் நியமிக்கப்பட்டமை, சிவில் நிர்வாகத்தை நடைமுறைப் படுத்தியமை வரவேற்கக்கூடியவை. இதை நான் எதிர்க்கமாட்டேன்.

*கேள்வி: இந்த மாதம் எட்டாம் திகதி இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து உங்கள் மகிந்த தரப்பின் புதிய கட்சி உதயமாகும் என்று சொல்லப்பட்டதே?*

பதில்: அது பொய். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரத்தினபுரி அமைப்பாளர் பதவியை பவித்ரா வன்னியாராச்சியிடம் இடமிருந்து ஜனாதிபதி மைத்திரி பறித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதை மீண்டும் வழங்கக் கோரியுமே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் புதுக் கட்சி உதயமாகும் என்பது பொய்யாகும். புதுக் கட்சி ஒன்றின் தேவை எமக்கு இல்லை. மகிந்தவிடம் இருந்து பறிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் தலைமைத்துவப் பதவியை மீளக் கைப்பற்றுவதுதான் எமது நோக்கம்.

சுதந்திரக் கட்சியின் ஓர் அணியாக இருந்தால் மாத்திரம்தான் இது சாத்தியப்படும். புதுக் கட்சி அமைத்தால் நாம் வேறு கட்சிக்காரர்களாகிவிடுவோம். சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் தலைமைத்துவத்தை புதுக்கட்சியில் இருந்து கொண்டு கைப்பற்ற முடியாது.

தேர்தலில் நாம் சுதந்திரக் கட்சியின் தனி அணியாகப் போட்டியிடுவோம். அதில் நாம் வெற்றிபெற்றால் சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் தலைமைத்துவப் பதவி எங்கள் கைகளுக்கு வந்துவிடும்.

*கேள்வி: சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை மகிந்தவிடம் இருந்து மைத்திரி பலவந்தமாகவா பறித்தெடுத்தார்.?*

பதில்: ஆமாம். சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்த 25 பேர் மகிந்தவிடம் வந்து தலைமைத்துவப் பதவியை மைத்திரிக்கு விட்டுக் கொடுக்குமாறு கூறினர். தங்கள் கட்சிக்காரர்களைப் பாதுகாப்பதற்கும் ஆதரவாளர்களைப் பாதுகாப்பதற்கும் இதுதான் சிறந்த வழி என்று கூறினர்.

அத்தோடு, சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக இருப்பது நமக்கு பலம் என்றும் கூறினர். அப்போது இருந்த குழப்பத்தில் மகிந்த எதைப் பற்றியும் யோசிக்காது தலைமைப் பதவியை விட்டுக் கொடுத்தார்.

இதன் பின் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த தலைமையில் தனி அணியாகவே பே ாட்டியிடுவதற்குத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், மைத்திரி சூழ்ச்சி செய்து எமது வெற்றியைத் தடுத்தார்.

அவரது ஆள்களை வெல்ல வைப்பதற்காக மைத்திரி சுதந்திரக் கட்சியில் போட்டியிடுமாறு எங்களைக் கேட்டார். நாங்கள் அதை ஏற்று தேர்தலில் குதித்தோம். எமது முதலாவது கூட்டம் அனுராதபுரத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொள்வதற்காக மைத்திரி வருவதாக வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், வரவில்லை.

தேர்தல் பரப்புரை சென்றுகொண்டிருந்தபோது மகிந்தவுக்கு எதிராக விசேட உரை ஒன்றை ஆற்றி கட்சியைத் தோல்வியடையச் செய்தார். இதன் மூலம் மகிந்த பிரதமராவதைத் தடுத்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே மைத்திரி இந்தச் சதியைச் செய்தார். இப்போது சுதந்திரக் கட்சியை மைத்திரி முழுமையாக ஐக்கிய தேசிய கட்சியிடம் அடகு வைத்துவிட்டார்.

சுதந்திரக் கட்சிக்கான மக்கள் ஆதரவு என்பது மகிந்தவை அடிப்படையாகக் கொண்டுதான் உள்ளது. மைத்திரியை அடிப்படையாகக் கொண்டு அல்ல. தேர்தல் ஒன்று வந்தால் இது புரியும். ஆகவே, எதிர்வரும் தேர்தலில் நாம் சுதந்திரக் கட்சியின் தனி அணியாகப் போட்டியிட்டு வெற்றி பெறுவோம்; சுதந்திரக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையும் கைப்பற்றுவோம்.

*கேள்வி: மைத்திரி தரப்பு எம்பிக்கள் பலர் உங்கள் அணியில் இணையப் போவதாகக் கதை அடிபடுகிறதே?*

பதில்: அது உண்மை. மைத்திரியின் நிர்வாகத்தால் பல எம்.பிக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் எம்முடன் இணைவதற்காகப் பேசிக்கொண்டு இருக்கின்றனர். இணைவு விரைவில் சாத்தியப்படும்.




"மாமனார் வீட்டுல ரிவி பார்க்கும்போது ஒரு விளம்பரம் வந்தா மட்டும் கோபம் வருமே அது என்ன விளம்பரம்...?"




"நம்பிக்கட்டினோம்... நன்றாக இருக்கிறோம்..."

மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளைக்கு ஒரு தங்கை உண்டு என்று சொன்னவுடனே, பெண்ணுக்கு லேசா கொஞ்சம் முகம் வாடும். ஆனால்.



பெண் வீட்டில் பெண்ணுக்கு ஒரு தங்கை உண்டு என்று சொன்னவுடனே மாப்பிள்ளைக்கு ஒரு சந்தோஷம் முகத்தில் பிரகாசிக்கும் பாருங்கள்!
ஆண்களுக்கு எப்பவுமே பரந்த மனசுங்க.



கணவன்: "உனக்குத்தான் 2 கண்ணும் நல்லா இருக்கே ஒழுங்கா அரிசில இருந்து கல்லைப் பொறுக்க மாட்டியா?"
மனைவி: "உங்களுடைய 32 பல்லும் நல்லாதானே இருக்கு. 2,3 கல்லை அரைச்சு சாப்பிட முடியாதா?"



## ஒக்ரோபர் 21 இல் வெளியாகும் 31 ஒக்ரோபர்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராவின் கொலைச் சம்பவத்தையும், அதன் பின் நடந்த கலவரத்தையும் மையமாக வைத்து உருவாகியுள்ள படம் 31 ஒக்ரோபர். இந்தப் படத்துக்கு தணிக்கைக் குழுவின் ஒப்புதல் பெறப் பல ஆண்டுகள் ஆனது. சமீபத்தில், ஒப்புதல் கிடைக்க படக்குழுவினர் வெளியீட்டுக்கான வேலைகளில் மும்முரமாய் இறங்கினர். இதையடுத்து படம் நாளை வெளியாவதாக இருந்தது. ஆனால் இடையில் ஒருவர் டில்லி உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்ததையடுத்து படத்தின் வெளியீட்டுத் திகதி தற்போது தள்ளிபோய் உள்ளது. அதன்படி 31 ஒக்ரோபர் படம் அடுத்த வாரம், ஒக்ரோபர் 21ஆம் திகதி வெளியாக உள்ளது. 31 ஒக்ரோபர் படத்தில், சைப் அலிகானின் சகோதரி சோகைல் அலிகான் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தை சிவாஜி லோதல் பாட்டில் இயக்கி யுள்ளார். 31 ஒக்ரோபர் படம் கடந்தாண்டே வெளியாக வேண்டியது, ஆனால் பிரச்சினை காரணமாக இப்படம் தொடர்ந்து தள்ளிப் போய்க் கொண்டே போனது குறிப்பிடத் தக்கது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அறிமுகமில்லாதவரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**இடபம்:** அவப்பெயர் வராதபடி விழிப்புடன் செயல்படவும். தொழில், வியாபாரத்தில், வருமானம் ஓரளவே இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல் நிலை திருப்தியளிக்கும்.

**மிதுனம்:** தக்க சமயத்தில், உறவினரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். நிலுவைப் பணமும் வசூலாகும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிங்கம்:** உடல் நலனில் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் ஆதரவாக நடந்து கொள்வர். பெண்கள், பணம், பொருளை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் மிதமாக இருக்கும். ஒவ்வாத உணவை தவிர்ப்பது நல்லது. இயந்திரப்பிரிவு பணியாளர் பாதுகாப்பில் கவனம் கொள்ளவும்.

**துலாம்:** பெற்றோரின் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி நிறைவேறும். ஆதாயம் படிப்படியாக அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**விருச்சிகம்:** நண்பரின் பேச்சால், சிரமத்தைச் சந்திக்கலாம். தொழில், வியாபாரத்தில், தாமத நிலை உருவாகலாம். லாபம் ஓரளவே இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் செயல்பாடு ஆறுதல் அளிக்கும்.

**தனுசு:** அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் வரும். மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரம், தாமத கதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**கும்பம்:** இனிய அணுகுமுறையால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகளுக்கு சமரசப் பேச்சில் தீர்வு கிடைக்கும்.

HBD my Darlu ❤ Retweeted



முகமூடி அணியாதவன்
"எளிமையாக கிடைத்து விடுகின்றது ஏமாற்றம்"
28

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | | | 6 | |
| | 3 | | | 8 | | 7 | | |
| 9 | | 8 | | | | | | 1 |
| | | 4 | | 5 | | | 3 | |
| | | | 8 | | 2 | | | |
| | 2 | | | 6 | | 9 | | |
| 1 | | | | | | 8 | | 4 |
| | | 3 | | 9 | | | 2 | |
| | 9 | | | | 6 | | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 9 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 5 | 2 | 8 | 1 | 6 | 9 | 4 |
| 1 | 6 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 | 5 |
| 6 | 5 | 1 | 7 | 2 | 9 | 4 | 8 | 3 |
| 4 | 9 | 7 | 8 | 1 | 3 | 5 | 6 | 2 |
| 3 | 8 | 2 | 5 | 4 | 6 | 9 | 7 | 1 |
| 9 | 1 | 4 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 |
| 5 | 7 | 3 | 1 | 6 | 2 | 8 | 4 | 9 |
| 8 | 2 | 6 | 9 | 5 | 4 | 1 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரவள்ளிப் பணியாரம்

மரவள்ளிக்கிழங்கு – ¾ பாகம்
துருவிய தேங்காய் – ½ கப்
காய்ந்த மிளகாய் – 3
உப்பு – ¼ தேக்கரண்டி
சின்னச் சீரகம் – ¾ தேக்கரண்டி
எண்ணெய் – தேவைக்கேற்ப



**செய்முறை**

கிழங்கை நன்கு கழுவி தோலை நீக்கி விட்டு கரட் துருவியில் துருவிக் கொள்ளவும்.

மிக்ஸியில் தேங்காய்த்துருவல், மிளகாய், சின்னச்சீரகம் அனைத்தையும் போட்டு தண்ணீர் சேர்க் காமல் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.

அதனுடன் துருவிய மரவள் ளிக்கிழங்கை உப்பு சேர்த்து மேலும் இரண்டு முறை அரைக் கவும்.

அரைத்த மரவள்ளிக்கிழங்கை ஒரு பாத்திரத்தில் தனியாக எடுத்துக் வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் குழிப்பணியாரக் கல்லை வைத்து எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் ஒரு கரண்டியால் மாவை எடுத்து ஒவ்வொரு குழியிலும் முக் கால் பாகம் அளவு ஊற்றவும்.

பிறகு தீயை மிதமான அளவில் வைத்து பணியாரங்களை இரு புறமும் வேக விட்டு எடுக்கவும். மரவள்ளிக்கிழங்குப் பணியாரம் தயார். இந்த பணியாரத்தை சூடாகச் சாப்பிட சுவையாக இருக்கும்

## நாளை

**புரட்டாதி-24**

திங்கட்கிழமை -10.10.2016
திதி: நவமி பி.ப. 05.41
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.02.33
ராகுகாலம்: 07.32-09.02 வரை
சுபநேரம்: 12.02-01.32 வரை

## பொன்னாங் கண்ணியின் மருத்துவக் குணங்கள்



கீரைகளின் ராஜா என்று அழைக் கப்படும் பொன்னாங் கண்ணிக் கீரையில், எண்ணற்ற மருத்துவக் குணங் கள் நிறைந்துள்ளன. பொன்னாங் கண்ணிக் கீரையில் ஊட்டச் சத்து, நீர்ச்சத்து, கொழுப்புச்சத்து, மினரல் சத்து, கல்சியம், பாஸ்பரஸ், புரதம் போன்ற சத்துகள் அடங்கியுள்ளன.

இந்தக் கீரையைத் தொடர்ந்து 27 நாள்கள் சாப்பிட்டால் கண்பார்வை மிகத் துல்லியமாக தெரிய உதவும்.

பொன்னாங்கண்ணிக் கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து சாதத்துடன் சாப்பிட்டு வந்தால், உடல் எடை குறையும். மற்றும் துவரம் பருப்பு, நெய்யுடன் சேர்த்துச் சாப்பிட்டால் உடல் எடை கூடும்.

உடலை, தோலைப் பளபள என்று மாற்றுவதில் பெரும் பங்கு பொன்னாங்கண்ணிக்கு உண்டு.

மூலநோய், மண்ணீரல் நோய்களைப் குணப்படுத்த வல்லது.


பொன்னாங்கண்ணிக் கீரையை நன்றாக அலசி சிறிதாக நறுக்கி, அதனுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகுத் தூள் சேர்த்து வேகவைத்து மசியல் செய்து சாப் பிட்டு வந்தால் அசுத்த இரத்தம் சுத்தமாகும், உடலுக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | [illegible] | மன்னார் | [illegible] | [illegible] | பருத்தித்துறை | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 800 | 600 |
| நண்டு | 400 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 600 | – |
| பாரை | 600 | 500 | 400 | 800 | 500 | 400 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 400 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 500 | 500 | 300 | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 350 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 300 | 250 | – |
| கிளாக்கன் | 1000 | 1000 | 300 | 500 | 400 | 200 | – |
| ஓரா | 300 | 300 | 300 | – | 300 | 250 | 400 |
| திரளி | 250 | 250 | 100 | 150 | 200 | 150 | 350 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 400 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 200 | 250 | 200 | – | 200 | 250 | 200 |
| திருக்கை | 300 | 300 | 200 | 400 | 200 | 300 | 130 |
| மதனம் | 200 | 150 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 250 | 150 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 250 | 250 | 300 | 400 | 200 | 300 | – |
| வாழை | 300 | 150 | – | 400 | 300 | 200 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 60 | 70 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 120 | 80 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 120 | 160 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 120 | 140 | 160 | 160 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 90 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 80 | 100 | 90 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 15 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 60 | 60 | 70 | 60 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 200 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 180 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 300 | 450 | 480 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 100 | 120 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 170 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 140 | 80 | 200 | 80 | 100 |



## இது புதுசு


பெண்களுக்கான நவீன ஆடைகள் அறிமுகமாகியுள்ளன. சுற்றுலா அல்லது சொப்பிங் செல்லும் போது இவ்வாறான ஆடைகளை அணிவது தகும். இலேசான இவை, பெண்களுக்கு இதமான உணர்வை வழங்கும். இந்த ஆடை இடுப்பு பெல்ட் அணிந்தும் அணியலாம். கைகள் அற்ற ஆடை என்பதால் பிரத்தியேக சிறிய கோட்டுகளையும் இந்த ஆடையுடன் அணிய முடியும். இது ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.





# கமில்டனுக்குப் பின்னால்





# சதியா விதியா?

கார்பந்தயத்தில் உலகச் சம்பியனாக வலம் வரும் கமில்டன் நடப்பு வருடத்தில் தனது மதிப்பைத் தொடர்ந்தும் தக்கவைக்க மிகவும் போராடுகிறார். இலகுவாக வெற்றிபெற வேண்டிய சுற்றுகள்கூட இறுதியில் அவரைக் கைவிட்டுச் செல்கின்றன. தனது இந்த சறுக்கலுக்கு சதியையும், விதியையும் ஒருசேரக் குற்றம் சுமத்துகிறார் கமில்டன்.

உலக கார்பந்தயத் தொடர் வழக்கம்போல இந்த வருடமும் 21 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 17 ஆவது சுற்று மலேசியா ஓடுதளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 311 கிலோ மீற்றர் தூரத்தில் 250 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரங்களை முதலாவது வீரராக கடந்திருந்தார் கமில்டன். பின்னர் அவரது காரில் தீ பிடித்தமை காரணமாக போட்டியிலிருந்து பாதியில் விலகினார்.

மலேசியத் தொடர் ஆரம்பிக்கும்போது ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முதலிடத்தில் இருந்த ரஸ்பேர்க்குக்கும் இரண்டாவது இடத்திலிருந்த கமில்டனுக்கும் இடையில் 8 புள்ளிகளே வித்தியாசம் இருந்தது. ஒருவேளை மலேசியத் தொடரை கமில்டன் கைப்பற்றியிருந்தால் அவர் தற்போது ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முதலாவதாக வலம்வந்திருப்பார். ஆனால் தற்போது கமில்டனுக்கும் ரஸ்பேர்க்குக்கும் இடையே 23 புள்ளிகள் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.

மலேசியச் சுற்றில் மட்டுமல்லாமல் முன்னதாக நடைபெற்ற சில சுற்றுக்களிலும் கமில்டன் இயந்திரக் கோளாறு என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். கமில்டனின் விலகல்களால் அவர் இவ்வருடம் சம்பியனாவது சந்தேகத்துக்குரியதாக மாறியுள்ளது. தனது இந்தப் பின்னடைவுக்கு விதியையும் சக அணியினது சதியையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்.


"கடவுள் எனது விடயத்தில் சிறிது தலையீடு செய்கிறார், நான் சம்பியனாவதை அவர் விரும்பவில்லையென்றால் அதை மனமார ஏற்றுக் கொள்கிறேன். அதேநேரம் எனது நிறுவனமான மெர்சிடஸிடம் ஏராளமான இயந்திரங்கள் உள்ளன. எனக்குத் தரப்படும் இயந்திரமே அடிக்கடி அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை" என கமில்டன் தெரிவித்துள்ளார்.

# அஸ்வினுக்கான ஓய்வு டோனிக்கான முடிவு

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையில் ஆரம்பமாகவுள்ள ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் மூன்று ஆட்டங்களுக்குமான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ஜடேயாவுக்கு இந்தத் தொடரில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்கும் கொடுக்கப்பட்ட ஓய்வு டோனியின் தலைமைத்துவத்துக்கான முடிவாகவும் அமையலாம்.

தொடர் இந்தியாவில் நடைபெறுகிறது. இந்திய ஆடுகளங்கள் சுழலுக்கு ஒத்துழைக்கும் இயல்புடையவை. இந்தியாவின் தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர்களாக அஸ்வின், ஜடேயா இருவரையும் குறிப்பிடலாம். இந்த இருவருக்குமே நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் சுழல்பந்து வீச்சு என்ற ஒன்று இல்லாமல் இந்தியா களமிறங்கப் போகிறது. வேகப்பந்துவீச்சை மட்டும் வைத்து நியூசிலாந்தை வீழ்த்திவிட முடியாது. எனவே இந்தியாவில் வைத்து இந்தியாவை நியூசிலாந்து ஆதிக்கம் செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் அது டோனியின் தலைமைத்துவத்துக்கு அடிக்கப்படும் சாவு மணியாகவே பார்க்கப்படும்.

டெஸ்ட் தொடரைக் கோக்லி கைப்பற்றினார். ஆனால் ஒருநாள் தொடரை டோனி கைப்பற்றவில்லை. என்ற பேச்சுக்கள் பரவலாக்கப்படும். இணையத்தளங்களில் டோனி மீது விமர்சனங்கள் குவியும். முடிவடைந்த ஆசியக் கிண்ணத்துக்குப் பின்னர் நடைபெற்ற தொடர்களில் டோனி பெரிதளவில் சாதிக்கவில்லை. இதனால் அவர் மீது அழுத்தங்கள் குவிந்துள்ளன. இந்த அழுத்தங்களுடன் சொந்த மண்ணில் தோல்வியடைந்த அழுத்தமும் அதிகரிக்க அவரது தலைமைத்துவம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும். மொத்தத்தில் இந்திய அணியில் டோனி இருக்கப்போகும் காலத்தை தீர்மானிக்கும் தொடராக நியூசிலாந்துத் தொடர் அமைந்துள்ளது. (ம)



# கெர்பரின் வீழ்ச்சியை பயன்படுத்தத் தயாராகும் செரினா

பன்னாட்டு பெண்கள் ரென்னிஸ் தொடரின் தரப்படுத்தலில் மீண்டும் ஆதிக்கம் செய்யக்கூடிய நிலை செரினாவுக்கு ஏற்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்து வந்த செரினா வில்லியம்ஸ், அண்மையில் முடிவடைந்த அமெரிக்க ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேற்றப்பட்டிருந்தார். கெர்பர் சம்பியனானார். இதனையடுத்து செரினா தரப்படுத்தலில் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு கெர்பர் முதலிடம் பிடித்தார். இவர்கள் இருவருக்கும் இடையில் ஆயிரத்து 435 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் சீன ரென்னிஸ் தொடரில் செரினா களமிறங்கவில்லை. கெர்பர் களமிறங்கினார். கெர்பர் சம்பியனானால் செரினாவால் கெர்பரை பிடிப்பதென்பது இயலாத காரியமாகி விடும். ஆனால் கெர்பர் ஸ்வெட்டலினாவிடம் தோல்வியடைந்து காலிறுதிக்கத் தகுதிபெறா மல் வெளியேற்றப்பட்டார். இதனால் செரினா, கெர்பர் இருவருக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசம் அப்படியே பேணப்படுகிறது. இன்னும் ஒரு கிண்ணத்தை கைப்பற்றும் பட்சத்தில் செரினா மீண்டும் முதலிடம் பிடிக்க முடியும். இந்த வாய்ப்பை செரினா எப்படிப் பயன்படுத்தப் போகிறார் என்பதே தற்போதுள்ள கேள்வி.



# என்ன அழகு! எத்தனை அழகு!

*(36ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஓடிக்கொண்டிருந்த எமது பஸ்சைத் திடீரென முந்திக் கொண்டது மற்றுமொரு பஸ்வண்டி. முந்திவந்த அந்த பஸ் முன் தரிப்பில் நின்று பயணிகளைப் பங்கு போட்டுக் கொண்டது. எமது பஸ்சின் சாரதி இப்போது விழித்துக் கொண்டார். எங்களுடைய பஸ் இப்போது வேகமாக ஓடி அதை முந்திக் கொள்கின்றது. இனி அந்த பஸ்சின் தவணை. அது முந்திக் கொள்கின்றது. இது துரத்துகின்றது. எமது பஸ்சிலிருந்து ஏராளமானவர்கள் இறங்கிவிட்டார்கள். எமது பஸ்சிற்கு இப்போது சற்று இறங்குமுகம் எனக்கோ ஒருவகையில் ஏறுமுகம்.

மீண்டும் எனது கண்கள் அவளை ஆவலுடன் தேடின. நல்லவேளை இன்னமும் அவள் இறங்கவில்லை. அதே சீற்றில் இருந்தாள். ஆனால் ஒரு சிறிய மாற்றம். கோணர் சீற்றிலமர்ந்திருந்தவள் இப்போது இந்தப் புறம் வந்து விட்டாள். அம்மாக்காரி கோணர் சீற்றில் மாறி அமர்ந்து ஆனந்த சயனம் செய்து கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட எனக்கண்மையிலே அவள் வந்து விட்டது என்னுடைய அதிஷ்டம்தான். இப்பொழுது அவளை நான் பார்க்க.. அட! என்ன அதிசயம்! அவளும் என்னைப் பார்த்துவிட்டாள்.

இத்தனை நேரமாக என்னை ஒரு பொருட்டாக மதிக்காதிருந்தவள் என்னை நேருக்கு நேர் பார்த்துவிட்டதில் பரம திருப்தி. இப்போது சிரித்தேன். அட! அவளும் பதிலுக்குச் சிரித்து விட்டாள். உலகத்தையே விலைக்கு வாங்கிவிட்ட மகிழ்ச்சி எனக்கு. கன்னத்தில் குழிவிழத் தனது ஈச்சம் விதைப் பற்களைக் காட்டிச் சிரித்து என்னை மயக்கி விட்டாள். சற்று இடைவெளிவிட்டு மீண்டும் ஒரு பார்வை. காத்திருந்ததுபோல அவளும் ஒரு திருட்டுப் பார்வை செல்லச் சிரிப்பு என்னால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. உடல் புளகாங்கிதமடைந்தது. இத்தனை நேரமாகக் காத்திருந்து பார்த்திருந்து அவளின் மயக்கும் புன்னகையைப் பெற்று விட்டேன். இனி அவளுடன் பேசிப் பார்க்கவேண்டும்.



இரண்டு பஸ்களும் ஒன்றையொன்று துரத்தி விளையாட்டுக் காண்பித்துக்கொண்டிருந்தன. இனிவரும் பஸ்தரிப்பில் நானிறங்க வேண்டும். சிவனேயென்று ஒரு அளவான வேகத்தில் வந்து கொண்டிருந்த எமது பஸ்சின் சாரதியை உசுப்பேற்றி விட்ட மற்றைய பஸ் சாரதியை மனதுக்குள் திட்டித் தீர்த்தேன். இவர்கள் போட்டி போடாவிட்டால் எங்கள் பஸ்வண்டி இன்னும் சற்று மெதுவாக ஓடியிருக்கும். அதற்குள் நான் அவளிடம் பேச்சைக் கொடுத்துப் பார்த்திருக்கலாம். இப்போது ஒன்றுக்கும் கொடுப்பிணையில்லாமல் ஆகிவிட்டது. சரி! எனது இடம் வந்து விட்டது. இறங்கத்தான் வேண்டும்.

அவளை நான் பார்த்தேன். அவளும் பார்த்தாள். நான் சிரித்தேன். பதிலுக்கு அவளும் சிரித்தாள் ஐயோ!ஐயோ! என்ன அழகான சிரிப்பு மின்சாரம் பட்ட அதிர்ச்சி. இனியுமென்னைக்கட்டுப்படுத்தமுடியவில்லை. யார் என்ன சொன்னாலும் சொல்லட்டும், துணிவே் துணை, அவளின் அழகான கைகளிரண்டையும் ஆசையுடன் பற்றிப்பிடித்து நெற்றியிலே அழுத்தமாக முத்தமொன்றைப் பதித்துவிட்டேன்.

"ஸ்...ஸ்...ஐயோ கூச்சமாயிருக்கு. விடுங்கோ அங்கிள்" தனது மழலைக்குரலில் கூறிய அந்த இரண்டுவயதுப் பிஞ்சுப் பெண்குழந்தை வெட்கத்துடன் தாயின் மடியில் ஏறி அமர்ந்து கொண்டது. நானும் வேறு வழியின்றி அந்த அழகான மழலைக்குக் கையசைத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டேன்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 441

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | ■ | 12 | | | ■ | |
| ■ | 13 | 14 | | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | |
| 18 | | ■ | 19 | 20 | | | ■ |
| | ■ | 21 | | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:......................................

பூரணமான தபால் விலாசம்: ......................................

......................................

கையொப்பம்:......................................

### இடமிருந்து வலம்

1. வாழ்க்கையில் எல்லா வளங்களும் கிடைத்தாலும் இது கிடைப்பது அரிது
4. இடபம்
6. ஆணி முதலியவற்றைத் தைத்தல்
8. ஒரு நோய்
10. தோகை மயில்
11. மலை
12. உலோகக் கருவிகளைத் தீட்டுவது இதனால்
13. எல்லாம்
15. மனித
16. பாடம் செய்தல்
17. கிளியின் கழுத்தில் மாலை போல காணப்படுவது
18. ஒரு சத்தம்
19. நவ மணிகளில் ஒன்று
21. காடும் காடு சார்ந்த இடமும்
22. இடையில் தரிக்காமல் நீண்ட தூரம் பறக்க வல்ல ஒரு பறவை

### மேலிருந்து கீழ்

1. முகாமை செய்பவர்
2. சமயம்
3. அரச வரி
4. அனைத்தும்
5. வெட்ட வெளிச்சம் என்பதைக் குறிக்கும் சொல்
7. உலோகத் தகடு
9. பார்வைக்குக் கிட்டுவது
12. பிரயோசனமற்ற பேச்சு
14. பாரமான
15. மூளைக்கு உணர்வைக் கடத்துவது
16. பாம்பாட்டியின் கருவி
17. ஆட்சி செய்ய
20. பறவைகளையும் மிருகங்களையும் பிடிக்க விரிப்பது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 439 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) அசம்பாவிதம் (6) கரி (7) வதம் (9) கலவை (10)நரி (11) பாமரன் (13) சிரசு (14) வண்டு (15) நலம் (16)முகடு (18) புகை (20) பிரதிநிதி (22) குறடு (23)சிரிப்பு

**மேலிருந்து கீழ்**

(1) அகம்பாவம் (2) சரி (3) பாவலன் (4) விதவை (5) தம் (8) பரிசு (9)கரடுமுரடு (10) நரம்பு (12) மண் (13) சில (15) நடுநசி (17) கதி (19)கைப்பு (20) பிற (21)திரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.441
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(19.10.2016 ஆம் திகதிக்கு
முன்னர்)' கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 439 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
செந்தில் விசாலன்,
விநாயகர் வீதி, கற்சிலை மடு,
ஒட்டுசுட்டான்.

**2 ஆம் பரிசு**
ம.நிஷாமிகா,
தரம் - 6E.
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
பபித்திரா அரசு,
இல.331/1 யாழ்.வீதி,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
ம.ஹரிஷ்,
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
பே.ரஜீவ்குமார்,
வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரம்,
வேலணை.

**பாராட்டுப் பெறுவோர்**

வி.ஜெயரட்னசிங்கம்,
இல.26/3, வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

இராசமூர்த்தி கதிர்ச்செல்வன்,
இல.44, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

உமேஸ் ஹம்சத்வன்,
இல.9, முதலாம் ஒழுங்கை,
லிங்கநகர், திருகோணமலை.

சொற்சிலம்பம் போட்டி இல.441இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.10.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 439இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**09.10.2016 முதல் 15.10.2016 வரை**

**உங்களுக்கு எப்படி?**

## மேடம்

புதன், கேது, சூரியன் அதிர்ஷ்ட பலன் வழங்குவர். நற்குணம் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். தாமதமான செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். தம்பி, தங்கையின் உதவி கிடைக்கும். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பொறுமையாகக் கையாளவும். வழக்கு, விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பண வரவு கூடும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிந்து அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். மாணவர்கள் முயற்சி எடுத்து படித்தால் தான் வெற்றி பெற முடியும். மாணவர்கள் சிறப்பாகப் படித்து முன்னேறுவர்.

## இடபம்

குரு, சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். புதன், குரு, சந்திரனால் நற்பலன் உண்டாகும். முன்பின் தெரியாதவர்களிடம் பழக வேண்டாம். தம்பி, தங்கையின் அன்பு உற்சாகம் தரும். வாகனத்தில் கவனமாகச் செல்வது பிரச்னைகளைத் தவிர்க்கும். புத்திரர்கள் உங்கள் சொல்லை வேதமென ஏற்றுக்கொள்வர். உடல்நிலை பலம் பெற மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடித்து அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்குவர். பெண்கள் வீட்டுச் செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் வளரும்.

## மிதுனம்

புதன், ராகு, சுக்கிரன், சனீஸ்வரன் அளப்பரிய நன்மை தருவர். நண்பர்களின் உதவியால் புதிய திட்டத்தை செயற்படுத்துவீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பண வரவும் கூடும். கடன் தொந்தரவு குறையும். உடல்நிலைநன்றாக இருக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக்கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தினால் தான் வளர்ச்சி பெற முடியும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் தாராள பண வசதியுடன் சந்தோச வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கடகம்

சூரியன், சுக்கிரன், செவ்வாய் அனுகூல அமர்வில் உள்ளனர். எவரிடமும் இதமான வார்த்தை பேசுவீர்கள். உறவினர்களின் அன்பு மகிழ்ச்சி தரும். வாகன பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்கள் பிடிவாதமாக இருப்பர். அவர்களை இனிய அணுகுமுறையால் சரி செய்யுங்கள். கடன் கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவி உங்கள் சொல்கேட்டு நடப்பார். சுற்றுலா பயணம் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும். பணியாளர்களின் திறமையான பணிக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் நற்செயல்களால் பாராட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்களுக்கும் உதவுவர்.

## சிங்கம்

குரு, சுக்கிரன் போட்டி போட்டு நற்பலன் வழங்குவர். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். குடும்பத் தேவை பெருமளவு முழுமையாகும். வாகன பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் சிறந்து விளங்குவர். சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் தரக்கூடாது. உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவியின் அன்பு, பாசம், மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் தாராள பண வரவு உண்டு. பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புதவிர பிற விடயங்களில் விவாதம் பேச வேண்டாம்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், கேது அளப்பரிய நற்பலன் தருவர். கடினமான பணியையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். சமூகத்தில் அந்தஸ்துக் கூடும். வாகனத்தில் மிதவேகம் உரிய பாதுகாப்பை தரும். புத்திரர்கள் ஆடம்பரச் செயல்களில் ஆர்வம் கொள்வர். உடல்நிலை சீராக இருக்கும். பாக்கிப் பணம் வசூலாகும். இளமைக்கால நண்பரைச் சந்திப்பீர்கள். மனைவி உங்கள் ஆலோசனைப்படி நடந்து, குடும்ப வளர்ச்சிக்கு உதவுவார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

சுக்கிரன், செவ்வாய், ராகு நன்மை தருவர். சுறுசுறுப்பாக பணிபுரிவீர்கள். வாழ்வு வளம் பெற புதியசூழல்உருவாகும். வாகனத்தில்மிதவேகமாகச் செல்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். புத்திரர்கள் ஆன்மிகத்தில் நம்பிக்கை கொள்வர். சமரசப் பேச்சில் நிதானம் வேண்டும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும் செயலும் குடும்ப ஒற்றுமைக்கு வழி வகுக்கும். பயணங்களால் நல்ல பயன் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணிகளை முடித்து அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் அதிர்ஷ்ட பலன் வழங்குவர். உங்கள் பேச்சில் நிதானம் இருக்கும். உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வாகனப் பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்களின் நற்செயல் குடும்பத்துக்கு பெருமை சேர்க்கும். சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாபம் உயரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு குறைவதுடன் சலுகைகளும் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.

## தனுசு

புதன், சூரியன், சுக்கிரன், கேது தாராள பலன் தருவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத் தேவைகள் முழுமையாகும். செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்களிடம் அன்புடன் நடந்து கொள்வது நல்லது. எதிரிகளாக இருந்தவர்களும் மனம் மாறி இணைந்து கொள்வர். மனைவி உங்களின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பண வரவும் கூடும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டு உதவி கேட்டுப் பெறுவர். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

## மகரம்

சனீஸ்வரர், சந்திரன், குரு நற்பலன் தருவர். குடும்பச் செலவுக்கான பணத் தேவை அதிகரிக்கும். பயணத்தின்போது பாதுகாப்பு வேண்டும். புத்திரர்களின் உடல் நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் பின்தங்க நேரிடலாம். கவனம் தேவை.

## கும்பம்

புதன், சுக்கிரன், செவ்வாய் தாராள நன்மை வழங்குவர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நன்மையும், புகழும் வந்து சேரும். தம்பி, தங்கையின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள் உங்கள் வார்த்தையை ஏற்று செயற்படுவர். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். பகைவரால் இருந்த தொந்தரவு பெருமளவு குறையும். மனைவியுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரி மிதமான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் அளப்பரிய சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

## மீனம்

ராகு, சுக்கிரன்,, குரு அளப்பரிய நன்மை வழங்குவர். நண்பர்கள் உங்கள் நற்செயலை வாழ்த்துவார். மனதில் உற்சாகம் கூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளர்கள் சொந்த சிரமங்களால் விலகுவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவிவழிசார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். பணியாளர்கள் வருமானத்தில் முன்னேற்றம் காண்பர். பெண்கள் உறவினர்களிடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் போட்டிகளிலும் வெற்றி பெறுவர்.

# யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு உடனடி நடைமுறைத் தீர்மானங்களுடன் நிறைவு

## ஆலய வழிபாடுகளின்போது ஒலிபெருக்கிச் சாதனங்கள், நாள் திருப்பலிகளின்போது ஆலயத்திற்கு உள்ளேயும், திருநாள் நிகழ்வுகளில் ஆலய வளாகத்திற்குக் கேட்கத்தக்கதாகவும் மட்டும் பயன்படுத்தப்படவேண்டும்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வேண்டுகோளின் பேரில், - யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரின் செயல் வடிவில் - கரவையூர்ச் செல்வம் என்று அன்போடு அழைக்கப்படும் சா.ம.செல்வரட்ணம் அ.ம.தி அடிகளாரின் வழி காட்டலில், 100க்கு மேற்பட்ட குருக்கள் துறவியரின் ஒத்துழைப்பில், யாழ். மறைமாவட்டத்தின் மறைக் கோட்டங்களான யாழ்ப்பாணம், பருத்தித்துறை, இளவாலை, கிளி - முல்லை , தீவகம் ஆகிய 5 மறைக் கோட்ட பொது நிலையினரின் கூட்டுழைப்பில் "புதிதாய் வாழ்வோம்" என்னும் தலைப்பில் யாழ். மறைமாவட்டத்தின் அடுத்த 5 ஆண்டுத் திட்டமிடல் மேய்ப்புப்பணி மாநாடு செப்ரெம்பர் மாதம் 29 - 30 மற்றும் ஒக்ரோபர் 1ஆம் திகதி ஆகிய மூன்று தினங்களும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் வெற்றிகரமாக நடந்தேறியது. மூன்று தினங்கள் 400பேர் கூடியிருந்து மறைமாவட்டத்தின் அடுத்த 5 ஆண்டுகளில் செயற்படுத்தவென எடுத்த முடிவுகள் பற்றி இந்தக்கட்டுரை ஆராய்கிறது.

### மேய்ப்புப்பணி மாநாட்டின் உடனடி நடைமுறைக்கான தீர்மானங்கள்

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இறைமக்களுக்கு அறியத்தர இருக்கும் மாநாட்டின் தீர்மானங்கள் தொடர்கின்றன.

1. திருச்சபைச் சட்டம் எண். 102இல் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு குறிப்பிட்ட பங்கின் எல்லைக்குள் குடியிருக்கும் எண்ணத்துடன் ஒருவர் வாழ்ந்தாலோ அல்லது ஐந்து முழு ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலோ, அவருக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கவேண்டும். மேலும் மூன்று மாதங்கள் குடியிருக்கும் எண்ணத்துடன் வாழ்பவருக்கு அல்லது மூன்று மாதங்கள் வாழ்ந்த ஒருவருக்கு தற்காலிக உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஒழுங்கு எமது மறைமாவட்டத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.
2. பொதுக் கூட்டங்களிலும், ஏனைய அமைப்புகளிலும், ஆலயத்தில் சேர்த்துக்கொள்ளும் விடயத்திலும் பெண்களைத் தவிர்ப்பதை உடனடியாக நிறுத்தி, அவர்களுக்குரிய சமத்துவ உரிமையை வழங்குதல்.
3. ஒருவர் நிரந்தரமாக வசிக்கும் பங்கிலேயே கட்டாயமாக இணைந்துகொள்ள வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தல்.
4. ஆலய வழிபாடுகளின்போது பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கி சாதனங்களினால் ஆலய சுற்றாடலில் வாழும் மாணவர்கள்,நோயாளர், வயோதிபர் மற்றும் இயங்கும் பாடசாலைகள் தரப்பினருக்கு ஏற்படும் இடையூறுகளைத்தவிர்க்க பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நாள் திருப்பலிகளின் போது, ஆலயத்திற்கு உள்ளே மட்டும் கேட்கும்படியாகவும், திருநாள் நிகழ்வுகளில் ஆலய வளாகத்துக்கு உட்பட்டதாகவும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப் படவேண்டும்.
5. தற்கொலை செய்து உயிரிழப்பவரின் இறுதி அடக்கச் சடங்குகள் தொடர்பான நடைமுறை, சாதாரணமாக இறக்கும் ஏனையோருக்கு நடக்கும் அடக்கச் சடங்கு முறைக்கு ஒத்ததாக இருக்கும்.

'புதிதாய் வாழ்வோம்' என்னும் தலைப்பில் 'செயலற்ற விசுவாசம் உயிரற்றது' என்னும் கருப்பொருளில் நடைபெற்ற மேற்படி மாநாடு 1. நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் என்ற பிரிவிலும், 2. நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் என்ற பிரிவிலும், 3. நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் பிரிவிலுமாக, 3 பிரிவுகளில் நடைபெற்றது. இந்த மூன்று தலைப்புக்களிலும் எடுக்கப்பட்ட முடிவுகளில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு அமைகின்றன.

### நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் - முன்னுரிமை பெற்ற தீர்மானங்கள்

1. இல்லத் தரிசிப்பு முதற் பணியாக முன்னுரிமைப் படுத்தப்பட்டது. இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக பங்குத்தந்தை, துறவிகள், பக்திச் சபைகள் அன்பிய ஊக்குவிப்பாளர்கள், மேய்ப்புப் பணி பேரவையினர் இருக்கின்றனர்.
2. அன்பியங்களை மறைமாவட்ட முன்னுரிமைப் பணியாக ஏற்படுத்தல். இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியவராக ஆயர் இருக்கிறார்.
3. குருக்கள் பொதுநிலையினர் மத்தியில் நல்லுறவை வளர்க்கக் கூடிய கலந்துரையாடல்களை ஏற்படுத்தல். இந்தப் பணியை மறைக்கோட்ட முதல்வர்கள் - பொதுநிலையினர் கழகத்தினர் பொறுப்பேற்க வேண்டியவர்களாக உள்ளனர்.
4. ஒப்புரவு வழிபாடுகள் மற்றும் குழுத் திருப்பலிகள். இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியவராக பங்குத்தந்தை இருக்கிறார்.
5. பங்குகளில் சமாதானக் குழுக்களை அமைத்து பிணக்குகளைத் தீர்த்தல். இந்தப்பணியைப் பங்குத் தந்தை மற்றும் நீதி சமாதான ஆணைக்குழுவினர் பொறுப்பேற்க வேண்டியவர்களாக உள்ளனர்.
6. குருக்கள், துறவிகளுக்கு அன்பியம் தொடர்பான




சிறப்புப் பயிற்சிகளை வழங்குதல். இந்தப்பணியை அன்பிய ஆணைக்குழுவினர் பொறுப்பேற்பர்.
7. பங்குகளில் குடும்ப வாழ்வை மேம்படுத்தும் மறையுரைகள் மற்றும் கருத்தமர்வுகள். இந்தப்பணியை பங்குத்தந்தை மற்றும் குடும்ப ஆணைக்குழு ஆற்ற வேண்டும்.
8. குருக்கள் குழாமில் குழும வாழ்வை அதிகரிக்கும் திட்டங்கள். இந்தப்பணி குருமுதல்வர் மற்றும் மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்துக்குரியது.
9. ஏனைய சமயங்களோடு உறவை வளர்த்தல். இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக சமயங்களுடனான உரையாடலுக்கான ஆணைக் குழு, நீதி சமாதான ஆணைக்குழு, பங்குத்தந்தை ஆகியோர் இருக்கின்றனர்.
10. குருக்கள் துறவிகளுக்கிடையிலான குழும வாழ்வை முன்னேற்றும் செயற்பாடுகள். இந்தப்பணியை பொறுப்பேற்க வேண்டியவராக குருமுதல்வர் இருக்கிறார்.
11. ஞாயிறு திருப்பலியின் பின் சில நிமிடங்கள் மக்கள் ஒன்று கூடி கலந்துரையாடல்களை ஏற்படுத்தல். இந்தப்பணியை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பங்குத்தந்தை மற்றும் மேய்ப்புப் பணி பேரவைக் குரியது.

### நாங்கள் ஒரு வழிபடும் குழுமம், முன்னுரிமை பெற்ற தீர்மானங்கள்

1. எமது வழிபாடுகள் அனைத்தும் ஆழமான ஆன்மிக வாழ்வுக்கும் நல்லதொரு இறை அனுபவத்துக்கும் இட்டுச்செல்வதாக அமைவதற்குத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தல். இந்தப் பணியை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பங்குத்தந்தை, துறவிகள் வழிபாட்டுக்குழு மற்றும் பொதுநிலையினருக்குரியது.
2. வெளி விளிம்பில் உள்ளோரை வழிபாட்டில் இணைத்தல். இந்தப் பணியைப் பங்குத் தந்தை, வழிபாட்டுக் குழு மற்றும் மேய்ப்புப் பணி பேரவையினர் ஆற்றுவர்.
3. வழிபாடுகளில் சமத்துவம் பேணுதல். இந்தப் பொறுப்பு பங்குத்தந்தை, வழிபாட்டுக் குழு - மேய்ப்புப் பணி பேரவைக்குரியது.
4. குடும்பங்களில் நற்செய்திப் பகிர்வில் ஈடுபடுவதன் மூலமும் குடும்பமாக நாளாந்தம் செபிப்பதன் மூலமும் ஆழமான ஆன்மிக அனுபவத்துக்குச் செல்லுதல். இது தாய் - தந்தை - பங்குத்தந்தை, மற்றும் துறவியர்க்குரியது.
5. ஒப்புரவு அருட்சாதனத்தை அதிகரித்தல். இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் பங்குத் தந்தை மற்றும் மறைக்கல்வி நிலையம்.
6. திருமுழுக்கு, முதன் நன்மை, உறுதிப்பூசுதல் சிறப்பாக ஆயத்தம் செய்தல். பொறுப்பு பங்குத்தந்தை மற்றும் மறைக்கல்வி நிலையத்துக்குரியது.
7. திருவழிபாட்டை குறிப்பாக திருப்பலியை சிறப்பாக ஆயத்தம் செய்தல். இது பங்குத்தந்தை, வழிபாட்டுக் குழுவுக்குரியது
8. பங்கின் திருவிழா நவநாள் வழிபாடுகளில் ஒரு நாளில் பங்கில் உள்ள ஏனைய ஆயலங் களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல். பொறுப்பு பங்குத்தந்தை - பங்கு மேய்ப்புப்பணி பேரவை.
9. வழிபாட்டில் கவனிக்கப்பட வேண்டிய விடங்கள் சார்பாக மாநாட்டில் தெரிவிக் கப்பட்ட கருத்துக்கள் வழிபாட்டு நிலையம் தயாரிக்கும் வழிபாடு தொடர்பான கையேட்டில் இணைக்கப்பட்டு சமர்ப்பிக் கப்படும். பொறுப்பு மாநாட்டு ஏற்பாட்டுக் குழு - வழிபாட்டு நிலையம்
10. திருவழிபாட்டில் ஆதிக்கம் - ஆடம்பரம் தவிர்த்தல். நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பங்குத்தந்தை - வழிபாட்டுக் குழு - மேய்ப்புப் பணி பேரவைக்குரியது.

### நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் - முன்னுரிமைபெற்ற தீர்மானங்கள்

1. பங்குகளில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல். பொறுப்பு பங்குத்தந்தை மற்றும் இளையோர் ஆணைக்குழு
2. ஆலயத்தில் உள்ள பணிக்குழுக்களுக்கு சாதிய வர்க்க வேறுபாடு தொடர்பான திருச்சபையின் சமூக நீதி பற்றிய போதனைகள் மட்டில் விழிப்பை ஏற்படுத்தல் பொறுப்பானவர்கள் பங்குத்தந்தை, பங்கு மேய்ப்புப் பணி பேரவை, பொதுநிலையினர் கழகம்.
3. கொக்கிளாய் பகுதியில் ஏற்படுத்தப்பட்டு வரும் சிங்கள மக்களின் குடியேற்றம் தொடர்பான விடயத்தை பகிரங்கப்படுத்தல், மேலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுதல் தொடர்பான எமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தல். இப்பணியைப் பொறுப்பேற்க வேண்டியது நீதி சமாதான ஆணைக்குழு.
4. போதைவஸ்து பாவனை தொடர்பான விழிப்புணர்வை பங்குமட்டத்தில் ஏற்படுத்தல். பொறுப்பு நீதி சமாதான ஆணைக்குழு மற்றும் கியூடெக்கிற்குரியது.

### யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆளுமை

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தமது 40 ஆண்டுகளுக்கு மேலான அர்ப்பண வாழ்வின் ஆற்றலையும் ஆளுமையையும் அதி உச்சம் என்ற வகையில் தெட்டத்தெளிவாக மாநாட்டின் இறுதி வேளை நிரூபித்தார். தனக்கென திட்டமிடலில் நேரம் ஒதுக்கப்படாதபோதும், நிகழ்ச்சி நிரலின் உட்புகுந்து தனது திட்டத்தையும், தீர்மானத்தையும், நிர்வாகத் திறனையும் ஐயம்திரிபற நிருபித்தார். தமது ஆளுகைக்குட்பட்ட முழுப்பிரதேசத்தின் 400 குருக்கள், துறவியர், பொதுநிலையினர் முன் தாம் தமது பணிக் காலத்தில் யாழ். மறைமாவட்டத்தை நகர்த்தவிருக்கும் பாதையைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டினார்.

ஒரு மறைமாவட்ட ஆயர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக அவர் திகழ்ந்தார் என்பதில் எந்த ஐயமுமில்லை. கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குச் சட்டம் ஒழுங்கு என்பவற்றைத் தாண்டி, தமது பங்குத் தந்தைப்பணி, ஆசிரியப்பணி, அதிபர் பணி, கொத்தணி அதிபர் பணி, குரு முதல்வர்ப் பணி என்பவற்றின் மூல மாகப் தெளிவான, அதேவேளை முடிவான பதில்களை, முடிவாகத் தந்தார். மறை மாவட்டத்தின் நிதி நிலமையை வெட்ட வெளிச்சமாகத் திறந்து, எல்லோர் முன்னிலையிலும் சொன்னார். தேவை என்ன - வரவு என்ன செலவு என்ன எனத் தெரிவாக்கிய போது சபை மௌனமாகியது. நேர்மையான பணிகளை விட்டுக் குறுக்கு வழிகளில் தொடர்பு கொள்வோர் - மொட்டைக்க கடிதம் எழுதுவோர் தொடர்பாக இங்கு எந்தக் கவனமும் எடுக்கப்படமாட்டாது. அது மடத்தமான வேலை - எந்த அர்த்தமும் இல்லாத வேலை - அது இந்த நிர்வாகத்தில் எடுபடாது எனத் தெளிவாகத் தெரிவித்தார். இவர் யாழ். மறை மாவட் டத்தை இறை திட்டப்படி சிறப்புற வழிநடத்த இறை ஆசி ரும் இறை வரங்களும் கிடைக்கச் செபிப்போம்.



# ஆஸ்திரேலியா பூர்வீகக் குடிகள்

நியூசிலாந்து சிற்சபேசன்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கடல் மட்டத்திலிருந்து அதிக உயரமற்ற மிகவும் குளிரான பிரதேசமாக ஆஸ்திரேலியா காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தெற்கேயுள்ள தாஸ்மேனியாவும் வடக்கேயுள்ள பப்புவா நியூகினியாவும் பூகோள ரீதியாக ஆஸ்திரேலியாப் பெருநிலப்பரப்புடன் இணைந்திருந்ததாம். அதனால் ஆசியக்கண்டத்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான கடற்தூரம் குறைவானதாகவும் காணப்பட்டிருக்கின்றது. ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் சுமார் நாற்பதாயிரம் ஆண்டுகளாக அவர்கள் அங்கு வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. அண்மையில் நியூசவுத் வேல்ஸில் உள்ள முங்கோ ஏரிக்கரையோரம் கண்டெடுக்கப்பட்ட எலும்புத்துண்டங்களை பரிசோதனை செய்தபோது அவை இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவைஎனக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வகையினதாக ஆஸ்திரேலிய மண்ணுக்கும் பூர்வீகக்குடிகளுக்கும் இடையேயான பன்னெடுங்காலப் பிணைப்பு நிறுவப்பட்டு வருகின்றது.

## குடியமைவு

ஆஸ்திரேலியா எங்கும் பூர்வீகக் குடிகள் குழுக்களாக ஆங்காங்கே வாழ்ந்தனர். பல்வேறுபட்ட மொழிகளைப் பேசினர். சீரிய சமூகக் கட்டமைப்புக்களைக் கொண்டிருந்தனர். இயற்கையோடு இரண்டறக்கலந்த வாழ்வு. வனவிலங்குகள், இலை, கொடி, தாவரங்கள் என்பன உணவாகின.

நிலபுலங்களின் பூகோள அமைப்பு மற்றும் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக்கொண்டனர். கடற்கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் கடல்சார்ந்த தொழில், உணவுப் பாங்குகள், பழக்கவழக்கங்கள் எனவும் சமாந்தர மலைப்பாங்கான பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் அந்தச் சூழ்நிலைகளுக்கேற்பவும் வாழ்வை அமைத்துக் கொண்டனர்.

அவர்களுடைய சமூகத்தில் சடங்குகளும் சம்பிர தாயங்களும் கைக் கொள்ளப்பட்டன. முதியவர்களின் வழிகாட்டுதலும் நெறிப்படுத்தலும் கிடைத்தன. அவர்கள் வாழ்வோடு இயைந்த தனித்துவமான குணாம்சம் 'கனவியம்' என்பதாகும். இது ஒரு வகையில் மதம் சார்ந்த தன்மையே, இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் என்பது போன்றதே 'கனவியம்' ஆகும்

. அன்று புனிதர்கள் என்போர் தட்டையான சாம் பல் நிறப் பூமிப் பிரதேசத்திலிருந்து எழுந்து உணவு தேடப் போனார்கள் என்பதும், அவ்வாறான பயணத்தின்போதே மண்ணில் மலைகளையும் சமாந்தரங்களையும் நதிகளையும் இன்னோரன்ன இயற்கைச் செல்வங்களையும் உருவாக்கினார்கள்து வும் கனவியத்தின் பிரதான நம்பிக்கையாகும். கனவியம் என்பது பழைமையான கதைகள், ஓவியங்கள், கவிதை கள் என்பன வாயிலாகத் தலைமுறைகளைத் தாண்டுகின்றது.

## அந்நியர் வருகை

தளபதி ஜேம்ஸ் குக் இன் கடலணி 1770ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவை வந்தடைந்தபோது பூர்வீகக் குடிகள் வாழ்வு கேள்விக்குட்படுத்தப்பட்டது. அன்றைய காலப் பகுதியில் சுமார் மூன்று இலட்சம் பூர்வீகக் குடிமக்கள் 600 வரையிலான குழுக்களாக வாழ்ந்தனர். அவர்களிடையே சுமார் 200 வரையிலான மொழிகள் அல்லது மொழி வழக்குகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அந்நியர்கள் 1788இல் பெருமளவில் வந்திறங்கியதும் பூர்வீகக்குடிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். 1795ஆம் ஆண்டிலிருந்து தமது நிலப்பரப்பை பாதுகாக்கக் கடுமையான போர்களை நடத்தினார்கள். பல உயிர்களைப் பறிகொடுத்தார்கள்.

1928 ஆம் ஆண்டிலேயே வடகுறுநிலத்தி லுள்ள கொனிஸ்டோனில் அதிகளவிலான பூர்வீகக் குடி கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுவே கடைசியாகப் பதிவுசெய்யப்பட்ட துர்சம்பவமாகக் கூறப்படுகின்றது.

போர்களாலும் புதியவர்களுடைய வருகையோடு கூடிய நோய்கள் எனப்பட்ட காரணிகளாலும் பூர்வீகக் குடிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. பூர்வீகக்குடிகளைத் தமது வாழ்வுப்பாணிக்கு (அடிமை) உள்வாங்கி விட வேண்டும் என்ற முனைப்பு புதியவர்களி டத்தில் மேலோங்கியிருந்தது. அதற்கான செயன்முறைகள் வலிமையுடன் முடுக்கி விடப்பட்டன.

## ஆட்சி முறைமை

1900ஆம் ஆண்டு ஆடித் திங்கள் ஒன்பதாம் நாள் பிரித்தானிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1901 ஆண்டு தைத் திங்கள் முதலாம் நாள் நடைமுறைப் படுத்தப்பட்ட அரசியல்யாப்பானது தனித்து இயங்கிய கொலனிகளை ஆஸ்திரேலிய சமஷ்டி அரசமைப்பின் கீழ் கொணர்ந்தது. ஆனால் அது பூர்வீகக் குடிகளை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளவில்லை. அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை. மக்கள் தொகை கணிப்பீடுகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரசின்சமூக நலத்திட்டங்களினால் பயன்பெறமுடியவில்லை என்பதாகிய இன்னோரன்ன இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது.

## பிரக்ஞையும் எழுச்சியும்

அனைத்துப் பூர்வீகக் குடிகளின் வாழ்வியல் அவலங்கள் குறித்த கேள்வி பரவலாக ஏற்படத் தொடங்கியது. நிலபுலங்களைமீட்டெடுப்பதற்கானபோராட்டங்கள்ஆங்காங்கே முன்னெடுகப்பட்டன. 1932இல் 'ஆஸ்திரேலிய பூர்வீகக் குடியினர் லீக்' விக்டோறியாவில் அமைக்கப்பட்டது. 1937 இல் பூர்வீகக் குடியினர் முன்னேற்றச் சங்கம் நியூச வுத் வேல்ஸில் உருவாகியது. உரிமைக்குரல்கள் உரத்து ஒலிக்க ஆரம்பித்தன. 1965இல் வடகுறுநிலத்தின் வேவ்ஹில் ஸ்டேசனில் குருஞ்சி மக்களுடைய வேலைநிறுத்தம் நடைபெற்றது. சம்பளப் போராட்டமாக ஆரம்பித்து நிலங்களை மீளக்கையளிக்கக் கோருவதாக உருப்பெற்றது.

1971 இல் யொலுங்கு மக்களுடைய நபால் கோவுக்கு எதிரான எழுச்சி ஏற்பட்டது. யொழுங்கு மக்கள் வழக்குத் தொடுத்தார் கள். பூர்வீகக் குடிகள் நிலங்களின் சொந்தக்காரர்களாக இருந்திருக்கலாம். ஆனால் 1770இல் தளபதி ஜேம்ஸ் குக் ஆஸ்திரேலியாவைக் கைப்பற்றியபோது பூர்வீகக் குடிகள் தமது நிலம் மீதான பூர்வீக உரித்தை இழந்து விட்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. குருஞ்சியும் யொலுங் கும் பூர்வீகக்குடியினரின் நிலஉரிமை போராட்டத்தின் நிகழ்வுகளாகும்.

## காய்கனியாகி

1967இல் அரசமைப்பில் இரண்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் அதுகாறும் வடகுறுநிலம் மற்றும் ஆஸ்திரேலியத் தலைநகர் உட்பட்ட குறுநிலம் ஆகியவற்றில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் மீதான சட்டவாக்கும் அதிகாரத்தை மட்டுமே கொண்டிருந்த சமஷ்டி அரசு ஆஸ்திரேலியா முழுவதிலும் வாழ்ந்த அனைத்து பூர்வீகக் குடிகள் மீதான சட்டவாக்கும் அதிகாரத்தை பெற்றது. இரண்டாவதாக மக்கள் தொகைக் கணிப்பீடுகளில் பூர்வீகக் குடிகள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான சரத்தும் இடம்பெற்றது. ஆஸ்திரேலிய குடிமக்களாக பூர்வீகக் குடிகள் பூர்வாங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தடம் பதிக்கும் நிகழ்வாகும்.



## புதியதோர் உலகம்

கால ஓட்டத்தில் பூர்வீகக்குடிகள் மற்றும் அவர்களுடைய உரிமைகள் . அவை தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் என்பன ஆஸ்திரேலிய பொதுசமூக அமைவின் பேசுபடு பொருளாகியது. பூர்வீகக் குடிகள் விடயம் அவர்தம் நில உரிமைகள் என்பவற்றை முன்னிலைப்படுத்திய விட்லம் தலைமையிலான தொழிற்கட்சி 23 வருடங்களின் பின்னர், 1972இல் ஆட்சிபீடமேறியது.

நில உரிமை விடயத்தில் விட்லம் அரசு முனைந்து செயற்பட அடுத்து வந்த மல்கம் பிஃரேசர் அரசு நில உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. தெற்கு ஆஸ்திரேலிய மாநிலம் முன்மாதிரியாகச் செயற்பட்டு பிட்ஜட்ஜன்ஜரா மக்களுடைய நிலத்தைக் கையளித்தது. பிற மாநிலங்களும் குறுநிலங் களும் அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தன. நபால் கோவுக்கு எதிரான யொலுங்கு மக்களுடைய வழக்கின் 1971ஆம் ஆண்டு தீர்ப்பு பரிசீலனைக்கு உட்பட்டது. மபோ வழக்கின் தீர்ப்பு 1992 இல் வெளியானபோது அது பூர்வீகக்குடிகளின் நிலஉரிமையை வரையறுத் தது. 1993இல் பூர்வீக நில உரிமச் சட்டம் உருவாகியது. இதன் கீழ் இதுகாறும் பல நிலங்கள் மீதான பூர்வீக உரித்து கோரப்பட்டுள்ளது.


காவலில் தடுத்துவைக்கப்படும்போது இறந்த பூர்வீகக் குடியினர் மற்றும் அவர்களின் அதிகமான கைதுகள் என்பவற்றை விசாரனை செய்ய இராச்சிய ஆணையம் 1987இல் அமைக்கப்பட்டது.

பூர்வீகக்குடியினரின் குழந்தைகளை அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பிரித்த செயற்பாடுகளை விசாரிக்க 1995இல் ஆணையம் அமைக்கப்பட்டு அதனுடைய தீர்ப்பும் வெளியாகியது.

1973இல் தேசிய பூர்வீகக் குடி ஆலோசனை குழுவும் அதனுடைய இடத்தில் 1977இல் தேசிய பூர்வீகக் குடி மாநாடும் பின்னர் 1990 இல் பூர்வீகக் குடி மற்றும் ரோறஸ் ஸ்ரெயிட் ஐலண்டர் ஆணையமும் அமைக்கப்பட்டன. இவை பூர்வீகக் குடியினர் அலுவல்களில் அரசுக்கு ஆலோசனையும் அனுசரணையும் வழங்குகின்றன.

பூர்வீகக் குடிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பரிகாரம் செய்ய வேண்டுமென்பதில் பரந்துபட்ட ஆஸ்திரேலியா சமூகம் உறுதிகொண்டுள்ள பாங்கு தெரிகின்றது. முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வுமுறை பழங்கதையாகிப் வருடங்கள் பல ஓடி விட்டன.

இயற்கையுடனிருந்த தொடர்பில் மண்ணுடனிருந்த மனமகிழ் உறவில் ஏகப்பட்ட விரிசல்கள் ஏற்பட்டுவிட்டன. இருப்பினும் நிலபுலங்களைத் தக்கவைத்துக் கொள்ள எடுத்த முயற்சிகள் பாட்டன் போட்ட விதை, பேரன் உண்ணு கின்ற கனி என்பதாக ஈடேறுகின்றது. நம்பிக்கைக்கு நாற்றுமேடை அமைக்கப்படுகின்றது! மலர்கள் மகிழ் வுடன் மலரும் காலத்துக்கான காத்திருப்புக்கள் ஆரம்பித்துவிட்டன என்றும் எண்ணத் தோன்று கின்றது.





மதங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணும் அமைப்பின் அனுசரணையுடன் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் அண்மையில் சிவநகர் முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அநுராதபுரத்திற்குச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுலா சென்ற குழுவை அநுராதபுரம் மாவட்டச் செயலக மேலதிக அரச அதிபர் சமன், புனித வெள்ளரசு மரம் உள்ள மகாபோதி விகாரையில் வரவேற்றார். நிகழ்வில் மதத் தலைவர்களும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளும் கலந்துகொண்டனர். (ற-9)



கிளிநொச்சி மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சிப் பிரதேச பெற்றோர்களுக்கான "பெற்றோரின் மது பாவனையால் பிள்ளைகள் எவ்விதம் சீரழிகின்றனர்" எனும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் வட்டக்கச்சி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந்தூரன் கருத்துரைகளை வழங்கினார். (ற-9)



புதிதாய் தெரிவுசெய்யப்பட்ட மாணவமுதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் விழா அண்மையில் செம்மலை மகாவித்தியாலய க.சிவக்கொழுந்து மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ற-ரி7)



பன்னாட்டு சமாதான தினத்தை முன்னிட்டு கொழும்பு கரிடாஸ் செடெக் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட "போர் முதல் சமாதானம் வரை" மாநாட்டுக்கு பிரதம அதிதியாகக் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், அருட் தந்தை ஒஸ்வர்ட் பர்த் அடிகளார், சிறப்பு அதிதி பாக்கியஜோதி சரவண முத்து ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ரி)





மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் வித்தியாலய அரங்கில் நடைபெற்றது. அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜாவும் கலந்து கொண்டனர். மாணவர்களின் தமிழ், ஆங்கில மொழிகளிலான கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ற-9)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் அய்யூபின் 2016ஆம் ஆண்டுக்கான நிதி பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் யாழ். மாவட்டத்தில் பல உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின். அய்யூப், யாழ். முஸ்லிம் பிரமுகர்களான என்.எம்.அப்துல்லாஹ், நிபாஹிர், நிராஸ், லாபிர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ரி)



நீதி அமைச்சால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்ட சாவகச்சேரி நடுவர் சபையின் உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த மாதம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சாவகச்சேரி நடுவர் சபை உறுப்பினர்கள் 24 பேர் உறுதியேற்றனர். சமாதான நீதிவான்களுக்கான நியமனக் கடிதங்களை மாவட்ட நீதிபதி கையளித்தார். (ற-ரி, ஒ)



காமுவன் சுழிபுரத்துக்குட்பட்ட பகுதிக்கு தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் நட்டார். அந்தப் பகுதி சனசமூக நிலையத்துக்கு விளையாட்டு உபகரணங்களையும் அவர் வழங்கினார். (ற-ரி)



வட்டு. வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் ஆலய கணேச குண்டத்தில் தீர்த் தோற்சவம் நடைபெறுவதையும், தீர்த்த மாடி வெண்மலர் அலங்கார ரூபராய் பெருமான் வருவதையும் காணலாம். (ற-ரி)



யாழ்ப்பாணம் புதிய சோனக தெரு அல் அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ரொசான் தமீம் அண்மையில் வழங்கினார். (ரி)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன் குளம் கலைமகள் முன்பள்ளியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களால் மலர்மாலை அணிவித்து அழைத்துவரப்பட்ட ஆசிரியர்களுக்கு மாணவர்களாலும் பெற்றோர்களாலும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ற-ரி7)





திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியில் சிறுவர் தின கொண்டாட்டங்கள் முன்பள்ளியின் அதிபர் திருமதி மீரா குணசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.
விழாவின் சிறப்பு விருந்தினராக தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சுந்தரலிங்கம் காண்டீபன் (திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளரும் வவுனியா மாவட்ட சாரணிய உதவி ஆணையாளரும்) கலந்து கொண்டார். (ற-ரி)





குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் சென்.ஜேம்ஸ் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் முதற்கட்டமாக 40 மகளிருக்குத் தையல் பயிற்சி வழங்கியது. பயிற்சி நிறைவில் மாணவிகளின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிட்டனர். பயிற்சியில் பங்கு கொண்ட மாணவிகள் தமது தயா ரிப்புகளுக்கான விளக்கங்களை வழங்கினர். (ற-51)



ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட சந்தியில் மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் பயணிகள் நிழற்குடை அண்மையில் திறக்கப்பட்டது. நிகழ்வில் அமைச்சரின் செயலாளர் ப.சத்தியசீலன், அமைச்சரின் இணைப்பாளர் பா.சிந்துஜன், ஓமந்தை கிராம உத்தியோகத்தர் செல்வி அனுசா, மற்றும் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தை சேர்ந்தோர் கலந்துகொண்டனர். (ற-ரி)





பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் நலனிலும் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டு மகிழ்சியான சூழலை அவர்களுக்கு வழங்கிடுவோம் எனும் தொனிப்பொருளில் சுழிபுரம் றோட்டறக் கழகத்தால் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் அராலி வள்ளியம்மை பாடசாலையில் நடத்தப்பட்டன. நிகழ்வில் பாடசாலையை அண்மித்த பகுதியில் சிறுவர்களுடைய விழிப்புணர்வு நடைபவனியும் இடம்பெற்றது. (ற-21)

# டெங்கு கட்டுப்பாட்டில் கிராம அலுவலர்கள் பங்களிப்புத் தொடர்பில் வெடித்தது சர்ச்சை

தென்மராட்சி, ஒக். 9
டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குக் கிராம அலுவலர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கவில்லை என்று சுகாதாரத் திணைக்களத்தினர் குற்றஞ்சாட்டினர்.

சுகாதாரத் திணைக்களத்தினரின் குற்றச்சாட்டில் உண்மை இல்லை, கிராம அலுவலர்கள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக் கையில் முழுமையாகப் பங்கெடுத்தனர் என்று சாவகச்சேரி பிரதேச செயலர் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரம் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரையில் நடைபெற்றது. சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் டெங்குத் தொற்று அதிகம் இனங்காணப்பட்ட 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்தச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் அந்தந்தப் பிரிவுகளின் கிராம அலுவலர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. பொலிஸார், படையினர், பிரதேச செயலக அலுவலர்கள், தொண்டர்கள், உள்ளூராட்சி சபையினர் அணி அணியாகப் பிரிந்து வீடு வீடாகப் பரிசோதனைகளில் ஈடுபட்டனர். காலையில் எல்லோரும் ஒன்று கூடும் இடத்திற்கு வரும் கிராம அலுவலர்கள் பின்னர் தமது மோட்டார் சைக்கிள்களில் சென்று விடுகின்றனர். டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை - என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குற்றம் சுமத்தினர்.

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகம் காணப்படுகின்றது. டெங் குத் தொற்று அதிகம் காணப்படும் இடங் களில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத் தில் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு வாரம் தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. 19 கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு டெங்கு வாரத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. டெங்குக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளில் அனைத்து கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் போன்றோரைக் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தோம். அனைத்து அலுவலர்களும் பரிசோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

டெங்குப் பரிசோதனை இடம்பெறும் பிரிவு கிராம அலுவலர் ஓர் அணியுடன் இணைந்து பரிசோதனையில் ஈடுபடாமல் அனைத்துப் அணிகளின் தேவைகளையும் கண்காணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர்கள் அனைத்துப் பகுதிகளிலும் வாகனத்தில் சென்று பார்வையிட்டனர்.

நானும் தலைமைக் காரியாலய கிராம அலுவலரும் அந்தந்த இடங்களில் இடம்பெற்ற டெங்கு பரிசோதனைகளை நேரடியாகக் கண்காணித்தோம்.

பிரதேச செயலகத்தில் நடத்தப்படும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உட்பட சுகாதாரம், போசாக்கு தொடர்பான எந்த வொரு கூட்டங்களிலும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி கலந்து கொள்வதில்லை- என்று தெரிவித்தார் சாவகச்சேரி பிரதேச செயலர்.

"சுகாதாரம், உள்ளூராட்சி, கல்வி விடயங்களில் கூட்டாக இயங்க வேண்டிய பிரதேச செயலகம் இவ்வாறான கூட்டங்களுக்கு எமக்கு முறையாக அறிவிப்பதில்லை. கடிதங்கள் கிடைத்தால் கூட்டங்களுக்குச் செல்வோம். சுகாதார வைத்திய அதிகாரிக்கு வேலைப்பளு காணப்பட்டால் பிரதிநிதி அனுப்பப்படுவார். கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு எமக்கு அழைப்பு அனுப்பவில்லை. சுகாதார வைத்திய அதிகாரி சுகவீனம் காரணமாக கொழும்பில் நின்றபோதிலும் கூட்டம் நடைபெறுகின்றது என்று அறிந்து எமது பிரதிநிதியை அனுப்பி வைத்தோம் - என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் தெரிவித்தனர். (ற-5,9)

## சாரதிக்குத் தண்டம்

தென்மராட்சி, ஒக்.9
மன்னாரில் இருந்து பளைக்கு அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் அனுமதிக்கப்பட்ட வழிக்கு மாறாக வேறு வழியால் பயணித்த போது பொலிஸாரிடம் சிக்கியது.

வழக்கை விசாரித்த நீதிவான் அனுமதிப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட மார்க்கத்தால் மணலைக் கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவித்ததுடன் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ற-9)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக் 9
வெலிபன்ன பகுதியில் 5.46 கிராம் ஹெரோயினை வைத்திருந்த சந்தேக நபரை, பொலிஸார் கைது செய்துள்ளனர். காலியை வசிப்பிடமாகக் கொண்ட குறித்த நபர், வெகு நாள்களாக இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. (தி)



## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையே காரணம்என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். இந்தப் பயணத்தின் ஓரங்கமாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளரை ஜனாதிபதி மைத்திரிபால சந்தித்துக் கலந்துரையாடினார்.

அரசமைப்பு உருவாக்கம், அதிகாரப் பரவல், போர்க்குற்ற விசாரணை போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை என்று இந்தக் கலந்துரையாடலின்போது ஜோன் கெரி குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனதலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் காணப்படுகின்ற உள்ளக இனவாத நிலையே இவற்றுக்குக் காரணம் என்றும் அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையின் இறையாண்மைக்குப் பங்கம் ஏற்படுத்தும் விடயங்களைத் தேசிய அளவில் முன்னெடுக்க முடியாது என்று ஜோன் கெரியிடம் விளங்கப்படுத்தியுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது. (த)

### வீடு விற்பனைக்கு

தெஹிவளை Vanderwert Place இல் 2படுக்கையறை, 2 குளியலறைகளுடன் கூடிய காற்றோட்டமான தொடர்மாடி வீடு விற்பனைக்கு.கிழக்கு வாசல்
800 Sqft, price, 11.5 million

077 934 7222

### விதைநெல் விற்பனைக்கு

விவசாயத் திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 95 வீத முளைத் திறனுடைய B.G 406 ரக விதைநெல் அத்தாட்சிப் பத்திரத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 6592044

### கடை வாடகைக்கு

இல.142, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் (அம்மன் வீதி அருகில்) கடை வாடகைக்கு உண்டு.

071 626 8617, 077 330 1565

### Spouse Visa

உங்கள் துணை வெளிநாட்டில் வசிக்கின்றார்களா? அவரிடம் செல்ல,

* முதன் முறையாக விண்ணப்பிக்கப் போகின்றீர்களா?
* ஏற்கனவே விண்ணப்பித்து விசா கிடைக்கவில்லையா?

சரியான முறையில் விண்ணப்பிக்கத் தவறினால் வருடக்கணக்காக காத்திருக்க வேண்டிவரும் அல்லது விசா நிராகரிக்கப்படலாம். சிறந்த முறையில் ஆலோசனை பெற்று விண்ணப்பிக்க இன்றே WINSTAR VISA CONSULTANTS ஐ நாடுங்கள்.

மக்கள் நம்பிக்கையைப் பெற்று இயங்கி வரும் ஒரே ஒரு நிறுவனம்.

WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டி சந்தி, பலாலி வீதி,
திருநெல்வேலி.
070 2363676

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்திலுள்ள மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. சுன்னாகம் பிரதேசத்தை அண்டியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 505 7371

### ஆங்கில ஆசிரியர் தேவை

கிட்ஸ் பார்க்

சுயவிவரக் கோவையுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:-
077 656 5258
021 205 4654

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

### பணியாளர் தேவை

கணினி அறிவுள்ள பெண் ஒருவரும், Classroom மேற்பார்வையாளர் ஒருவரும் தேவை. 13.10.2016 (வியாழன்) மாலை 4 மணிக்கு நேரில் வரவும்.

NEW SCIENCE WORLD
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
077 3364055

### வாடகைக்கு

மின்சார நிலைய வீதியில் யாழ். வைத்தியசாலை மற்றும் பேருந்துத் தரிப்பிடத்துக்கும் அண்மையில் முதலாம் மாடியில் வியாபாரம் அல்லது அலுவலக பாவனைக்கு ஏற்ற இடம் வாடகைக்கு உண்டு.

077 0870705

### பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 077 2626944

### காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவில் கிழக்கு, இல. 60, உடையார் லேனில் 3¾ பரப்பு வெற்றுக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.பகுதியாகவும் கொடுக்கப்படும்

021 221 3632, 077 751 3872

### வீடு விற்பனைக்கு

கட்டுவன் வீதி, மல்லாகத்தில் ரயில் தண்டவாளத்திற்கு அருகில் கலைமகள் முன்பள்ளிக்கு எதிரே 3 பரப்புக் காணி சுற்றுமதிலுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 2719229

### காணி தேவை

நல்லூர் Temple Road அல்லது ஆலயத்தை அண்டிய பகுதியில் 3 பரப்பிற்குட்பட்ட காணி தேவை.

தொடர்பு:- 077 6095604

### Vacancy for Montessori Teachers (English Medium)

We are seeking innovative qualified Montessori teachers to join the English faculty at our co educating school you will be hard working and enthusiastic teaching professional with excellent knowledge of English.

The position will involve teaching Montesson and also assisting in the encouragement of extracurricular activities. The applicant will be a motivated individual with a keen interest in encouraging and inspiring students to love learning in English medium.

Only females

Tel No: 077 2444172 / 021 2226242

### காணி தேவை

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து 5Km சுற்றளவுக்குள் 1 1/2 - 3 பரப்புக் காணி தேவை. (தரகர்கள் தேவையில்லை)

தொடர்பு: 077 4530423

### வீடு வாடகைக்குத் தேவை

சமூக சேவைகள் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.மாநகரசபை அல்லது அதனை அண்டிய பகுதிகளில் சகல வசதிகளும் கூடிய ஓரளவான வீடு வாடகைக்குத் தேவை. பிரயாணவசதி கொண்ட இடம் விரும்பத்தக்கது.

077 349 5801

### மணமகள் தேவை

யாழ்.இந்து 1979 சதயம், மொத்த கிரகபாவம் 54, கொழும்பில் தனியார் தொழில்புரியும் மணமகனுக்குப் பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர்.

077 640 8772, 011 243 6669

### கடையும் வீடும் விற்பனைக்கு

2 பரப்புக் காணி 5 கடைகளுடன் கூடிய வீட்டுடன் றக்கா வீதியில் உடன் விற்பனைக்கு உண்டு. (சுற்று மதிலுடன்)

தொடர்பு: 077 2719229

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - 2016
### மு/செம்மலை மகாவித்தியாலயம்

மு/செம்மலை மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமானது சங்கத்தின் தலைவரும் பாடசாலை அதிபருமான திரு.சி.பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் எமது பாடசாலைக்கான 2017 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் கடந்த கால நிகழ்வுகளின் மதிப்பீடு புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம் பெறவுள்ளன.

பழைய மாணவர்களாகிய நாங்கள் - எமது பாடசாலையின் துரித பரிணாம வளர்ச்சியில் நாமும் பங்காளிகளாக மாறுவதற்கான சந்தர்ப்பத்தினை எமக்கு நாமே உருவாக்கிக்கொள்வோம்.

காலம் - 12.10.2016 (புதன்கிழமை)
நேரம் - பி.ப. 4 மணி
இடம் - பாடசாலை சிவக்கொழுந்து மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழையமாணவர் சங்கம்,
மு/செம்மலை மகாவித்தியாலயம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
1927.01.02

விண்ணில்
2015.09.21

செல்வி **தங்கம்மா நல்லதம்பி**

(ஓய்வு நிலை அதிபர் - அச்செழு மெதடிஸ்த மிசன் பாடசாலை)


திதி – அட்டமி (09.10.2016)

அன்னையாய் எமக்கெல்லாம் அன்புதனை பொழிந்தவரே
அறிவுரைகள் ஆறுதல்கள் அனைவருக்கும் ஈர்ந்தவரே
சமூகத் தொண்டதனை சளைக்காமல் செய்தவரே
தங்கம்மா ரீச்ச ரென்றால் அனைவருக்கும் தெரியுமெல்லோ
எம்மை எல்லாம் விட்டுச் சென்று ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் ஆன்மா
அம்மன் பாதத்தில் நற்கதியடைய வேண்டும் என்று
நாளும் உம் நினைவுகளில் வாழுகின்றோம் உம்மக்கள்.

குமரகோட்டம்,
அச்செழு, நீர்வேலி.

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**சிவலிங்கம் லஜிதன்**

கடந்த 26.08.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது செல்வம் சிவலிங்கம் லஜிதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைக்கள் கடந்த 07.10.2016 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

அத்துடன் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

## இரத்தினபுரியில்

தெரிவித்ததாவது:
ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் நாட்டு மக்கள் அதற்காக மூன்று வருடங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. மக்களின் இந்த எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறும். அனைத்து முற்போக்கு சக்திகளையும் இணைத்துக் கொண்டு எதிர்க்கட்சியிலுள்ள கூட்டு எதிர்க்கட்சி, ஆளும் கட்சியாக ஆட்சி பீடம் ஏறும். நாடாளுமன்றிலுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மைப் பலத்தை எனது பக்கம் இழுத்துக் கொள்வது பெரிய விடயமல்ல. தேவைப்படின் ஓரிரு நாள்களிலேயே அதனைச் செய்து விடுவேன்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்து, சுதந்திரக் கட்சியின் தனித்துவத்தை அழித்துவிட்டார்.
புதிய அரசமைப்பு ஊடாக நாட்டைப் பிளவுபடுத்த மைத்திரி ரணில் அரசு சதி செய்கின்றது. இதற்கு இடமளிக்க முடியாது. படைவீரர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்து ஒருங்கிணைத்த நாட்டை மீண்டும் பிளவுபடுத்த இடமளிக்கக்கூடாது. இந்த அரசுக்கு எதிராக அனைவரும் அணி திரளவேண்டும்.
நாட்டு மக்களின் உரிமைகளை வெளிநாட்டவர்களிடம் விற்று, குறிப்பாக மாணிக்கக் கல்லையும் விற்கும் உரிமையை வெள்ளைக்காரனிடம் தாரை வார்த்துக் கொடுக்க இந்த அரசு முற்பட்டுள்ளது. இவற்றை விமர்சித்தால் நாங்கள் தேசத்துரோகிகளாம். அது மாத்திரமன்றி அரச பயங்கரவாதத்தை அனைத்து தரப்புக்கும் கட்டவிழ்த்துவிட்டு, அச்சுறுத்தி அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்த அரசு முனைகின்றது.
நீதிமன்றத்திற்கு சட்ட மருத்துவ அதிகாரியொருவர் அறிக்கை சமர்ப்பித்தால், அனைவரையும் அச்சுறுத்தி மருத்துவ அறிக்கையை மாற்றியமைக்க முயற்சிக்கின்றனர். அது மாத்திரமன்றி பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர், பெரியளவிலான இலஞ்ச ஊழல் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றைப் பயன்படுத்தி அனைவரையும் கைது செய்து, விளக்கமறியலில் வைத்து மிரட்டி ஆட்சியைக் கொண்டுசெல்ல முற்பட்டுள்ளனர்.
இதனாலேயே நாட்டு மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துமாறு மக்கள் எம்மை வலியுறுத்தி நிற்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக்கொடுக்க நான் தயாராக இருக்கின்றேன். இவற்றுக்கு தலைமை தாங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.
நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றியமைப்பது பெரிய விடயமல்ல. நான்கு ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. கூடிய விரைவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றமடையும்.
இவற்றைக் கேட்டு அரசிலுள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்னால் உளவுத்துறையை கண்காணிப்பில் ஈடுபடுத்துவர். எனது வீட்டிற்கு முன்னாலும் சிறப்புப் படையணியொன்றை நிறுத்தியுள்ளனர். எனது வீட்டிற்கு வந்து செல்பவர்களை கண்காணிக்கவே இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.
நாங்கள் இந்த ஆட்சியைக் கவிழ்க்க நினைத்தால் இரகசியமாகச் சதி செய்யமாட்டோம். வெளிப்படையாக ஆட்சியைக் கவிழ்க்க நடவடிக்கை எடுப்போம். அதுதான் எமது வழக்கம். அதனால் ஆட்சியில் உள்ளவர்கள் இரகசிய சதிப் புரட்சிகள் இடம்பெறும் என்று அஞ்சத் தேவையில்லை. இந்த உறுதிமொழியை எங்களால் ஆட்சியாளர்களுக்கு வழங்க முடியும் - என்றார். (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கற்கண்டு சிங்கன்

தோற்றம்
12
.
06
.
1937



மறைவு
07
.
10
.
2016

கலைமகள் வீதி, இமையாணனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கற்கண்டு சிங்கன் கடந்த (07.10.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சிங்கனின் அன்பு மனைவியும் சிவநாதன், தெய்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவலிங்கம் (இத்தாலி), சிறிவதனா, இரஞ்சிதமலர், கணேசலிங்கம் (ஜேர்மனி), நேசலிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் நவரத்தினம், இராசன், தங்கமலர், ரஞ்சிதமலர், சோபிதா ஆகியோரின் அன்பு மாமியும் ரஞ்சிதமலர், தவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சர்மிளா-இளந்தீபன், சிந்துஜன்-தமயந்தி, சுதன், கவிப்பிரியா-ரகுபதி, சாமினா-எழில்ரஞ்சன், கார்த்தீபன், கஜேந்திரன், பிரசாந்தினி-கிருபானந்தன், குகசாளினி, அபிலாஷினி, அக்ஷயன், ஹனீஷ்கா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரிந்திகன், பபிஷாயினி, கிரோசனன், யதுர்ஷனன், அஜிந்த், அனிஷ், நிகித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைமகள் வீதி,**
**இமையாணன்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி சின்னம்மா செல்லத்துரை



மூத்தவிநாயகர் வீதி, 2ஆம் ஒழுங்கை, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் (பிரான்ஸ்), மகேந்திரன், உதயகுமாரி (நோர்வே), சாந்தகுமாரி (பிரான்ஸ்), பிரபாகரன் (அஞ்சலகம் - யாழ்ப்பாணம்), கமலகுமாரி, வசந்தகுமாரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் தவமலர், ஜெகதீஸ்வரி, அருள்நம்பி, பற்குணம், பிரியா, பிரசாந், சுரேஷ் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible]ம் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] முத்த[illegible]ர் வீதி,**
**[illegible]ஆம் ஒ[illegible] நல்லூ[illegible]ர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## சோழ...

இரத்தினபுரியில் பொது எதிரணியினர் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
தென்னிந்தியாவுடன், இணைந்து பொருளாதார வலயமொன்றை ஏற்படுத்தி நாட்டைச் சிங்கப்பூராக மாற்றுவேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். ராமர் பாலத்தை நிர்மாணித்து, இராமேஸ்வரத்தையும், தலை மன்னாரையும் தரை வழியாக இணைக்கத்திட்டமிட்டுள்ளனர். தலைமன்னாரிலிருந்து குருநாகல் ஊடாக கொழும்புக்கு நெடுஞ்சாலையொன்றை அமைத்துக் கொடுப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளது. இவை அனைத்துக்கும் எட்கா உடன்படிக்கையே காரணம்.
இந்தியாவில் வெளியிடங்களில் மலம் கழிக்கும் இந்தியர்கள் எமது நாட்டுக்குள் படை எடுத்து எமது நாட்டிலும் வீதியோரங்களில் மலம் கழிப்பர். எமது நாட்டின் பழக்க வழக்கங்களைச் சீரழிப்பர். இவை மாத்திரமன்றி மீண்டும் சோழரின் ஆட்சிக் காலத்தில் இருந்தது போல் எமது நாட்டின் வடக்கு - கிழக்கு மற்றும் தமிழ் நாட்டை இணைத்து சோழ மண்டலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கே புதிய அரசு முயற்சிக்கின்றது.
வடக்கில் தமிழ் மக்கள் இனவாதப் பக்கத்தை விட்டு விலகியிருக்கும் நிலையில் மீண்டும் அங்கு இனவாத விதைகளை விதைக்க முயற்சி இடம்பெறுகின்றது. இந்த அரசு தமிழ் மக்களின் ஜனநாயகத்தைப் பறிப்பதற்கும், அவர்களை இனவாதிகளின் கைகளுக்குள் சிக்க வைப்பதற்கும் முயற்சிக்கின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அதேபோன்று மீண்டும் விடுதலைப் புலிகள் தலை தூக்குவதற்கும் இடமளிக்கப் போவதுமில்லை.
இதனாலேயே 1815ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெடித்த புரட்சியைப் போல் மைத்திரி ரணில் அரசை வெளியேற்றும் நூதனப் புரட்சியை மகிந்த ராஜபக்ச தலைமையில் முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம். இதில் அனைவரும் இணைந்து கொண்டு, எமது படையினர் 65 ஆயிரம் உயிர்களைத் தியாகம் செய்து ஒருங்கிணைத்த நாட்டைப் பாதுகாக்க முன்வரவேண்டும்.
நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் ஆட்சிபீடம் ஏற்றிய மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹம் சிறிசேன, கொழும்பு 7 இல் உள்ள இரவு களியாட்ட விடுதிக்குள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினருடன் புகுந்து அட்டகாசம் செய்துள்ளார். இதுதான் மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இவர்கள் காண்பிக்கும் நல்லாட்சி. இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் நாமலும் யோசிதவும் இவ்வாறு ஒருபோதும் களியாட்ட விடுதிகளுக்குச் செல்லவும் இல்லை. ரவுடித்தனங்களில் ஈடுபடவும் இல்லை.
வடக்கின் இனவாதத்திற்கு இடமளிக்க அனுமதிப்பதா, மீண்டும் விடுதலைப் புலிகளுக்குப் பலியாக தமிழ் மக்களை இடமளிப்பதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். மைத்திரி ரணில் அரசு வடக்கில் தமிழ் இனவாதத்தைத் தலைதூக்க இடமளித்துள்ளது. இதன்மூலம் நாட்டின் பௌத்த மதத் தலைவர்களுக்கு வடக்கிற்குச் செல்ல முடியாத நிலையை உருவாக்க முற்படுகின்றது. வடக்கில் புத்தர் சிலைகளை வைக்க முடியாத நிலையை உருவாக்குவதற்கும், பௌத்த விகாரைகளை நிர்மாணிக்க முடியாத ஒரு பிரதேசமாக வடக்கை மாற்றவும் இந்த அரசு முனைகின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார். (வ-5)

## முதலமைச்சரின்

கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நேற்றுத் தெரிவித்தார்.
இலங்கை அதிபர் சேவைக்கு போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 392 பேர் வடக்கில் உள்ளனர். அவர்களில் 90 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இந்த அவசர நியமனத்தை நீக்குமாறும், 392 பேருக்கும் ஒரே தடவையில் நியமனம் வழங்க வேண்டும் என்றும் அதிபர்கள் சங்கம் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்தது. இதற்கமைய முதலமைச்சர் நியமனத்தை நீக்குமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.
இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரன் ஆகியோருடன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று பி.ப. 2.30 மணிக்கு அதிபர்கள் சேவைத் தரம் -3 இனுடைய சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர்.
இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அதிபர் சங்கத்தினர் தெரிவித்ததாவது, அதிபர் சேவை தரம் -3 நியமனம் தொடர்பான முறைகேடுகள் வழங்கப்பட்ட நியமனத்தில் பாரபட்சம் தொடர்பாக, முதலமைச்சர் நியமனங்களை நீக்குமாறு வடக்கு மாகாண கல்விச் செயலாளருக்கு வழங்கப்பட்ட பணிப்பு தொடர்பாக பதிலைக் கோரினோம். கொழும்பு கல்வி அமைச்சினால், நியமனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் வெளிவரவுள்ள நிலையில், வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போர்து ஏற்கனவே அதனை நீக்கம் செய்யும் படி முதலமைச்சர் பணித்திருந்தார். முதலமைச்சரின் பணிப்புரையை மீறியே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்த விடயங்களைக் கல்வி அமைச்சரிடம் கேட்டோம்.
அத்துடன், பயிற்சிக் காலத்தின் முடிவில் கொழும்பு கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு ஏற்ப எமக்கு பாடசாலைகள் வழங்கும் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. எனினும் மேற்படி நியமனங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன எனக் கேள்வி எழுப்பியதோடு, வடக்கு மாகாண முதலமைச்சரின் பணிப்புரைக்கு அமைய வழங்கப்பட்ட நியமனங்களை நீக்கி 392 அதிபர்களுக்கும் ஒரே திகதியில் நியமனம் வழங்குமாறும் கேட்டுக் கொண்டோம்.
இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண கல்வியமைச்சர், அதிபர் நியமனங்கள் தொடர்பாக கொழும்பு கல்வி அமைச்சின் அனுமதியோ அல்லது வடக்கு மாகாண முதலமைச்சரின் அனுமதியோ பெறவேண்டிய தேவை தனக்கு இல்லை என்றும், நியமனங்களை நீக்க முடியாது எனவும் தெரிவித்தார்.
கொழும்பு கல்வி அமைச்சின் முடிவு பெறப்பட்டுள்ள நிலையில் நான்கு மாதங்கள் வரை எம்மைப் பாடசாலைகளில் நிலைப்படுத்தாது காத்திருந்துவிட்டு, இப்போது அவசரமாக நியமனங்கள் ஏன் வழங்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினோம். கொழும்பு கல்வி அமைச்சின் முடிவு எவ்வாறானதாக இருப்பினும் தனது முடிவே இறுதியானது என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா இதன் போது பதிலளித்தார்.
நியமனங்களை நீக்குமாறு முதலமைச்சர் அனுப்பிய கடிதத்திற்கு என்ன பதில் என்று நாம் கேட்டதற்கு, அதனை நீங்கள் முதலமைச்சரிடமே சென்று கேட்டுக் கொள்ளுங்கள் என்று பதில் வழங்கினார்.
அத்துடன் கடமை நிறைவேற்று அதிபர்களை நீக்க முடியாது எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்தில் 220 இற்கும் மேற்பட்ட உப அதிபர், பிரதி அதிபர் வெற்றிடங்கள் இருக்கின்றன என்றும், எம்மை விரும்பினால் அதனைப் பொறுப்பேற்குமாறும் பதிலளித்தார்.
தொடர்ந்தும் கல்வி அமைச்சருடன் நாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்த போது, அவர் இடை நடுவில் வெளியேறிச் சென்றார். இதன் பின்னர் கல்வி அமைச்சின் செயல்ரிடம் நாங்கள் கேட்ட போது, முதலமைச்சரின் கடிதத்துக்குப் பதில் வழங்குவேன். அதனை உங்களிடம் தெரிவிக்க முடியாது என்று குறிப்பிட்டார் என்று அதிபர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
"நியமனங்கள் வழங்கியதை நீக்க முடியாது. அவ்வாறு நீக்கம் செய்தால், அவர்கள் நாளை சட்ட நடவடிக்கைக்குச் செல்வார்கள். நான் கூட்டத்தின் இடைநடுவில் வெளியேறவில்லை. கூட்டத்தின் ஆரம்பத்திலேயே நான் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்திருந்தேன். கூட்டத்தின் போது அதனைத் தெரிவித்துவிட்டே வெளியேறினேன்" என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். (வ-5-101)

## தொடரும்

வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனமும், தொழிற்சங்கங்களும் இணங்கியுள்ளதாகக் கூறப்பட்டாலும் 1,000 ரூபா சம்பளம் கட்டாயம் வேண்டும் எனத் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறன்றனர்.

கடந்த 29ஆம் திகதி முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சே இறுதிக் கூட்டு ஒப்பந்தப் பேச்சு எனவும், அதில் இணக்கப்பாடு எட்டப்பட்டு தொழிலாளர்களின் சம்பளம் தீர்மானிக்கப்படும் எனவும் இ.தொ.கா. உட்பட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் வாக்குறுதியளித்திருந்தன.

ஆனால், அன்றைய தினம் முதலாளிமார் சம்மேளனம் முன்னைய பேச்சில் வழங்கிய வாக்குறுதியை மீறி மாற்றுத் தொகையொன்றை முன்வைத்ததன் காரணமாக பேச்சுகள் மீண்டும் இழுபறி நிலைக்குச் சென்றது. அன்றையதினம் இடம்பெற்ற பேச்சும் தோல்வி கண்டதையடுத்து அதிருப்தியடைந்த தொழிலாளர்கள் வீதியில் இறங்கினர்.

கடந்த 30ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். வேலைநிறுத்தம், வீதி மறியல், ஆர்ப்பாட்டங்கள் என தமது போராட்டத்தை பல வழிகளிலும் வலுப்படுத்தியுள்ளனர். தொழிலாளர்கள் மேற்கொண்டுவரும் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக பல மில்லிய ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், தொழிலாளர்கள் கொழும்பு, மலையகம் மற்றும் ஏனைய இடங்களில் என்னதான் போராட்டங்களைச் செய்தாலும் அதனை முதலாளிமார் சம்மேளனமும், அரசும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இ.தொ.கா. முன்வைத்த 1,000 ரூபா கோரிக்கையில் தொழிலாளர்கள் தற்போது உறுதியாகவுள்ளனர். ஆனால், உலக சந்தையில் நிலவும் தேயிலை, இறப்பரின் விலையைக் காரணம் காட்டி 730 ரூபாவில் இருந்து ஒரு ரூபாவேனும் அதிகரிக்க மறுக்கின்றனர் முதலாளிமார். (த)

## யாழ்ப்பாணத்தில்

நடைபெறவுள்ளது. மகளிர் அபிவிருத்திநிலையத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் புதன்கிழமை மு.ப 11 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள தமிழாராய்ச்சி நினைவுச் சின்னத்துக்கு அருகில் இருந்து இந்தப் பேரணி ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தோட்டத் தொழிலாளர்களில் பெரும் பான்மையினராக தோட்டங்களில் கடமையாற்றும் பெண்கள் சம்பள உயர்வைக்கோரி மலையகத்தில் பெரும் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் இந்தக் கோரிக்கையை ஆதரித்து மகளிர் அபிவிருத்தி நிலையம் பேரணியை நடத்துகிறது.

யாழ். மண்ணில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் மலையக மக்களின் கோரிக்கையை ஆதரிக்கும் ஆதரவாளர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து 14 நாள்களாகப் போராடி வரும் இந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கி, சம்பள உயர்வை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும்.

இதனை வலியுறுத்தி அனைவரும் இந்தப் பேரணியில் அணிதிரள்வோம்– என்றுள்ளது.

(வ–ரி)

## வீதி விபத்தை...

பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீதி விபத்துக்களைத் தடுத்து மனித உயிர்களைப் பாதுகாக்க நான்கு கோரிக்கைகளை நாட்டின் தலைவர்களிடம் முன்வைத்து மருத்துவர்களால் முன்னெடுக்கப்படும் 'எழுந்து நிற்போம்' கவனவீர்ப்பு நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை இடம்பெறவுள்ளது.

வடபகுதியில் போருக்குப் பிந்திய காலப் பகுதியில், அதிகரித்துச் செல்லும் வாகனப் பாவனையாலும், வீதி ஒழுங்கு உரிய முறையில் கடைப்பிடிக்கப்படாமையாலும், அதிகரித்த மதுப் பாவனையாலும் அநியாய இழப்புக்கள் நாளுக்குநாள் அதிகரிக்கின்றன.

கடந்த காலங்களில் வீதிவிபத்துக்களால் ஏற்பட்ட விலை மதிக்கமுடியாத இழப்புக்களால் வாழ்வின் இன்பங்களை இழந்து பல குடும்பங்கள் சின்னாபின்னமாகி உள்ளன. பாடசாலைச் சிறுவர்களின் உயிர்கள் கூடப் போட்டி போட்டு ஓடும் வாகனங்களால் பறிக்கப்பட்ட, நெஞ்சை உருக்கும் சம்பவங்களும் உள்ளன.

வீதிப்போக்குவரத்துச் சட்டங்களைக் கடுமையாக நடை முறைப்படுத்தி தொடரும் உயிரிழப்புக்களைத் தடுக்க உரிய தரப்பினர் அக்கறைப்படாமையே காரணம் என பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்ப் பதற்கான உரிய ஏற்பாடுகளை உடனடியாக நடை முறைப்படுத்த வலியுறுத்தி யாழ்.போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடத்தும் இந்தக் கவனவீர்ப்புநிகழ்வுக்கு ஆதரவாக அனைத்துப் பாடசாலை மாணவர்களும் கலந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் நுழைவாயிலில் ஒன்று கூடி விபத்தினால் ஏற்படும் விபரீதங்களை விளக்கும் பதாதைகளுடன் அமைதியாக நின்று கவனவீர்ப்பு நிகழ்வை நடத்துங்கள்–என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


(த–4–ரி)

## நல்லிணக்க

விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளதாக நல்லிணக்கத்துக்கான செயலணியின் உறுப்பினர் காமினி வியன்கொட தெரிவித்தார்.

நல்லிணக்கத்துக்கான யோசனை கள் அடங்கிய அறிக்கையில் நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார். பிரதேச மட்டத்திலான செயலணிகள் உருவாக்கப்பட்டு, நல்லிணக்கத்துக்கான மக்களின் கருத்துக்கள் திரட்டப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## மரண அறிவித்தல்



### கணேஸ் தர்மசீலன் (சுபாஸ்)

திருநகர் தெற்கு, கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ் தர்மசீலன் (சுபாஸ்) கடந்த 05.10.2016 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, இலட்சுமி (மண்டைதீவு), பொன்னையா, அன்னம்மா (சுண்டுக்குளி) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற கணேஸ் - நாகதேவி (பாக்கியம்) தம்பதியரின் புதல்வனும் லக்ஷயன் (நோர்வே) என்பவரின் பாசமிகு தந்தையும் சுரேஸ் (மண்டைதீவு), சாந்தி (கிளிநொச்சி), குமுதினி (ஜேர்மனி), ஜெயந்தினி (கிளிநொச்சி), ரமேஸ் (யாழ்ப்பாணம்), நந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரனும் லதா, குட்டி, பாஸ்கர் (ஜேர்மனி), நித்தி, செல்வி, நாதன் ஆகியோரின் மைத்துனரும் துஷாந்தன் (மலேசியா), சுரேஜினி காலஞ்சென்ற ஜனனி, காலஞ்சென்ற யதுஷன் மற்றும் சஜீவன், மக்ஷி, யூட் ஆகியோரின் சிறிய தகப்பனும் லக்ஷன் (ஜேர்மனி), சுரேகா (நோர்வே), லக்திகா, லௌஜன், தேனுஜா, ஆதவி (ஜேர்மனி), ஹருணிகா, அக்ஷயன் (நோர்வே), அகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புமாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 7913554

# மரண அறிவித்தல்

## டாக்டர் கனகரத்தினம் சிவனேசன் MD

( யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ் அரசினர் வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணரும்)
(CONSULTANT - GOVT. GEN. TEACHING HOSPITAL - JAFFNA)



யாழ்ப்பாணம் நல்லூர் செல்லர் வீதி, 146, ஆம் இலக்கத்தைச் சேர்ந்த டாக்டர் கனகரத்தினம் சிவனேசன் MD அவர்கள் நேற்று 08.10.2016 ஆம் திகதி அன்று அதிகாலை சிவபதம் எய்தி விட்டார்.

அன்னார் ஜெயகௌரியின் பாசமிகு கணவரும், சிவராம் (யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட 37 ஆம் அணி மாணவன்) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சின்னத்துரை கனகரத்தினம் ஜே.பி.யூ.எம் (அரச சட்டத்தரணி-யாழ்ப்பாணம், முன்நாள் தலைவர் வட பிராந்திய போக்குவரத்துச் சபை)- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம் சோமசுந்தரம் (உதவி ஆணையாளர்-மோட்டார் போக்குவரத்து திணைக்களம்) -இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், டாக்டர். கனகரத்தினம் ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா), கனகரத்தினம் கேசவன் (சட்டத்தரணி), நிர்மலா சிவபாதசுந்தரம், விமலா விஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காந்திமதி ஜெகதீசன், கேசவன் சிவமலர், ஜெயராணி, ஜெகநாதன், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், புவனேந்திரன், கந்தையா, சிவபாதசுந்தரம் , டாக்டர். நடராஜா விஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செ. ஜெகநாதன் (பொது முகாமையாளர், யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்- யாழ்ப்பாணம்), பாக்கியம் புவனேந்திரன் ஆகியோரின் சகலனும், மீரா, டாக்டர் மிதிலா, பேராசிரியர் மைத்திரி (ஐக்கிய அமெரிக்கா), டாக்டர் மயூரதன் (ஐக்கிய அமெரிக்கா), டாக்டர் சஜீவன் (யாழ். போதனா வைத்திய சாலை), மேனகா (சட்டத்தரணி), துளசிகா (சட்டத்தரணி), கேசவி (கனடா), காஜல் (கனடா), சிந்துஜா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், நகுலன் (கனடா), துஸ்யந்தன் (கனடா), டாக்டர் ஜனகன் (மெடிகேயர் வெள்ளவத்தை), ஜெயந்தன் (மாவட்ட நீதி மன்றம், மல்லாகம்), ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொல்பொருள்சுவடிகள் திணைக்களம், கொழும்பு), நீலகண்டன் சரவணன் (சட்டத்தரணி), சுதந்திரபாலன் ஜீவதர்சன் (VFS GLOBAL) ஆகியோரின் அன்பு மாமனும், ராஜ் கௌதம், ராஜ் வர்சன், காவியா (கனடா), அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2016) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 9831

தகவல்:
குடும்பத்தினர்.

## நெருக்கடியில் பங்களாதேஷ்

இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றுள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற நெருக்கடி பங்களாதேஷுக்கு ஏற்பட்டுள்ளது. மாறாக இந்த ஆட்டம் இங்கிலாந்துக்குச் சாதகமாக அமைந்தால், மூன்றாவது ஆட் டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை பங்களாதேஷ் கைப்பற்ற வாய்ப்புக்கள் இருக்காது. (ம)

## பாகிஸ்தானுக்கு வந்த சோதனை

டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்துவந்த பாகிஸ்தான் அணி, அந்த இடத்தை இந்தியாவிடம் பறிகொடுத்தது ஒருபுறமிருக்க பிறிதொரு துரதிர்ஷ்டமும் அந்த அணிக்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இந்த மாதம் மூன்றாம் திகதி முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இந்த வெற்றியால் பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திலிருந்த பாகிஸ்தான் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு இந்தியா முதலிடம் பிடித்தது. பாகிஸ்தான் அணி முதலிடம் பிடித்தமையை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்ய அன்றைய தினம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி பாகிஸ்தானின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் எட்டப்பட்டதாவும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 20 நிமிடங்களில் பாகிஸ்தானின் முதலிடம் பறிக்கப்பட்டதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



# உலகக்கிண்ண கபடித் தொடர் இந்திய அணிக்கு படுதோல்வி

உலகக்கிண்ண கபடித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்கொரிய அணியிடம் வீழ்ந்தது இந்திய அணி.

உலகக்கிண்ண கபடித் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் ஆரம்பித்த இந்தத் தொடர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நடைபெறும். முதலாவது ஆட்டத்தில் தொடரை நடத்தும் நாடான இந்தியாவை எதிர்த்து தென்கொரியா மோதியது. ஆட்டத்தின் பெரும் பகுதி இந்திய அணியின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும் தென்கொரிய வீரர் கொன் லீ, மூன்று இந்திய வீரர்களை ஒரே வாய்ப்பில் ஆட்டமிழக்கச் செய்து ஆட்டத்தின் முடிவை தலைகீழாக மாற்றினார். முடிவில் 34:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது தென்கொரியா.

தொடரில் 12 அணிகள் கலந்து கொள்கின்றன. ஏ பிரிவில் நடப்புச் சம்பியன் இந்தியா, பங்களாதேஷ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்கொரியா, ஆர்ஜென்ரீனா ஆகிய அணிகளும், 'பி' பிரிவில் ஈரான், அமெரிக்கா, போலந்து, கென்யா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய அணிகளும் இடம் பிடித்துள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும். இந்தியா- பாகிஸ்தரன் நாடுகளின் அரசியல் உறவு போரின் விளிம்பில் உள்ள காரணத்தால், பாகிஸ்தான் அணிக்குத் தொடரில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திணறடிக்குமா தெ.ஆபிரிக்கா

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தை வெல்வதை உறுதிப்படுத்தியுள்ளது தென்னாபிரிக்கா. இதனால் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது தென்னாபிரிக்காவுக்கு பாதகத்தை ஏற்படுத்தாது. ஆனால் பலம்வாய்ந்த ஆஸ்திரேலியாவை 5:0 என்று வழித்துத் துடைக்க அந்த அணி கடுமையாக முனைப்புக் காட்டும். தென்னாபிரிக்காவில் ஆட்டம் நடைபெறுவது அந்த அணியைப் பொறுத்தமட்டில் மிகவும் பலமான விடயமாகக் கருதப்படுகிறது.

தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் நீண்ட காலமாக திறன் இல்லாமல் தவித்த மில்லர், பிளாசிஸ் இருவரும் சதங் களை விளாசி மீண்டும் திறனுக்குத் திரும்பியுள்ளனர். இதனால் இன்றைய ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா தோற்றால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம)




## கற்பதற்கு அதிகமுள்ளது விராட் கோக்லி தெரிவிப்பு

ஒரு தலைவராக, கற்றுக்கொள்வதற்கு அதிக விடயங்கள் உள்ளதாகத் தெரிவித்தார் இந்திய டெஸ்ட் தலைவர் கோக்லி.

இந்தூரில் நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒரு தலைவராக அனைத்தையும் கற்று விட்டதாகக் கருதவில்லை. டெஸ்ட் ஆட்டத்தின் ஒரு பகுதி (செசன்) நமக்குச் சாதகமாக இல்லாமல் சென்று கொண்டிருக்கும்போது, அதை எப்படிக் கட்டுப்படுத்துவது, இலக்குகளை வீழ்த்த முடியாத சந்தர்ப்பத்தில் ஓட்டங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது போன்ற விடயங்களை அதிகம் கற்கிறேன் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



## ஸ்டோக்ஸின் சதம் கைகொடுக்க பங்களாதேஷை வீழ்த்தியது இங்கி.

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் மிர்பூர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து ஸ்டோக்ஸின் சதம் கைகொடுக்க, அந்த அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 309 ஓட்டங்களைக் குவித்தது.

அதிக பட்சமாக ஸ்டோக்ஸ் 101 ஓட்டங்களையும், பட்லர் 63 ஓட்டங்களையும், டக்லெட் 60 ஓட்டங்களையும் கைப்பற்றினர். பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மோர்ரசா, சகிப் அல் ஹசன், இஸ்லாம் மூவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ், வெற்றிபெறக்கூடிய வகையில் தனது இன்னிங்ஸைக் கட்டமைத்த போதிலும் அந்த அணி 47.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 288 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பங்களாதேஷின் வெற்றிக்கு 22 ஓட்டங்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டன. 13 பந்துகள் மீதமிருந்தன. ஆனால் இலக்குகள் இல்லாத காரணத்தால் அந்த அணி வெற்றியைக் கோட்டைவிட்டது.

அதிகபட்சமாக இம்ரூல் கையிஸ் 112 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 79 ஓட்டங்களையும், முகமதுல்லா 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக போல் 5 இலக்குகளையும், ரசிட் 4 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## பலவீனங்களை வெளிப்படுத்த வேண்டாம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சச்சின் அறிவுரை



துடுப்பாட்ட வீரர்கள் தமது பலவீனங்களை பந்துவீச்சாளர்கள் அறியக் கூடிய வகையில் ஒருபோதும் வெளிப்படுத்தக்கூடாது. இவ்வாறு தெரிவித்தார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவானான சச்சின்.

டெல்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையிலேயே சச்சின் இவ்வாறு தெரிவித்தார். துடுப்பாட்ட வீரர்கள் தமது திறனைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது. அவ்வாறு சிந்தித்தால் பந்துவீச்சாளர்கள் மத்தியில் எமக்குப் பயம் ஏற்படும். இது ஒட்டுமொத்த அணியையும் பாதித்துவிடும். பந்துவீச்சாளரிடத்தில் எமக்குப் பயம் ஏற்பட்டாலும் அதை நாம் காட்டிக்கொள்ளக்கூடாது. ஒருமுறை எனது விலா எலும்பில் அடிபட்டது. பந்துவீச்சாளர் என்னைப்பார்த்து முறைத்தார், நானும் முறைத்தேன். எனக்கு மூச்சுவிடுவதற்கே கஷ்டமாக இருந்தது. ஆனாலும், அதனைக் காட்டிக் கொள்ளவில்லை.

இந்த அணுகு முறையைப் பின்பற்றுவது மிகவும் கடினம். பின்பற்றினால் நிச்சயம் வெற்றி தரும் என சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)


# வடக்கு - கிழக்கு இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 9
கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. குறித்த நிகழ்வை முன்னிட்டு வடக்கு மாகாண கால்பந்தாட்ட அணிக்கும், கிழக்கு மாகாண கால்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான கால்பந்தாட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம-23)

# பல்கலை - சென்றலைட்ஸ் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ். பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி இன்று மோதவுள்ளது. யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு இந்த இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். கபிலன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)




வி.ஆசிகா

# தேசியமட்டப் பளுதூக்கல் வடக்குக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 9
இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் வடக்குக்கு தங்கம், வெள்ளி என இரு பதக்கங்கள் கிடைத்தன.
அருணநாயக்க கல்லூரியில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு பளுதூக்கலில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகா 58 கிலோ எடைப்பிரிவில் ஒட்டுமொத்தமாக 151 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார். 20 வயதுப் பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி ரி.லன்சிகா 53 கிலோ எடைப்பிரிவில் ஒட்டுமொத்தமாக 90 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ம-23)


ரி.லன்சிகா

# சென். பற்றிக்ஸ் சம்பியன் விக்ரோறியாவை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 49.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலக்சன் 72 ஓட்டங்களையும் றெமிங்ரன் 65 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியின் சார்பில் தனுசன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.
253 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியாக் கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 201 ஓட்டங்களையே பெற்றது. இதையடுத்து 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனானது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. அதிகபட்சமாக சியாமிளன் 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் டனிசியஸ் 3 இலக்குகளை வீழ்த்தினார்.



சிறந்த வீரராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் டிலக்சன் தெரிவானார். சிறந்த பந்துவீச்சாளராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியின் தனுசனும், சிறந்த களத்தடுப்பாளராக அதே அணியின் பாரதி கிருஸ்ணாவும் தெரிவாகினர். (ம-23)

# சோமஸ்கந்தன், வொலிகிங்ஸ், அண்ணா முன்னேற்றம்

சோமஸ்கந்தன் வி.கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகம், கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.
மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் சோமஸ்கந்தனின் கரப்பந்தாட்டத் திடலிலேயே இம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகமும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் 25:20, 16:25, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது புத்தூர் சோமஸ்கந்தன்.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும் புத்தூர் குருநாதர் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:20, 25:19 புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வொலிகிங்ஸ் அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற நேர் செற்றில் வென்று முன்னேறியது கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம். (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 9

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணியை எதிர்த்து சுடரொளி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதவுள்ளது.

**மூன்றாம் பிரிவு துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபையின் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் வி. கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23-108-422)

# சென். மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9
நெற்கொழு கழுகுகளின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றது சென். மேரிஸ்.
கழுகுகளின் மைதானத்திலேயே தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்தில் விண்மீன் முதல் கோலைப் பதிவுசெய்த போதிலும் சரிவிலிருந்து மீண்டு ஆதிக்கம் செலுத்தியது சென். மேரிஸ். 33 ஆவது நிமிடத்தில் யூட் பதிவுசெய்த கோலால் முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. 76 ஆவது நிமிடத்தில் மதி, பின்னர் ஜான்சன் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. (ம-108)

# சாகிராக் கல்லூரியின் தொடர்; மானிப்பாய் இந்து மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 9
கொழும்பு சாகிராக் கல்லூரி நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் இந்து தேசியப் பாடசாலை அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.
சாகிராக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்து தேசியப் பாடசாலை அணியை எதிர்த்து கண்டி திரித்துவக் கல்லூரி அணி மோதியது. 4 ஆவது நிமிடத்தில் தர்சிகன் மானிப்பாய் இந்து தேசியப் பாடசாலையின் முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் இல்லாமல் முடிந்தது முதற்பாதி.
இரண்டாம் பாதியின் 6 ஆவது நிமிடத்தில் மானிப்பாய் இந்து தேசியப் பாடசாலையின் தில்லைக்கந்தன் மானிப் பாய் இந்து தேசியப் பாடசாலையின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# அன்டோராவை நொறுக்கினார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ



உலகக்கிண்ணத் தகுதிகாண் சுற்றில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ரொனால் டோவின் கோல், மழை கைகொடுக்க அன்டோராவை இலகுவாக வீழ்த்தியது போர்த்துக்கல்.
ஆட்டத்துடன் இணைந்து போர்த்துக்கலின் ஆதிக்க மும் ஆரம்பமானது. 2 ஆவது, 4 ஆவது நிமிடங்க ளில் ரொனால்டோ அடுத் தடுத்து கோல்களைப் பதிவு செய்தார். பதின்ம நிமிடங்களை எட்டு வதுக்குள்ளேயே போர்த்துக்க லின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினார். கான்செல்லோ 44 ஆவது நிமிடத்தில் கோலொன் றைப் பதிவுசெய்ய 3:0 என்று போர்த்துக்கலின் ஆதிக் கத்துடன் முடிந்தது முதற் பாதி. இரண்டாம் பாதியின் 47ஆவது, 68ஆவது நிமிடங்களில் ரொனால்டோ மீண்டும் இரு கோல்களைப் பதிவு செய்தார். வலென்ரே 84 ஆவது நிமிடத்தில் பதிவு செய்த கோல் ஆட்டத் தின் இறுதிக் கோலுமாக அமைந்தது. முடி வில் 6:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது போர்த்துக்கல். (ம)

## வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள்
விருந்தினர் விடுதிக்கு பொருத்தமான
சகல வசதிகள் கொண்ட வீடுகள்
தேவையாக உள்ளன.
உள்ளோர் தொடர்பு கொள்ளவும்.
T.P : 071 4115002

Nivithra
Beauty Parlour & Training Academy
இலவச
அழுகுக்கலைப்பயிற்சி
(நிபந்தனைக்குட்பட்டது)
நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் இலவச அழகுக்கலை பயிற்சி மற்றும் கேக் ஐசிங் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் எமது அறிமுக வகுப்பில் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.
திகதி : 12.10.2016 புதன்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : நிவித்ரா அழகுக்கலை நிலையம்
இல.340, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கு அருகில்)



முதல் இணையும் 10
மாணவர்களுக்கு கேக் ஐசிங்
வகுப்பு முற்று முழுதாக இலவசம்
தொடர்பு:
0777 712604

## அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல்

2016ஆம் ஆண்டு அதிபர் சேவை நியமனம் கிடைக்கப்பெற்ற வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை (10.10.2016) திங்கட்கிழமை முற் பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற வுள்ளது. இக்கலந்துரையாடலில் வடமாகாண கல்வி அமைச் சின் செயலாளரும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளரும் கலந்து கொள்வதால் வடமாகாணத்தைச் சேர்ந்த அனைத்து புதிய தரம் - III அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். கலந்துகொள்ளும் அனைவருக்கும் கடமை லீவு வழங்கப்படும்.

பொதுச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

## வீடு வாடகைக்குண்டு

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்
கிழக்கில் 8 அறைகள், 4 குளிய
லறைகள், 2 பெரிய ஹோல்ஸ்,
2சிற்றிங் ஹோல்ஸ், 2 பெரிய
முகப்புக் கொண்ட மாடிவீடு வாட
கைக்கு உண்டு.
அரச அரசசார்பற்ற
நிறுவனங்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.
021 222 5805, 076 807 9440


## கணினி இயக்குநர் தேவை

பிரபல்யமான எரிவாயு (Gas) விநியோக நிறுவனத்திற்கு கணினி இயக்குநர் தேவை. கணினியில் முன்னனுபவமுள்ளவர்கள் 15.10.2016 இற்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அனுப்பவும்.
S.V.முருகேசு
106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## வீடு காணி விற்பனைக்குண்டு

யாழ்.அரியாலை. A.Vறோட்டில்
தபாற்கட்டைச் சந்தியிலிருந்து 650m
தொலைவில் 2வீடுகளுடன் கூடிய 4பக்க
சுற்று மதிலுடைய 5பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 459 8412

விசேட விலைக்கழிவுடன்
ஜூஸ் பக்கெட் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

# சதம் விளாசினார் கோக்லி இந்தியா சிறந்த தொடக்கம்

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத் தின் நேற்றைய முதல் நாள் முடிவில் இந்திய அணி 267-3 என்று பலமான நிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முத லில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கணிக்கப்பட்ட தைப் போல் கம்பீருக்கு விளையாடும் குழாமில் இடம் கொடுக்கப்பட்டது. பத்தே ஓட்டத்துடன் பவிலியன் திரும்பி னார் முரளி விஜய். அடுத்தடுத்து இரு சிக்சர்களைப் பதிவு செய்து அதிரடியாக தனது மீள் வருகையைக் காட்டினார் கம்பீர். ஆனால் அவரால் முழுமையாக முப்பது ஓட்டங் களை எட்ட முடிய வில்லை. கம்பீரை பவிலியனுக்கு அனுப்பியவர் போல்ட். புஜாராவுடன் கோக்லி இணைய மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. 100 ஆவது ஓட்டத்திலேயே புஜாரா ஆட்டமிழந்தார். கம்பீருடன் இணைந்தார் ரகானே.
இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டமாகவும் 100 ஓட்டங்கள் பகிரப்பட்டாயிற்று, இலக்குச் சரிவு ஏற்பட்டபா டில்லை. சதம் கடந் தார் கோக்லி. நாள் முடிவில் இந்தியா 267-3 என்ற நிலையில் உள்ளது. கோக்லி 103 ஓட் டங்களுடனும், ரகானே 79 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காதிருந்தனர். (ம)



# சென்னையின் தடை தொடர்கிறது

ஐ.பி.எல். தொடரில் இரு வருடங்கள் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் மீதான தடை தொடர்வதாக இந்திய உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பிட்டது.
சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ் தான் ரோயல்ஸ் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து இந்த இரு அணிகளுக்கும் இரு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த வருட ஐ.பி.எல். தொடரில் இந்த இரு அணி களும் விளையாட அனுமதிக்கப்படவில்லை பதில் அணிகளாக புனே சுப்பர் ஜெயின்ட்ஸ், குஜராத் லயன்ஸ் ஆகிய அணிகள் சேர்க் கப்பட்டன. இந்த நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரிலாவது சென்னை அணிக்கு விதிக்கப்பட் டுள்ள தடையை நீக்க வேண்டுமென பொதுநல வழக்குத் தொடரப்பட்டது. குறித்த வழக்கு நேற்று விசார ணைக்கு வந்தது. விசாரித்த மன்று ஏற்கனவே வழங் கப்பட்ட தீர்ப்பே இறு தியானது அதில் மாற் றங்கள் இல்லை எனத் தெரிவித்தது. இதனால் அடுத்த வருடம் நடைபெற வுள்ள ஐபிஎல் தொட ரிலும் சென்னை அணி களமிறங்க முடியாத நிலை உறுதியாக ஏற்பட் டது. (ம)

## வேலைவாய்ப்பு

அலுவலக உத்தியோகத்தர்.
வரவேற்பாளர் தேவை. கணினி மற்றும்
ஆங்கில அறிவுடைய பெண்கள்
விரும்பத்தக்கது.
இல.20, K.K.S. Road, Jaffna.
தொடர்புகளுக்கு: 076 822 8522
Info@arunthathee.com

## வேலையாள்கள் தேவை

வேம்படி ரெக்ஸ்ரைல் விற்பனை
நிலையத்துக்கு,
1. விற்பனையாளர்கள்
2. காசாளர்கள்
ஆண், பெண் இருபாலாரும்
தேவை.
021 565 3811,
077 990 1002
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.